www.padippakam.com

# சர்வதேச இனப்படுகொலைக் குற்றம்:

## ஸ்ரீலங்காவில் தமிழ் மக்களின் நிலை



தமிழ் தகவல் நடுவம்

ஏப்ரல் 1998

படிப்பகம்

www.padippakam.com

# சர்வதேச இனப்படுகொலைக் குற்றம்:

## ஸ்ரீலங்காவில் தமிழ் மக்களின் நிலை

தமிழ் தகவல் நடுவம்
ஏப்ரல் 1998

படிப்பகம்

www.padippakam.com

சர்வதேச இனப்படுகொலைக் குற்றம்: ஸ்ரீலங்காவில் தமிழ் மக்களின் நிலை
(Tamil Version of **The International Crime of Genocide : The Case of Tamil People in Sri Lanka** published in December 1997)

@ தமிழ் தகவல் நடுவம், 1998

வடிவமைப்பு : மு.கலைவாணன் - ர.சீனிவாசன் - கே.கிருஷ்ணராஜா
அட்டைப் புகைப்படம் : ஸ்டீபன் சாம்பியன்

அச்சிட்டோர் : மாணவர் மறுதோன்றி அச்சகம்
சென்னை - 600 001. ☎ 582513
*ஏப்ரல், 1998.*

இந்நூலை எழுதியுள்ள லுட்ஸ் ஒயிட் (Lutz Oette) ஜெர்மனிநாட்டுக் குடிமகனாவார். அவர் இலண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியில் (University College of London) அண்மையில் LL.M. சட்ட முதுநிலைப் பட்டப்படிப்பு படித்து முடித்துள்ளார். சர்வதேசச் சட்டத்தில் *1996*-ஆம் ஆண்டுக்கான செங் செங் நான் பரிசைப் (Cheng Cheng Nan Prize for 1996) பெற்றுள்ளார். சர்வதேச மனித உரிமைப் பாதுகாப்பு, வளர்முக நாடுகளில் மனித உரிமைகள், தஞ்சம் புகுதல் தொடர்பான சட்டமும் நடைமுறையும் ஆகியன தொடர்பான ஆராய்ச்சிகளில் அக்கறை கொண்ட இவர், சவூதி அரேபியாவில் நடக்கும் சித்திரவதைகள், அங்கு மனிதர்களை இழிவு செய்கின்ற வகையில் தரப்படும் தண்டனைகள் ஆகியன குறித்த அறிக்கையொன்றினைத் தற்சமயம் எழுதி வருகின்றார். சர்வதேசச் சட்டத்தின் பல்வேறு அம்சங்கள் தொடர்பாக இலண்டனில் பேராசிரியர் மெண்டெல்சன் அவர்களின் ஆராய்ச்சி உதவியாளராகத் தற்சமயம் பணியாற்றி வருகிறார். இராக்கில் வாழும் குர்து இன மக்கள் எதிர்கொள்ளும் சட்ட, அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளை விளக்கி அவர்களுக்காக வழக்காடுவதற்கு தேவையான பல ஆவணங்களையும் எழுதியுள்ளார். ஐரோப்பிய மனித உரிமைகள் ஆணையம் (European Commission on Human Rights), ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றம் (Europrean Court of Human Rights) ஆகியவற்றின் முன் கொண்டு வரப்படவுள்ள துருக்கி நாட்டுக் குர்துகள் சம்பந்தப்பட்ட வழக்குகளில் உதவி புரிந்துள்ளார்.

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்காக நிதியுதவி வழங்கியவர்கள், தங்கள் நேரத்தை ஒதுக்கியவர்கள், தகவல்களைப் பகிர்ந்து கொண்டவர்கள், தரவுகளைத் தந்துதவியர்கள் ஆகிய அனைவருக்கும் தமிழ் தகவல் நடுவம் நன்றிக்கடன் பட்டுள்ளது. ஆயினும் எல்லாருக்கும் மேலாக, இந்த அறிக்கையை எழுதியவருக்கும் தன்னார்வத்துடன் சேவை புரிந்தோர்க்கும் நாம் மிகுந்த நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். அவர்களது ஆதரவும் அர்ப்பணிப்புமின்றி இந்த அறிக்கையை வெளிக்கொணர்ந்திருப்பது சாத்தியப்பட்டிருக்காது.

படிப்பகம்

# சர்வதேச இனப்படுகொலைக் குற்றம்:

## ஸ்ரீலங்காவில் தமிழ் மக்களின் நிலை




1983-இல் வெறித்தனமான இனப்படுகொலைத் தாக்குதலில் பாதுகாப்புப் படையினரால் சிதைக்கப் பட்ட திருவள்ளுவர் சிலை



அழிக்கப்பட்ட பள்ளிகளும் கல்வி நிறுவனங்களும்

## பொருளடக்கம்


**அறிமுகம்** 5

**வரலாற்றுப் பின்னணி** 7

**இனப்படுகொலை - வரையறை** 10

இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தின் வரலாற்றுப் பின்னணியும் அதன் இன்றைய நிலையும்.

இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தில் இனப்படுகொலை பற்றிய வரையறை.

இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தில் இனப்படுகொலை பற்றிய வரையறை - ஒரு திறனாய்வு

இனப்படுகொலை - சட்டம் சாரா விளக்கங்கள்:

- இனப்படுகொலை செய்யும் சமுதாயம்:
- இனப்படுகொலைக்கான காரணங்களும் இனப்படுகொலையின் செயற்பாடுகளும்
- இனப்படுகொலை நிகழ்முறை
- இனப்படுகொலை ஆய்வு தொடர்பாக இந்நூலில் கையாளப்படும் அணுகுமுறை

**இனப்படுகொலை நிகழ்முறை** 23

தமிழர்களின் சுயநிர்ணய உரிமை

சிங்களர் குடியேற்றம்
பொருளாதார, சமூக, பண்பாட்டு வளர்ச்சி
மொழி
சமயம்
பண்பாடு
கல்வி
பொருளாதார வளர்ச்சி
உடல்நலம்
தகவல், போக்குவரத்துத் தொடர்பு
அடிப்படை உரிமை மீறல்கள்
மனிதச் சிறப்பியல்புகளை அழித்தல்
முடிவுரை : இனப்படுகொலை நிகழ்முறை

**இனப்படுகொலைச் செயல்கள்** 55

சான்றுகள்
குற்றச்சாட்டுகள்
சட்டங்கள்
உள்நோக்கம்
அரசாங்கத்தின் பொறுப்பு

**இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துதல்** 86

இப்போதுள்ள வழிமுறைகள்
இனப்படுகொலையைத் தடுப்பதிலும் அதற்குரிய தண்டனையை வழங்குவதிலும் அய்.நா. மேற்கொண்ட நடவடிக்கைகள்
இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த ஸ்ரீலங்கா மேற்கொண்ட நடவடிக்கைகள்
மனிதாபிமானத் தலையீடு
ஸ்ரீலங்காவில் இந்தியாவின் தலையீடு
இனப்படுகொலை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்குச் சாத்தியமான மாற்று வழிமுறைகள்


**எதிர்காலத்தில் இனப்படுகொலை நடக்காமல் தடுப்பதற்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள வழிமுறைகள்** 110

அய்.நா. மனித உரிமை உயர் ஆணையர்
அய்.நா. மனித உரிமை ஆணையம்
தீர்மானம் 1503-இன்படி வகுக்கப்பட்டுள்ள நடைமுறை
சர்வதேச சமூகம்

**பரிந்துரைகள்** 121

www.padippakam.com

# அறிமுகம்



இனப்படுகொலைக்குப் பலியான ஒரு தமிழரின் மண்டையோடும் எலும்புகளும்

இனப்படுகொலை என்பது சர்வதேசச் சட்டத்தில் மிகக் கொடிய, மனித சமுதாயத்திற்கு எதிரான குற்றமாகக் கருதப்படுகிறது. இனப்படுகொலைக் குற்றச்சாட்டு ஒரு மிகக் கடுமையான குற்றச்சாட்டாகும்.

1950-ஆம் ஆண்டில் சர்வதேச இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தை (International Convention on Genocide) ஏற்பதற்கு ஒப்புக் கொண்ட ஸ்ரீலங்கா மீது சில குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. அவை சிங்களப் பெரும்பான்மையினர் மீது - குறிப்பாக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் மீது - சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளாகும். இந்த ஆய்வு நூல், எந்தெந்தத் தனிநபர்கள் எந்தெந்த குற்றங்களைச் செய்தார்கள் என்பதை நிரூபிக்க முற்படும் ஆய்வுநூல் அல்ல. ஏனெனில், அப்படிச் செய்வதற்கு ஒரு முழுமையான நீதிமன்றப் புலனாய்வு அவசியம். மாறாக, இனப்படுகொலை பற்றிய சட்டரீதியான விளக்கம், இனப்படுகொலை நிகழ்முறை இனப்படுகொலையைச் செய்யும் சமுதாயம் எனக் கூறப்படும் சமுதாயம் ஆகியன பற்றிய சமுகவியல் அணுகுமுறை ஆகியனவற்றின் அடிப்படையில் ஒன்றுக்கொன்று தொடர்புடைய இரண்டு பிரச்சினைகள் மீது இந்த ஆய்வு நூல் கவனம் குவிக்கிறது.

அப்பிரச்சினைகள் கீழ்வருமாறு: 1)முதலாவதாக, இனப்படுகொலை நடக்கக்கூடிய சமுதாயத்தின் பண்பியல்புகள் யாவை? ஸ்ரீலங்காவை இத்தகைய சமுதாயம் என விவரிக்க இயலுமா?; 2)இரண்டாவதாக, ஸ்ரீலங்காவில் இனப்படுகொலைச் சம்பவங்கள் நடந்திருக்கின்றனவா? நடந்திருக்குமெனில், எடுத்த எடுப்பிலேயே தோன்றுகிற ஆதாரங்களின் படி, இவற்றுக்கு யார் பொறுப்பு?

இந்நூலில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வு, இனப்படுகொலைக் குற்றங்களைத் தண்டித்தல் என்ற பிரச்சினையைப் புறக்கணிக்கவில்லை என்றபோதிலும், இனப்படுகொலைத் தடுப்பின் மீதே கவனம் குவிக்கிறது. இதுதொடர்பாக, சர்வதேச இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தின் கீழ் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள், அவ்வழிமுறைகளின் செயல்திறன் ஆகியவற்றையும் ஆராய்கிறது. கடைசியாக, இந்த ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டவைகளை அடிப்படையாகக் கொண்டு வருங்காலத்தில் ஸ்ரீலங்காவில் இனப்படுகொலைச் செயல்களைத் தடுக்கும் பொருட்டு ஒரு செயல் திட்டத்தை வகுத்துக் கொடுக்கிறது.

❑



படிப்பகம்

www.padippakam.com




ஸ்ரீலங்கா தமிழர்களின் புவியியல் சார்ந்த அடையாளம்

ஆதாரம்:Tenrlet J Emerson, Ceylon, Volume II, Longmans Press, 1859

> தொன்றுதொட்டே இரு வெவ்வேறு தேசங்கள் இலங்கைத் தீவைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டிருந்தன. வளவை ஆற்றிலிருந்து (Walluve) சிலாபம் (Chilow) வரை இலங்கைத் தீவின் உட்பகுதியில் அதன் தென், மேற்குப் பகுதிகளில் சிங்களர் வாழ்ந்து வந்தனர். வட, கிழக்கு மாகாணங்களை மலபாரிகள் (தமிழர்கள்) தம் வசம் கொண்டிருந்தனர். இந்த இரு தேசங்களுக்கும் முற்றிலும் வெவ்வேறான சமயம், மொழி, பழக்க வழக்கங்கள் இருந்தன.
>
> — Sir Hugh Cleghorn, British Colonial Secretary, June 1879.



படிப்பகம்

www.padippakam.com

# வரலாற்றுப் பின்னணி

ஸ்ரீலங்கா பல இனங்களையும் மதங்களையும் கொண்ட நாடாகும். சிங்களரும் தமிழரும் பெரும் மக்கள் பிரிவினராக இருக்கின்றனர். மொத்த மக்கள் தொகையான 1.8 கோடியில் சிங்களர் 74 விழுக்காட்டினர், தமிழர்கள் 12 விழுக்காடினர்; அதாவது 20 இலட்சம் பேர்கள்.[1] ஸ்ரீலங்காவிற்கு 2500 ஆண்டுகளுக்கு முன் நாங்கள்தாம் முதலில் வந்தோம் என்று இவ்விரு சமூகத்தினருமே உரிமை கொண்டாடுகின்றனர். வரலாற்றுக் கால அடிப்படையின் பெயரால், நாட்டின் மீது அல்லது நாட்டின் சில பகுதிகள் மீது மற்ற இனத்தவரை விட தமக்கே முன்னுரிமை உண்டு என்று இரு இனத்தவருமே கூறுகின்றனர். இலங்கையில் சிங்களரும் தமிழரும் 2000 ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். வரலாற்றால் வரையறுத்து உறுதி செய்ய முடியாத பண்டைக்கால முதல் வாழ்ந்து வருகிறோம் என்றோ அல்லது வரலாற்றுக்கால அடிப்படையிலோ எந்தவொரு இனப்பிரிவினரேனும் நாட்டின் மீது உரிமை கோரினால், பன்னெடுங் காலமாகக் குடியமர்ந்து அவர்கள் வாழ்ந்து வரும் பகுதிகளை அந்தந்த இனப்பிரிவினர்க்கு உரிமையாக்குவதே முறையாகும்.[2]



ஆழ்ந்த துயரத்தில் அனாதைக் குழந்தை

ஸ்ரீலங்காவில் தற்போதுள்ள இனச்சிக்கலுக்கும் மோதலுக்கும் இவ்விரு இனப்பிரிவினரும் வரலாற்றுக் காலந்தொட்டு வாழ்ந்து வரும் பகுதிகளும், தற்போது ஸ்ரீலங்காவின் நிலப்பரப்பில் இருபிரிவினரும் குடியமர்ந்துள்ள தன்மையும் முதன்மையான காரணங்களாக உள்ளன.

1621ஆம் ஆண்டிற்கு முன் யாழ்ப்பாணப் பகுதியில் 407 ஆண்டுகள் ஸ்ரீலங்காத் தமிழர்கள் தனியரசாக தமிழ் மன்னர்கள் ஆட்சியின் கீழ் வாழ்ந்தனர். தமிழர்களின் தனியரசு 1621இல் போர்ச்சுக்கீசியர்களால் வெற்றி கொள்ளப்பட்டது.[3] தற்போது முன்வைக்கப்பட்டுள்ள தனி ஈழக்கோரிக்கையில் ஒரு பகுதியாக உள்ள கிழக்கு மாகாணத்திலும் பன்னெடுங் காலமாகத் தமிழர்களே பெரும்பான்மையினராக வாழ்ந்து வருகின்றனர். பிரிட்டிஷ் ஆட்சியில் அமைக்கப்பட்ட கோல்புரூக் கேமரூன் (Colebrook Cameron) குழு முற்றிலும் வேறுபட்ட, பழமை வாய்ந்த நெடுங்காலமாகத் தனித்தனியாக வாழ்ந்து வருகின்ற சிங்களரையும் தமிழரையும் ஒரே ஆட்சியின் கீழ்க் கொண்டு வரவேண்டுமென்று 1833இல் பரிந்துரைத்தது. இதன் அடிப்படையில் பிரிட்டிஷ் ஆட்சி இரு இன மக்களையும் கொண்ட ஒற்றை ஆட்சியை ஏற்படுத்தியது. இதுவே இன்றைய இன மோதலின் தொடக்கமாக அமைந்தது.[4]

மலையகத் தமிழர்கள் மொத்த மக்கள் தொகையில் 5 விழுக்காட்டினர். சிலோன் என்று அழைக்கப்பட்ட அன்றைய ஸ்ரீலங்காவில் 1825 முதல் காப்பித் தோட்டங்களிலும் பின்னர் தேயிலைத் தோட்டங்களிலும் கூலியாட்களாக வேலை செய்வதற்கு மலையகத் தமிழர்கள் தமிழ்நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டனர்.[5] மத்திய ஸ்ரீலங்காவின் மலையகப் பகுதிகளில் யுவா, சப்ரகமுவா மாகாணங்களில் இவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.



படிப்பகம்

சிங்களர் நெடுங்காலமாக ஸ்ரீலங்காவின் தெற்கிலும் மேற்குப் பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து ஸ்ரீலங்கா விடுதலை பெற்றபின் சிங்கள அரசு குடியேற்றத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இதன்படி தமிழர்கள் வாழும் கிழக்குப் பகுதியில் சிங்களர்கள் புதிதாகக் குடியமர்த்தப்பட்டனர். மேலும், எல்லா இனங்களையும் சேர்ந்தவர்கள் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் வாழத் தொடங்கினர். இருப்பினும், தமிழர்களும் சிங்களரும் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகளைப் பிரிக்கும் தென்மேற்கு - வடகிழக்கு எல்லைக்கோடு மாறாமல் அப்படியே நீடிக்கிறது.

பெரும் எண்ணிக்கையில் வாழும் மற்றொரு சிறுபான்மையினர் முசுலீம்களாவர். 13ஆம் நூற்றாண்டு வாக்கில் முசுலீம்கள் வணிகம் செய்யவும், கடல் கடந்து வாழ்வதற்கான வாய்ப்பைத் தேடியும் ஸ்ரீலங்காவுக்கு வந்தனர். இவர்கள் தமிழ் பேசுபவர்கள். மொத்த மக்கள் தொகையில் 7 விழுக்காட்டினர். கிழக்குப் பகுதியில் திரிகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகளில் பெரும் எண்ணிக்கையினராக வாழ்கின்றனர்.[6]

ஸ்ரீலங்காவில் மற்ற சிறிய சிறுபான்மைச் சமூகங்களும் இருக்கின்றன. ஸ்ரீலங்காவின் தொல்குடி மக்களான வேடர்கள் (Veddas) இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். எண்ணிக்கையில் மிகக்குறைவாக உள்ள வேடர்கள் சமூகம் பெரும்பான்மை சமூகங்களின் ஆதிக்கம் காரணமாக அழியக்கூடிய நிலையில் உள்ளது. வேடர்கள் சமூகம் பன்னெடுங்காலமாக தனக்கு உரிமையாக உள்ள நிலத்தையும் தனித்த அடையாளத்தையும் காத்துக் கொள்ள முடியாத அவல நிலையில் உள்ளது.[7]

இன மோதல்களுக்கு மதம் மட்டுமே காரணம் என்று கூற முடியாதெனினும் மதம் பெரும் காரணமாக விளங்குகின்றது. சிங்களர்களில் பெரும்பான்மையினர் பௌத்த சமயத்தினர். தமிழர்களில் பெரும்பான்மையினர் இந்துக்கள். ஆயினும், பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவாக இவ்விரு இனங்களிலும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் கிறித்தவர்களாக இருக்கின்றனர்.[8]

சிங்களருக்கும் தமிழருக்கும் இடையேயான சமரசத் திட்டத்தின் அடிப்படையில் ஸ்ரீலங்கா ஒரே நாடாக உருவாக்கப்படவில்லை. மாறாக காலனி ஆட்சியினால்தான் ஒரே நாடாக ஆக்கப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து ஸ்ரீலங்கா விடுதலை பெற்றபின் நடைபெற்று வரும் இனமோதல்கள் அதிகாரத்திற்கான போட்டியாகவே இருக்கின்றன். ஒற்றையாட்சிக்கும் கூட்டாட்சிக்கும், இன அடிப்படையில் குடியமர்ந்த நிலப்பரப்பு என்பதற்கும் இன வேறுபாடற்ற ஒரே நாடு என்பதற்கும், சிங்கள மொழிக்கும் தமிழ் மொழிக்கும், பௌத்த மதத்திற்கும் இந்து மதத்திற்கும் இன அடிப்படையிலான கலாச்சார வேறுபாடுகளுக்கும், சமூகப் பொருளாதார நிலைகளில் ஓர் இனத்திற்குக் கேடாகவும் மற்றோர் இனத்திற்கு ஆக்கமாகவும் அமைகின்ற மேலாண்மைக்கும் இடையே நடைபெறுகின்ற போராட்டமே இன மோதல்களுக்குக் காரணமாக இருக்கின்றது. 'ஸ்ரீலங்கா ஒரே நாடு; சிங்களர் பெரும்பான்மையினராக வாழ்வதால், அவர்கள் எல்லாத் துறைகளிலும் மேலாதிக்கம் செலுத்த உரிமை உடையவர்கள்' என்று சிங்கள அரசியல்வாதிகளும் மற்றவர்களும் கூறுகின்றனர். ஆனால் தமிழர்கள், 'நாங்கள் தனித்தன்மையுடைய ஒரு தேசிய இனம், ஸ்ரீலங்கா நாட்டில் சமபங்கும் சமஉரிமையும் உடையவர்கள்' என்று கருதுகின்றனர்.

1972 வரை சமஷ்டிக் கட்சி, அதன்பின் தமிழர் அய்க்கிய முன்னணி, தமிழர் அய்க்கிய விடுதலை முன்னணி (TULF), தமிழீழ விடுதலைப்புலிகள் முதலான அரசியல் கட்சிகளும், அரசு சாரா அமைப்புகளும், அறிஞர்களும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் சிங்களர் சார்பான கொள்கைகள் தமிழர்க்கு எதிரானவை, ஒருதலைச்சார்பானவை என்று கருதினர். ஸ்ரீலங்கா விடுதலை பெற்றபின் அமைந்த அரசாங்கங்கள், தமிழர்களை வேறுபாடாக நடத்துவது, தமிழின அழிப்புச் செயல்களில் சிங்களர்களைத் தூண்டி ஏவிவிடுவது போன்ற குற்றங்களைச் செய்தன என்று தமிழர் அமைப்புகள் அனைத்தும் கண்டித்தன. 1948 முதல் இன்று வரை ஸ்ரீலங்காவை மாறி மாறி ஆண்டு கொண்டிருக்கின்ற அய்க்கிய தேசியக் கட்சியும் (United National Party), ஸ்ரீலங்கா சுதந்தரக் கட்சியும் (Srilanka Freedom Party) தமிழர்களுக்கு எதிரான - சிங்களர்களுக்கு நலம் சேர்க்கும் பல கொள்கைகளை உருவாக்கின. இக்கொள்கைகள் இன வேறுபாட்டை, இனப்பகையைக் கொழுந்துவிட்டு எரியச் செய்தன.

www.padippakam.com

அரசாங்கத்தின் சிங்களச் சார்பு கொள்கைக ளால், தமிழர்களின் நிலஉரிமை, மொழி, குடி யுரிமை, பொருளியல் வாழ்வு, கல்வி, வேலை வாய்ப்பு முதலானவை எவ்வாறெல்லாம் பாதிக்கப்படுகின்றன என்பதை தமிழர் அய்க் கிய விடுதலை முன்னணி (Tamil United Liberation Front) 1976இல் கூட்டிய மாநாட்டில் இயற் றிய தீர்மானத்தின் மூலம் தெள்ளத் தெளிவாக விளக்கியது.[9] அதன்பின் தமிழர்களுக்கு எதி ராக பெருங்கலவரங்கள் நடத்தப்பட்டன; ஒடுக்கு முறைச்சட்டங்கள் ஏவப்பட்டன; தமிழ் வன்முறையாளர்களை ஒடுக்குவது என்ற பெயரால் தமிழர்கள் மீது கொலைவெ றித் தாக்குதல்களை அரசாங்கப்படைகளே நடத்தின. இத்தாக்குதல்களின் விளைவாக பல் லாயிரக்கணக்கான தமிழர்கள் மடிந்தனர். பேர ழிவும் பெரும் இழப்பும் ஏற்பட்டன. இலட்சக் கணக்கில் தமிழர்கள் தம் வாழிடத்தை விட்டு வெளியேறி அகதிகளாயினர். இது தமிழர்கள் மீது நடத்தப்படுகின்ற இனப்படுகொலையா கும்.[10]

❑

[1] Estimates of the Department of Census and Statistics, Ministry of Finance, Planning, Ethnic Affairs and National Integration: Statistical Abstract of the Democratic Social Republic of Sri Lanka 1995. pp. 34,41

[2] see S.D.Muni: Pangs of Proximity,pp.40,41 and H.J.Whall: Right to Self-Determination, pp.189-191. See also A R Arudpragasam: The Traditional Homeland of the Tamils,1996.

[3] see S.Ponnambalam:Tamil Liberation Struggle, p.29

[4] see L.Kuper: Prevention of Genocide, p.220

[5] see S.J.Tambiah: Ethnic Fratricide, p.4

[6] see ibid.

[7] see P.Hyndman: A Study in Microcosm, pp.278-280

[8] see E.Nissan: A Bitter Harvest, p.8

[9] see H.J. Whall: Right to Self-Determination, pp.367-370

[10] see M.S. Venkatachalam: Genocide in Sri Lanka, Gian Publishing House, Delhi, 1987 and also: S.Bose: States, Nations, Sovereignty: Sri Lanka, India and the Tamil Eelam Movement, Sage Publications, New Delhi, Thousand Oaks, London, 1994, pp.80,81



படிப்பகம்

www.padippakam.com

# இனப்படுகொலை - வரையறை

## இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தின் வரலாற்றுப் பின்னணியும் அதன் இன்றைய நிலையும்

இனப்படுகொலை' (genocide) என்ற சொல் சட்ட அறிஞர் ரஃபேல் லெம்கின் என்பவரால் உருவாக்கப்பட்டது. இவர்தான் இனப்படுகொலைக்கு எதிராக ஒரு ஒப்பந்தம் வேண்டும் என்று முதன்முதலாகப் பெருமுயற்சி எடுத்தவர்.[11] நெடுங்காலமாக நடந்து வரும் இனப்படுகொலை என்ற கொடுஞ்செயலுக்கு இனம், நாடு, பழங்குடி என்ற பொருள் தரக்கூடிய 'ஜினோஸ்' (genos) என்ற கிரேக்க மொழிச் சொல்லையும், கொல்லுதல் என்ற பொருள் தரும் 'சைடு' (cide) என்ற இலத்தீன் சொல்லையும் இணைத்து 'ஜினோசைடு' (genocide) என்ற புதிய சொல் லெம்கின் அவர்களால் உருவாக்கப்பட்டது.[12]

1945-ஆம் ஆண்டு நியூரம்பர்க்கில் சர்வதேசத் தீர்ப்பாயத்தின் (International Tribunal) முன் ஜெர்மானிய நாட்டின் போர்க் குற்றவாளிகளின் குற்றங்களைப் பதிவு செய்தபோது இனப்படுகொலை (genocide) என்ற சொல் சட்டப்படியாக முதன்முதலில் பயன்படுத்தப் பட்டது. மனித இனத்திற்கு எதிராகக் கொடுஞ் செயல் புரிந்தனர் என்று அவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டது. *"மரபினக் குழுக்களையும் தேசிய இனக்குழுக்களையும் முற்றாக அழித்தொழிக்க வேண்டும் என்பதற்காக திட்டமிட்டு எவ்விதத் தயக்கமுமின்றி இனப்படுகொலைகளைச் செய்தனர்"* என்று குற்றம் சாட்டப்பட்டது.[13]



ஆற்றில் தூக்கியெறியப்பட்ட சடலங்கள்

1946-ஆம் ஆண்டு நடைபெற்ற அய்க்கிய நாடுகள் அவையின் முதல் கூட்டத்தொடரிலேயே இனப்படுகொலைக்கு எதிராகக் கடுந் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. பொது அவை ஒருமனதாக இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றியது:

1. நியூரம்பர்க் தீர்ப்பாயத்தின் சாசனத்தாலும் தீர்ப்பினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச நெறிகளை உறுதி செய்யும் தீர்மானம் எண்.95(1);
2. நாகரிக உலகத்தால் கண்டனம் செய்யப்படும் இனப்படுகொலை சர்வதேசச் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றம் என்பதையும் அதைப் புரிபவர்களில் முதன்மையாக இருப்பவர்களும் அவர்களுக்கு அதில் கூட்டாளிகளாக இருப்பவர்களும் தண்டிக்கப்பட வேண்டியவர்களாவர் என்பதை உறுதி செய்யும் தீர்மானம் எண்.96(1). இனப்படுகொலைக் குற்றங்கள் குறித்து ஒரு சட்ட வரைவை வடித்திட வேண்டுமென்று இத்தீர்மானம் அய்க்கிய நாடுகள் அவையின் பொருளாதார, சமூக அவையைக் (Ecosoc) கேட்டுக் கொண்டது.[14]

ஒப்பந்த வரைவின்போது எழுந்த விவாதங்களின் விளைவாக 1948-இல் *இனப்படுகொலை தடுப்பு மற்றும் இனப்படுகொலைக் குற்றத்திற்கான தண்டனை குறித்த ஒப்பந்தம் (Convention on Prevention and Punishment of the Crime of Genocide)* இயற்றப்பட்டது. இவ்வொப்பந்தம் 1961 ஜனவரி 12 முதல் நடைமுறைக்கு வந்தது. இனப்படுகொலை அமைதிக் காலத்திலோ அல்லது போர்க்காலத்திலோ



படிப்பகம்

www.padippakam.com

நிகழ்ந்தாலும் அது சர்வதேசச் சட்டத்தின்படி குற்றமாகும் என்றும் அதைத் தடுப்பதும் அதற்கான தண்டனையை வழங்குவதும் தமது கடமையாகும் என்றும் அவ்வொப்பந் தத்தில் கையெழுத்திட்ட நாடுகள் ஒப்பந்த விதி எண்.1இல் உறுதி செய்தன.

*30.12.1995* வரை இனப்படுகொலை குறித்த ஒப்பந்தத்தை *120* நாடுகள் ஏற்றுக் கொண்டிருந்தன. சர்வதேசக் குடிமை, அரசி யல் உரிமைகள் பற்றிய ஒப்பந்தத்தின் கீழ் (International Covenant on Civil and Political Rights) இனப்படுகொலைக் குற்றங்கள் குறித்து நடவ டிக்கை எடுக்கக் கோரலாம். இருப்பினும், இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தமே இனப்படுகொலைக் குற்றங்கள் சம்பந்தப் பட்ட முதன்மையான ஆவணமாக விளங்கு கின்றது. அது வழமையான சர்வதேசச் சட்ட மாகவே கருதப்படுகிறது.[15] இந்த ஒப்பந்தத் தில் கையெழுத்து இடாத நாடுகளும் இச்சட் டத்திற்குக் கட்டுப்பட்டவையாகும். இனப்படு கொலைக் குற்றச் சட்டங்களை எவரும் மீறமு டியாது; அதை இழிவுபடுத்தவும் முடியாது; இதுவே இச்சட்டத்தின் சிறப்பாகும்.[16]

❑

[11] see L.Kuper: International Action against Genocide, p.3
[12] see R.Lemkin: Axis Rule in Occupied Europe
[13] UN Special Rapporteur 1985, p.8
[14] see ibid.,p.11
[15] see T.Meron: Human Rights and Humanitarian Norms as Customary Law, Clarendon Press, Oxford, 1989, p.11
[16] see A.Cassese: Human Rights, p.79



படிப்பகம்

"போரின் விளைவாக எண்ணற்றோர் அகதிகளாக்கப்பட்டு விட்டனர். ஸ்ரீலங்காவிற்கு இது மாபெரும் மனித நேயப் பிரச்சினையாக இருக்கிறது. கடந்த பத்து ஆண்டுகளில் ஸ்ரீலங்காவின் வடமாகாணங்களில் இருந்து இரண்டு இலட்சம் தமிழர்களும் முசுலீம்களும் உயிருக்கு அஞ்சி தம் வீடுகளையும் உடைமைகளையும் விட்டு விட்டு சாரி சாரியாக இந்தியாவில் புகலிடம் தேடி அகதிகளாகச் சென்றனர். மேலும் மூன்று இலட்சம் மக்கள் மேற்கு நாடுகளுக்கு அகதிளாக ஓடினார்கள். ஆறு இலட்சம் தமிழர்கள் தம் சொந்த நாடான ஸ்ரீலங்காவிலேயே தம் வீடு நிலபுலன்களை விட்டு வெளியே அகதிகளாக வாழ்கின்றனர். ஸ்ரீலங்காவின் மொத்த மக்கள் தொகையான 170 இலட்சம் மக்களில் 11 இலட்சம் மக்கள் (தமிழர்கள்) அகதிகளாயினர். 1990இல் இத்தொகை இரண்டு மடங்காயிற்று.

மனித உரிமைகள் மீறப்பட்ட போதெல்லாம் அதை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்ததோடு, பல சமயங்களில் தூண்டியும் விட்ட அரசாங்கத்தின் கொள்கைகளும் செயல்பாடுகளும், கடந்தகால அத்துமீறல்களுக்குப் பொறுப்பேற்காமையும் இப்பிரச்சினைக்குக் காரணங்களாகும். அகதிகளையும் வெளியேற்றப் பட்டவர்களையும் சண்டை நடக்க வாய்ப்புள்ள பகுதிகளில் ஸ்ரீலங்கா அரசாங்கம் குடியமர்த்தியதால் அவர்களுடைய பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது."

— **Asia watch**, Vol.5 Issue II August 11, 1993.

அகதிகளின் வெளியேற்றம்



www.padippakam.com

# இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தில் இனப்படுகொலை பற்றிய வரையறை

இனப்படுகொலை ஒப்பந்தத்தில் விதி இரண்டில் இனப்படுகொலை என்பதற்கான சட்டப்பூர்வமான வரையறை வகுக்கப்பட்டுள்ளது:

*"ஒரு தேசிய இனக்குழுவையோ, ஓர் இனக்குழுவையோ (ethnic group), மரபினக்குழுவையோ, மதக்குழுவையோ, முழுவதுமாகவோ அல்லது ஒரு பகுதியையோ அழிக்க வேண்டுமென்று தெளிவான உள்நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் கீழ்குறித்துள்ள செயல்கள் இனப்படுகொலை செயல்கள் ஆகும்.*

1. *ஒரு குழுவின் உறுப்பினர்களைக் கொல்வது.*
2. *ஒரு குழுவின் உறுப்பினர்களை உடலாலும் உள்ளத்தாலும் கடுமையாகக் காயம்படும்படிச் செய்தல்.*
3. *ஒரு குழு முழுவதுமோ அல்லது ஒரு பகுதியோ அழிவதற்கான சூழ்நிலையை உண்டாக்கவல்ல நிலைமைகளைத் திட்டமிட்டு விதிப்பது.*
4. *ஒரு குழுவில் பிறப்புகளைத் தடுத்திட நடவடிக்கை எடுத்தல்.*
5. *ஓர் குழுவின் குழந்தைகளை மற்றோர் குழுவிடம் கட்டாயப்படுத்தி அனுப்பி வாழச் செய்தல்*

இனப்படுகொலை என்ற வரையறையில் மூன்று முக்கிய பகுதிகள் உள்ளன. இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தின்படி எந்தெந்தச் செயல்கள் இன அழிப்பானவை என அறிவதற்கு இம்மூன்று பகுதிகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. முதலாவது பகுதி எந்தெந்தச் செயல்கள் இன அழிப்பானவை என்பது பற்றியது. இரண்டாவது பகுதி ஒரு இனத்தை முழுமையாகவோ அல்லது பகுதியோ அழிப்பதற்கான உள்நோக்கம் பற்றியது. மூன்றாவது பகுதி தேசிய இனம், மரபினம், இனக்குழு, மதம் முதலான அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட குழுவை வரையறை செய்வது பற்றியதாகும்.

1. ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவினரைத் தாக்கிக் காயப்படுத்துவது அல்லது முற்றாகக் கொன்று அழிப்பதான செயல்கள் இனப்படுகொலை என்று முதல் பகுதி கூறுகின்றது. கலாச்சார இனப்படுகொலைச் செயல்கள் இதில் அடங்கா. ஒரு பிரிவு மக்களுக்கு எந்த அளவிற்கு அழிவை ஏற்படுத்தினால் இனப்படுகொலை என்று கருதமுடியும்? ஒரே ஒருவரைக் கொன்றால்கூட அது இனப்படுகொலையாகுமா?[17] என்பன போன்ற விவாதங்கள் நடைபெற்றன. ஆனால் இது நடைமுறையான கேள்வியல்ல. ஏனெனில், ஒரு பிரிவைச் சேர்ந்த மக்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்படும்போது மட்டுமே அது இனப்படுகொலை என்று குற்றம் சாட்டப்படுகிறது.

2. இனப்படுகொலை என்பது ஒரு குறிப்பிட்ட உள்நோக்கம் கொண்டதாக இருக்கும். ஒரு பிரிவு மக்கள் மீது இழைக்கப்படும் கொடூரச் செயல்கள், அவர்கள் ஒரு மக்கட் பிரிவாக ஒன்றுபட்டு இருப்பதையோ அல்லது அவர்களின் ஒட்டுமொத்தப் பண்பியல்புகளையோ அல்லது ஆற்றலையோ குலைத்து அழிக்க வேண்டும் என்பதையோ உள்நோக்கமாகக் கொண்டிருக்கின்றன[18]. எனவே, இத்தகைய 'உள்ளார்ந்த நோக்கத்திற்கு'ப் பதிலாக 'உடலளவில் ஊறுவிளைத்தல்' என்ற தொடரை ஏற்கலாம் என்ற கருத்து முன்மொழியப்பட்டபோது, அது ஏற்கப்படாமல் கைவிடப்பட்டது.[19] இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தில் பட்டியலிடப்பட்டுள்ள குற்றச் செயல்களை ஒரு மக்கள் பிரிவினர் மீது புரிந்தாலும் அதற்குத் தெளிவான உள்நோக்கம் இல்லையானால், அது இனப்படுகொலைக் குற்றமாகக் கருதப்படாது.[20] குற்றச் செயல்கள் புரிந்ததற்கான ஆதாரங்களிலிருந்து அக்குற்றச் செயல்களுக்குப் பின்னணியாகத் தெளிவான உள்நோக்கம் இருக்கிறதா என்பதைக் கண்டறிய வேண்டியது நீதிமன்றத்தின் கடமையாகும் என்று இனப்படுகொலை குறித்த அய்க்கிய நாடுகள் அவையின் சிறப்புப் பொறுப்பாளர் கூறியுள்ளார். சில குற்றச்செயல்களில் கவனக் குறைவோ அல்லது முரட்டுத்தனமோ இருப்பினும் அதைச் செய்தவர் அதன் விளைவுகள் பற்றி நன்கு அறிந்திருந்தாரா



படிப்பகம்

www.padippakam.com

என்பதையும் நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.[21]


3. இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தை வடித்தபோது இனப்பிரிவுகளை எவ்வாறு வரையறை செய்வது என்ற விவாதம் எழுந்தது. எவ்வாறு இனப்பிரிவுகள் வரையறை செய்யப்பட்டன என்பது கீழே தரப்பட்டுள்ளது.

- *ஒரு தேசம் (Nation) என்பது வரலாற்றாலும் கலாச்சாரத்தாலும் தெளிவாகப் பிணைக்கப்பட்ட ஒரு சமூகமாகும்.*
- *தனித்தன்மையான, நிலையான, பொது மரபுக் கூறுகளைக் கொண்டுள்ள கூட்டத்தினர் மரபினம் (Race) ஆகும்.*
- *ஒரே வகையான பழக்கவழக்கங்கள், ஒரே மொழி, ஒரே மரபுக்குடி கொண்ட சமூகம் ஒரு இனக்குழு எனப்படும்.*[22]

❑

"... பாதுகாப்புப் படையினரால் இழுத்துச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டனர்... கைது செய்யப்பட்டதுமே அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பது தெளிவாகத் தெரிகிறது. சுடப்பட்ட இடத்திலேயே மாண்டவர்களின் உடல்கள் விடப்பட்டன. ஆனால் இதுபோன்று சுடப்பட்ட பெரும்பாலான நிகழ்வுகளில் இராணுவத்தினர் இறந்த உடல்களை எடுத்துச் சென்று எரித்தனர். எனவே இவ்வாறு எரிக்கப்படாமல் விடப்பட்ட உடல்கள் கண்டறியப்பட்டதற்கான ஆதாரத்தைக் கொண்டே விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன."

— இலங்கையில் காவலில் ஏற்படும் சாவுகள் பற்றி அம்னஸ்டி இண்டர்நேஷனலின் அறிக்கை: துன்புறுத்தல், காணாமல் போதல், சித்திரவதை பற்றிய அண்மைக் கால அறிக்கை. 1987 மே.



**காவலில் மரணம்**

[17] see UN Special Rapporteur 1985, pp.16,29
[18] ibid., p.19
[19] UN Special Rapporteur 1978, pp.25,98
[20] ibid.pp.25,96
[21] see UN Special Rapporteur 1985, pp.19,39
[22] S. Glaser: Droit international penal conventionell ( Brussels, Etablissements Emile Bruylant, 1970),pp.111-112 cited in UN Special Rapporteur 1978, p. 57



படிப்பகம்

www.padippakam.com

# இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தில் இனப்படுகொலை பற்றிய வரையறை - ஒரு திறனாய்வு



சமூகக் கூடங்களுக்கும் சமூக நிறுவனங்களுக்கும் ஏற்பட்ட நாசம்

இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தில் இனப்படுகொலை பற்றிய வரையறை குறுகியதாக இருக்கிறது என்று தொடர்ந்து கடுமையாக விமர்சனம் செய்யப்பட்டு வருகிறது. இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தின் நோக்கம் நிறைவேறாமைக்கு இக்குறுகிய வரையறையே காரணம் என்று கண்டிக்கப்படுகிறது. இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக கடந்த ஆண்டுகளில் நடந்த சட்ட ரீதியான விவாதங்களின் அடிப்படையில் மூன்று முக்கிய விமர்சனங்கள் முன் வைக்கப்படுகின்றன.

1. அரசியல் குழுக்களை (political groups) இனப்படுகொலை வரையறையில் சேர்த்திட சோவியத் ஒன்றியம் எதிர்ப்பு தெரிவித்ததால் அது கைவிடப்பட்டது.[23] இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தை வரைவதற்காக உருவாக்கப்பட்ட ஆறாவது குழுவில் அரசியல் பிரிவினரை இனப்படுகொலை வரையறையில் சேர்ப்பதா? வேண்டாமா? என்று நீண்ட விவாதம் நடந்தது. இனப்படுகொலை குறித்து வெளியிடப்படும் அறிக்கைகளிலும் ஏடுகளிலும் இந்த விவாதம் தொடர்ந்து எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.[24] அரசியல் குழுக்களின் நிலைப்பாடுகள் அவற்றின் உறுப்பினர்களின் நிலையற்ற போக்கினால் மாறுகின்றன. இத்தகைய நிலையற்ற போக்கே அரசியல் குழுக்களை இனப்படுகொலை வரையறைக்குள் கொண்டு வரக்கூடாது என்பதற்குக் காரணமாகக் காட்டப்படுகிறது. உள்நாட்டு அரசியல் மோதல்களில் அய்க்கிய நாடுகள் அவை தலையிட்டுத் தீர்த்து வைக்க வாய்ப்பு இருப்பதாலும், நாட்டைச் சீர்குலைக்கும் சக்திகளை ஒடுக்க வேண்டியது ஓர் அரசாங்கத்தின் கடமை என்பதாலும், சர்வதேச மனித உரிமைப் பிரகடனம் (Univeral Declaration of Human Rights) மற்றும் அந்தந்த நாடுகளின் சட்டங்கள் மூலம் அரசியல் குழுக்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள வாய்ப்பு இருப்பதாலும் அரசியல் குழுக்கள் இனப்படுகொலை வரையறையின் கீழ் கொண்டு வரப்படவில்லை என்று வாதிடுகின்றனர்.[25] அரசியல் குழுக்களை இனப்படுகொலை வரையறைக்குள் கொண்டு வர வேண்டும் என்போர், மதக்குழுக்கள் தமக்குள் பொதுவான நம்பிக்கைகளைக் கொண்டிருப்பது போலவே அரசியல் குழுக்களும் தமக்குள் பொதுவான குறிக்கோள்களைக் கொண்டுள்ளன என்று வாதிடுகின்றனர். மேலும், பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டாலும் அக்கொடுஞ்செயலுக்குத் தெளிவான



படிப்பகம்

www.padippakam.com

உள்நோக்கம் இல்லை என்று கூறி, அதை இனப்படுகொலையாகக் காண மறுப்பது அறிவற்ற வாதமாகும். ஏனெனில், இன்றைய நவீன உலகில் இதுபோன்ற படுகொலைகள் தாம் நிறைய நடக்கின்றன.[26] தவிரவும் சர்வதேச மனித உரிமைப் பிரகடனம் (Universal Declaration of Human Rights) கூறும் மனித உரிமை என்பது தனிமனிதர்களின் உரிமையைப் பாதுகாப்பதற்கு ஏற்படுத்தப்பட்டது என்றே பொதுவாக நடப்பில் கருதப்படுகிறது. மிகவும் அரிதான நிகழ்வுகளில் மட்டுமே அது ஒரு குழுவின் அல்லது சிறுபான்மையினரின் உரிமையைக் காக்கப் பயன்படுத்தப்படுகிறது. பொதுவாக, அரசியல் குழுக்கள் மீது நடத்தப்படும் படுகொலைகள் இனப்படுகொலைச் செயலாகக் கருதப்படாத நிலையே நீடிக்கின்றது.

அரசியல் குழுக்களை இனப்படுகொலை வரையறைக்குள் சேர்க்காமை, எந்தவொரு குழுவையும் அரசியல் குழு என்று காரணம் காட்டியே அக்குழுவைப் பூண்டோடு அழித்திடக்கூடிய ஆபத்துக்கு வழி வகுக்கின்றது என்று அரசியல் குழுக்களை அவ்வரையறையில் சேர்க்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் வாதிடுகின்றனர்.[27] இக்கருத்து மிகவும் மனங்கொள்ளத்தக்கதாகும். ஏனெனில் சம்பந்தப்பட்ட அரசாங்கங்கள் இனப்படுகொலைச் செயல்களை அரசியல் காரணங்களுக்காகச் செய்யப்பட்டவை என்று எளிதில் ஒதுக்கி விடக்கூடிய பேராபத்து இதில் அடங்கி உள்ளது. குறிப்பாக, பன்முகத்தன்மை கொண்ட ஒரு சமுதாயத்தில் (Pluralistic Society) ஒரு தேசிய இனத்திற்கும் மற்ற இனங்களுக்கும் இடையே நடக்கும் உள்நாட்டுச் சண்டையில் 'அரசியல் காரணம்' மிகவும் தவறாகப் பயன்படுத்தப்பட வாய்ப்பு உண்டு. இத்தகைய சூழ்நிலையில் தங்கள் உரிமையை நிலைநாட்டிக் கொள்ள ஓர் இன மக்கள் அரசியல்ரீதியாகத் தங்களைத் தயார்படுத்திக் கொள்வது தவிர்க்க முடியாததாகும். அந்நிலையில் அவ்வின மக்களை அரசியல் குழுவா? இனக்குழுவா? என்று பிரித்துக் காட்ட முடியாது.

2. 'உள்நோக்கம்' என்ற உள்ளடக்கத்தின் மீது கடுமையான விமர்சனம் வைக்கப்பட்டு வருகின்றது. எந்தவொரு அரசாங்கமும் தான் மேற்கொள்கின்ற ஒடுக்குமுறைக் கொள்கைகள் ஒரு குறிப்பிட்ட பிரிவினரை அழித்தொழிப்பதற்கானவை என்று ஒருபோதும் ஒத்துக்கொண்டதேயில்லை என்பது வெள்ளிடைமலை போல் தெரியும் உண்மையாகும்.[28] அரசாங்கத்தின் இனப்படுகொலை உள்நோக்கத்திற்கு ஆதாரமாக விளங்கக்கூடிய ஆவணங்களையும் அரசாங்கங்கள் அழித்து விடுவதால், அவற்றின் கெட்ட உள்நோக்கத்தை நிரூபிப்பது இடர்ப்பாடானதாகிவிடுகிறது.[29] அரசாங்கத்தின் கெட்ட உள்நோக்கத்தைத் தெளிவாக மெய்ப்பிக்க வேண்டும் என்று வகுத்திருப்பது இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தின் தோல்விக்கு ஒரு முதன்மையான காரணமாகத் திறனாய்வாளர்களால் காட்டப்படுகிறது. உள்நோக்கம் என்பதற்குப் பதிலாக, மேற்கொள்ளப்படுகின்ற செயல்பாடுகளை மய்யமாகக் கொள்ள வேண்டும் என்று கூறப்படுகிறது.[30] போர்க்காலக் குற்றங்களுக்கும் சாதாரணக் கொலைக்கும் இனப்படுகொலைக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைப் பிரித்தறிவதற்கு உள்நோக்கம் என்ற கோட்பாடு தேவைப்படுகிறது என்ற உண்மையும் உணரப்படுகிறது.[31] எனவே, தற்பொழுது உள்நோக்கக் கோட்பாடு இனப்படுகொலைக் குற்றங்களை வரையறுப்பதில் இன்றியமையாத கூறாக விளங்குகின்றது.

3. மூன்றாவதாக முன்வைக்கப்படும் விமர்சனம் கலாச்சார இனப்படுகொலை பற்றியதாகும். இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தை வரைவதற்காக நியமிக்கப்பட்ட குழு கலாச்சார இனப்படுகொலையும் ஒப்பந்தத்தில் ஒரு பகுதியாகச் சேர்த்திருந்தது. ஒப்பந்த வரைவில் கீழ்க்கண்ட விஷயமும் இருந்தது:

*"தேசிய இனம், மரபினம், மதப்பிரிவு என்ற காரணங்களின் அடிப்படையில் அவற்றின் மொழியையோ, மதத்தையோ, கலாச்சாரத்தையோ அழிக்க வேண்டுமென்ற உள்நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் பின் குறித்துள்ள செயல்கள் இனப்படுகொலைச் செயல்களாகும். 1.ஒரு குறிப்பிட்ட பிரிவு மக்கள் அவர்களுடைய தாய்மொழியை அன்றாட நடைமுறை வாழ்விலும், பள்ளிகளிலும், அச்சிட்டுப் பரப்புவதிலும் பயன்படுத்தத் தடைவிதிப்பது. 2.நூலகங்கள், அருங்காட்சியகங்கள், பள்ளிகள், வரலாற்றுச் சின்னங்கள், வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றை அப்பிரிவு மக்கள் பயன்படுத்த விடாமல் தடுப்பது அல்லது அவற்றை அழிப்பது.[32]* இனப்படுகொலை ஒப்பந்தம் இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டபோது கலாச்சார இனப்ப



படிப்பகம்

www.padippakam.com

டுகொலைத் தடுப்பு பற்றிய முன்மொழிவு ஏற்கப்படாமல் கைவிடப்பட்டது. ஏனெனில், இம்முன்மொழிவு தெளிவற்றதாக இருக்கிறது என்பதும் உள்நாட்டுச் சிக்கல்களில் வெளி நாட்டு அரசாங்கங்கள் தலையிடுவதற்கான வாய்ப்பை இது ஏற்படுத்தும் என்பதும் அது ஏற்கப்படாமைக்குக் காரணங்களாகக் கூறப்பட்டன. மேலும் சிறுபான்மையினரின் கலாச்சாரத்தைப் பாதுகாப்பது என்பது பிற சர்வதேச உரிமைக்காப்பு அமைப்புகளின் பணியாகும் என்று கருதப்பட்டது.[33]


படுகொலைகள்

ஒரு குழுவின் அரசியல், சமூக நிறுவனங்கள், கலாச்சாரம், மொழி, தேசிய உணர்வு, மதம், பொருளாதார அடித்தளம் ஆகியவற்றின் மீது ஒருசேரத் தாக்குதல் தொடுப்பது (கலாச்சார நிறுவனங்களையும் கலாச்சாரச் செயல்களையும் தடுப்பது அல்லது அழிப்பது) இனப்படுகொலையாகும் என்று லெம்கின் வரையறை செய்திருந்த போதிலும், இறுதி வடிவம் பெற்ற இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தில் கலாச்சார இனப்படுகொலை என்பது சேர்க்கப்படவில்லை.[34] இருப்பினும், ஒரு குறிப்பிட்ட மக்கள் பிரிவினரைக் கொல்வதன் மூலம் அவர்களை ஒடுக்குவது போலவே அவர்களின் தனித்தன்மை வாய்ந்த பண்பாட்டுக்கூறுகளை அழிப்பதன் மூலமும் அவர்களை ஒடுக்க முடியும் என்ற கூறப்பட்ட கருத்திற்கு ஓரளவு ஆதரவு இருந்தது.[35] திட்டமிட்டுப் பெரும் எண்ணிக்கையில் ஒரு பிரிவு மக்களைக் கொல்லுகின்ற இனப்படுகொலை என்பதற்கும் சிறுபான்மையினரின் உரிமைகளை மறுக்கின்ற கலாச்சார இனப்படுகொலை என்பதற்குமான வேறுபாடு தற்போது தெளிவாக உணரப்பட்டுள்ளது. கலாச்சார இனப்படுகொலையையும் இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தில் சேர்க்க வேண்டும் என்று முன் வைக்கப்படும் வாதங்கள் வீணானவை அல்ல. ஏனெனில், இனப்படுகொலை எவ்வாறெல்லாம் நடைபெறுகிறது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள இவ்வாதங்கள் உறுதுணை புரிகின்றன. இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தின் நோக்கமாக இனப்படுகொலையைத் தடுப்பதற்கு இனப்படுகொலைப் பற்றிய சரியான புரிதல் அச்சாணி போன்றதாகும். ❑

---

23 L.Kuper: International Action against Genocide, p.3
24 see G.J. Andreopoulus: The Calculus of Genocide in G.J.Andreopolous: Genocide, p.2 and I.W.Charny: Towards a Generic Definition of Genocide in: G.J.Andreopolous: Genocide, p.70
25 see UN Special Rapporteur 1985, pp.18,35
26 see ibid.:p.18,36
27 see P.Drost: The Crime of State, II Genocide quoted ibid., pp.19,36
28 see G.J. Andreopoulos: Genocide, p.7
29 see L.Kuper:Genocide, p.33
30 see UN Special Rapporteur 1978, pp.26,100
31 see ibid., p.26
32 E/794, pp.21,27 and 28. See E/CN.4/Sub.2/416, para. 441-461
33 see UN Special Rapporteur 1985, p.17
34 see R.Lemkin: Axis Rule in Occupied Europe, pp.X-XI
35 see UN Special Rapporteur 1978, pp.124,125

www.padippakam.com

# இனப்படுகொலை - சட்டம் சாரா விளக்கங்கள்

இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தின் மூலமாக அனைத்துலகக் குற்றமாக வகுக்கப்பட்ட இன்ப்படுகொலை குறித்த வரையறை வெறும் சட்ட வடிவத்தையும் குறுகிய கண்ணோட்டத்தையும் மட்டுமே கொண்டதாக இருக்கிறது; சமூக அமைப்பு, முறையான ஆய்வு, உளவியல் கூறுகள் முதலானவற்றை இந்த வரையறை கருத்தில் கொள்ளவில்லை. மேற்சொன்ன வரையறையிலுள்ள இக்குறைபாடுகள் காரணமாக சமூகவியல் ஆய்வாளர்கள் இனப்படுகொலை குறித்து பல கண்ணோட்டத்தில் ஆய்வு செய்யத் தலைப்பட்டனர். இவர்களுடைய ஆராய்ச்சியின் விளைவாக, இருபதாம் நூற்றாண்டில் நடைபெற்ற பலதரப்பட்ட இனப்படுகொலைகளுக்கான காரணங்கள், முன் நிபந்தனைகள் பற்றி சரியான விளக்கங்கள் கிடைக்கப் பெற்றன. இவ்வாறு கண்டறியப்பட்ட உண்மைகள் ஒரு நாட்டின் அல்லது சர்வதேசச் சட்டத்தின்படி எத்தகைய அதிகாரத்தையும் பெற்றிருக்கவில்லையாயினும், சட்ட வரையறைக்கும், இனப்படுகொலை நிகழ்வுப் போக்கைப் புரிந்து கொள்வதற்கும் தோன்றாத் துணையாக நிற்கின்றன. கீழே தரப்பட்டுள்ள விளக்கங்கள் சட்ட ரீதியான வரையறையில் உள்ள போதாமைகளைப் புரிந்து கொள்வதற்கு அடிப்படையாக இருக்கின்றன. அதை விடவும் இனப்படுகொலைக்கான காரணங்கள், முன் நிபந்தனைகள் பற்றிய கோட்பாட்டு ஆராய்ச்சிக்குப் பெரிதும் துணை புரிகின்றன. ஸ்ரீலங்காத் தமிழர் பிரச்சினையின் தன்மையையும், அங்கு நடைபெற்று வரும் இனப்படுகொலைச் செயல்களைத் தடுப்பதற்கான வழிமுறைகளை உருவாக்க வேண்டிய தேவையையும் கருத்தில் கொள்ளும் போது, சமூகவியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ள உண்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டியது மிகவும் முதன்மையானதாகும்.

- **இனப்படுகொலை புரியும் சமுதாயம் : இனப்படுகொலைக்கான காரணங்களும் செயல்பாடுகளும்**

இனப்படுகொலை பன்முகக் கூறுகள் கொண்டதாகும். பொதுவாக வரலாறு அல்லது கருத்தியலில் ஆழ வேர் கொண்ட பெருத்த முரண்பாட்டின் விளைவாகவே இனப்படுகொலை நிகழ்கின்றது. ஒரு நாட்டு அளவிலோ அல்லது சர்வதேச அளவிலோ இது நடைபெறும். ஸ்ரீலங்காவைப் பொறுத்தவரை லியோ கூப்பர் வகுத்துள்ள உள்நாட்டு இனப்படுகொலை முறை பொருத்திப் பார்க்கப்பட வேண்டும். ஒரு சமுதாயத்தின் உள் முரண்பாடுகளின் விளைவாக இனப்படுகொலை நடைபெறுகிறது என்பதே லியோ கூப்பர் உருவாக்கிய வகைப்பாடாகும்.[36] லியோ கூப்பர் பலவகையான உள்நாட்டு இனப்படுகொலைகள் நடப்பதாகப் பகுத்துள்ளார். அவற்றுள் சில: வலிமையான இரண்டு சமூகங்கள் கொண்ட நாட்டில் காலனி ஆதிக்கம் ஒழிந்த பின் ஏற்படுகின்ற இனப்படுகொலை; ஒரு தேசிய இனமோ அல்லது மரபினமோ அல்லது மதப் பிரிவினரோ மேற்கொள்ளும் அதிகாரத்திற்கான போட்டியில் நிகழும் மேலாதிக்க சுயாட்சிக்காகவோ அல்லது நாட்டுப் பிரிவினைக்காகவோ நடக்கும் போராட்டங்களில் ஏற்படும் இனப்படுகொலை. 1971இல் வங்கதேசத்தில் நடந்த படுகொலை இதற்கு எடுத்துக்காட்டாகும்.[37]

பலவகைப்பட்ட உள்நாட்டு இனப்படுகொலைகள் நடப்பினும் அவற்றிற்கிடையே இருக்கின்ற பொதுவான கூறுகளைக் கீழ்குறித்துள்ளவாறு கூப்பர் தொகுத்தளிக்கிறார்: *1) ஏற்றத்தாழ்வான பங்கேற்பு 2) வகுப்பு அல்லது தனியான நிலப்பரப்பு அடிப்படையில் மக்கள் தனித்தனியாக ஒன்று திரளுதல். 3) கடந்த கால இனமோதல்களை வரலாறாக எழுதி நிலை பெறச் செய்தல்; மற்ற இனத்தைப் பற்றிப் பகையான - மனிதத் தன்மையற்றக் கருத்துக்களை வளர்த்தல் 4) இவற்றின் விளைவு என்னவெனில் மரபினம், தேசிய இனம், இனக்குழு அல்லது மத அடிப்படையில் முழுமையான அடையாளங்கள் உருவாகின்றன.[38] மேலும் (i) பல சமயங்களில் ஆதிக்கப் பிரிவுக்கும் அடக்கப்பட்ட பிரிவுக்கும் மத வேறுபாடுகள் இருக்கின்றன. (ii) சூழ்நிலையில் ஏற்படும் மாற்றம் அல்லது அச்சுறுத்தல் இனப்படுகொலைக்குச் செயலூக்கியாகி விடுகிறது. (iii) பொதுவாக ஆட்சியில் இருக்கும் அரசாங்கங்கள்தாம் இனப்படுகொலைக் குற்றங்களைச் செய்கின்றன; சிலபோது மற்றவர்களும் இதைச் செய்கின்றனர். (iv) பன்முகச் சமூகங்களில் இனப்படுகொலை நிகழ்வது*



படிப்பகம்

இயல்பாகி விட்டது. இச்சமூகங்களில் மதம், மரபினம், இனம் என்பவற்றின் அடிப்படையில் ஆழமாக வேரூன்றி விட்ட வேறுபாடுகள் நிலவுகின்றன. இவையே இனப்படுகொலைக்குக் காரணமாக உள்ளன. (V) சுயநிர்ணய உரிமை மறுக்கப்படும் போதும், பிரிவினை அல்லது அதிக தன்னாட்சிக்கான போராட்டங்கள் நடக்கும்போதும் பேரழிவை உண்டாக்கும் இன மோதல்கள் நிகழ்கின்றன.[39]


கூப்பரின் வகைப்பாட்டை ஸ்ரீலங்காவின் சூழ்நிலைக்குப் பொருத்திப் பார்க்கும்போது கூப்பர் கூறுகின்ற உள்நாட்டு இனப்படுகொலை நிகழ்வதற்கு முன் தேவையான அடிப்படைக் கூறுகள் அனைத்தும் அங்கு நிலவுவதைத் தெளிவாகக் காண முடியும். அங்கு இனப்படுகொலைகள் நிகழ்வது தற்செயல் நிகழ்ச்சியன்று. மாறாக இது "ஐக்கியப்பட்ட ஒரு தேச அரசை (Nation State) உருவாக்குவதற்கான மிக அடிப்படையான உத்திதான் இனப்படுகொலைக்குக்காரணமாக உள்ளது.''

பொதுவாக சிறுபான்மையாக உள்ள ஒரு தேசிய இனத்தை அழிக்க வேண்டும் என்பதற்காக நீண்டகாலமாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளை இது பிரதிபலிக்கின்றது. ஒரு அரசாங்கம், தனது குடிமக்கள் தனக்குக் கட்டுப்பட்டு நடப்பதையும் தன்னோடு பங்கேற்பதையும் உறுதி செய்து கொள்ளும் ஒரு அடிப்படையான அரசியல் கொள்கையாக இது செயல்படுகிறது.[40]

இத்தகைய சூழ்நிலையில் இனப்படுகொலை என்பது, "சிறுபான்மை மக்களின் எண்ணிக்கையை பலவந்தத்தின் மூலமோ அல்லது பயங்கர வன்முறை மூலமோ குறைத்திட சட்டரீதியாக அதிகாரம் பெற்றுள்ள அல்லது அனைத்து அதிகார மையங்கள் மீதும் ஆதிக்கம் செலுத்தும் வல்லாண்மை கொண்ட பெரும்பான்மைப் பிரிவு மேற்கொள்ளும் வெற்றிகரமான நடவடிக்கையேயாகும். சிறுபான்மை மக்கள் பூண்டோடு அழிந்தொழிய வேண்டும் என்றும் அந்நிலைதான் தனக்கு நன்மை தருவதாகும் என்றும் பெரும்பான்மைப் பிரிவு விரும்புகின்றது. சிறுபான்மை மக்களை எளிதில் தாக்க முடியும் என்றுள்ள நிலைதான் இனப்படுகொலைச் செய்யத் துணிவதற்குப் பெருந்தூண்டுதலாக இருக்கின்றது.''[41]

இனப்படுகொலை குறித்த இவ்விளக்கங்கள் இனப்படுகொலைக்குப் பின்னணியாக உள்ள உள்நோக்கத்தைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அரசாங்கத்திலும் மற்ற செல்வாக்கான தளங்களிலும் உள்ள மேல்தட்டு வர்க்கத்தினர் வலிமையான அரசியல், பொருளாதார நிலைகளை அடையவும் அல்லது பெற்றுள்ள ஆதிக்க நிலையைத் தக்க வைத்துக் கொள்ளவுமே இனப்படுகொலையை ஏவி விடுகின்றனர். இதற்காக சிறுபான்மை மக்களுக்குக் கேட்டினை உண்டாக்குகின்ற, தேசிய நிர்மாணத் திட்டம் என்ற போர்வையில் சிறுபான்மை மக்களை வேறுபடுத்திப் பார்க்கின்ற, வன்முறையை வளர்க்கின்ற கொள்கைகளை அரசாங்கம் உருவாக்கி நடைமுறைப்படுத்துகின்றது.

இதுவரை இங்கு கூறப்பட்ட கருத்துக்களும் விளக்கங்களும் எத்தகைய சூழ்நிலையில் உள்நாட்டு இனப்படுகொலை நிகழ்கிறது என்பது விளங்கிக் கொள்ள துணை நிற்கின்றன. இவை இனப்படுகொலைச் சமுதாயத்தில் நிலவும் முன் நிபந்தனைகளை அடையாளம் காட்டுகின்றன. இதன் மூலம் இனப்படுகொலை நிகழ்வதற்கான அமைப்பு மற்றும் செயல்ரீதியான காரணங்களை விளக்குகின்றன. ஆயினும், ஒரு சமுதாயம் முழுமையான இனப்படுகொலைச் சமுதாயமாக உருவாகிவிட்டதா என்பது அந்நாட்டையும், அந்நாட்டில் வாழும்



இராணுவ ஆட்சி

www.padippakam.com

மேல்தட்டு வர்க்கம் தன் நலன்களைக் காத்துக் கொள்ள இனப்படுகொலையைப் பயன்படுத்த எந்த அளவிற்குத் தயாராக உள்ளது என்பதையும் ஒரு குறிப்பிட்ட இனத்திற்கு எதிராக ஏவப்படும் இனப்படுகொலைக்கு அந் நாட்டில் எந்த அளவிற்கு மறுப்பும் எதிர்ப்பும் இருக்கும் என்பதையும் பெரிதும் சார்ந்திருக்கின்றது.

"ஒரு மரபினமோ அல்லது இனமோ மற்றொரு இனத்தால் திட்டமிட்டு பூண்டோடு அழிக்கப்படுகின்ற இனப்படுகொலை என்பது மனித உரிமைகளை முற்றாக மீறியதன் உச்சவடிவமாகும். கொன்றொழித்தல் (holocaust) என்ற சொல் அண்மைக்காலம் வரையில், ஜெர்மானிய நாஜிப்படைகள் அய்ரோப்பா முழுவதிலும் யூதர்களைக் கொன்றொழிக்க மேற்கொண்ட செயல்களைக் குறிப்பதற்காக மட்டுமே பயன்படுத்துப்பட்டு வந்தது. ஆனால் மிக அண்மைக்காலத்தில் போஸ்னியா, ருவாண்டா, புருண்டி ஆகிய நாடுகளில் ஒரு குறிப்பிட்ட இனத்தவர் தங்கள் இனத்தூய்மையைக் காக்க வேண்டும் என்ற வெறியினால் உந்தப்பட்டு மற்ற இன மக்களைக் கொன்றொழிக்கும் கொடுஞ்செயல் இனப்படுகொலையாகும். எனவே, இப்போது இச்சொல் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. உண்மையில் மனிதனிடம் புதைந்துள்ள இனப்படுகொலை வெறி என்பது மனித இனத்தைப் போலவே மிகவும் பழைமையானதாகும்."

— Donald Acheson: **Preventing Genocide. Episodes Must Be Exposed, Documented and Punished**, British Medical Journal, 7 December 1997.

## • இனப்படுகொலை நிகழ்முறை

ஒரு நாட்டின் ஒரு குறிப்பிட்ட மக்கள் பிரிவுக்கு எதிராக ஓரளவு வெளிப்படையாகவே எடுக்கப்படும் ஒடுக்குமுறைகளும் கொலைச் செயல்களும் அச்சமுதாயம் உள்நாட்டு இனப்படுகொலைக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகின்றது. பெரும் எண்ணிக்கையில் கொல்வதற்கும் முற்றிலும் நடுநிலை பிறழ்ந்த ஒருதலைச்சார்பான செயல்களில் ஈடுபடுவதற்கும் பொதுவாக மக்கள் தயங்குகின்றனர் என்று உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.[42]

இக்காரணத்தால் இனப்படுகொலையில் ஈடுபடச் செய்வதற்கு முன் அவர்களை மனிதத்தன்மையற்றவர்களாக ஆக்க வேண்டிய தேவை உணரப்பட்டது. கொடிய விலங்குகளைக் கொல்வது போல தேவைக்காக மனிதர்களையும் கொல்வதில் தவறில்லை என்று நியாயம் கற்பிக்கப்படுகிறது. 'பூண்டோடு அழிப்பது' என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது. இச்சொற்றொடர் மனிதன் என்கிற நிலையை, அவனது தனித்தன்மையை மறுக்கின்றது. வன்முறைக்கு எதிராகச் சமுதாயத்தில் இயங்குகின்ற அறநெறி அமைப்புகளின் வலிமையைக் குன்றச் செய்யும் கொடுஞ்செயல்களை ஊக்குவிக்கின்றது.[43] இனப்படுகொலையை நோக்கமாகக் கொண்ட கொடுஞ்செயல்கள் அரசாங்கத்தின் ஏகபோக அதிகாரத்துடன் பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்துள்ளது. ஆனால் இந்த ஏகபோக அதிகாரத்திற்கு இறையாண்மை என்ற முலாம் பூசப்படுகிறது. எனவே கொலைச்செயலுக்கு உயரிய காரணத்தைக் கற்பிக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு ஏற்படுகிறது. ஒரு இனத்தின் தூய்மையைக் காக்க அல்லது அதன் பொருளாதாரத் தளத்தைப் பெருக்க ஒரு அரசாங்கம் எத்தகைய உயிர்ப்பலியையும் தர உரிமையுடையது என்று கூறப்படுகிறது.[44]

பொதுவாக இனப்படுகொலைச் செயல்பாடு என்பது "ஒரு தேசத்தின் அல்லது ஒரு இனக்குழுவின் அழிவை" நோக்கமாகக் கொண்டதாகும்.[45] இது இரண்டு கட்டங்களாக நிறைவேற்றப்படுகிறது. ஒன்று ஒடுக்கப்படும் மக்களின் தேசியத் தன்மைகளை அழிப்பது;



படிப்பகம்

மற்றது ஒடுக்கும் தேசியத்தின் கூறுகளைத் திணிப்பது.[46] ஒரு தேசிய இனத்தை அல்லது ஓர் இனக்குழுவை அழிப்பது என்பது பெரும் எண்ணிக்கையில் அம்மக்களைக் கொல்வதன் மூலமே நடக்கிறது. இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தில் இருப்பதைவிட ரஃபேல் லெம்கின் (Raphael Lemkin) இனப்படு கொலைச் செயல்கள் பற்றி வகுத்தளித்த மூல வரையறை விரிவானது ஆகும்.

*"ஒடுக்கப்பட்ட மக்களது வாழ்வின் பல் வேறு துறைகள் மீது ஒரே நேரத்தில் தொடுக் கப்படும் தாக்குதலே இனப்படுகொலையா கும். அரசியல் துறையில் சுயாட்சி அமைப்பு களை அழிப்பது, ஒடுக்குவோரின் நிர்வாக முறையைத் திணிப்பது, புதிய குடியேற்றம் அமைத்தல்; சமூகத்துறையில் நாட்டில் நிலவு கின்ற சமூக இணக்கத்தைக் குலைத்தல்; கலாச் சாரத் துறையில் கலாச்சார நிறுவனங்களையும் மற்ற கலாச்சார செயல்பாடுகளையும் தடுப் பது அல்லது அழிப்பது; பொருளாதாரத் துறை யில் செல்வம் ஒடுக்குவோரின் கைக்கு மாறச் செய்தல்; உயிரியல் துறையில் மக்கள் தொகைக் குறைப்புக் கொள்கையைக் கடைப் பிடித்தல்; உயிர் வாழ்நிலையில் பெரும் எண் ணிக்கையில் கொல்லுதல்; மதத்துறையில் மதச்செயல்பாடுகளில் தலையிடுதல்."*[47]

லெம்கின் அவர்களின் கருத்து ஜெர்மானி யர்கள், யூதர்கள் மீது நடத்திய இனப்படு கொலை பற்றியதாக இருப்பினும் அவர் தொகுத்தளித்துள்ள கூறுகள் எந்தவொரு இனப்படுகொலைக்கும் பொருந்துவதாக இருக்கின்றன. மேற்சொன்னவற்றில் பல கூறு கள் மீது ஒரே நேரத்தில் தொடுக்கப்படும் தாக்குதல்களின் ஒட்டுமொத்தத் தொகுப்பே இனப்படுகொலை என்று விரிந்த புரிந்து கொள்வதற்கு லெம்கின் வரையறை உதவுகி றது. இவ்வாறு இதைப் புரிந்து கொள்ளாவி டில் ஒரு குறிப்பிட்ட மக்களது வாழ்வின் பல்வேறு கூறுகள் தொடர்பான சிக்கல்களை அவை சம்பந்தப்பட்ட சர்வதேச மனித உரிமை அமைப்புகளுக்குத்தான் கொண்டு செல்ல நேரிடும். அவ்வாறு கொண்டு செல் லும்போது பிரச்சினையின் தன்மையே மாறி விடக்கூடும். இனப்படுகொலை பற்றிய வரை யறைகள், விளக்கங்களுக்கெல்லாம் முன்னோ டியாக லெம்கினின் வரையறை விளங்குகிறது: இனப்படுகொலை என்பது அம்மக்களைக் கொன்று அழிப்பது என்று மட்டும் கருதாமல், ஒருங்கிணைந்த செயல்பாடுகளின் கூட்டுவி னைவே ஆகும் என்ற தெளிவை லெம்கினின் வரையறை தருகிறது.

- **இனப்படுகொலை ஆய்வு தொடர்பாக இந்த நூலில் கையாளப்படும் அணுகுமுறை**

இனப்படுகொலையை இனப்படுகொ லைத் தடுப்பு ஒப்பந்தத்தில் வரையறுத்துள்ள வாறு வெறும் சட்டப் பிரச்சினையாக மட் டுமே நோக்கலாம். அல்லது குறிப்பிட்ட கட்ட மைப்புச் சார்ந்த மற்றும் திட்டமிட்ட கொள்கை களின் விளைவாக ஒரு சமுதாயம் இனப்படு கொலைச் சமுதாயமாக மாறுகிறது என்ற விரிந்த நோக்கிலும் காணலாம். இனப்படுகொ லைத் தடுப்பு ஒப்பந்தம் மட்டுமே சட்டப்படி அரசாங்கங்களைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருப்பதாலும், இனப்படுகொலைக் குற்றச்செ யல்களாக இவ்வொப்பந்த வரையறையில் குறிப்பிடப்பட்டுள்ளவை மட்டுமே கருத்தில் கொள்ளப்படுவதாலும் இந்த ஆய்வு இனப்ப டுகொலை பற்றிய சட்ட விளக்கங்களை முதன்மையான ஆய்வுப் பொருளாகக் கொண்டுள்ளது. எனவே இனப்படுகொலைச் செயலைத் தடுக்கவோ அல்லது இனப்படு கொலைச் செயலுக்குத் தண்டனை வழங் கவோ ஏதேனும் ஒரு சர்வதேச அமைப்பு முயற்சியை மேற்கொள்வதற்கு சட்ட விளக் கங்களே அடிப்படையாக உள்ளன. இனப்ப டுகொலைப் பற்றிய ஒப்பந்தத்தின் வரையறை இனப்படுகொலைக்கான காரணங்கள், இனப் படுகொலையை நோக்கமாகக் கொண்ட செயல்பாடுகள் குறித்து எதுவும் கூறவில்லை. எனவே இது இனப்படுகொலையைத் தடுப்ப தற்குப் போதிய வலிமை பெற்றதாக இல்லை. ஒரு தேசிய இனத்தை அல்லது இனக்குழுவை அழிப்பதையே நோக்கமாகக் கொண்ட கொடுஞ்செயல்களைச் செய்தபிறகே அதைக் குற்றமாகக் கருதி நடவடிக்கை எடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. இனப்படுகொலை நடை பெறாமல் தடுக்க அது நிகழ்வதற்கான பின்ன ணியை, அதன் செயல் போக்குகளை, இனப் படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தை நடைமு



படிப்பகம்

www.padippakam.com

றைப்படுத்தும் முறையை விரிந்த நோக்கில் காண வேண்டியுள்ளது.

ஆகவே ஸ்ரீலங்காத் தமிழர்கள் மீதான இனப்படுகொலைச் செயல்கள் எத்தகைய பின்னணியில் நடைபெற்றன என்று ஆராய வேண்டியுள்ளது. லெம்கினின் கருத்தையும், கூப்பரின் வகைப்பாட்டையும் மனதிற் கொண்டு ஸ்ரீலங்காத் தமிழர்களை ஒரு தேசிய இனமாகவும், ஒரு இனக்குழுவாகவும் கருதி ஆராய வேண்டும். இந்த ஆய்வுக்கு, ஸ்ரீலங் காத் தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையும் அடிப்படை மனித உரிமைகளும் எவ்வாறு மறுக்கப்பட்டன என்பது அடித்தளமாக இருக்க வேண்டும். அப்போதுதான் தமிழர்கள் ஒரு மக்கள் பிரிவினர் என்ற வகையில் அவர் கள் மீது எந்த அளவிற்கு இனப்படுகொலைச் செயல்கள் நடத்தப்பட்டுள்ளன என்பதைக் கண்டறிய முடியும். இவ்வுரிமைகள் மறுக்கப் பட்டதன் விளைவாக தமிழ்ச் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள தாக்கத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். இக்கண்ணோட்டத்தில் பார்ப்ப தால், வரலாற்றுப் பின்னணியில் தமிழர்களின் இன்றைய நிலையைப் புரிந்து கொள்ள முடி யும்; மேலும், இனப்படுகொலைச் செயல்கள் நிகழாமல் தடுப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறியவும் இது உதவும். இனப்படுகொ லைச் செயல்கள் என்று கருதத்தக்கச் செயல் கள் நடந்தன என்பதை நிரூபிக்கவும், இக்குற் றங்களைச் செய்த கொடியவர்கள் யார் என்ப தைக் கண்டறியவும், குற்றவாளிகள் தண்டிக் கப்பட வேண்டும் என்ற இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தின் இறுதி நோக்கத்தை நிறைவேற்றவும், இன அழிப்பு குறித்து தொடர்ந்து ஆராய வேண்டியுள்ளது.

❑

[36] see L.Kuper: International Action against Genocide, p.5
[37] see ibid., see also H.Fein's model of a retributive genocide which is a response to challenges to the structure of domination when two peoples are locked into an ethnically stratified order in a plural society in: Scenarios of Genocide: Models of Genocide and Critical Responses in: I.W.Charny: Toward the Understanding and Prevention of Genocide, p.11
[38] L. Kuper: Prevention of Genocide, p.200
[39] L.Kuper: International Action against Genocide, p.7
[40] I.L.Horowitz: Genocide; State Power and Mass Murder, pp.79 and 18, see also V.N.Dadrian: Genocide as a Problem of National and International Law: The World War I Armenian Case and Its Contemporary Ramifications in: Yale Journal of International Law, Vol.14, Nr.2, Summer 1989, pp.325,326
[41] V.N.Dadrian: A Typology of Genocide in: International Review of Modern Sociology 5, Fall 1975, pp.201-212
[42] see I.W.Charny: How can we commit the unthinkable?, p.109
[43] see ibid., pp.108,109 and 190,206,207 and F.Chalk & K.Jonassohn: History and Sociology of Genocide, p.28
[44] see I.L.Horowitz: Taking Lives, p.6
[45] see Lemkin's definition, supra Fn.34
[46] see P.Thornberry: International Law and the Right of Minorities, Clarendon Press, Oxford, 1991, p.62
[47] see supra Fn.34



படிப்பகம்

www.padippakam.com

# இனப்படுகொலை நிகழ்முறை

## தமிழர்களின் சுயநிர்ணய உரிமை

சர்வதேச சமூக, பொருளாதார, கலாச்சார உரிமைகள் ஒப்பந்தம் விதி 1-இலும், சர்வதேச குடிமை, அரசியல் உரிமைகள் ஒப்பந்தத்திலும் சுயநிர்ணய உரிமை வலியுறுத்தப்பட்டுள்ளது. *"அனைத்து மக்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு. இந்த உரிமையின் காரணமாக தங்கள் அரசியல் நிலைபாட்டை சுதந்திரமாகத் தீர்மானித்துக் கொள்ளலாம்; இது போன்று தங்களுக்கு ஏற்ற பொருளாதார, சமூக, கலாச்சார வழிமுறைகளைப் பின்பற்றலாம்."*

'மக்கள்' என்று குறிப்பிடப்படுவதற்கு சட்டமுறையிலான அதிகாரபூர்வமான வரையறை கூறப்படவில்லை. பொதுவான வரலாற்று மரபுகளும், ஒரே மாதிரியான இன அடையாளங்களும், கலாச்சாரக் கூறுகளும், மொழியும், மதக்கோட்பாடும், பிரதேச இணைப்பும், பொதுவான வாழ்வியல் முறையும், கொண்ட - 'நாம் ஒரே மக்கள்' என்ற எண்ணமுடைய - ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் இருப்பவர்களைச் சுயநிர்ணய உரிமைக்குத் தகுதியுடைய மக்கள் பிரிவாகக் கருதலாம் என்று மக்களின் உரிமைகள் பற்றித் தொடர்ந்து ஆய்வு செய்வதற்காக யுனெஸ்கோ (UNESCO) நடத்திய கூட்டத்தில் வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்தனர்.[48]

தமிழர்களுக்கு இந்த அளவுகோல்கள் பொருந்துகின்றன. குறிப்பாக, ஸ்ரீலங்காத் தமிழர்களுக்கு இவை முற்றிலுமாகப் பொருந்துகின்றன. தனியான மக்கள் பிரிவு என்று தெளிவாக வரையறுக்கப்படும் போதுதான் தனித்து இயங்குவதற்கான தகுதியையும், சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்கான தகுதியையும் அக்குழு பெற முடியும் என்று கூறப்படுவது சரியான கருத்தாகும்.[49] ஸ்ரீலங்காவின் வரலாற்றில் தமிழர்கள் தனியான தேசிய இனம் என்று தொடர்ந்து அடையாளப்படுத்திக் கொண்டு வந்தார்கள். இது 1976-இல் சுயநிர்ணய உரிமை கோரிக்கையாக மலர்ந்தது.[50] 1976 மே 14ஆம் நாள் நடைபெற்ற தமிழர் அய்க்கிய விடுதலை முன்னணியின் முதலாவது தேசிய மாநாட்டில், சுயநிர்ணய உரிமை கொண்ட சுதந்திரத் தமிழீழக் கோரிக்கைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மொழி, மதம், தனியான கலாச்சாரம், பாரம்பரியம், பல நூற்றாண்டுகளாக வரையறுக்கப்பட்ட நிலப்பகுதியில் நிலவிய சுதந்திரத் தனியரசு, தற்போது தங்கள் நிலப்பகுதியில் தனித்த இனமாக தங்களைத் தாங்களே ஆள வேண்டும் என்ற உறுதிப்பாடு ஆகியவற்றின் பெயரால் தமிழர்கள் உரிமை கோருகின்றனர்.[51]

ஸ்ரீலங்காவில் இனப்பிரச்சினையின் மய்யப் புள்ளியாக உள்ள கேள்வி - சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து போகும் உரிமை கொண்டதா? என்பதாகும். இதைப்பற்றி நீண்ட விவாதம் நடந்து கொண்டிருக்கின்றது.

ஒருங்கிணைக்கப்பட்ட நிலப்பரப்பை நீடிக்கச் செய்ய வேண்டும் என்ற குறிக்கோள் கொண்ட ஸ்ரீலங்கா அரசாங்கம் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை எதிர்க்கிறது. ஒரு சுதந்திர நாட்டிலிருந்து பிரிந்து போவது அல்லது பிரிந்து போகும் உரிமை உடைய சுயநிர்ணய உரிமையைப் பெற்றிருப்பதற்கும் ஒரு நாட்டுக்கு உட்பட்டு சுயநிர்ணய உரிமையைப் பெற்றிருப்பதற்கும் வேறுபாடு இருக்கின்றது. உள்நாட்டு சுயநிர்ணய உரிமை என்பது ஜனநாயக நடைமுறைகளில் ஒவ்வொரு குடிமகனும் சமத்துவ நிலையில் பங்கேற்பதற்கான உத்திரவாதத்தை அளிப்பதாகும்.[52] ஒரு நாட்டிற்குள்ளே இருக்க இசைந்து கேட்கும் சுயநிர்ணய உரிமையும், தனிநாடாகப் பிரிந்து செல்லக் கோரும் சுயநிர்ணய உரிமையும் ஒன்றோடொன்று தொடர்புடையன. உள்நாட்டில் சுயநிர்ணய உரிமை மறுக்கப்படும் போது பிரிந்துபோகும் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை வலுப்பெறுகிறது. இனப்படுகொலை நிகழும் சூழலில் பொதுவாக நாட்டுப் பிரிவினைக் கோரிக்கை வலுவாக எழும். அங்கு சுயநிர்ணய உரிமை மறுக்கப்படும் போது நாட்டுப் பிரிவினை கோரிக்கை உச்சக் கட்டத்தை எட்டும். ஒரு சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட மக்கள் பிரிவினர் அனைத்து ஜன



படிப்பகம்

www.padippakam.com

**1983-இல் யாழ்ப்பாணம் மாவட்டம் சுண்ணாகத்திலுள்ள காவல் நிலை யத்திற்கு எதிரில் எரித்துச் சாம்பலாக் கப்பட்ட கடைகள்**



கடைகளுக்கும் வர்த்தக நிறுவனங்களுக்கும் ஏற்பட்ட அழிவு



படிப்பகம்

www.padippakam.com

நாயகக் குடியுரிமைகளும் தரப்பட்டு சமத்துவமாக நடத்தப்படுகிறார்களா அல்லது தனித்த மக்கள் பிரிவினர் என்பதற்காக இறுதியில் இனப்படுகொலையில் போய் முடிகின்ற வகையில் ஒரு தலைச் சார்பாக நடத்தப்படுகிறார்களா என்பதை நாட்டுப் பிரிவினைக் கோரிக்கை அடையாளம் காட்டிவிடும்.

சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்டிருக்கிறதா அல்லது மறுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அம்மக்களுக்கு எந்த அளவிற்கு அரசியல் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதைக் கொண்டுதான் அறிய முடியும். இவ்வாறு வழங்கப்படும் அரசியல் உரிமை, ஏதாவது கூட்டாட்சி அமைப்பு வடிவிலோ, மாகாண சுயாட்சி மூலமோ ஒரு குறிப்பிட்ட மக்கள் பிரிவின் தனித்தன்மையை ஏற்றுக் கொள்கின்றது. மேலும், பொருளாதார, சமூக, கலாச்சார தளங்களில் ஜனநாயக அடிப்படையில் சமநிலையில் பங்கு கொள்வதற்கான உரிமையை வழங்குகிறது. உள்நாட்டு சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டில், அடிப்படை உரிமைகளை வழங்குவதில் சமத்துவம் காட்டப்பட வேண்டும் என்பதை முதன்மையான கூறாகக் கருத வேண்டும். ஸ்ரீலங்காவின் வரலாற்றுக்காலம் முழுவதும் தமிழர்கள் எவ்வாறு நடத்தப்பட்டனர் என்பது ஆராயப்பட வேண்டும். தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை இனப்படுகொலை செய்யப்படும் அளவிற்கு முற்றாக மறுக்கப்பட்டதா என்பதையும் ஆய்வின் மூலம் தீர்மானிக்க வேண்டும்.

❑

[48] see H.J.Whall: Right to Self-Determination.p.73
[49] see ibid.p.72
[50] see ibid.pp.153
[51] The Tamil United Liberation Front National Convention, Pannakam ( Vaddukoddai Constituency), 14 May 1976, see supra Fn. 9
[52] see H.Hannum: Rethinking Self-Determination in: Virgina Journal of International Law, Vol.34, 1994, pp.41-57 and N Jayawickrama: Right of Self-Determination, pp 3-5



படிப்பகம்

## அரசியல் சுயநிர்ணய உரிமை

**1948**-இல் ஸ்ரீலங்கா சுதந்திர நாடான பின்னர் ஆட்சியில் அமர்ந்த எந்தவொரு அரசாங்கமும் தமிழர்களின் சுயாட்சிக் கோரிக்கைகளில் ஒன்றைக்கூட நிறைவேற்றவில்லை. பிரிட்டிஷ் காலனிய ஆட்சிக்காலத்தில் மாகாண பிரதிநிதித்துவத்தைக் கொண்ட ஒற்றை ஆட்சி முறை திணிக்கப்பட்டது. இன்றளவும் ஒற்றை ஆட்சி முறையே நீடிக்கிறது.

சுதந்திர நாடான பின் ஸ்ரீலங்காவில் அமைய வேண்டிய அரசியல் அமைப்பு முறை பற்றித் தீர்மானிப்பதற்காக அமைக்கப் பட்ட சோல்பரி (Soulbury) குழுவிடம் அனைத்து இலங்கைத் தமிழர் காங்கிரசின் சார்பில் சுதந்திர இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழர்களுக்கும் சிங்களர்களுக்கும் சரிசமமாக *50:50* என்ற அளவில் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்று *1945*-இல் ஜி.ஜி.பொன்னம்பலம் அளித்த கோரிக்கை ஏற்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றுவதன் மூலம் தமிழர்களுக்கு இழைக்கக்கூடிய கேட்டினைத் தடுப்பதற்காக இக்கோரிக்கை முன் வைக்கப்பட்டது. ஆனால், இக்கோரிக்கை ஜனநாயகக் கோட்பாட்டிற்கு எதிரானது என்று கூறி சோல்பரி குழு ஏற்க மறுத்தது.[53] ஸ்ரீலங்கா சுதந்திர நாடானபோது, மாகாணங்களைக் கொண்ட ஒற்றை ஆட்சி முறையையே தமிழர்கள் ஏற்க நேரிட்டது. சிங்களர் - தமிழர் பிரதிநிதித்துவம் *5:1* என்ற அளவில் மட்டுமே கிடைத்தது.

தமிழர்களின் பிரதிநிதிகள் இல்லாமலேயே *1972*-இல் ஸ்ரீலங்காவின் முதல் அரசியல் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஸ்ரீலங்கா ஓர் ஒற்றை உறுப்பு நாடு என்பதை அரசியல் சட்டம் உறுதி செய்தது. பௌத்த மதத்திற்கு உயரிய தகுதிநிலை வழங்கப்பட்டது. சுதந்திரத்திற்கு முன் அமைக்கப்பட்ட சோல்பரிக்குழு வகுத்தளித்த அரசியல் சட்டத்தில் பகுதி 29(2)இல் எந்தவொரு வகுப்பையும் பாரபட்சமாக நடத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை புதிய அரசியல் சட்டம் ஒழித்துக் கட்டி விட்டது.[54]

*1978*-இல் ஸ்ரீலங்காவில் குடியரசுத் தலைவர் ஆட்சி முறைக்கு வழிவகுத்த அரசியல் சட்டத்திலும் ஒற்றை ஆட்சி முறையும், பௌத்த சமயத்திற்கு அளிக்கப்பட்டிருந்த மேலாண்மையும் நீடித்தன. மேலும், இச்சட்டத்தில் ஒற்றையாட்சி முறைக்குக் கூடுதலான வலிமை சேர்க்கப்பட்டது. அதன்படி ஒற்றையாட்சி முறையில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துவதனாலும், அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் பங்கு ஒப்புதல் கிடைக்க வேண்டும். அத்துடன்கூட இம்மாற்றத்தைப் பொது வாக்களிப்பு மூலம் மக்கள் ஏற்க வேண்டும் என்று அரசியல் சட்டத்தில் உறுதியான பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழர்கள் சுயாட்சி செய்து கொள்வதற்கான எத்தகையதொரு அரசமைப்பு முறையையும் வழங்காமல், தனிமனிதர்கள் என்ற வகையில் சமத்துவமாக நடத்தப்படுவார்கள் என்று புதிய அரசியல் சட்டம் கூறுகின்றது. ஒற்றையாட்சி முறையில் தமிழர்களின் தேவைகளை, உரிமைகளை, நலன்களை முடிவு செய்யும் அதிகாரம் சிங்களப் பெரும்பான்மையிடம் இருக்கும். கூட்டாட்சி அமைப்பாகவோ அல்லது சுயாட்சியாகவோ தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை இல்லாததால் தமிழர்களின் தலைவிதி சிங்களப் பெரும்பான்மையால் நிர்ணயிக்கப்படுகிறது.

அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் அரசியல் சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்காக *1948* முதல் தமிழர்களின் பிரதிநிதிகள் மேற்கொண்ட எண்ணற்ற முயற்சிகளும் தோல்விலேயே முடிந்தன. *1957*ஆம் ஆண்டு பண்டாரநாயக - செல்வநாயகம் ஒப்பந்தம்[55], *1965*ஆம் ஆண்டு டட்லி சேனநாயக - செல்வநாயகம் ஒப்பந்தம்[56], *1981*-இல் ஏற்படுத்தப்பட்ட மாகாண வளர்ச்சி அவைகள்[57],

> "1982-இல் ஜெனீவாவில் ஸ்ரீலங்காவின் தூதுவரிடம் பௌத்தர்களான சிங்களப் பெரும்பான்மையினர்க்கும், பெரும்பகுதியினர் இந்துக்களாக இருக்கின்ற சிறுபான்மையினரான தமிழர்களுக்கும் இடையே மோதல்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருப்பது பற்றி நான் எச்சரித்தேன். இன்று இம்மோதல் நீண்டகாலத்திற்கு அச்சுறுத்தலாக இருக்கும் போல் தெரிகிறது."
>
> — Prof.Leo Kuper : **The Prevention of Genocide**, Yale University Press, 1985).

www.padippakam.com

1987-இல் நிறைவேற்றப்பட்ட 13ஆவது அரசியல் சட்டத் திருத்தத்தின்படி அமைக்கப்பட்ட பிரதேச கவுன்சில்கள்[58] ஆகியன குறிப்பிடத்தக்கனவாகும். இத்தோல்விகளுக்குக் காரணம், முதல் இரண்டு ஒப்பந்தங்களுக்கு எதிராக தீவிரவாத சிங்கள அரசியல்வாதிகளும் வெறியர்களும் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டதால் இவ்விரு ஒப்பந்தங்களும் நடைமுறைப் படுத்தப்படாமல் கைவிடப்பட்டன. மாறி மாறி ஆட்சி செய்த சிங்கள அரசாங்கங்கள் தமிழர்களுக்கு உரிமைகளைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதில் உறுதிப்பாட்டுடன் செயல்படவில்லை. சட்டரீதியான அரசியல் உரிமைகளை வழங்குவதுடன் நிதி ஆதாரங்களையும் நிர்வாக ஏற்பாடுகளையும் அளிக்க வேண்டும் என்று சிங்கள அரசாங்கங்கள் முயற்சி செய்யவில்லை.[59]

1988 வரை தமிழர்களில் ஒரு பிரிவினரான மலையகத் தமிழர்களுக்குக் குடியுரிமையும் வாக்குரிமையும் மறுக்கப்பட்டிருந்தது. அவர்கள் எத்தகைய அதிகாரமும் அற்றவர்களாக இருந்தனர்.[60] சுதந்திரத்திற்குப்பின் இயற்றப்பட்ட மூன்று சட்டங்களின் விளைவாக இந்நிலை ஏற்பட்டது. 1948-ஆம் ஆண்டு இலங்கைக் குடியுரிமைச் சட்டம் எண்.18; 1949-ஆம் ஆண்டு இலங்கை (நாடாளுமன்றத் தேர்தல்கள்) திருத்தச் சட்டம்; 1949-ஆம் ஆண்டு இலங்கையில் வாழும் இந்தியர்கள் மற்றும் பாகிஸ்தானியர்கள் (குடியுரிமை) சட்டம் எண்.3 ஆகியன அம்மூன்று சட்டங்களாகும். மூன்றாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள சட்டம், இடதுசாரி சார்பு கொண்டிருந்த இலங்கை - இந்தியர் காங்கிரசின் ஆதரவைப் பெற்றிருந்த பத்து இலட்சம் மலையகத் தமிழர்களின் குடியுரிமையையும் வாக்குரிமையையும் பறித்தது.[61] தாய்நாட்டிற்குத் திருப்பி அனுப்புதல் பற்றிய இரண்டு உடன்படிக்கைகளுக்குப் பிறகும், நாடற்றவர்களுக்குக் குடியுரிமை வழங்கும் 1986-ஆம் ஆண்டுச் சட்டம், நாடற்றவர்களுக்குக் குடியுரிமை வழங்கும் (தனி ஏற்பாடு) 1988-ஆம் ஆண்டுச் சட்டம் ஆகியன நடைமுறைக்கு வந்த பிறகும் 85,000 மலையகத் தமிழர்கள் குடியுரிமை அற்றவர்களாக இன்றும் இருக்கின்றனர்.[62] மலையகத் தமிழர்களுக்குக் குடியுரிமை வழங்கப்பட்ட போதிலும் 1948-ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்ட விதிகளின்படி பலவகையான இயலாமைகளுக்கு ஆளாகி வருகின்றனர். இச்சட்டவிதிகள் 1978-ஆம் ஆண்டைய அரசியல் சட்டத்தில் மேலும் கடுமையாக்கப்பட்டுள்ளன.

"வரலாற்றுரீதியாகவே, ஸ்ரீலங்காவில் சிங்களர்கள் தமிழர்களை வந்தேறியவர்கள் என்றும் சிங்களர் நிலப்பகுதியில் ஊடுருபவர்கள் என்றும் கருதுகின்றனர். சிங்களர்களின் புராணக் கதைகளிலும் மரபுவழிக் கதைகளிலும் தமிழ் அரசர்களை, சிங்கள அரசர்கள் வெற்றி கொண்டதாகப் பல நிகழ்ச்சிகள் இருக்கின்றன... பௌத்த சமயத்தைச் சிங்கள தேசியத்துடன் முழுமையாக அடையாளப்படுத்தியிருப்பது ஸ்ரீலங்காவிலுள்ள இனமோதலுக்கு முக்கியமான காரணமாக இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்."

— Prof.Virginia A Leary : **Ethnic Conflict and Violence in Srilanka, Report of a Mission to Srilanka in July - August 1981 on behalf of the International Commission of Jurists,** August 1983.

1983-ஆம் ஆண்டு வடகிழக்குப் பகுதியில் மூண்ட போர் அரசியல் சுயநிர்ணய உரிமையின் போக்கினையே மாற்றி உள்ளது. எல்.டி.டி.ஈ. (தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம்) ஆற்றல் வாய்ந்த தன்னுடைய இராணுவ வலிமையால் தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற முதன்மையான அரசியல் சக்தியாக உருவெடுத்தது. 1983-இல் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட கலவரங்கள் போர்முறையே தீர்வு என்ற போக்கை மேலும் வளர்த்தன. அதே ஆண்டில் இயற்றப்பட்ட ஆறாவது அரசியல் சட்டத்திருத்தம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி ஏற்கும்போது தனிநாடு கோரிக்கையைக் கைவிடுவதாக உறுதிமொழி கூறவேண்டும் என்ற நிபந்தனையை விதித்தது. மேலும், தனிநாடு கோரி மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலும் தண்டனைக்குரிய குற்றம் என்று ஆக்கப்பட்டது. இச்சட்டத்தின்படி தமிழர் அய்க்கிய விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதிமொழியை எடுக்க மறுத்தனர். அதனால் தம் பதவிகளை இழந்தனர்.[63]



படிப்பகம்

www.padippakam.com

1983க்கும் 1993க்கும் இடைப்பட்ட காலத்தில் அமைதிப்பேச்சு வார்த்தைகள் பல நடந்தன. இப்பேச்சு வார்த்தைகளுக்கு இந்தியாவின் சமரச முயற்சியும் ஓரளவு காரணமாக இருந்தது. ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழர்களுக்கு வழங்க முன்வந்துள்ள சுயநிர்ணய உரிமையின் அளவு இப்பேச்சு வார்த்தைகளில் முக்கிய இடம் பெற்றது. இதன் விளைவாக 13ஆவது அரசியல் சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது. தமிழர்களின் பிரதிநிதித்துவம் இல்லாமல் 1987-இல் உருவாக்கப்பட்ட இந்திய - ஸ்ரீலங்கா ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதன் நீட்சியாக 13ஆவது அரசியல் சட்டத்திருத்தம் இயற்றப்பட்டது. இதன்படி புதிய தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண அவைகள் ஏற்படுத்தப்பட்டன. இவை மத்திய அரசாங்கத்திடமிருந்து சட்டம் இயற்றும் அதிகாரத்தைப் பெற்றிருந்தன. இந்திய - ஸ்ரீலங்கா ஒப்பந்தத்திலேயே ஸ்ரீலங்காத் தமிழர்களின் வரலாற்றுத் தாயகமாகக் கூறப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒரே மாகாணமாக இணைப்பதற்கு 13ஆவது அரசியல் சட்டத்திருத்தம் மூலம் வழிவகை செய்யப்பட்டது. ஆனால் கிழக்கு மாகாணத்தில் வாக்கெடுப்பு மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்ட பின்னரே இணைப்பு இறுதியாக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

அதே ஆண்டில், 13ஆவது திருத்தம் அரசியல் சட்டப்படி செல்லாது என்று உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. இச்சட்டத்திருத்தம் நாட்டின் ஒற்றையாட்சித் தன்மையை மாற்றிவிட்டது; மேலும், இதைச் செல்லத்தக்கதாக ஆக்குவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைப் பெறுவதுடன் பொது வாக்கெடுப்பு மூலம் ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும்; ஆனால் இவ்வாறு செய்யவில்லை என்று வாதாடப்பட்டது. உச்ச நீதிமன்றம் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டே இத்திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று கூறியது; ஒற்றையாட்சி அரசு முறை மாற்றப்படவில்லை; அதனால் பொது வாக்கெடுப்பு நடத்தத் தேவையில்லை; மாகாணங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சட்டம் இயற்றும் அதிகாரம் மைய அரசுக்குக் கட்டுப்பட்டதாகும்; நாடாளுமன்றத்தின் சட்டம் இயற்றும் முழு அதிகாரம் இதனால் பாதிக்கப்படவில்லை என்று உச்சநீதிமன்றம் கூறியது. *"13ஆவது அரசியல் சட்டத்திருத்த வழக்கின் தீர்ப்பைக் கூர்ந்து ஆராய்ந்தால், தற்போதுள்ள அதிகாரப் பகிர்வு தனக்குத் துணை வலிமை தரும் செயற்கையான காரணங்களையும், பொருத்தமற்ற சொற்றொடர்களையும் கொண்டிருந்தால்தான் ஒற்றையாட்சி இதற்கு இடம் தரும் என்பது புலனாகும்."*[64]

1988-இல் நடைபெற்ற தேர்தல் மூலம் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) வடகிழக்கு மாகாண ஆட்சியில் அமர்ந்தது. ஆனால் மைய அரசு இம்மாகாண அவைக்குத் தேவையான அதிகாரங்களையும், நிதி ஆதாரங்களையும் அளிக்கவில்லை. 1990-இல் இந்திய அமைதிப்படை ஸ்ரீலங்காவை விட்டு வெளியேறியபின் வட, கிழக்கு

> "ஸ்ரீலங்காவின் வடபகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் வாழுகின்ற தமிழர்கள் சர்வதேச அளவுகோலின்படி தனியான மக்கள் பிரிவினரேயாவர். தமிழர்கள் வாழும் நிலப்பகுதியே அவர்களின் தாயகம் என்ற உண்மையை 1957-ஆம் ஆண்டின் பண்டாரநாயக - செல்வநாயகம் உடன்படிக்கை ஏற்றுக் கொண்டுள்ளது என்பது இங்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். தமிழர்கள் தமிழைத் தம் தாய்மொழியாகக் கொண்டுள்ளனர். பெரும்பான்மையினரான சிங்களர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்ட மதத்தையும் கலாச்சாரத்தையும் பின்பற்றுகின்றனர். சிங்கள மேலாண்மையிலிருந்து முற்றாக விடுபட்ட தனிச் சுதந்திர நாட்டைக் கேட்கவில்லையாயினும் சுயாட்சி அதிகாரம் வேண்டும் என்பதில் தமிழர்கள் தம் உணர்வால் ஒன்றுபட்டு நிற்கின்றனர். ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் செயல்கள் தமிழர்கள் உயிர் வாழ்வதையே அச்சுறுத்தலுக்குள்ளாக்கி இருக்கின்றன. அரசாங்கத்தின் கொடுஞ்செயல்கள், தமிழர்களிடையே சுயநிர்ணய உரிமையை அடைய வேண்டும் என்ற வேட்கையை மேலும் கொழுந்து விட்டெரியச் செய்கின்றன."
>
> — Statement of International Education Development at the 48th Session of the UN Commission on Human Rights, Geneva, February 1992.



படிப்பகம்

www.padippakam.com

மாகாண அவை கலைக்கப்பட்டது. இன்று வரை அது இயங்காமல் இருக்கிறது.[65]

1994-இல் நடைபெற்ற தேர்தலில் மக்கள் கூட்டணி (People's Alliance) ஆட்சிக்கு வந்தது. அமைதியை நிலைநாட்டுவேன் என்ற முழக்கத்தை தேர்தலின்போது முன்வைத்து சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க குடியரசுத் தலைவரானார். அமைதிக்கான புதிய பேச்சுவார்த்தைகள் நடந்தன. இதற்காக சண்டை நிறுத்தத்தை இருதரப்பினரும் ஏற்றுக் கொண்டனர். தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் சரியாக ஒத்துழைக்கவில்லை என்ற குற்றச்சாட்டைக்கூறி 1995-இல் விடுதலைப்புலிகள் போர் நிறுத்தத்தை மீறினார்கள். 'போர் மூலம் அமைதி' என்ற முழக்கத்தை முன்வைத்து அரசாங்கமும் தாக்குதலில் ஈடுபட்டது. இதனால் மீண்டும் கடும் சண்டை மூண்டது. போரினூடேயே அரசாங்கம் அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை முன்மொழிந்தது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவும், பொது வாக்கெடுப்பின் ஒப்புதலும் தேவை. இது வரை பொது வாக்கெடுப்பு நடத்தவில்லை.

முக்கிய எதிர்க்கட்சியான அய்க்கிய தேசியக் கட்சி (United National Party) நாடாளுமன்றத்தில் அதிகாரப்பகிர்வுத் திட்டத்தைத் தொடர்ந்து எதிர்க்குமானால், அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்க உள்ள பகுதிகளில் பொது வாக்கெடுப்பு நடத்துதல், நேரடி நிர்வாகப் பொறுப்புள்ள குடியரசுத் தலைவர் ஆட்சி முறையை ஒழித்தல், குடியரசுத் தலைவரிடம் உள்ள செயல் அதிகாரங்களை நாடாளுமன்றத்திற்கு மாற்றுதல், சிறுபான்மையினர்க்குக் கூடுதல் பிரதிநிதித்துவம் அளிப்பதற்காக நாடாளுமன்றத்தில் மற்றொரு அவையை (Chamber) ஏற்படுத்துதல், உச்சநீதிமன்றத்திற்கு மேலும் அதிகாரங்களை வழங்குதல் முதலானவற்றை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படும் என்று அரசியல் சட்ட விவகார அமைச்சர் ஜி.எல்.பெய்ரிஸ் கருத்து தெரிவித்தார்.[66] ஆளும் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் மிகக்குறைந்த அளவு பெரும்பான்மையே இருக்கிறது. எனவே, மூன்றில் இரண்டு பங்கு பெற வேண்டுமானால் அய்க்கிய தேசியக் கட்சியின் ஆதரவு தேவைப்படுகிறது. அதிகாரப்பகிர்வுத் திட்டத்தை அய்க்கிய தேசியக்கட்சி எதிர்ப்பதுடன், தமிழர்களின் பிரதிநிதிகளுடன் கலந்து பேசி முடிவெடுக்காமல் உருவாக்கப்பட்ட இத்திட்டத்தை பெரும்பாலான தமிழர்

"பிரிந்து போகக்கூடிய சுயநிர்ணய உரிமை வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்படும்போது ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் இதற்கு மிகக் கடுமையான எதிர்ப்பைக் காட்டும் என்பது எதிர்பார்க்கக் கூடியதுதான். ஜெனீவாவில் ஸ்ரீலங்கா நாட்டுத் தூதருடன் நடந்த விவாதத்தை இங்கு நினைவுகூர விரும்புகின்றேன். தமிழர்களின் கட்சி நாட்டுப் பிரிவினையைக் கேட்கிறது என்று அத்தூதுவர் கூறிய போது அவருடைய குரலில் ஒரு வகையான அச்சம் தொனித்தது. நாடு பிரிவதற்கு எந்தவொரு அரசாங்கமும் இணங்காது என்று அவர் கூறினார். இது உண்மைதான் என்று நானும் கருதுகின்றேன். இதனாலேயே பிரிவினைக்கு வாய்ப்பே இல்லை என்று கூறிவிட முடியாது. ஆயினும், பிரிவினைக் கோரிக்கைக்கான நியாயமான காரணங்களைக் காட்ட வேண்டும்.

— Prof.Leo Kuper : **The Prevention of Genocide**, Yale University Press, 1985.




படிப்பகம்

www.padippakam.com

குழுக்களும் ஏற்க மறுத்துவிட்டன. தமிழர்களின் உள்ளார்ந்த விழைவுகளை நிறைவேற்றக்கூடியதாக இது இல்லை என்று தெரிவித்துள்ளன.[67]

ஸ்ரீலங்காவின் வரலாறும் அரசாங்கத்தின் கொள்கைகளும் தமிழர்களின் நலன்களைப் பலியிட்டு தேசிய ஒற்றுமையை வளர்ப்பதாகவே இருக்கின்றன.[68] ஸ்ரீலங்காவில் அரசியல்வாதிகளாலும் அரசியல் சட்டத்தாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஓர் உண்மையான அரசியல் சுயநிர்ணயத் திட்டம் இன்னும் உருவாக்கப்படவில்லை.

❑



கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டவர்கள்

[53] see S.S.Misra: Ethnic Conflict, p.42
[54] see K.M.De Silva: Managing Ethnic Tensions, p.252
[55] see K.Jayawardena: Ethnic and Class Conflicts, p.98
[56] see K.M. De Silva: Managing Ethnic Tensions, p.191
[57] see E.Nissan: A Bitter Harvest, p.15
[58] see H.J.Whall: Right to Self-Determination, pp.211-230
[59] see P.Hyndman: Human Rights in Sri Lanka,p.343 and E.Nissan: A Bitter Harvest, pp.13,17
[60] see ibid., pp.31,32
[61] see S.Ponnambalam: Tamil Liberation Struggle, pp.75-79
[62] see U.S. State Department: Country Report 1996, Section 5
[63] see P.Hyndman: Human Rights in Sri Lanka, p.345
[64] G.L.Peiris: Continuing Ethnic Conflict in Sri Lanka: Current Constitutional Dimensions in Public Law, 1988, p.523
[65] see E.Nissan: A Bitter Harvest, p.17 and TIC: Sri Lanka: Devolution Proposals, p.2
[66] see Sri Lanka Monitor, No.108, January 1997, p.1
[67] see TIC: Sri Lanka: Devolution Proposals, p.1
[68] B.Cashman, J.Laffon, P.Nanda: Human Rights Crisis, p.373



படிப்பகம்

www.padippakam.com

## குடியேற்றம்

**வே**ளாண்மை வளர்ச்சிக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பகுதிகளில் அரசாங்கமே முன் முயற்சி எடுத்து விவசாயிகளின் குடும்பங்களைக் குடியமர்த்தம் செய்வது குடியேற்றம் (Colonisation) என்று குறிக்கப்படுகிறது.[69]

குடியேற்றம் 1935ஆம் ஆண்டிலேயே தொடங்கியது. ஆனால் ஸ்ரீலங்கா சுதந்திரமடைந்த பிறகுதான் குடியேற்றத்திற்கு அரசியல் பின்னணி ஏற்பட்டது. வடக்கிலும், கிழக்கிலும் தமிழர்கள் மட்டுமே தனி இனமாக வாழுகின்ற நிலையை மாற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் ஸ்ரீலங்காவை ஆட்சி செய்த எல்லா அரசாங்கங்களும் சிங்கள விவசாயிகளையும் மீனவர்களையும் இப்பகுதிகளில் குடியமர்த்தின.[70] இயற்கை வளங்களைப் பயன்படுத்துதல், பண்டைய நீர்ப்பாசனத் திட்டங்களைச் சீரமைத்தல் பேன்ற பெரிய திட்டங்களை நிறைவேற்றுதல் என்ற பெயரால் சிங்களர்கள் தமிழ்ப் பகுதிகளில் குடியமர்த்தப்பட்டனர்.[71]

ஸ்ரீலங்கா ஒரே நாடு; அதனால் எவருக்கும் எப்பகுதியிலும் வாழ உரிமை உண்டு என்று சிங்கள ஆட்சியாளர்கள் தொடர்ந்து கூறி வந்தனர். வடக்கிலும் கிழக்கிலும் காடழித்து உருவாக்கப்பட்ட புன்செய் நிலப்பகுதிகளில் தமிழர்கள் சில இடங்களில் மட்டுமே குடியிருந்தனர். நிலமற்ற சிங்கள விவசாயிகளுக்கும் வறிய நிலையில் இருந்தோர்க்கும் உதவும் நோக்கத்துடன் சிங்கள அரசாங்கம் இப்பகுதிகளில் அவர்களைக் குடியேறச் செய்தது.[72] பன்னெடுங்காலமாக தங்கள் தாயகமாக இருந்து வரும் நிலப்பகுதிகளில் அரசாங்கம் திட்டமிட்டு சிங்களர் குடியேற்றங்கள் அமைப்பதைத் தமிழர்கள் எதிர்த்தனர். குடியமர்த்தப்பட்ட சிங்களர் எண்ணிக்கை மெல்ல மெல்லப் பெருகியது. இதனால் கிழக்குப் பகுதியில் தமிழர்களின் பெரும்பான்மை குறைந்து கொண்டே வந்தது. தமிழினம் மட்டுமே வாழ்ந்த நிலை மாறியது. சுயநிர்ணய உரிமை கேட்பதற்கு ஆதாரமாக விளங்கிய ஒரே இனம் வாழும் நிலப்பரப்பு என்பதில் ஊடுருவல் நிகழ்ந்து விட்டது.[73] 1963-இல் ஸ்ரீலங்கா அரசாங்கம் மட்டக்களப்பு மாவட்டத்தை இரண்டு வாக்காளர் தொகுதிகளாகப் பிரித்தது. சிங்களர் பெரும்பான்மையினராக வாழும் அம்பாறைத் தொகுதியை உருவாக்கியது. இவ்வாறு செய்வதற்காகத்தான் அரசாங்கம் திட்டமிட்டுச் சிங்களர்களைக் குடியேறச் செய்தது.[74] மேலும், குடியேற்றப் பகுதிகளில் நிறைவேற்றப்பட்ட பெரும் திட்டங்களின் பயன்கள் சிங்களர்களுக்கே சென்று சேர்ந்தன.[75]

1950-க்குப் பின் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் தமிழர்களின் தலைவர்களுக்கும் சில ஒப்பந்தங்கள் ஏற்பட்டன. அரசாங்கத்தின் குடியேற்றக் கொள்கையால் தமிழர்களின் நலன்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க இந்த ஒப்பந்தங்கள் வாயிலாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் பண்டாரநாயக - செல்வநாயகம் ஒப்பந்தம், டட்லி சேனநாயக - செல்வநாயகம் ஒப்பந்தம், 13ஆவது அரசியல் சட்டத் திருத்தம் ஆகியவை செயல்படுத்தப்படாமல் கைவிடப்பட்டன.[76] மாறாக 1972-ஆம் ஆண்டு முற்போக்கான நிலச்சீர்த்திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. பெருந் தோட்ட நிலங்கள் அரசுடைமையாக்கப்பட்டன. உபரி நிலங்கள் நிலமற்ற சிங்களர்களுக்குப் பிரித்தளிக்கப்பட்டன.[77] அது முதல் தமிழர்களுக்கு - குறிப்பாக, நிலமற்ற விவசாயிகளுக்குக் - கேடு பயக்கும் வகையில் குடியேற்றக் கொள்கையை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வந்தது. தண்டனை முடிந்து வெளிவந்த குற்றவாளிகளையும், ஆயுதம் அளிக்கப்பட்ட ஊர்க்காவல் படையினரையும் 1984-இல் சிங்கள அரசாங்கம் தமிழர் பகுதிகளில் குடியமர்த்தியது.[78] அரசாங்கத்தின் இச்செயல்களால் தமிழர்கள் ஆயுதமேந்திப் போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

குடியேற்றங்கள் பெருகப் பெருக தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளும் அதிகரித்தன. *1956, 1958, 1977, 1981, 1983* ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற கலவரங்களினால் குடியேற்றப் பகுதிகள்தாம் பெரும் பாதிப்புக்குள்ளாயின. 1983க்கு முன்வரை தமிழர் பகுதிகளில் பெரும் திட்டங்களைச் செயல்படுத்துதல், சிங்களர் குடியேற்றங்களை அமைத்தல் ஆகியவற்றைத் தமிழர்கள் எதிர்த்தனர். ஏனெனில் இவை தமிழர்களின் நலன்களைப் புறக்கணிக்கின்றன; தமிழர்களின் தாயக உரிமைக்கு உலை வைக்கின்றன என்று கருதி எதிர்த்தனர். சிங்களர்களுக்கு வாழ்க்கை வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதை விட தமிழர்கள் மட்டுமே வாழும் பகுதி என்ற நிலையை உடைக்க வேண்டும் என்பதே சிங்களக் குடியேற்றங்களை அரசாங்கம் அமைத்ததன்



படிப்பகம்

www.padippakam.com

நோக்கமாகும். இதற்காகப் பல சமயங்களில் தமிழர்கள் தம் வாழிடங்களிலிருந்து வன்முறை மூலம் வெளியேற்றப்பட்டனர். 1983-க்குப் பிறகு குடியமர்த்தப்பட்ட சிங்களர்களை வகுப்புவாத ஆயுதப்படையாக அரசாங்கம் பயன்படுத்தத் தொடங்கியது. விடுதலைப்புலிகளுக்கு எதிரான தாக்குதல்களில் சிங்களக் குடியேற்றங்களை சிங்கள இராணுவம் கேடயமாகப் பயன்படுத்தி வருகிறது. இதனால் அங்கு நிலவும் பதற்றமான சூழ்நிலை மேலும் மோசமடைந்தது. ஓயாத வன்முறையாக வெடிக்கிறது.[79]

குடியேற்றத்தாலும், 1983 முதல் தமிழர் பகுதிகளில் இராணுவ முகாம்கள், இராணுவத் தளங்கள், பாதுகாப்புப் பகுதிகள் அமைத்ததாலும், தமிழர் பகுதிகளை இராணுவம் கைப்பற்றியதாலும் தமிழர்களுக்குப் பேரழிவுகள் ஏற்பட்டு விட்டன. அச்சுறுத்தல்களும் ஆபத்துகளும் நிறைந்த இத்தகைய சூழ்நிலையில் தமிழர்கள் உயிர்வாழ முடியுமா? என்பதே கேள்விக் குறியாக விட்டது.

❑

"குடியேற்றங்கள் தங்கள் உயிருக்குப் பாதுகாப்பற்ற நிலையைத் தோற்றுவித்துள்ளன என்று கருதி தமிழர்கள் மிகவும் கவலையடைந்துள்ளனர். குடியேற்றங்களால் தம் சொந்த மண்ணிலேயே சிறுபான்மையினராகி விடுமோ என்று அஞ்சுகின்றனர்... தனியராக சிங்களர் குடியேறுவதை நாங்கள் எதிர்க்கவில்லை; அரசுத் திட்டங்கள் மூலம் பெரும் எண்ணிக்கையில் சிங்களர்களைக் குடியமர்த்தம் செய்வதையே எதிர்க்கின்றோம்; இதனால் தமிழ்ப்பகுதியின் இனத்தன்மையே மாறிவிடும் என்று தமிழர்கள் கூறுகிறார்கள்."

— Prof. Virigina A.Leary, **Ethnic Conflict and Violence in Srilanka, Report of a Mission to Srilanka in July-August 1981 on behalf of the International Commission of Jurists**, August 1983.

---

69 T.Valluvan: Ethnic Conflict, p.9
70 see H.P.Chattopadhyaya: Ethnic Unrest p.26 and S.D. Muni: Pangs of Proximity, p.42
71 see P.Hyndman: A study in microcosm,p.283
72 see W.Warnapala: Ethnic Strife, p.80
73 see H.J.Whall: Right to Self-Determination, p 208
74 see M.Vije: Colonisation, pp.15,16
75 see D. Hellmann-Rajanayayam: The Concept of a "Tamil Homeland" in Sri Lanka-its meaning and development in: South Asia, Vol.XIII, No.2, 1990, p.106
76 see P.Hyndman: A study in microcosm, p.284
77 see H.P. Chattopadhyaya: Ethnic Unrest, p.26
78 see W.Warnapala: Ethnic Strife p.184
79 see M.Vije: Colonisation, pp.8-18



படிப்பகம்

www.padippakam.com

## பொருளாதார, சமுதாய, கலாச்சார வளர்ச்சி

### • மொழி

**த**மிழ் மொழிக்கு உரிய இடம் தரப்படவில்லை; அது மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்தப்படுகிறது என்பது பற்றி நீண்ட விவாதம் நடந்து கொண்டிருக்கின்றது. தமிழர்கள் சமத்துவமற்ற குடிமக்களாக நடத்தப்படுகிறார்கள் என்பதைத் தமிழ்மொழிக்கு உரிய இடம் தரப்படவில்லை என்பதன் மூலம் தெளிவாக அறியலாம். 1956-ஆம் ஆண்டின் ஆட்சிமொழிச் சட்டம் சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்று ஆக்கியது. அமைதியான முறையில் இதை எதிர்த்த தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதுவே தமிழர்கள் மீது நடத்தப்பட்ட முதல் தாக்குதலாகும்.[80] தாய்மொழி (Swabasha) இயக்கத்தின் விளைவாக இத்தாக்குதல் நடந்தது. 1920களில் ஆங்கிலம் பேசும் மேட்டுக்குடியினருக்கு எதிராக எழுந்த தாய்மொழி இயக்கம் வெகுமக்கள் இயக்கமாக விரிந்தது. தொடக்கத்தில் தாய்மொழி இயக்கத்தைச் சிங்களரும் தமிழரும் சமமாக ஆதரித்தனர். பிறகு, தாய்மொழி இயக்கம் சிங்களம் மட்டுமே இருக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டதாக மாறியது. 'சிங்களம் மட்டுமே' என்ற கொள்கையை தீவிர பௌத்த மதவாதிகளும், நடுத்தர வர்க்கத்தினரும் ஆதரித்தனர்.[81]

> "சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்ற மசோதா மூலம் தேசியப் போராட்டத்தில் முக்கியமான ஒரு கடமையை நாம் நிறைவேற்றியிருக்கிறோம். வெளிநாட்டுச் சக்திகளால் நம் மண் கைப்பற்றப்படுவதற்கு முன் சிங்கள மொழி பெற்றிருந்த உயர்ந்த நிலையை இப்போது மீண்டும் நாம் உருவாக்கி அரியணை ஏற்றியுள்ளோம். இத்தீவின் வரலாற்றில் இது முக்கியமான நிகழ்ச்சியாகும்."
>
> — பிலிப் குணவர்தன, ஸ்ரீலங்கா காபினட் அமைச்சர், Hansard, 14.06.1956.

இதன் விளைவாக, நிர்வாகத்திலும் பொது வேலைவாய்ப்புகளிலும் சிங்களம் மட்டுமே இருக்கும் என்று ஆக்கப்பட்டது. பெரும்பாலான தமிழர்களுக்கு சிங்கள மொழியைப் பேசவும் தெரியாது என்ற நிலை இருந்தபோதிலும் சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்று முடிவெடுக்கப்பட்டது. இதனால் கல்வியில், பொது வேலைவாய்ப்புகளில் அரசாங்கத்தின் பல்வேறு துறைகளுடன் தொடர்பு கொள்வதில் தமிழர்களுக்கு பெரும் பாதிப்பும் இழப்பும் ஏற்பட்டன.[82] பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் பெரும்பான்மை மக்களின் விருப்பத்திற்கு மாறாக காலனிய ஆட்சியாளர்களாலும் மேட்டுக்குடியினராலும் ஆங்கிலமே பயன்படுத்தப்பட்டது. ஆனால், இப்போது தமிழர்களுக்கு பாதகமான முறையில் சிங்களம் மட்டுமே இருக்கும் என்று ஆக்கப்பட்டது.

அதன்பின்னர், சிங்களர்க்கும் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் 1957-இல் ஏற்பட்ட பண்டாரநாயக - செல்வநாயகம் ஒப்பந்தத்திலும், 1965-இல் ஏற்பட்ட சேனநாயக - செல்வநாயகம் ஒப்பந்தத்திலும், தமிழ்மொழியை வடக்கு, கிழக்குப் பகுதிகளின் நிர்வாகத்திலும், கல்வியிலும் அரசாங்க வேலைக்கான தேர்வுகளிலும் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆனால் இவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. தமிழ்மொழியின் உரிமைக்கு ஆக்கம் தருகின்ற பிற சட்டங்களும் சிங்கள தீவிரவாதக் குழுக்களின் கடும் எதிர்ப்பால் கைவிடப்பட்டன.[83] ஸ்ரீலங்காவில் எந்தவொரு மொழி மீதும் பாரபட்சம் காட்டக்கூடாது என்பதற்கு சோல்பரி அரசியல் சட்டத்தில் பிரிவு 29(2)இல் பாதுகாப்பு தரப்பட்டிருந்தது. ஆனால் சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்ற அரசாங்கக் கொள்கை இவ்விதியை மீறி இயற்றப்பட்டது என கொழும்பு மாவட்ட நீதிமன்றமும் 1969-இல் கோட்டீசுவரன் வழக்கில் பிரைவி கவுன்சிலும் கருத்துத் தெரிவித்தன.[84] இதைப் போலவே 1972-ஆம் ஆண்டு அரசியல் சட்டமும் தமிழர்களின் கோரிக்கைகளைக் கருத்தில் கொள்ளாமல், 1956-ஆம் ஆண்டு சிங்களம் மட்டுமே என்ற



படிப்பகம்

www.padippakam.com

> ''சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்ற மசோதாவை எடுத்துக் கொண்டால், நாட்டுப் பிரிவினை ஏற்படக்கூடிய ஆபத்து இதில் இருக்கிறது... கொடுமையான மாற்ற முடியாத அநீதி தமக்கு இழைக்கப்பட்டு விட்டதாக தமிழர்கள் கருதுவார்களானால், தனிநாடு வேண்டும் என்று அவர்கள் முடிவெடுப்பதற்கான வாய்ப்புக்கு இடம் உள்ளது.''
>
> — லெஸ்லி குணவர்தன, நாடாளுமன்ற சிங்கள எதிர்க்கட்சி உறுப்பினர், Hansard, 08.06.1956.

கொள்கையை ஏற்றுக் கொண்டது. சோல்பரி குழுவும் வகுத்தளித்த அரசியல் சட்டத்தின் மொழிப்பாதுகாப்பு பிரிவு 29(2)யை நீக்கியது.

1978-ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தில் தமிழ் ஒரு தேசிய மொழியாக அறிவிக்கப்பட்டது. வடகிழக்கு பகுதிகளில் நிர்வாகத்திலும் நீதிமன்றங்களிலும் தமிழைப் பயன்படுத்துவதற்கான விதிகள் செய்யப்பட்டன. 1987-ஆம் ஆண்டு பதிமூன்றாவது அரசியல் சட்டத்திருத்தத்தில் தமிழும் ஆட்சிமொழியாக இருக்கும் என்று ஆக்கப்பட்டது. இருப்பினும், தமிழுக்கு அளிக்கப்பட்டுள்ள இப்பாதுகாப்பு விதிகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை என்று தமிழர்கள் புகார் கூறுகின்றனர். அரசாங்கத்தின் பல்வேறு துறைகளுக்கு தமிழர்கள் தமிழில் எழுதினால் பதில் பெரும்பாலும் சிங்களத்திலேயே வருகிறது என்று கூறுகின்றனர்.[85] அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்த அமைக்கப்பட்ட மொழிக்குழுவால் எப்பயனும் ஏற்படவில்லை. தமிழ்மொழி மாற்றான் மனப்பான்மையுடன் அரசாங்கத்தால் நடத்தப்படும் போதெல்லாம் தமிழர்கள் இதைக் கடுமையாக எதிர்க்கின்றனர். இத்தகைய எதிர்ப்புகளின் விளைவாகத்தான் தமிழ் மொழிக்கு சில சலுகைகள் தரப்பட்டன. சுதந்திரத்திற்குப் பின் இன மோதல்களுக்கு மொழிப் பிரச்சினையே மூலகாரணமாக இருந்தது. 1979க்குப் பின் மொழிச் சிக்கலின் முதன்மை பின்னுக்குத் தள்ளப்பட்டது. ஏனெனில், அரசியல் சுயநிர்ணய கோரிக்கை முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது. இதன்பின் தமிழர்களைத் திருப்தி செய்ய வேண்டும் என்பதற்காக அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் போதாதவையாக மட்டுமின்றி காலம் கடந்தவையாகவும் இருந்தன.

- **மதம்**

*''ஸ்ரீலங்காக் குடியரசு பௌத்த மதத்திற்கு முதன்மையான இடம் தரவேண்டும். எனவே பௌத்தத்தையும் புத்த சாசனங்களையும் பாதுகாக்க வேண்டியதும் வளர்க்க வேண்டியதும் அரசின் கடமையாகும்''* என்று 1972-ஆம் ஆண்டு மற்றும் 1978-ஆம் ஆண்டு அரசியல் சட்டங்களில் கூறப்பட்டுள்ளது. 1995 / 1996-ஆம் ஆண்டுகளில் மக்கள் கூட்டணி அரசாங்கம் அதிகாரப் பகிர்வு குறித்து வெளியிட்ட திட்டத்திலும் பௌத்த சமயத்தைக் காத்துப் பேணுவது அரசின் கடமை என்பது வலியுறுத்தப்பட்டது. மேலும், பௌத்த மதத்தைக் காப்பது வளர்ப்பது தொடர்பானவற்றில் பௌத்த மதத்தின் உயர் அதிகார அவையின் கருத்தறிந்தே முடிவெடுக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 1978-ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தில் எம்மதத்தையும் பின்பற்றலாம் என்ற மதச்

> ''கோயில்கள் ஒவ்வொரு கிராமத்திலும் அதன் மய்யப் பகுதியில் அமைந்துள்ளன. கோயில்கள் சமூக வாழ்வின் மய்யமாக உள்ளன. சமூகக் கட்டமைப்பின் பிரிக்க முடியாத கூறாக விளங்குகின்றன. தற்போதுள்ள சூழ்நிலையில் கோயில்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகத் திகழ்கின்றன. எவ்வாறெனில் பாதிக்கப்பட்ட - இடம் பெயர்ந்த மக்கள் நிலைகுலைந்த தங்கள் வாழ்க்கையைப் புதுப்பிப்பதற்கான தார்மீக வலிமையையும் துணிவையும் தருகின்றன.''
>
> — இந்து சமய, கலாச்சார விவகாரங்களுக்கான இணை அமைச்சகம், **Rehabilitation of Hindu Temples in the North-East Province**, 1996.



படிப்பகம்

www.padippakam.com

இந்துக் கோயில்களுக்கு ஏற்பட்ட நாசம்



சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. எல்லா மதங்களையும் சமமாக நடத்த வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இருப்பினும் அதிகாரப் பகிர்வுத் திட்டத்தில் பௌத்த சமயத்திற்கு மேலாண்மையான இடம் அளிக்கப்பட்டது.

பௌத்தத்தைக் காப்பதே தேசிய நலனைக் காப்பதாகும் என்ற கருத்து ஸ்ரீலங்கா அரசியலில் ஆழ வேரூன்றி விட்டது. இக்கருத்தினால் தமிழர்களுக்கு எதிரான தீவிரவாத் பௌத்தம் வளர்ந்தது. இது அரசியல் கலாச்சாரத் துறைகளில் தன் மேலாதிக்கத்தை நிலைநாட்ட முயன்றது. மத அடிப்படையில் சிறுபான்மையினரைக் கீழாக நடத்துவதை நியாயப்படுத்துவதற்கான தத்துவப்பின்னணியைத் தீவிரவாத பௌத்தம் வழங்கியது.[86]

இதன் விளைவாக வடகிழக்குப் பகுதிகளில் இருந்த சில இந்துக் கோயில்களும் கிறித்தவர்களின் தேவாலயங்களும் வன்முறை மூலம் புத்தர் கோயில்களாக மாற்றப்பட்டன. சிங்களர்கள் குடியேறுவதற்கு உரிமை கோருவதற்காகவே இப்படிச் செய்தனர். இவ்வாறு புத்தக் கோயில்களாக மாற்றப்பட்டவற்றை ஸ்ரீலங்கா அரசாங்கம் உடைமையாக்கிக் கொண்டது.[87] தமிழர்களுக்கு எதிரான கலவரங்களின் போது கோயில்கள் தாக்கப்பட்டு முற்றாகத் தகர்க்கப் பட்டன. அல்லது அவற்றின் புனிதம் அழிக்கப்பட்டது. *1977*-ஆம் ஆண்டு கலவரத்தின் போது *16* கோயில்களும் *1983*-ஆம் ஆண்டுக் கலவரத்தில் *39* கோயில்களும் தரைமட்டமாக் கப்பட்டன.[88]

சண்டை தொடங்கிய பின் தமிழர்களின் எண்ணற்ற வழிபாட்டுத்தலங்கள் தகர்க்கப்பட்டன; சேதப்படுத்தப்பட்டன; கொள்ளையடிக்கப்பட்டன. எரிப்பது, குண்டு வீசுவது என்று இவ்வழிப்பு வேலைகள் செய்யப்பட்டன.[89] *1983*க்கும் *1993*க்கும் இடைப்பட்ட காலத்தில் *1479* கோயில்கள் சேதப்படுத்தப்பட்டன அல்லது அடியோடு அழிக்கப்பட்டன.[90] அண்மைக்காலத்தில் இதுபோல் நடந்த கொடுஞ்செயல் நவாலியில் (Navlay) *1995* ஜூலை 9-ஆம் நாள் தேவாலயத்தின் மீது குண்டு வீசப்பட்டதாகும். இதில் *65* பேர் மாண்டனர்.[91] குறிப்பாக, *1983*க்குப் பிறகு மதத்தலைவர்கள், பாதிரிகள், பக்தர்கள் எனப் பலபேர் கொல்லப்பட்டனர். மாற்று மதக்கருத்தைக் கொண்டிருப்பவர்கள் என்ற காரணத்தினால் இவர்கள் கொல்லப்பட்டனர். இக்கொலைகள் கோயில்களில் நடந்தன. கைது செய்யப்பட்டு பலகொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்ட பின்னர் காவல் நிலையங்களில் இராணுவ முகாம்களில் நடத்தப்பட்டன.[92]

- **கலாச்சாரம்**

தமிழர்களின் கலாச்சாரத்தின் மீது ஒருதலைச்சார்பான வெறுப்பு காட்டப்பட்டது. பல வழிகளில் அதன்மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது. குடியேற்றத்தின் தூண்டுதலாலும் பௌத்தத்திற்கே முதலிடம் என்ற கொள்கையாலும், ஸ்ரீலங்காவின் எப்பகுதியிலும் குடியிருக்கவும் இந்நாட்டை ஆளவும் தங்களுக்கே உரிமை உண்டு என்று சிங்களர்கள் கருதினார்கள். இதை ஸ்ரீலங்காவின் அதிகாரபூர்வமான

"தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு நடத்தி வருகின்ற ஒடுக்குமுறைகள் என்னைக் கவலை கொள்ளச் செய்துள்ளன... எந்தவொரு கலாச்சாரமும் முக்கியத்துவம் வாய்ந்ததுதான். ஏனெனில், ஒவ்வொரு கலாச்சாரமும் உலகின் உயர்வுக்குப் பங்களிப்பைச் செய்கிறது."

— பேராயர் டெஸ்மோண்ட் டுட்டு, ஏப்ரல், 1996



படிப்பகம்

www.padippakam.com

வரலாறு தெளிவாக உணர்த்துகிறது. குடியேற்றக் கொள்கையை நிலைநிறுத்துவதற்காக வடக்குப் பகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் புதையுண்ட பௌத்த இடங்கள் புதியதாகக் 'கண்டுபிடிக்கப்பட்டன'. அதேநேரத்தில் இந்துக்களின் நெடிய வரலாற்றுக்குச் சான்றாக உள்ள கலைப்பொருட்கள் வெளிவராமல் தடுக்கப்பட்டன.[93] தொல்பொருள் ஆய்வும் அரசியல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது. அகழ்ந்தெடுக்கப்படும் தொல்பொருள்களை ஆதாரமாகக் கொண்டு எவ்விதத் தடையுமின்றி நடுநிலையுடன் தங்கள் வரலாற்றை ஆய்வு செய்வதற்கான உரிமையைத் தமிழர்களுக்கு மறுக்கின்ற வகையில் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் தொல்பொருள் ஆய்வுக் கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழர்களின் கலாச்சார வாழ்வை நேரடியாக அழிக்கின்ற அல்லது குலைக்கின்ற நோக்குடன் எண்ணற்ற நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. யாழ்ப்பாணத்தில் 1974-இல் திராவிட இயல், தமிழ் மொழி இயல் குறித்த நான்காவது உலக மாநாட்டை நடத்த விடக்கூடாது என்ற நோக்கத்துடன் வன்முறை ஏவப்பட்டது. எவ்விதக் காரணமும் இல்லாமல் நூற்றுக்கணக்கான சிங்களக் காவல்துறையினர் மாநாட்டினர் மீது தாக்குதல் நடத்தினர். கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வீசப்பட்டன. இதனால் ஏற்பட்ட அமளியில் ஒன்பது தமிழர்கள் உயிரிழந்தனர்.[94] இதைப் போல மற்றொரு கொடிய நிகழ்ச்சி யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதாகும். யாழ்ப்பாண நூலகத்தில் 95 ஆயிரம் நூல்களும் கிடைத்தற்கரிய கையெழுத்துப்படிகளும் இருந்தன. தமிழர்களின் கலாச்சாரப் பெருமையின் சின்னமாக இந்நூலகம் விளங்கியது. இந்நூலகத்தை 1981-இல் காவல்துறையினர் தாக்கி அழித்தனர்.[95] இக்கொடுஞ்செயல் சிங்கள அமைச்சர்களால் திட்டமிடப்பட்டு அவர்களின் மேற்பார்வையின் கீழ் நடந்தது.

தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களும், ஸ்ரீலங்காவில் வாழும் தமிழர்களும் கலாச்சாரப் பரிமாற்றம் செய்து கொள்வதற்குக் கடுமையான தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.[96] ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் வானொலியில் 1994 முதல் தமிழ் நிகழ்ச்சிகள் பல வெட்டிக் குறைக்கப்பட்டன. சில நிகழ்ச்சிகளை ஒலிபரப்பிடத் தடை விதிக்கப்பட்டது.[97] 'ரூபவாஹினி' எனப்படும் ஸ்ரீலங்காத் தொலைக்காட்சி ஒளிபரப்பு மய்யத்தின் தலைவராக இருந்த எம்.வசந்தராஜா, "ஸ்ரீலங்கா ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சிகளுக்கென சுதந்திரமான தனிப்பிரிவு இல்லை. சிங்களப்பிரிவில் இருந்தவர்களின் கட்டுப்பாட்டில்தான் தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாயின. தமிழ் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பவர்கள் ஓரங்கட்டப்பட்டனர். இவர்களுக்கு பல வசதிகள் மறுக்கப்பட்டன. இந்நிலையை மாற்ற நான் முயன்றேன். ஆனால் வெற்றி கிட்டவில்லை" என்று கூறியுள்ளார்.

தமிழர்களின் கலாச்சாரத்திற்கு எதிராக பல நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இது கலாச்சாரப் படுகொலை முயற்சியேயாகும். தமிழர்களின் கலாச்சார வலிமை இதனால் குன்றியது. சிங்கள அரசின் நடவடிக்கைகள் தமிழர்கள் தங்கள் கலாச்சாரத்தை வாழ்வில் துய்ப்பதற்குத் தடையாக அமைந்தன. இதன் எதிர்காலமே அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளது.

- **கல்வி**

ஸ்ரீலங்காவில் தமிழர்கள் தாழ்நிலையடைந்ததற்கு கல்விப் பிரச்சினை ஒரு முதன்மையான காரணமாக இருக்கிறது.

கல்வி கிடைக்காமையால் மலையகத் தமிழர்கள்தாம் மிகவும் பாதிப்புக்குள்ளாயினர். மலையகத் தமிழர்கள் குடியுரிமையில்லாதவர்கள் என்பதால் அவர்களுக்குப் பல்கலைக்கழகக் கல்வியும், அரசாங்கத்தின் கல்வி உதவித் தொகையும் மறுக்கப்பட்டன. அவர்கள் பெற்ற கல்வியும் தரமற்றதாக இருந்தது. மலையகத் தமிழரின் கல்விக்காகப் போதிய பணமும் செலவிடப்படவில்லை. அண்மைக்காலத்தில் கல்வி பெறுவதில் இவர்களிடையே முன்னேற்றம் ஏற்பட்டிருப்பினும், உயர்கல்வி பெறுதல், கற்றவர் விழுக்காடு முதலியன இன்றளவும் மிகவும் குறைவாகவே இருக்கின்றன.[98] தமிழ் வழியில் கல்வி பெறுவதாலும், சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்ற அரசின் கொள்கையாலும் தமிழர்களுக்குப் பாதிப்புகள் ஏற்படுகின்றன. பள்ளிகள்



படிப்பகம்


தேசியமயமாக்கப்பட்டதால் முன்பு தமிழ்ப் பள்ளிகளாக இருந்தவற்றுள் பல சிங்களப் பள்ளிகளாக மாற்றப்பட்டு விட்டன.[99]

பல்கலைக்கழகச் சேர்க்கையில் தமிழ் மாணவர்களுக்கு மிகுந்த வேறுபாடு காட்டப்படுவதால் அவர்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகின்றனர். 1970 வரை நுழைவுத் தேர்வில் மாணவர்கள் பெறும் மதிப்பெண் அடிப்படையில் கல்லூரிகளில் சேர்க்கப்பட்டனர். பல்கலைக்கழக உயர்கல்வியில் நெடுங்காலமாக யாழ்ப்பாணத் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் இருந்து வந்தனர். இதைக் கண்டு மனம் பொறாத சிங்களர்கள் சிறுபான்மையினரான தமிழர்கள் உயர்கல்வியில் பெரும்பான்மையினராக இருப்பது அநியாயம்; இந்நிலையை மாற்றிட வேண்டும் என்று அரசாங்கத்தை வற்புறுத்தினார்கள். எனவே, அரசாங்கம் தகுதி அடிப்படையில் சேர்க்கை என்ற முறையைக் கைவிட்டு விட்டது. அதற்குப் பதிலாக 'தரப்படுத்தல்' (Standardisation) என்ற முறையைப் புகுத்தியது. அதன்படி, உயர்கல்வியில் சேருவதற்கான மதிப்பெண் தமிழ் மாணவர்களை விட சிங்கள மாணவர்களுக்குக் குறைவாக நிர்ணயிக்கப்பட்டது. இம்முறையை மாற்ற வேண்டும் என்று தமிழர்கள் எதிர்த்தனர். சிங்களர்கள் மேலும் புதிய கோரிக்கைகளை முன் வைத்தனர். இப்பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் பல புதிய திட்டங்களை உருவாக்கியது. அவற்றுள் ஒன்று மாவட்ட ஒதுக்கீடு முறை. இது 1974-இல் நடைமுறைப்படுத்தப் பட்டது. இதன்படி மாவட்ட ஒதுக்கீடு முறையில் மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். மாவட்ட ஒதுக்கீடு முறை கிராமப்புற மாணவர்களையும் ஒடுக்கப்பட்ட வகுப்பு மாணவர்களையும் கைதூக்கி விடும் என்று கருதப்பட்டது. ஆயினும் இத்திட்டத்தால் உயர்கல்வியில் தமிழ் மாணவர்கள் எண்ணிக்கை குறைந்தது; சிங்கள மாணவர்கள் எண்ணிக்கை உயர்ந்தது.[100] 'தரப்படுத்தல்' முறை கைவிடப்பட்டபின், சமரச முயற்சியாக பல திட்டங்கள் கொண்டு வரப் பட்ட போதிலும், சிங்களருக்கு ஆதரவான போக்கு என்பது கைவிடப்படவில்லை.[101]

பல்கலைக்கழகங்களில் மாணவர்களைச் சேர்ப்பது குறித்து 1970 முதல் 1974 வரை பின்பற்றப்பட்ட கொள்கையால், பெரும்பான்மையினராக உள்ள சிங்களர்களிடம் இனி சமநீதி கிடைக்காது என்ற முடிவுக்குத் தமிழர்கள் தள்ளப்பட்டனர். இது தமிழர் அய்க்க முன்னணியில் இருந்த பிரிவினை கோரும் சக்திகளை வலுப்படுத்தியது.[102] உயர் கல்வியில் வெளிப்படையாகப் பாரபட்சம் காட்டப்பட்டதாலும் அதன்விளைவாக வேலைக்கான வாயில் கதவுகள் மூடப்பட்டதாலும் தமிழ் இளைஞர்கள் கொதிப்படைந்தனர். இதனால் அன்று சிறிய அமைப்பாக இருந்த தமிழ்ப்புலிகள் இயக்கத்தில் இளைஞர் பலர் சேர்ந்தனர். அனைவரும் சமத்துவமாக நடத்தப்பட வேண்டும் என்பது உள்நாட்டுச் சுயநிர்ணய உரிமையின் இன்றியமையாத பகுதி என்ற வகையில் இது ஒரு முக்கியமான கட்டத்தைக் குறிக்கிறது. சமத்துவமாக நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை இது உணர்த்துகின்றது.

> "பாதுகாப்புப் படையில் உயர் மட்ட அதிகாரிகள் பலரும், சிரில் மாத்யூ, காமினி திஸ்ஸநாயக ஆகிய இரு அமைச்சர்களும் யாழ் நகரில் இருந்தபோது, இராணுவத்தினரும் சாதாரண உடையில் இருந்த பாதுகாப்புப் படையைச் சேர்ந்த காடையர்களும் எவை எவற்றைத் தாக்கி அழிக்க வேண்டும் என்று நன்கு திட்டமிட்டு தாக்குதல் தொடுத்தனர். 95 ஆயிரம் நூல்களையும், கிடைத்தற்கரிய கையெழுத்துப் படிகளையும் கொண்ட யாழ் நகரப் பொதுநூலகம், ஒரு இந்துகோயில், 'ஈழநாடு' நாளேட்டின் அலுவலகம், அதன் அச்சுப்பொறிகள் ஆகியவற்றைத் தாக்கித் தரைமட்டமாக்கி விட்டனர். இலங்கையின் தேசிய நாளேடுகளில் இக்கொடுஞ்செயல் பற்றி ஒரு செய்தியும் வரவில்லை. தமிழர்களின் கலாச்சாரச் சின்னமாக விளங்கிய யாழ் நகர நூலகம் அடியோடு தகர்க்கப்பட்டது பற்றி ஒரு வரிச்செய்தி கூட வரவில்லை..."
>
> — Nancy Murray, **The State against the Tamils in Srilanka : Racism and the Authoritarian State,** Race & Class, London, 1984.

> "பண்டைய திராவிடக் கட்டிடக் கலை முறையில் கட்டப்பட்ட யாழ் நகரப் பொது நூலகம் தெற்கு ஆசியாவில் உள்ள பெரிய நூலகங்களில் ஒன்றாகும். 1981 சூன் முதல் நாள் ஊரடங்குச் சட்டம் விதிக்கப்பட்டிருந்த இரவு நேரத்தில் தமிழர்கள் தங்கள் பெருமைக்குரியதாகக் கருதிக் கொண்டிருந்த யாழ் நூலகத்தை சிங்கள அரசியல்வாதிகளின் வழிகாட்டுதலின் கீழ் காவல்துறையினர் எரித்து தரைமட்டமாக்கி விட்டனர். அந்நூலகத்தில் இருந்த 97 ஆயிரம் நூல்களும், கிடைத்தற்கரிய கைப்பிரதிகளும் எரிந்து சாம்பலாகி விட்டன."
>
> — விசுவநாதன், யாழ்நகர மேயர், 1983.



அழிக்கப்பட்ட யாழ்ப்பாண நூலகம்



www.padippakam.com
படிப்பகம்

"பல்கலைக்கழகத்தில் சேர்க்கைத் தகுதி அடிப்படையில் இல்லாமல் இன அடிப்படையில் என்று தற்போதுள்ள கொள்கையை அரசாங்கம் மறு ஆய்வு செய்ய வேண்டும். இன அடிப்படையில் அல்லாமல் தகுதி அடிப்படையில் சேர்க்கை இருந்தால்தான் பல்கலைக்கழகக் கல்வியில் சிங்கள இளைஞர்களுக்கும் தமிழ் இளைஞர்களுக்கும் சம உரிமை கிடைக்கும்."

— Prof.Virginia A Leary, **Ethnic Conflict and Violence in Srilanka, Report of a Mission to Srilanka in July - August 1981 on behalf of the International Commission of Jurists**, August 1983)

கல்வி பெறுவதில் தமிழர்களுக்கு இருந்த இடர்ப்பாடுகள் போர் மூண்ட பின் மேலும் பெருகின. போரினால் வடக்குப் பகுதியிலும் ஓரளவு கிழக்குப் பகுதியிலும் இருந்த பள்ளிகளும் கல்லூரிகளும் இயல்பாக இயங்க முடியாத நிலைகள் ஏற்பட்டன. ஆசிரியர்களும் மாணவர்களும் கொல்லப்பட்டனர். கல்விக்கூடங்கள் தகர்க்கப்பட்டன. மாணவர்களும் ஆசிரியர்களும் வெளியேறினர். இயல்பான முறையில் பள்ளிகளை நடத்துவதற்கான ஏந்துகள் இல்லாமல் போயின.[103] உயர்கல்வி பெற்றிருந்த தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் நாட்டை விட்டே வெளியேறினார்கள். வடக்கிலும் ஓரளவு கிழக்கிலும் கல்வி அடியோடு சீர்குலைந்தது. தமிழர்களின் அறிவாயுதமாக விளங்கிய கல்வி இன்று கண்ணை இழந்தது போலாயிற்று. இனியும் ஸ்ரீலங்காவில் தமிழர்கள் ஒரு விழுமிய சமுதாயமாக வாழ முடியுமா என்பதே கேள்விக்குறியாகி விட்டது.

"உயர்கல்வி பெறமுடியாமல் திட்டமிட்டு தடுக்கப்படுகின்றோம் என்ற கவலையைப் போல் வேறு எதுவும் தமிழர்களை மனமுடையச் செய்ய வில்லை."

— Walter Schwarz, Minority Rights Group, 1983.

## • பொருளாதார வளர்ச்சி

தனிமனிதர் என்ற நிலையிலும், சமுதாயம் என்ற அளவிலும் போருக்கு முன் தமிழர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு அரசாங்கத்தின் உறுப்பு அமைப்புகளால் இடையூறுகள் பல உண்டாக்கப்பட்டன. போருக்குப்பின் தமிழர்களின் பொருளாதார வளர்ச்சி மேலும் சீரழிந்தது.

19-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் ஸ்ரீலங்காவின் வரலாற்றில் மலையகத் தமிழர்களின் பொருளாதார நிலை மிகவும் தாழ்ந்து கிடக்கிறது. நாட்டின் செல்வத்தில் 35 விழுக்காடு மலையகத் தமிழர்களின் உழைப்பால் கிடைக்கிறது. ஆனால் நாட்டின் செல்வத்தில் இவர்கள் துய்ப்பதோ 5 விழுக்காட்டிற்கும் குறைவேயாகும். மலையகத் தமிழர்கள் தாழ்வாகக் கருதப்படுவதும் தனித்த குடியிருப்புகளில் வாழ்வதும் காலனிய வரலாற்றினால் விளைந்த கொடுமையாகும். ஸ்ரீலங்காவை ஆட்சி செய்த எல்லா அரசாங்கங்களும் இந்த இழிநிலை தொடர்ந்து நீடிக்கவும் மேலும் மோசமடையவும் துணை நின்றன. இதனால் மலையகத் தமிழர்களுக்குக் குடியுரிமையும் வாக்குரிமையும் மறுக்கப்பட்டன. குடியுரிமையற்ற நிலை, கல்வியின்மை, மோசமான வாழிடம் காரணமாக இவர்களின் பொருளாதாரத் தாழ்நிலையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. அண்மைக்காலத்தில் சில மாறுதல்கள் ஏற்பட்டுள்ள போதிலும் மலையகத் தமிழர்களின், குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களின் வாழ்நிலை அதிர்ச்சி தருவதாகவே இருக்கிறது.[104]

பல துறைகளிலும் பொருளாதார ரீதியான பாரபட்சம் காட்டப்பட்டதால் தமிழர்கள் பாதிக்கப்பட்டனர். ஸ்ரீலங்காவில் அதிக வேலைவாய்ப்பு தரும் அரசாங்கப் பணிகளில் தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் இருந்தனர். ஆனால் சுதந்திரத்திற்குப்பின் வேலைக்கு ஆள் எடுக்கும் விஷயத்தில் ஸ்ரீலங்கா அரசு கடைப்பிடித்த பாரபட்சமான கொள்கையாலும், சிங்களர்க்கு மட்டுமே வேலை என்ற கொள்கையாலும் அரசாங்க வேலைகளிலிருந்து பெரும்பாலான தமிழர்கள் விரட்டப்பட்டு விட்டனர்.[105] தற்போது அரசாங்க



படிப்பகம்

www.padippakam.com


வேலைகளில் சிங்களர்கள் தம் விகிதாசாரத்திற்குமேல் 85 விழுக்காடு இருக்கின்றனர். காவல் துறை, இராணுவம் ஆக முழுவதும் சிங்களர்களே உள்ளனர்.[106] அரசாங்க வேலைகளில் தமிழர்களே பெரும்பான்மையினராக இருந்த அநீதியைக் களைந்திட அரசாங்கம் பின்பற்றும் கொள்கை சரியானதே என்று சிங்களர்களின் பிரதிநிகள் கூறுகின்றனர்.

சிங்களர் குடியேற்றங்களை அரசாங்கம் அமைத்ததால், வடக்கிலும், கிழக்கிலும் வேளாண்மையில் ஈடுபட்டிருந்த தமிழர்கள், தங்கள் நிலங்களை இழந்தனர். இப்பகுதிகளில் வாழும் தமிழ்களுக்கு அரசாங்கத்தின் குடியேற்றத் திட்டங்களின் நிறைவேற்றத்தால் ஒரு பயனும் கிட்டவில்லை. மாறாக, தொலை தூரங்களில் உள்ள தமிழர் வாழும் பகுதிகளின் வளர்ச்சியை அரசாங்கம் புறக்கணித்தது. அகக்கட்டுமானப் (Infrastructure) பணிகளுக்காக நிதி ஒதுக்கப்படவில்லை. தனியார் தொழில் துறையும் வளரவில்லை. இதனால் அன்னிய முதலீடு இப்பகுதிக்கு வருவதற்கான வாய்ப்பே இல்லை என்றாகி விட்டது.[107] சர்வதேச நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்களை வடகிழக்குப் பகுதிகளில் மிகவும் பின்தங்கியுள்ள பகுதிகளின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தவில்லை.[108]

"யாழ்ப்பாண மக்கள் தம் அன்றாட வாழ்வில் எல்லையிலா இன்னல்களைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றனர். இராணுவ நடவடிக்கைகளால் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் 1,76,300 வீடுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது மொத்த வீடுகளில் இது 80 விழுக்காடாகும். 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன. எண்ணற்ற வீடுகளையும் பள்ளிகளையும் இராணுவம் கைப்பற்றிக் கொண்டு அவற்றில் இருந்து கொண்டிருக்கிறது. மக்களின் வருவாய்க்கு ஆதாரமாக நின்ற எண்ணற்ற தென்னை மரங்களையும், பனை மரங்களையும் பிற மரங்களையும் இராணுவம் தன் தேவைக்காக வெட்டி வீழ்த்தியது என்று யாழ்ப்பாண அரசு சாரா அமைப்புகளின் கூட்டிணையம் கூறுகின்றது."

— British Refugee Council, **Srilanka Monitor**, July 1997)

குடிசைத் தொழில்களுக்கும் தொழிற்சாலைக்கும் ஏற்பட்ட நாசம்



கொழும்பு நகரில் 1983-ஆம் ஆண்டு நடந்த கலவரங்களின் போது தமிழர்களின் பொருளாதார நிலைகள் மீது குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் தலைநகரில் தமிழர்களின் பொருளாதாரச் செயல்பாடுகள் பெருமளவில் குறைந்துவிட்டன.[109] இதன்பிறகு தொடர்ந்து நடந்த சண்டையில் சாலைகள், பாலங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், வேலைவாய்ப்பு ஆதாரங்களான விவசாயப் பண்ணைகள், மீன்பிடிப் படகுகள், தொழிற்சாலைகள் மற்றும் பயிர்கள், கால்நடைகள் முதலானவை குறிவைத்து தாக்கி அழிக்கப்பட்டன. பல கிராமங்கள் கொள்ளையடிக்கப்பட்டு முழுவதுமாக அழிக்கப்பட்டன. இத்தாக்குதலில் பலர் கொல்லப்பட்டனர். எண்ணற்றோர் தம் உயிருக்கு அஞ்சி தம் உடைமைகளை விட்டு விட்டு ஓடினர். தம் நிலத்தை, வீட்டை, தொழிலை இழந்த தமிழர்கள் தம் உயிர் வாழ்க்கைக்காக எத்தொழிலையும் மேற்கொள்ள முடியாத நிலைக்கு ஆளாயினர். தமிழர்கள் அதிலும் குறிப்பாக இளைஞர்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டதாலும் தம் வாழிடத்தை விட்டு வெளியேறியதாலும் வடகிழக்கு மாகாணங்களில் பொருளா



படிப்பகம்

www.padippakam.com

தார நிலை சீர்செய்ய முடியாத அளவிற்கு நலிந்துவிட்டது.[110]


1991-இல் மருந்துகள், உரங்கள், இரசாயனப் பொருட்கள், எரிசக்தி முதலான 42 பொருட்களை வடபகுதிக்கு எடுத்துச் செல்லக் கூடாது என்று ஸ்ரீலங்கா அரசாங்கம் தடைவிதித்தது. ஆனால் இராணுவமோ இப்பொருள்களைக் கிழக்குப் பகுதிக்கும் எடுத்துச் செல்லக் கூடாது என்று தடை விதித்தது.[111] பாதுகாப்புக் காரணங்களுக்காக என்று கூறி மீன் பிடிக்கவும், நெல் சாகுபடி செய்யவும் கடுமையான தடைகள் விதிக்கப்பட்டன. மேலும், பல பகுதிகளில் பொருளாதார நடவடிக்கை எதையும் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. ஏனெனில், அப்பகுதிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தன; அல்லது அங்கு கண்ணி வெடிகள் வைக்கப்பட்டிருந்தன.[112]

பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டதாலும் தொடர்ந்து சண்டை நடைபெற்றதாலும் உயிர் வாழ்க்கைக்கு அடிப்படையான உணவு, உறையுள், எரிபொருள் முதலானவற்றைக் கூட பெறமுடியாத அவலநிலை ஏற்பட்டது.

- **உடல்நலம்**

போதிய மருத்துவ வசதிகள் கிடைக்காமையாலும், தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் சண்டையாலும் தமிழர்களின் உடல்நலம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ மய்யங்கள் மீது தாக்குதல்



"இங்கே தரப்பட்டுள்ள புள்ளிவிவரம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மருத்துவச்சேவை எந்த அளவிற்கு மோசமான நிலையில் உள்ளது என்பதைத் தெளிவாக உணர்த்துகிறது. இலங்கையின் மற்ற பகுதிகளுடன் ஒப்பிடும் போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் கடந்த சில ஆண்டுகளாக, ஆண்டிற்கு ஆண்டு மருந்துகள் கிடைப்பதும், மருத்துவப் பணியாளர்கள் எண்ணிக்கையும், மக்கள் உடல்நலத்திற்காக அரசு செலவிடும் பணமும் குறைந்து கொண்டே வருகின்றன."

— Dr.C.S.Natchinarkinian : **Current pattern of Health Care and Resource Allocation; Conference Proceedings - Victims of war in Srilanka; A Quest for Health Consensus,** 1995

மலையகத் தமிழர்களின் வாழ்க்கைத்தரம் ஸ்ரீலங்காவின் பிறபகுதிகளில் வாழ்பவர்களின் வாழ்க்கைத் தரத்தை விட மிகவும் குறைவாக இருக்கிறது. குறைந்த வருவாய், வேலை செய்யும் இடங்களில் நிலவும் மோசமான சூழல், மிகவும் வசதி குறைந்த வீடு, தூய்மையற்ற சுற்றுப்புறச் சூழல், தூய குடிநீர் கிடைக்காமை, உடலோம்பல் பற்றிய அறியாமை, போதிய மருத்துவச்சேவை இல்லாமை முதலான காரணங்களினால் மலையகத் தமிழர்களிடையே ஊட்டச்சத்துக் குறைபாடும், தொற்று நோய்களும் அதிகமாக இருக்கின்றன. பல ஆண்டுகளாகப் புறக்கணிக்கப்பட்டதால், 1970களில் மலையகத் தமிழர்களின் உடல்நலம் மிகவும் கேடான நிலையில் இருந்தது. சத்துப் பற்றாக்குறையின் உடற்கோளாறுகள், குழந்தைகள் சாவது, மகப்பேற்றின் போது பெண்கள் இறப்பது, நோய்களால் பாதிக்கப்படுதல், உடல் வளர்ச்சி குன்றுதல் ஆகியன அதிகமாக இருந்தன. 1977 முதல் அய்க்கிய தேசியக் கட்சி ஆட்சி பின்பற்றிய திறந்த பொருளாதாரக் கோட்பாடும் அண்மையில் தேயிலைத் தோட்டங்களின் நிர்வாகம் தனியார் மயமாக்கப்பட்டதும் மலையகத் தமிழர்களின் வாழ்நிலையை மேலும் மோசமாக்கின. பொருள்களின் விலையேற்றத்தால் ஊட்டச்சத்துப் பற்றாக்குறை மேலும் அதிகரித்தது.



படிப்பகம்

www.padippakam.com

வறுமை, புறக்கணிப்பு என்ற சுழற்சியில் சிக்குண்டு சீரழிந்து கொண்டிருக்கின்றனர். இவர்களின் இவ்விழி நிலைக்கு அரசாங்கம் தொடர்ந்து பின்பற்றி வரும் பாரபட்சக் கொள்கையேயாகும்.[113]

சண்டை தொடங்கிய பின் ஸ்ரீலங்காத் தமிழர்களின் உடல்நலம் தொடர்ந்து சீரழிந்து வருகிறது. 1983க்கும் 1993க்கும் இடைப்பட்ட காலத்தில் 35 ஆயிரம் தமிழ்க் குடிமக்கள் கொல்லப்பட்டதாக கணக்கிடப்பட்டுள்ளது. அதே காலத்தில் 12,24,000 தமிழர்கள் தம் வாழிடத்தை விட்டு வெளியேறினார்கள். 4,69,000 குழந்தைகள் அனாதைகளாயின.[114] அகதிகள் முகாம்களிலும் தற்காலிகக் குடியிருப்புகளிலும் இருக்கும் அகதிகள் சுகாதார மற்ற, மோசமான சுற்றுப்புறச் சூழலில் வாழ்கின்றனர். இதனால் 1997 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் மட்டும் வன்னியில் பூநகரிப் பகுதியில் உள்ள 16 அகதிகள் முகாம்களில் 150 தமிழர்கள் இறந்தனர்.[115] வடக்கிலும், கிழக்கிலும் வாழும் தமிழர்கள் ஊட்டச்சத்துப் பற்றாக் குறைக் கோளாறுகள், மலேரியா, தொழு நோய், காலரா, காசநோய், மனநிலைக் கோளாறுகள், புற்றுநோய், காதுகேளாமை முதலான நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.[116] மேலும், குண்டு வீச்சினால் மருத்துவமனைகள் சேதமடைந்துள்ளன. போதிய போக்குவரத்து வசதி இல்லாததால் காயம்பட்டவர்களுக்கு உடனடியாக மருத்துவ வசதியைத் தரமுடியவில்லை. போதிய அளவிற்கு மருந்துகளும், மருத்துவச் சாதனங்களும் கிடைக்காமை, பயிற்சி பெற்ற மருத்துவர்களும் செவிலியரும் போதுமான அளவிற்கு இல்லாமை முதலான காரணங்களினால் நோயாளிகளுக்கு மருத்துவம் செய்வது பெரும் இடர்ப்பாடாக உள்ளது. இதனால் நோயாளிகள் இறக்க நேரிடுகிறது.[117]

வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்களின் உடல்நலத்திற்கும் மனநலத்திற்கும் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தமிழ்ச் சமுதாயத்தின் மீது தொடர்ந்து பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

## • தகவல் தொடர்பும் போக்குவரத்தும்

சுதந்திரமான நடமாட்டமும் பேச்சுரிமையும் வடக்கிலும், ஓரளவு கிழக்கிலும் தடை செய்யப்பட்டுள்ளன.

வடபகுதிக்குள் செல்வதும் அங்கிருந்து திரும்புவதும் மிகவும் இடர்ப்பாடானதாக இருக்கிறது. தொடர் வண்டிகள் (Trains) செல்வதில்லை. யாழ்ப்பாணத்திற்கு விமானப் போக்குவரத்தும் இல்லை. பொருளாதாரத் தடையின் காரணமாக எரிபொருள் கிடைக்காததால் வாகனப் போக்குவரத்தும் அடியோடு நின்றுவிட்டது. பயணம் செய்வதே ஆபத்து நிறைந்ததாக உள்ளது. பயணத்தின் போது - குறிப்பாக, படகில் செல்லும் போது - எண்ணற்ற குடிமக்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். பலர் பலவாறு கொடுமைப்படுத்தப்பட்டனர். வடபகுதிக்குச் செல்வோர் பல இராணுவ சோதனைச் சாவடிகளைக் கடந்து

> "நெருக்கடிநிலையின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தணிக்கைமுறை, சண்டை நடக்கும் பகுதிகளுக்கும், தாம் வாழ்ந்த இடத்தை விட்டு வெளியேறியவர்கள் சென்று தங்கியிருக்கும் பகுதிகளுக்கும் பத்திரிகையாளர்கள் செல்வதற்கான அனுமதி மறுப்பு, மனிதநேய அமைப்புகள் சுதந்திரமாகச் செயல்படுவதற்குள்ள அச்சுறுத்தல், அரசாங்கம் அளித்த தகவல் தொடர்பு கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் எவ்வித முன்னேற்றமும் இல்லாமை முதலான காரணங்களினால் ஸ்ரீலங்காவில் கருத்துச் சுதந்திரம் பற்றிய பிரச்சினைகளைக் கூர்ந்து ஆராய வேண்டியுள்ளது. மேலும் காலம் தாழ்த்தாமல் தகவல் தொடர்பு சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்று அரசாங்கம் அறிவித்தவாறு இவற்றை உடனடியாகச் செயல்படுத்த வேண்டிய அவசியத்தை மேலே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் உணர்த்துகின்றன."
>
> **— Article 19, International Centre against Censorship,** March 1996.



படிப்பகம்

www.padippakam.com

தான் செல்ல வேண்டியுள்ளது. விடுதலைப்பு லிகளும் பொது மக்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்குப் பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். இதனால் தமிழ் மக்கள் சண்டை நடக்கும் பகுதிகளில் சிக்கிக் கொள்ள நேரிடுகிறது. தனியாக அனுமதி பெற்ற பின்னர் வெளிநாட்டவர் மட்டும் வடக்குப் பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களிலும் உளவுறுதி கொண்டோர் மட்டுமே பயணம் செய்யத் துணிய முடியும். வெளி உலகத்திலிருந்து வடக்குப் பகுதி துண்டிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது.[118]

போரின் விளைவாக கருத்துச் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது. 1985 முதல் தொலைபேசி இணைப்புகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டு விட்டன. அஞ்சல் சேவையும் பெருமளவில் சீர்குலைந்துவிட்டது. இது அஞ்சல்துறை அதிகாரிகளின், இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. 4,50,000 மக்கள் தொகை கொண்ட யாழ் நகரில் தற்போது மூன்று தொலைபேசிகள் மட்டுமே உள்ளன. பத்திரிகைகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாலும், மின்சாரம் இல்லாமையாலும் பத்திரிகைகள் அச்சடிக்கப்படுவதில்லை. மின்சாரம் இல்லாததாலும், பேட்டரிகளுக்குத் தடைவிதிக்கப் பட்டிருப்பதாலும் வடபகுதியில் பல ஆண்டுகளாக வானொலியையும் தொலைக்காட்சியையும் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. தற்போது ஓரிரு செய்தித்தாள்கள் வெளியிட அனுமதிக்கப்பட்டுள்ளன. இவையும் அரசாங்கத்தின் தணிக்கைக்குட்பட்டே வெளியிடப்படுகின்றன.

தகவல் தொடர்பு சாதனங்கள் பெரும்பகுதி அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. செய்திகள் தணிக்கை செய்யப்படுகின்றன. 1995-ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் டிசம்பர் வரையிலும், பின்னர் 1996-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் அக்டோபர் வரையிலும் இராணுவமும் போலீசும் நடத்திய போர் பற்றிய செய்திகள் அரசாங்கத்தின் கடுமையான தணிக்கைக்கு உட்படுத்தப்பட்ட பிறகே வெளியிடப்பட்டன.[119] வடபகுதிக்குள் நுழையவும் கிழக்குப் பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் செல்லவும் வெளிநாட்டவர் தனியாக அனுமதி பெற வேண்டும் என்றிருப்பதாலும், தமிழ்ப் பத்திரிகைகள் முடக்கப்பட்டிருப்பதாலும் வடக்கிலும் கிழக்கிலும் நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தெளிவாக அறிந்து கொள்ள தேசியப் பத்திரிகையாளருக்கோ அனைத்துலகப் பத்திரிகையாளருக்கோ எவ்வித வாய்ப்பும் இல்லை.[120]

தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள், கட்டுப்பாடுகளின் விளைவாக வடபகுதியும் கிழக்கில் சில பகுதிகளும் வெளி உலகத்திலிருந்து துண்டிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் தகவல்களைச் சுதந்திரமாகப் பரிமாறிக் கொள்கின்ற அடிப்படை உரிமை தமிழர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கின்ற வகையில் போரில் இராணுவத்தினர் புரிகின்ற கொடுஞ்செயல்களை வெளிஉலகம் அறியாதவாறு மூடி மறைப்பதற்காகவே இத்தடைகளும் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன.

- **அடிப்படை உரிமை மீறல்கள்**

1978-ஆம் ஆண்டு அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமைகளை உத்திரவாதம் செய்யும் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.



வீடுகளுக்கும் சூழலுக்கும் ஏற்பட்ட அழிவு



படிப்பகம்

www.padippakam.com

உடலளவில் மனிதத்தன்மையற்ற கொடுமைகள் செய்வதை அல்லது தண்டிப்பதைத் தடுப்பது, காரணமின்றி கைது செய்யப்படுவதிலிருந்து மீள்வது, நியாயமான விசாரணைக்கான உரிமை, அதற்கான நடைமுறைகளை மேற்கொள்வதற்கான உரிமை, கருத்துச் சுதந்திரம், மதச் சுதந்திரம், அமைதியாகக் கூட்டம் கூடும் உரிமை, நடமாட்டச் சுதந்திரம் முதலானவை அடிப்படை உரிமைகளாக வழங்கப்பட்டுள்ளன. ஆனால், இவை விதி 15-இல் கூறப்பட்டுள்ள வரம்புகளுக்குக் கட்டுப்பட்டவையாகும். விதி 126-இன்படி அடிப்படை உரிமைகள் குடிமக்களுக்கு வழங்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும் உரிமை உச்ச நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அடிப்படை உரிமை மீறப்பட்ட நிகழ்ச்சி நடந்ததாகக் கருதப்படும் நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் உச்சநீதி மன்றத்திற்கு நியாயம் வழங்கக் கோரி விண்ணப்பிக்கலாம்.

> "பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் நிலையாக நீடிக்கும் என்று ஆக்கப்பட்டுள்ளதால், சிறுபான்மையினர் சிக்கலைத் தீர்ப்பதற்காக ஒரு தற்கால நடவடிக்கையாக மட்டும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை என்பது தெளிவாகி விட்டது. இச்சட்டத்தை நிலையாக வைத்திருக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் எண்ணம் வெளிப்பட்டு விட்டது."
>
> **— Ethnic and Communal Violence : The Independence of the Judiciary : Protection of Fundamental Rights and the Rule of Law in Srilanka - Fragile Freedoms? - Report of an ICJ Mission to Srilanka in June 1983** - Timothy J.Moore.)

அடிப்படை உரிமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற பல சர்வதேச சட்ட ஒப்பந்தங்களை ஸ்ரீலங்கா ஏற்றுக் கொண்டுள்ளது. சர்வதேச குடிமை, அரசியல் உரிமைகள் ஒப்பந்தம் (ICCPR), சித்திரவதைகளுக்கு எதிரான ஒப்பந்தம் ஆகியன இவற்றில் குறிப்பிடத்தக்கனவாகும்.

அடிப்படை உரிமைகளுக்கு அரசியல் சட்டத்தில் உத்திரவாதம் அளிக்கப்பட்டிருந்த போதிலும், சர்வதேச ஒப்பந்தங்களுக்கு உடன்பட்டிருந்த போதிலும் தமிழர்களைப் பாரபட்சமாக நடத்துவதற்கான பல சட்டங்களை ஸ்ரீலங்கா அரசாங்கம் இயற்றியது. இவை இன்றளவும் நடப்பில் உள்ளன. தமிழர்களின் அடிப்படை உரிமைகளையும் அரசியல் உரிமைகளையும் மீறுவதற்கு இச்சட்டங்கள் அரணாக விளங்குகின்றன. பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்காக பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தையும் (PTA) பலவகையான நெருக்கடி நிலை விதிகளையும் (Emergency Regulations - ERs) ஏற்படுத்தியிருப்பதாக அரசாங்கம் கூறுகிறது. தமிழர்களை - குறிப்பாக இளைஞர்களை ஒடுக்கவும், பாரபட்சமாகவும் நடத்தவும் இச்சட்டங்கள் பயன்படுத்தப்படுவதாக அவ்வப்போது கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. தமிழ் இளைஞர்கள் கொதிப்படைந்து தீவிரவாதிகளாக மாறுவதற்கு இச்சட்டங்களே காரணம் என்று கூறப்படுகிறது.[121] தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைக்கு எதிராக ஒடுக்குமுறைகளை ஏவி விடுவதற்கும்,[122] அரச பயங்கரவாதத்திற்கும் ஆணிவேராக பயங்கரவாத தடுப்புச் சட்டமும், நெருக்கடி நிலை விதிகளும் இருக்கின்றன.[123]

*1982*-ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடுப்பு (திருத்தம்) சட்டம் எண்.10க்கு ஒரு திருத்தமாகக் கொண்டு வரப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் எண்.*48* மிகவும் கொடிய சட்டமாகும். தமிழ்த் தீவிரவாதிகளுக்கு எதிராகப் பயன்படுத்துவதற்கென்றே இது உருவாக்கப்பட்டது. சட்ட விரோதச் செயலில் ஈடுபடுவதாகச் சந்தேகிக்கப்படும் எந்த நபரையும் கைது செய்து காவலில் வைக்க பாதுகாப்புப் படையினருக்கு இச்சட்டம் பரந்துபட்ட அதிகாரத்தை வழங்குகிறது. *'சட்டவிரோதச் செயல்'* என்பதற்கு மிக விரிந்த அளவிலான விளக்கம் இச்சட்டத்தில் பகுதி 2 மற்றும் 31-இல் தரப்பட்டுள்ளது. *"வெவ்வேறு வகுப்புகள் அல்லது இனங்கள் மதப்பிரிவினர்க்கிடையே, மத, இன, வகுப்பு ஒற்றுமையைக் குலைக்க வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் கூறப்படும் சொற்கள், சைகைகள்"* கூட சட்டவிரோதச் செயலாகக் கருதப்படும். இந்த




படிப்பகம்

விளக்கம், தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை மறுப்பதோடு தனிமனிதர்களின் கருத்துச் சுதந்திரத்தையும் பறிக்கின்றது. எவ்வித மான அரசியல் நடவடிக்கையிலும் தமிழர்கள் ஈடுபட முடியாதவாறு இச்சட்டம் அச்சுறுத்துகிறது. ஏனெனில், எச்செயலையும் சட்ட விரோதமானது என்று கூறி கைது செய்வதற்கான வானளாவிய அதிகாரத்தை இராணுவத்திற்கு இச்சட்டம் வழங்கியுள்ளது. சட்டவிரோத மான செயலில் ஈடுபடுவதாக சந்தேகிக்கப்படும் எந்த நபரையும் இச்சட்டத்தின் 9ஆவது பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, அமைச்சர் முடிவு செய்கின்றவாறு எந்த இடத்திலேனும் எத்தன்மையிலேனும் 18 மாதங்கள் தொடர்ந்து காவலில் வைக்கலாம். கைது செய்யப்பட்டவரை நீதிபதியின் முன்னால் கொண்டு வந்து நிறுத்துமாறு கோர முடியாது. காவலில் வைத்திட இராணுவம் எடுத்த முடிவே இறுதியானது. சட்டப்பிரிவு 10-இன்படி காவலில் வைக்கப்பட்டுள்ளதை எதிர்த்து எந்தவொரு நீதிமன்றத்திலோ அல்லது தீர்ப்பாயத்திலோ (Tribunal) முறையீடு செய்யவும் முடியாது. இதன்பொருள் என்னவெனில், காவலில் வைக்கப்பட்டவர் வழக்கறிஞரையோ உறவினர்களையோ சந்திக்கவும் முடியாது; அவர் நீதிபதியின் முன் கொண்டு வரப்படவும் மாட்டார் என்பதாகும்.


உச்ச நீதிமன்றம் அரசாங்கத்திற்கு எதிராக அளித்த ஒரு தீர்ப்பின் காரணமாக 1982-ஆம் ஆண்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு அரசாங்கம் கொண்டு வந்த ஒரு திருத்தத்தின் மூலம் அடிப்படை உரிமைகளுக்கு வழங்கப்பட்டிருந்த சட்டப்பாதுகாப்புகள் கைவிடப்பட்டன. இதன்படி குற்றம் சாட்டப்பட்ட நபர் மீது வழக்கு நடக்கும்போது, அவரைத் தொடர்ந்து இராணுவத்தின் காவலில் வைத்திருக்க அதிகாரம் வழங்கப்பட்டது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், கைது செய்யவும் காவலில் வைக்கவும் அதிகாரம் வழங்கியிருப்பதோடு பிரிவு 16-இன்படி, துணைக் கண்காணிப்பாளர் (Assistant Commissioner) நிலைக்குக் குறையாத தகுதியுடைய காவல் துறை அதிகாரி முன் கைது செய்யப்பட்டவர் அளிக்கும் வாக்குமூலம் வழக்கு விசாரணையில் சாட்சியமாக எடுத்துக் கொள்ளப்படும். தான் இவ்வாறு வாக்குமூலம் அளிக்கவில்லை என்பதை நிரூபிக்க வேண்டியது குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவரின் பொறுப்பாகும். இச்சட்டத்தின் பிரிவு 31, முன்னர் செய்த குற்றச் செயல்களுக்கும் சேர்த்து தண்டனை வழங்கும் அதிகாரத்தைத் தந்துள்ளது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்படி குற்றம் செய்தவர்க்கு ஆயுள் தண்டனை உட்பட எவ்வித மான சிறைத்தண்டனையையும் வழங்கலாம்.




இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது இச்சட்டப்பிரிவுகள் அடிப்படை உரிமைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற பிற சட்டங்களுடன் முரண்படுகின்ற நிலை ஏற்பட்டால் அவற்றைக் கருத்தில் கொள்ளாமல் இச்சட்டப்படியே தீர்ப்பு வழங்கக்கூடிய அதிகாரத்தை இச்சட்டம் பெற்றுள்ளது.[124] பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மிகக் கடுமையான ஒடுக்குமுறைச் சட்டமாகும். இதன் கொடிய தன்மை முன்பு தென் ஆப்பிரிக்காவில் இருந்த சட்டங்களுடன் ஒப்பிடத்தக்கதாகும்.[125]

www.padippakam.com



சித்திரவதை செய்யப்பட்டு எரிக்கப்பட்டவர்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களுக்கு அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள சட்டப் பாதுகாப்புகள் கிடைப்பதில்லை. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தொகுப்பு (Code of Criminal Procedures) வலிமையான சட்டப் பாதுகாப்புகளைக் கொண்டிருக்கிறது. சாட்சியம் பற்றிய அவசரச் சட்டத்தில் (Evidence Ordinance) குற்றம் சாட்டப்பட்டவர் காவல்துறை முன் அளிக்கும் வாக்குமூலம் சுயேச்சையாகவும் சர்வதேசச் சட்டங்களின்படியும் பெறப்படும் மற்ற ஆதாரங்களுடன் ஒப்பிடப்பட்டுப் பார்க்க மட்டுமே பயன்படுத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது. உரிமைப் பாதுகாப்பு அளிக்கின்ற எல்லா சட்டங்களையும் தன் காலின்கீழ் மிதித்து நசுக்கி விடக்கூடிய அதிகாரம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதனால் தான் கைது செய்யப்பட்டவர்களை எவருடனும் தொடர்பு கொள்ளவிடாமல் 18 மாதங்கள் காவலில் வைக்கின்றது இச்சட்டம்; அத்துடன் கொடுமையாகச் சித்திரவதைகள் செய்து பொய்யான வாக்குமூலங்களையப் பெறுவதைச் சாத்தியமாக்குகிறது.

பொதுமக்கள் பாதுகாப்பு அவசரச் சட்டத்தின் (Public Security Ordinance) கீழ் 1961 முதல் பல நெருக்கடி நிலை விதிகள் (Emergency Regulations) உண்டாக்கப்பட்டுள்ளன. 1983க்குப் பின் நெருக்கடி நிலை அறிவிப்பின் கீழ்தான் ஸ்ரீலங்காவில் ஆட்சி நடைபெற்றது. 1983க்குப் பின் 'பயங்கரவாதிகளை'க் குறி வைத்தே நெருக்கடி நிலை விதிகள் பிறப்பிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும் இராணுவத்தினரின் கொடிய செயல்களால் பொதுமக்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டனர்.[126]

நெருக்கடி நிலை விதிகளில் இரண்டு முக்கியக்கூறுகள் உள்ளன. ஒன்று நிலப்பகுதி மீது விதிக்கப்படும் கட்டுப்பாடு; மற்றொன்று தனி மனிதர்கள் மீது விதிக்கப்படும் கட்டுப்பாடு. நெருக்கடி நிலை விதிகள் முதன்முதலாக 1984-இல் வடக்கு பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதன்படி வடக்குப் பகுதியில் இவை இவை தடை செய்யப்பட்ட பகுதிகள், இவை இவை பாதுகாப்பான பகுதிகள் என அறிவிக்கப்பட்டன. நெருக்கடி நிலை விதிகளின்படி பயணம் செய்யவும், வாகனங்களைப் பயன்படுத்தவும் தனியாக அனுமதி பெற வேண்டும். நெருக்கடி நிலை விதிகளின் அடிப்படையில் நீண்டகால ஊரடங்கு ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன. இதனால்

"உங்களுக்குச் சொந்தம் இல்லாத இந்த நாட்டில் பாகுபாடாக நடத்தப்படுவதாக நீங்கள் நினைத்தால், ஏன் இந்த நாட்டிலேயே இருக்க விரும்புகிறீர்கள். உங்கள் சொந்த நாடான இந்தியாவிற்குச் செல்லுங்கள். அங்கே உங்களிடம் வேறுபாடு காட்டப்படாது. இந்தியாவில் உங்கள் கோயில்களும் கடவுள்களும் இருக்கின்றன. உங்கள் எதிர்காலத்தை நீங்களே நிர்ணயித்துக் கொள்ளலாம்... ஸ்ரீலங்காவில் தமிழீழத்தை நிறுவிட தமிழர்கள் முயல்வதைத் தற்போது துஞ்சுகின்ற சிங்களர்கள் விழித்தெழுந்து பார்த்தார்களானால் போர் மூளும். ஆகவே, தமிழர்களே தூங்குகின்ற சிங்களர்களை எழுப்ப வேண்டாம் என்று அறிவுரை கூற விரும்புகின்றேன். துஞ்சும் சிங்கத்தை இடறினால் என்ன நிகழும் என்பது எல்லோர்க்கும் தெரியும்."

— WJM லொகு பண்டார நாடாளுமன்ற உறுப்பினர் - ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை, 1981.



படிப்பகம்

மக்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்படுகிறது. போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. பள்ளிகள் இயங்குவது, மருத்துவவசதி பெறுவது, வேலைக்குச் செல்வது ஆகியன பெரிதும் பாதிக்கப்படுகின்றன.[127] 1991-இல் அறிவிக்கப்பட்ட பொருளாதாரத் தடையும் நெருக்கடி நிலை விதிகளின் அடிப்படையில்தான் விதிக்கப்பட்டது. மேலே கூறப்பட்டுள்ள நெருக்கடி நிலை விதிகள் மீண்டும் 1995-இல் விதிக்கப்பட்டன.

1979முதல் குறிப்பாக 1983க்கு பிறகு நெருக்கடி நிலை விதிகள் நடப்புக்கு வந்தன. இவை இராணுவத்திற்கும் காவல்துறைக்கும் பரந்துபட்ட அதிகாரங்களை வழங்கின: சோதனை செய்தல், கைது செய்தல், நீண்ட காலம் காவலில் வைத்தல் முதலான அதிகாரங்களைப் பாதுகாப்பு படையினர் பெற்றனர். இவற்றுள் மிகவும் கேடானது நெருக்கடி நிலை விதி 15ஏ ஆகும். காவல்துறை உயர் அதிகாரி ஒருவர், நிர்வாகத் துறையிலிருந்து ஒரு உயர் அதிகாரி ஆகிய இருவர் முன்னிலையில் இறந்த உடல்களை எரிப்பதற்கான அல்லது புதைப்பதற்கான அதிகாரத்தை 15ஏ பிரிவு வழங்கியது. நீதிமன்றத்தின் எவ்விதமான குறுக்கீடும் இல்லாமல் எவரையும் சித்திரவதை செய்யவும் கொல்லவும் பாதுகாப்புப் படையினருக்கு உரிமை வழங்கப்பட்டது போன்ற நிலை ஏற்பட்டு விட்டது. ஆனால், இந்த அதிகாரத்தைக் கண்டித்து உலகெங்கும் கண்டனக்குரல்கள் எழுந்தன. எனவே 15ஏ பிரிவு 1984-இல் நீக்கப்பட்டது.[128] இதன் பின்னர் ஏற்படுத்தப்பட்ட நெருக்கடிநிலை விதிகளிலும் நீதிமன்றத்தின் மூலம் பாதுகாப்புப் பெற வழிவகை செய்யப்படவில்லை. தற்போது நடப்பில் உள்ள நெருக்கடி நிலை விதிகளில், பயங்கரவாதிகள் ஆயுதமேந்தி தாக்கிய போது நடந்த சண்டையில் நேர்ந்த மரணம் என்று பாதுகாப்புப் படையினர் கூறினாலும் இதைப் பற்றிய உண்மையை விசாரிப்பதற்காக ஒரு சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கொழும்பில் உள்ள உயர்நீதிமன்றம் இவற்றை விசாரிக்கலாம். ஆனால், அதற்கு முன் இது உயர் நீதிமன்றத்தில் விசாரணை செய்வதற்கான முகாந்திரம் உடையதுதான் என்று காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் அனுமதி அளிக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. காவலில் இருக்கும் போது நடைபெறும் சாவுகளைப் பற்றியோ, இராணுவத்தினரால் கொல்லப்படுவது பற்றியோ சுதந்திரமாக விசாரிப்பதற்கான நடைமுறை ஏதும் இன்றளவும் இல்லை. இதனால் காவல் துறையினரும் இராணுவத்தினரும் தாங்கள் செய்யும் குற்றங்களுக்குரிய தண்டனையைப் பெறாமல் தப்பித்துக் கொண்டிருக்கின்றனர்.[129]

> "இரயில்வே பொது மேலாளரின் நிர்வாக அறிக்கையைப் பாருங்கள்... இம்மண்ணின் மைந்தர்களான - நாட்டின் செல்வத்தில் பெரும் பங்கை அளிக்கின்ற சிங்கள மக்களின் நலன்களைப் பலியிட்டு விட்டு, தமிழர்களும், மலையாளிகளும், முகம்மதியர்களும் பெரும் எண்ணிக்கையில் வேலையில் இருப்பதைப் பாருங்கள்."
>
> — அனகாரிக தர்மபால, புத்தபிக்கு, 1892.

தற்போது நடப்பில் உள்ள நெருக்கடி நிலை விதிகள் 1993 ஜுன் 17 அன்று இதற்கு முன் நடப்பில் இருந்தவற்றைத் திருத்தியமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டவையாகும். இவை யாரையும் கைது செய்வதற்கும், கைது செய்யப்பட்டவரை எவருடனும் தொடர்பு கொள்ள அனுமதிக்காமல் ஓராண்டு காவலில் வைத்திருப்பதற்கும் பாதுகாப்புப் படையினருக்கு விரிந்த அதிகாரங்களை வழங்கியுள்ளன. ஓராண்டிற்கு மேல் காவலில் வைத்திருக்க வேண்டுமானால், நீதிபதியின் அனுமதியைப் பெற வேண்டும். ஆனால் நீதிபதி பாதுகாப்பு அமைச்சகத்தின் அறிக்கையின் அடிப்படையில்தான் முடிவு எடுப்பார்.[130] நெருக்கடி நிலை விதிகளை மீறியதாகச் சந்தேகப்படும் நபர்களைக் கைது செய்து இரண்டு மாதங்கள் காவலில் வைக்கலாம். இது வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு மட்டும் பொருந்தும்.

நெருக்கடி நிலை விதிகளின்படி காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கென 1991 முதல் சில நடைமுறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. பாதுகாப்புப் படையினரின் கீழ் எந்தெந்த இடங்களில் காவல் கைதிகள் காவலில் வைக்கப்படுகின்றனர் என்ற விபரம் 1993-இல் வெளியிடப்பட்டது. மனித உரிமைகள் பாதுகாப்புப் படை (Human Rights Task Force) 1991-இல் அமைக்கப்பட்டது. இது மீண்டும் 1994 ஜூன் மாதம் புதுப்பிக்கப்பட்டது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், நெருக்கடி நிலை விதிகள் ஆகியவற்றின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் இருப்பவர்களைப் பதிவு செய்வது, அவர்களின் நலன்களைக் கண்காணிப்பது முதலான வேலைகளை மனித உரிமைகள் பாதுகாப்புப் படை செய்தது. பாதுகாப்புப் படையினர் யாரைக் கைது செய்தாலும், அதற்கு இரசீது தரவேண்டும் என்று நெருக்கடி நிலை விதிகளின் கீழ் குடியரசுத் தலைவர் ஆணை பிறப்பித்தார். காணாமல் போய்விட்டனர் என்று கூறப்படுவதைத் தடுப்பதே இதன் நோக்கமாகும். மேலும், காவலில் இருப்பவர்கள் தங்கள் குடும்பத்தினருடன் தொடர்பு கொள்ள அனுமதிக்கப்பட்டனர். 1995-ஆம் ஆண்டு கூடுதலாக சேர்க்கப்பட்ட நெருக்கடி நிலை விதிகளின்படி, இராணுவத்தினர் ஒருவரைக் கைது செய்தால், 24 மணி நேரத்திற்குள் அருகில் உள்ள காவல் நிலை அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும்.[131] ஆனால் கைது செய்யப்பட்டதற்கு இரசீது தரவேண்டும் என்பது பாதுகாப்புப் படையினரால் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறது.[132] 1996 டிசம்பர் மாதம் நடைபெற்ற ஒரு வழக்கில் உச்ச நீதிமன்றம், நெருக்கடி நிலை விதிகள் அதிகாரிகளாலேயே மீறப்படுகின்றன; இதற்கு பாதுகாப்பு அமைச்சக செயலாளரும் விதிவிலக்கல்ல என்று கூறியது. நெருக்கடி நிலை விதிமுறைகளின் படி செயல்படாததற்காக அதிகாரிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் அபராதமோ அல்லது சிறைத்தண்டனையோ வழங்கலாம் என்றிருக்கிறது. ஆனால் இதுவரையில் ஒருவர் கூட தண்டிக்கப்படவில்லை. மனித உரிமைகள் பாதுகாப்புப் படை 1997 ஜூலை மாதம் கலைக்கப்பட்டு விட்டது. அதனால் இனிமேல் காணாமல் போவோர் எண்ணிக்கை அதிகரிக்கும்.[133]

சித்திரவதை செய்வதற்கும், கொல்லப்படுவதற்கும் இடந்தருவதாக இருப்பதால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் நெருக்கடி நிலை விதிகளும் தொடர்ந்து கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகின்றன.[134] மனித உரிமைக் குழுவின் (Human Rights Committee) வேலை, சர்வதேச குடிமை, அரசியல் உரிமைகள் ஒப்பந்தத்தின்படி அதில் கையெழுத்திட்டுள்ள நாடுகள் அளிக்கும் அறிக்கைகளை ஆய்வு செய்வதும், சம்பந்தப்பட்ட அரசுகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் மேற்சொன்ன ஒப்பந்தத்தில் காணப்படும் உரிமைகளைப் பாதுகாக்கின்றனவா இல்லையா என்று கூறுவதுமாகும்.

*"ஸ்ரீலங்காவின் சட்ட திட்டத்தில் மேற்சொன்ன ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள உரிமைகள் அனைத்தும் இடம் பெறவில்லை என்பதுடன் அந்த உரிமைகளைக் குறுக்குவதற்கு அவ்வொப்பந்தம் வகுத்துள்ள வரம்புகளை மீறாதிருக்கும்படியான பாதுகாப்பு ஏற்பாடுகளும் இல்லை"*[135] என்று மனித உரிமைக் குழு கருத்து தெரிவித்துள்ளது.

சர்வதேச மனித உரிமை ஒப்பந்தங்களின் படி செயல்பட வேண்டிய பொறுப்பு ஸ்ரீலங்கா அரசுக்கு இருக்கிறது. ஆனால் சர்வதேச மனித உரிமை ஒப்பந்தங்களின் கோட்பாடுகளையும், எல்லைகளையும் மீறுவதாகவே பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் நெருக்கடி நிலை விதிகளும் அமைந்துள்ளன. அரசியல் சட்டம் விதி 126-இன்படி மனித உரிமைகள் மீறப்பட்டது பற்றிய வழக்குகளை உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கலாம். விதி 141-இன்படி ஹேபியஸ்கார்ப்பஸ் மனுக்களை மேல்முறையீடு நீதிமன்றங்களில் தாக்கல் செய்யலாம். ஆனால் இம்முயற்சிகள் மூலமாக மனித உரிமைகள் மீறப்படுவதைத் தடுப்பதற்கான போதிய பாதுகாப்பினைப் பெற முடியவில்லை. பாதிக்கப்பட்ட பலரால் நீதிமன்றத்தை நாட முடியவில்லை. ஏனெனில், வடக்கிலும் கிழக்கிலும் நிலவுகின்ற மோசமான சூழ்நிலையால் இவர்களால் நீதிமன்றத்திற்குச் செல்ல முடிவதில்லை. பாதுகாப்புப் படையினர் உண்டாக்கும் தடைகள் காரணமாகவும் நீதிமன்றத்திற்குச் செல்ல முடிவதில்லை.[136] சித்

திரவதைகள் குறித்த வழக்குகளில் கடந்த சில ஆண்டுகளில் உச்ச நீதிமன்றம் தன் கடும் கண்டனத்தைத் தெரிவித்திருந்த போதிலும், உச்ச நீதிமன்ற நீதிபதி ஒருவர் 1996-இல் கூறியுள்ளதுபோல சித்திரவதைகள் சற்றும் குறையாமல் தொடர்ந்து நடந்து கொண்டிருக் கின்றன.[137] கொடுஞ்செயல் புரியும் பாதுகாப் புப் படையினர் எவ்விதமான தண்டனைக்கும் ஆட்படாமல் இருப்பது பெரும் பிரச்சினை யாக நீடிக்கிறது. பாதுகாப்புப் படையினரால் மனித உரிமைகள் வேண்டுமென்றே மீறப்பட் டுள்ளமை சில வழக்குகளில் தெள்ளத் தெளிய வெளிப்பட்ட போதிலும், சம்பந்தப்பட்டவர் கள் குற்றவாளிகளாக்கப்பட்டு தண்டனை வழங்கப்படவில்லை.[138]

ஸ்ரீலங்காவில் அண்மையில் அமைக்கப் பட்டுள்ள நிலையான மனித உரிமைகள் ஆணையம் (Permanent Human Rights Commission) தன் கடமையை நிறைவேற்றுவதில் எந்த அளவிற்குத் திறம்பட செயல்படுகிறது என்ப தைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அய்ந்து உறுப்பினர்களைக் கொண்ட அந்த ஆணையம் அரசாங்கத்தின் மனித உரிமை நடைமுறையைக் கண்காணிக்கவும், அரசியல் சட்டத்தில் மனித உரிமைகளுக்கு உத்திரவா தம் அளிக்கின்ற விதிகள் நடைமுறைப்படுத் தப்படுவதை உறுதிசெய்யவும், மனித உரிமை மீறல்கள் பற்றி வரும் புகார்களை ஆய்வு செய்யவும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மற்றும் நெருக்கடி நிலை விதிகளின் கீழ் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் அதிகாரம் வாய்ந்ததா கும்.[139] எனினும், மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்தக்கூடிய வாய்ப்பு இவ்வாணை யத்திற்கு மிகக் குறைவாகவே உள்ளது. ஏனெ னில் சர்வதேசச் சட்டங்களிலும் ஸ்ரீலங்கா அரசியல் சட்டத்திலும் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறுகின்ற தன்மை யில் தமிழர்களைப் பாரபட்சமாக நடத்துகின்ற சட்டங்கள் இன்றும் நடப்பில் உள்ளன. இவை இருக்கின்ற வரையிலும், பாதுகாப்புப் படையினர் அடிப்படை உரிமைச் சட்டங்க ளைப் பின்பற்றாத வரையிலும் மனித உரிமை ஆணையத்தால் மனித உரிமை மீறல்களைத் தடுத்திட இயலாது. அரசியல் காரணத்தைக் கொண்டே மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என்ற கண்டனம் எழுந்துள்ளது. அரசு சாரா மனித உரிமை அமைப்பில் பல ஆண்டுகள் பணி யாற்றி அனுபவம் பெற்ற ஒருவரைக்கூட அரசாங்கம் இக்குழுவில் உறுப்பினராக நியமிக் கவில்லை.

### • மனிதச் சிறப்பியல்புகளை அழித்தல்

மனிதன் என்ற நிலையை, தனித்து வத்தை மறுப்பது, மனிதத் தன்மையற்ற செய லாகும். இது பல வழிகளில் வெளிப்படும். பொதுவாக இதற்கு ஒரு கருத்தியல் (Ideology) பின்னணி இருக்கும். அதாவது ஒரு குழு, மற்ற குழுவை விட அல்லது மற்ற கலாச்சாரத்தை விட தன் குழு, தன் கலாச்சாரம் உயர்ந்தது என்று கருதும். தன் குழுவின் நலன்களைக் காப்பதற்காக மற்ற குழுவை தன் எதிரியாகக் கருதும்.

ஸ்ரீலங்காவைப் பொறுத்தளவில், இது போன்ற கருத்தியல் பின்னணியாக இருப்பது சிங்கள - பௌத்த இனவாதமாகும். இந்த இனவாதப்போக்கு சிங்கள மக்கள் அனைவரி டமும் இருப்பதாகக் கூற முடியாது, அது சிங்கள மேட்டுக்குடியினரிடம் மட்டுமே இருக் கிறது என்று சொல்லப்படுகிறது.[140] தமிழர்க ளுக்கு எதிராகச் செயல்படுகின்ற சிங்களப் பேரினவாதம் சுதந்திரத்திற்குப் பின் செய்யப் பட்டு வரும் 'தேசிய நிர்மாணம்' என்பதில் முக்கிய கூறாக இருந்து வருகின்றது.[141] சிங்க ளப் பேரினவாதத்தின் நோக்கம் ஆளும் வர்க் கத்தின் அதிகாரத்தை நிலைபெறச் செய்வதா கும். இதற்காக சிங்களருக்கும் தமிழருக்கும் இடையே பிளவை உண்டாக்குவதும், அரசி யல் எதிர்ப்பைத் திசை திருப்புவதும் இதன் செயல்பாடுகளாகும். மேட்டிமை அரசியல்வா திகள் சிங்கள சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத் தக்கூடிய வல்லமையுடன் வளர்ந்து வரும் சக்திகளுடன் கைகோர்த்துக் கொள்கின்றனர். கருத்தியல் ரீதியாக தீவிரமான தமிழ்ப்பகைக் கொண்ட ஆரவாரமிக்க பௌத்தத் துறவிகள் இதில் மிகவும் குறிப்பிடத்தக்கக் கூட்டாளிகளா வர்.[142]

சிங்கள - பௌத்த இனவாதம் பௌத்த சமயத் துறவிகளில் சிலரால் வெறியூட்டி

www.padippakam.com

வளர்க்கப்பட்டது. ஸ்ரீலங்காவை ஆட்சி செய்த எல்லா அரசாங்கங்களுமே சிங்கள -பௌத்த பேரினவாதத்தை சில நேரங்களில் தயக்கத்துடனும், பல நேரங்களில் வெளிப்படையாகவும் ஊட்டி வளர்த்தன. இதனால் ஸ்ரீலங்காவில் அரசியல் ரீதியான வளர்ச்சி என்பது பின்னுக்குத் தள்ளப்பட்டு, சிங்கள -பௌத்த பேரினவாதமே ஆட்டிப் படைக்கும் சக்தியாக உருவெடுத்தது. சிங்கள - பௌத்த பேரினவாதம் மேலாதிக்கம் பெற்றதற்கான காரணங்கள்: 1)ஸ்ரீலங்காவின் ஆதி குடிமக்கள் சிங்களரே, தமிழர்கள் வந்தேறிகள்; சிங்கள கலாச்சாரத்தை அழிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் என்ற தவறான கருத்து; 2)இந்துக்களின் ஆக்கிரமிப்பால் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள பௌத்தத்தைக் காக்க வேண்டியது சிங்களர்களின் கடமை என்ற தவறான புரிதல்; 3)தமிழர்களின் தாயகமான தமிழ்நாட்டையும் கருத்தில் கொண்டால் ஸ்ரீலங்காவில் சிங்களர் சிறுபான்மையினரே; தமிழர்கள் செல்வதற்கு தமிழ்நாடு இருக்கிறது, ஆனால் சிங்களர்கள் எங்கே செல்ல முடியும்? என்ற பொய்யான வாதம்; 4)காலனிய ஆட்சியின் கொள்கைகளால் சிங்களர்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்பட்டன; ஆனால் தமிழ் மக்கள் அவர்களின் எண்ணிக்கையின் விழுக்காட்டை விட பல மடங்கு ஆதாயம் பெற்றனர் என்ற பகை உணர்ச்சி.[143] சிங்களர்கள் முன்வைக்கின்ற இவ்வாதங்களை நடுநிலையுடன் கூர்ந்து ஆராய்ந்தால், இவை அனைத்தும் பொய் என்பது புலப்படும்.[144] இருப்பினும், தமிழர்களுக்கு எதிராக ஒடுக்குமுறைகள் ஏவப்படுவதையும், தமிழர்கள் ஒருதலைச்சார்பாக நடத்தப்படுவதையும் நியாயப்படுத்த மீண்டும் மீண்டும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வாதங்களை முன் வைக்கின்றனர். சிங்களர்கள் திரும்பத் திரும்ப கிளிப்பிள்ளை போல இவ்வாதங்களைக் கூறுவதன் நோக்கம் : தமிழர்கள் சிங்களரின் நாட்டிற்கு ஓர் அச்சுறுத்தலாக இருக்கிறார்கள்; தமிழர்கள் நாட்டின் ஒற்றுமையையும் கலாச்சாரத்தையும் குலைக்கிறார்கள்; இந்துக்களாக இருப்பதால், இவர்கள் பௌத்தத்தின் எதிரிகள்; இந்தியாதான் தமிழர்களின் தாய் நாடு, எனவே அவர்களுக்கு ஸ்ரீலங்கா எந்தவிதமான உரிமையும் வழங்கக்கூடாது; சிங்களர்களை விட உயர்வான நிலையில் தமிழர்கள் இருப்பதால், அவர்களைச் சமத்துவமாக நடத்தக்கூடாது என்ற நச்சுக் கருத்துக்கள் சிங்கள மக்களின் உள்ளங்களில் மூண்டெழச் செய்ய வேண்டும் என்பதேயாகும்.

இந்த வாதங்கள் சித்தரிக்கின்ற தமிழர்கள் எப்படிப்பட்டவர்கள்? அவர்கள் வெளிநாட்டிலிருந்து வந்த புல்லுருவிகள், தென் இந்தியாவுடன் சேர்ந்து கொண்டு சிங்கள தேசத்தையும் அதன் கலாச்சாரத்தையும் அழிப்பதற்குத் தயாராக இருப்பவர்கள். சரியான சந்தர்ப்பவாதிகள். அதனால் காலனிய ஆட்சியின்போது வெள்ளைக்காரர்களுக்கு வால்பிடித்து, சிங்களருக்குச் சேர வேண்டிய பயன்களைப் பறித்துக் கொண்டவர்கள்.[145] மனிதத் தன்மையற்றதாக்குதல் என்பது மனிதன் என்ற தகுதி நிலையைத் தர மறுப்பது, தனித்துவத்தை மறுப்பது ஆகும் என்பது மீண்டும் நினைவு கூறப்பட வேண்டும். பொதுவாக வன்முறைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் அறநெறி அமைப்புகள் மனிதன் என்ற தகுதி நிலையையும், தனித்துவத்தையும் மறுக்கின்ற செயல்பாடுகளில் தலையிடுவதில்லை. சிங்களப் பேரினவாத சக்திகள் முன் வைக்கின்ற வாதங்கள், 'தமிழர்கள் இலங்கையில் சம உரிமை பெறத் தகுதியற்றவர்கள்; நாட்டிற்கே ஓர் அச்சுறுத்தலாக இருப்பவர்கள்' என்று சித்தரிக்கின்றன. தமிழர்கள் 'ஆபத்தானவர்கள்' என்று சிங்களர்களால் கூறப்பட்டதை பிறகு விடுதலைப்புலிகள் நடப்பில் காட்டி விட்டனர். சிங்கள அரசியல் வாதிகளும், பௌத்த தீவிரவாதிகளும் முன் வைத்த பாசிசக் கொள்கைகளை நடைமுறைப் படுத்தியதன் விளைவாகவே விடுதலைப்புலிகள் இயக்கம் வெடித்தெழுந்தது. ஆனால், புலிகளின் செயல்களால் சிங்களர்களின் தவறான கருத்துக்கள் மேலும் இறுக்கம் பெற்றன.

கூறப்பட்டதை பிறகு தமிழ்ப்புலிகள் நடப்பில் காட்டி விட்டனர். சிங்கள அரசியல்வாதிகளும், பௌத்த தீவிரவாதிகளும் முன்வைத்த பாசிசக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தியதன் விளைவாகவே தமிழ்ப்புலிகள் இயக்கம் வெடித்தெழுந்தது. ஆனால், புலிகளின் செயல்களால் சிங்களர்களின் தவறான கருத்துக்கள் மேலும் இறுக்கம் பெற்றன. தமிழர்கள் பற்றி சிங்களர் உருவாக்கிய சித்திரம் தமிழ்ப்புலிகளின் நடவடிக்கைகள் காரணமாக வலுப்



படிப்பகம்

www.padippakam.com

பெற்றது உண்மையாயினும், அச்சித்திரம் உருவாகக் காரணமே, தீவிரவாத சிங்களப் பௌத்தர்களினதும் அரசியல்வாதிகளினதும் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வந் ததுதான். ஸ்ரீலங்காவை இன அடிப்படையில் மக்களை எதிரெதிர் துருவங்களாகப் பிளவுப டுத்தச் செய்வதற்கு ஊன்றப்பட்ட விதைகள், முளைத்துச் செடியாகி, மரமாக வளர்ந்து விட் டன. சிங்களர் பின்பற்றும் கொள்கைகளுக்கு உந்துசக்தியாக இருக்கும் கருத்தியலையும், அக்கொள்கைகளில் இனப்படுகொலைத் தன்மை உள்ளார்ந்து இருப்பதையும் புரிந்து கொள்வதற்கு மேற்சொன்ன உண்மைகள் இன்றியமையாதவை. ❑

---

[80] see K. Jayawardena: Ethnic and Class Conflicts, p.98
[81] see ibid., pp.87-95 and K.N.O.Dharmadasa: Language, Religion and Ethnic Assertiveness, p.315
[82] see PRIO: Towards a Multi-Ethnic Society, p.47
[83] see K.M de Silva: History of Sri Lanka, pp.501,514,515
[84] see S.Ponnnambalam: Tamil Liberation Struggle, pp125,126
[85] see P.Hyndman: A study in microcosm, p.283
[86] see N.Sanmugathasan: Sri Lanka: The story of the holocaust, p.79 and K.N.O. Dharmadasa: Language, Religion and Ethnic Assertiveness, pp.314-316
[87] see M.Vije: Colonisation, pp.8,16,
[88] see M.Vije: Oppression of Tamils, pp.61-63
[89] see T.Thavasilingham: Religious and Cultural changes in Ceylon,Unpublished seminar paper, 1991, pp.9,10
[90] see Victims of War in Sri Lanka, p.xx
[91] see Amnesty International: Wavering Commitment, p.9
[92] see M.Vije: Oppression of Tamils, p.60
[93] see E.Meyer: Representations of the Past and of Space as Obstacles To Peace in Sri Lanka in:P.Schalk: Lanka 5, Uppsala, 1990 p.306, N. Sanmugathasan: Sri Lanka: The story of the holocaust, p.73 and M.Vije: Colonisation, pp.7,8
[94] see ibid.,p.183
[95] see E.Nissan: A Bitter Harvest, p.16
[96] see S.Ponnambalam: Tamil Liberation Struggle, p.142
[97] see M Vasantharajah, Former Director General, Rupavahini Corporation
[98] see ibid., p.25
[99] see K.Kanapathipillai: Education in the Eastern Region, Conference paper,Tamil Information Centre, 1991, 3-6, and H.P.Chattopadhyaya: Ethnic Unrest,p.23
[100] see S.Bastian: University Admission and the National Question in:SSA: Ethnicity and Social Change in Sri Lanka, pp.229,230
[101] see K.M.de Silva: Managing Ethnic Tension, pp.306-311
[102] C.R.de Silva: Weightage in University Admissions: Standardisation and District Quotas in Sri Lanka 1970-1975 in: Modern Ceylon Studies, Volume 5:2, July 1974,p.166
[103] see U.S. Committee for Refugees: Conflict and Displacement in Sri Lanka, p.16 and Sri Lanka Monitor No.108, January 1997, p.2
[104] see P.Hyndman: A study in microcosm,p.281
[105] see T.Valluvan: Ethnic Conflict, p.12
[106] see E.Nissan: A Bitter Harvest, p.24, see W.A.Warnapala: Ethnic Strife, p.187 on the repercussions for ethnic conflict
[107] see E.Nissan: A Bitter Harvest, p.24
[108] see ibid.,p.22
[109] T.Valluvan: Ethnic Conflict, p.14, L.Piyadasa: The Holocaust, pp.80-82
[110] see M.Vije: Economic Blockade, pp.13,14
[111] E.Nissan: A Bitter Harvest, p.22
[112] see M.Vije: Economic Blockade, p.20, see also concerning Jaffna: U.S.Committee for Refugees: Conflict and Displacement in Sri Lanka, p.16
[113] see S.Balakrishnan: Health Status among the Hill Country Tamils in: Victims of War in Sri Lanka, pp.132-134
[114] see Victims of War in Sri Lanka, p.xx
[115] see Sri Lanka Monitor, No.110, March 1997, p.2
[116] E.Nissan: A Bitter Harvest,p.26
[117] see U.S.Committee for Refugees: Conflict and Displacement in Sri Lanka, p.15
[118] see M.Vije: Economic Blockade,p.11



படிப்பகம்

www.padippakam.com

[119] Human Rights Watch: Annual Report 1997, p.184
[120] see Amnesty International: Wavering Commitment,p.9
[121] see P.Sieghart: Tragedy of Errors, p.54
[122] see B.Cashman, J.Laffon, Ved.P.Nanda: Human Rights Crisis, pp.356,359,366,367
[123] see L.Kuper: Prevention of Genocide, p.221
[124] see V.A.Leary: Ethnic Conflict, pp.44-50
[125] see ibid, pp.,47,48
[126] S.S.Misra : Ethnic Conflict,p.73
[127] P.Hyndman: Human Rights in Sri Lanka, pp.346,347
[128] see ibid., p.347
[129] Amnesty International: Wavering Commitment, p.13
[130] see Amnesty International: New emergency regulations, January 1994, p.6
[131] see Amnesty International: Wavering Commitment, p.13
[132] see U.S. State Department: Country Report 1996, Section 1 d
[133] ibid.,introduction
[134] see Report on the visit to Sri Lanka by three members of the Working Group on Enforced or Involuntary Disappearances, E/CN.4/1993/25/Add.1, para 139 and Amnesty International: New Emergency Legislation, pp.1,2
[135] Consideration of Sri Lanka's third periodic report submitted under Article 40 of the ICCPR, 27 July 1995, CCPR/C/79/Add.56, para. 10
[136] see ibid., para 17 and Amnesty International: Sri Lanka: Security measures violate human rights, July 1995, p.20
[137] see TIC News Bulletin, June-September 1996, p.1
[138] see Report of the UN Working Group on Enforced or Involuntary Disappearances, E/CN.4/ 1997/34, para. 323 and U.S. State Department: Country Report 1996, introduction
[139] see ibid., Section 4, and Amnesty International: Sri Lanka: The Human Rigths Commission Bill, December 1995
[140] see K.Sivathamby: The Sri Lankan-Tamil Question Socio-Economic and Ideological Issues in: Bulletin of Peace Proposals, International Peace Research Institute, Oslo,Vol.18, No.4, 1987, pp.632,633 and A.J.Wilson: Break-Up of Sri Lanka, p.224
[141] see PRIO: Towards a Multi-Ethnic Society, pp.39,40 and K.Jayawardena: Ethnic and Class Conflicts, pp.71-76
[142] see U.Phadnis: Role of State in Ethnic Conflict in Sri Lanka in:. P.Schalk: Lanka 5, Uppsala, 1990, p.253 and B.Cashman, J.Laffon and Ved P.Nanda: Human Rights Crisis, p.364,365
[143] see K.Jayawardena: Ethnic and Class Conflicts, pp.9-14
[144] see L.Piyadasa: The Holocaust, pp.73-77, A.J.Wilson: Break-Up of Sri Lanka, p.223 and S.Ponnambalam: Tamil Liberation Struggle, pp.139-142

145. ஸ்ரீலங்காவிலிருந்து வெளிவரும் 'சண்டே அப்சர்வர்' என்ற ஆங்கில நாளேடு அதன் 20.04.1997-ஆம் நாள் இதழில் சிங்கள அரசியல் உணர்வுடைய புத்த பிக்குவான மதுலவாவெ சோபித தேரோ என்பாரின் நேர்காணலை வெளியிட்டுள்ளது. பிக்கு கூறியதாவது: "இப்போது தனது உரிமைகளுக்காகப் போராடும் சிங்களரல்லாத குழு ஒவ்வொன்றும் ஒரு அந்நியக்குழுதான். வெவ்வேறு கால கட்டங்களில் படையெடுத்து வந்தவர்களோ அல்லது வர்த்தகர்களாக வந்தவர்களோ அல்லது திருட்டுத்தனமாகக் குடியேறியவர்களோதான் அவர்கள்." இதனை மேற்கோளாகக் காட்டியுள்ள சஞ்சிகை: Hot Spring, April 1997, p.2



படிப்பகம்

www.padippakam.com

# முடிவுரை : இனப்படுகொலை நிகழ்முறை

**சி**ங்கள சமுதாயத்தில் ஆதிக்கச் சக்தியாக உள்ள மேட்டுக் குடியினரும் ஸ்ரீலங்காவை ஆண்ட அரசாங்கங்களும் ஊட்டிய இனவெறியால் உந்தப்பட்ட பெரும்பான்மையினரான சிங்களர்கள் தங்கள் தேசிய முறைகளை சிறுபான்மையினரான தமிழர்கள் மீது திணித்தனர். வரலாற்றில் சிங்களருக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் களைதல், கல்வியிலும் வேலையிலும் தமிழர்களுக்கு இருக்கின்ற செல்வாக்கான நிலையை ஒழித்தல், கிராமப்புறங்களில் வறிய நிலையில் உள்ள சிங்களர்களுக்குப் புதுவாழ்வு தருதல் முதலான அரசாங்கத்தின் கொள்கைகளை ஒரே நேரத்தில் நடைமுறைப்படுத்தியதன் மூலம் சிங்களர்கள் தம் நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டனர். சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்கிற ஆதிக்க வெறிக் கொள்கை அரசாங்கத்தின் கொள்கையாயிற்று. இக்கொள்கை தமிழர்களை வந்தேறிகளாகவும், ஆபத்தானவர்களாகவும், சிங்கள தேசியத்தின் எதிரிகளாகவும் சித்தரித்தது.

இதன்விளைவாக, தமிழர்களின் அரசியல் சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டது. தங்கள் தாயகமாகக் கருதுகின்ற தமிழ் மண்ணில் அரசாங்கத்தின் குடியேற்றக் கொள்கையால் சிங்களர்கள் குடியமர்த்தப்பட்டனர். தமிழ்மொழியும் தமிழர்களின் மதமும் அரசால் பாரபட்சமாக நடத்தப்பட்டன. தமிழர்களின் வழிபாட்டுத் தலங்கள் இடிக்கப்பட்டன. வழிபாடு செய்வதும் பாதிக்கப்பட்டது. சமயத்தலைவர்களும் பக்தர்களும் கொல்லப்பட்டனர். விதிக்கப்பட்ட தடைகளாலும் ஏவப்பட்ட வன்செயல்களாலும் கலாச்சார செயல்பாடுகள் ஒடுங்கின. சிங்களர்களுக்கு ஆக்கம் சேர்க்கும் ஒருதலைச் சார்பான கொள்கைகளால் தமிழர்களின் கல்வி சீரழிந்தது. கல்வியில் சம உரிமை மறுக்க்ப்பட்டது. பொருளாதார வளர்ச்சிக்கான வாயில்கள் தமிழர்களுக்கு அடைக்கப்பட்டதால் வேலை வாய்ப்பும் பொருளாதார வளர்ச்சியும் சுருங்கின. மாறாக, சிங்களரின் செல்வம் பெருகியது. அரசாங்கத்தின் புறக்கணிப்பாலும், பொருளாதாரத் தடை விதிப்பாலும் தொடர்ந்து நடைபெறும் சண்டையினாலும் தமிழர்களின் உடல் நலம் பெரிதும் பாதிக்கப்பட்டது. கருத்துச் சுதந்திரம் பறிக்கப்பட்டதாலும், வெளியுலகத் தொடர்பு துண்டிக்கப்பட்டதாலும் அவர்களின் சமூக வாழ்க்கை நிலைகுலைந்தது. வேறுபாடு காட்டும் சட்டங்களினால் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டன.

சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டிருப்பதும் சமஉரிமையுடன் நடத்தப்படுவது மறுக்கப்பட்டிருப்பதும் 1978-ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறிய செயலாகும். இதைப்போலவே சர்வதேச குடிமை, அரசியல் உரிமைகள் ஒப்பந்தத்தின் விதி 1, சர்வதேச பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் ஒப்பந்தத்தின் விதிகள் 1, 27 ஆகியவற்றையும் இவ்விரு ஒப்பந்தங்களில் அடிப்



மகளிர் ஆர்ப்பாட்டம்



படிப்பகம்

www.padippakam.com

படை உரிமைகளை உத்திரவாதம் செய்யும் பல பிரிவுகளையும், மரபின அடிப்படையில் பாரபட்சம் காட்டுகின்ற அனைத்து முறைகளையும் ஒழிப்பதற்கான ஒப்பந்தத்தையும் (Convention on Elimination of All Forms of Racial Discrimination) மீறுகின்றவையுமாகும்.

அடிப்படை உரிமைகளையும், தமிழர்களும் மனிதர்கள்தாம் என்ற தகுதிப்பாட்டையும் ஸ்ரீலங்கா அரசாங்கம் மறுத்ததன் விளைவாக தமிழர்கள் மீது அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் உரிமை மறுப்புக் கொள்கைகளால் ஸ்ரீலங்காவில் சிங்களருக்கும் தமிழருக்கும் இடையே ஆழமாக வேரூன்றி விட்ட பெரும் பிளவு ஏற்பட்டு விட்டது. இவற்றின் விளைவாக இனஅழிப்புச் செயல்கள் என்று கூறப்படுகின்ற கொடுஞ்செயல்கள் ஸ்ரீலங்காவில் நடந்து கொண்டிருக்கின்றன. சுருக்கமாகச் சொல்வதானால் இனப்படுகொலைகள் நிகழ்வதற்கான அனைத்துக் கூறுகளும் ஸ்ரீலங்காவில் ஒன்று திரண்டு உருப்பெற்றுள்ளன.

❑



படிப்பகம்

www.padippakam.com

# இனப்படுகொலைச் செயல்கள்

## சான்றுகள்

**1956**-க்குப் பின் சிங்கள வெறிக்கும்பல்களாலும், காவல்துறையினராலும், இராணுவத்தினராலும் குறைந்தது 30 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். காயமடைந்தவர்கள் இதைவிட பல மடங்கு அதிகம்[146] பெரும் எண்ணிக்கையில் ஒரே நேரத்தில் படுகொலை செய்தல், மனம் போன போக்கில் கொல்லுதல், காவலில் இருக்கும் போது கொல்லுதல், 'காணாமல் போனவர்'கள் என்ற கொலைகள் என பலவகைகளில் இப்படுகொலைகள் செய்யப்பட்டன. சண்டை தொடங்கிய பிறகு படுகொலையின் தன்மையும் அளவும் மாறின. துன்புறுத்துவது, சித்திரவதை செய்வது, பாலியல் பலாத்காரம், எவருடனும் தொடர்பு கொள்ள அனுமதிக்காமல் நீண்டகாலம் காவலில் வைத்திருப்பது போன்றவற்றிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. எனவே போருக்கு முன்னைய காலம், போருக்குப் பின்னைய காலம் (*1983 - 1997*) என்று தனியாகப் பிரித்து ஆராய வேண்டியுள்ளது.

### 1956 - 1983 :

- *1956 ஜூன் 5-ஆம் நாள்* கொழும்பிலும், கிழக்கு மாகாணத்தில் உள்ள கல்லோயா, அம்பாறை ஆகிய இடங்களிலுமாகச் சேர்ந்த 150 மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாகச் செய்திகள் வந்தன. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மேற்சொன்ன இரு இடங்களில் புதிய நீர்ப்பாசனத் திட்டத்தின்

> மே 25-ஆம் நாளிரவில் இலங்கையின் வரலாற்றிலேயே மிகக் கொடூரமான குற்றங்களிலொன்று இழைக்கப்பட்டது. பொலனறுவா கரும்புத் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த தமிழ்த் தொழிலாளிகள் எதிரிகள் வருவதைக் கண்டதுமே கரும்புத் தோட்டத்திற்குள் ஓடி ஒளிந்து கொண்டனர்... ஆனால், அந்தக் குண்டர்களோ தங்கள் நேரத்தை வீணடிக்கவில்லை. கரும்புத் தோட்டத்திற்கு நெருப்பு வைத்து அங்கு ஒளிந்து கொண்டிருந்தவர்களை வெளியே ஓடிவரும்படி செய்தனர். அலறியடித்துக் கொண்டு வெளியே வந்த ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் வீட்டில் தயாரிக்கப்பட்ட வாட்களாலும் புல்வெட்டும் அரிவாள்களாலும் கத்திகளாலும் வெட்டி வீழ்த்தப்பட்டனர். குண்டாந்தடிகள் அவர்களது உடல்களைக் கூழாக்கின.
>
> ஹிங்குரக்கொடவிலுள்ள அரசாங்கப் பண்ணையிலும் கூட அன்றிரவு தமிழர்கள் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். பயத்தாலும் பீதியாலும் ஆட்கொள்ளப்பட்ட ஒரு பெண் தன் குழந்தைகளை அரவணைத்தபடியே ஒரு கிணற்றுக்குள் விழுந்து தற்கொலை செய்து கொண்டாள். அந்தக் காடையர்களுக்கோ ஒரே கொண்டாட்டம். ஒரு எட்டு மாதக் கர்ப்பிணியின் வயிற்றைக் கிழித்த அவர்கள், இரத்தம் முழுவதும் வெளியேறிய நிலையில் அவளைச் சாகும்படி விட்டுச் சென்றனர்.
>
> இந்துக் கோயிலுக்குள் குண்டர்படையொன்று நுழைந்து கோயிலுக்குத் தீ வைத்து எரிக்க முயன்றது. ஆனால் வெறி அவர்களது தலைக்கு ஏறியிருந்ததால், நெருப்புப் பற்ற வைப்பதில் வெற்றியடையவில்லை. ஆனால், அவர்களுக்கு வேறொரு வக்கிரமான எண்ணம் உதித்தது. அங்கு பூஜை செய்து கொண்டிருந்த குருக்களை இழுத்து வந்து அவரை எரித்துச் சாம்பலாக்கினர்.
>
> — Tarzi Vittachi - **Emergency '58 : The Story of the Ceylon Race Riots**, London, 1958.



படிப்பகம்


www.padippakam.com

கீழ் சிங்களர்கள் குடியமர்த்தப்பட்டிருந்த னர்.[147] சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்ற மசோதா இலங்கை நாடாளுமன்றத் தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதைக் கண் டித்து 300 தமிழர்கள் சத்தியாகிரகம் செய்த பிறகு ஏக்சாத் பிக்கு பெரெமுன என்ற பௌத்த அமைப்பும் சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்கிற கொள்கையை ஆத ரித்த சிங்களரும் சேர்ந்து கொண்டு தமிழர்க ளைத் தாக்கினார்கள். இந்த வன்முறை கொழும்பிலும் கிழக்கு மாகாணத்திலும் பர வியது. காவல்துறையினர் இதைத் தடுக்க முனையவில்லை. தடுக்க வேண்டாம் என்று அவர்களுக்கு ஆணையிடப்பட்டி ருந்தது.[148]

*1958 மே 23-ஆம் நாள்* இரண்டாவது கலவரம் வெடித்தது. இதில் ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டதா கக் கணக்கிடப்பட்டுள்ளது.[149] சிங்கள வெறிக்கும்பல் இக்கலவரத்தில் ஈடுபட் டது. கொழும்பு, மட்டக்களப்பு, பொலன ருவா, பதுளை, குருனாகல, பானந்துறை, காலே, மாத்தரை முதலான இடங்களில் இனக்கலவரம் கொடூரமாக இருந்தது. சிங்க ளர் ஒருவரை தமிழர்கள் கொன்று விட்ட னர் என்று வானொலியில் ஒலிபரப்பான செய்தி இக்கலவரத்தைத் தூண்டியது. பண் டாரநாயக - செல்வநாயகம் ஒப்பந்தம் கைவிடப்பட்டதை எதிர்த்து சத்தியாக்கிர கம் செய்ய தமிழர் சமஷ்டிக் கட்சி (Tamil Federal Party) திட்டமிட்டிருந்த வேளை யில், இக்கட்சியைச் சார்ந்தவர் மீது சிங்கள வெறியர்கள் தாக்குதல் நடத்தினர்.[150]

தொடர் வண்டிகளையும், பேருந்துகளை யும் சிங்கள வெறியர்கள் நிறுத்தி அவற்றில் பயணம் செய்து கொண்டிருந்த தமிழர்க ளைக் கொன்றனர்; படுகாயப்படுத்தினர். தமிழர் வீடுகளையும் அதில் இருந்தவர்க ளையும் உயிரோடு கொளுத்தினார்கள். தமிழ்ப்பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர். தமிழர்களின் சொத்துக் கள் சூறையாடப்பட்டன. இத்தகைய படு கொலைகளும் வன்செயல்களும் நான்கு நாட்கள் நடந்தன. காவல்துறை இவற்றைத் தடுத்திட முனையவில்லை. அன்றைய பிர தமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக வும் இக்கொலைகளைத் தடுத்திட தலையி டவில்லை. மே 27ஆம் நாள் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டது. அமைதியை நிலைநாட்ட இராணுவம் அழைக்கப்பட் டது. 150 தமிழர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். இவர்களில் சமஷ்டிக் கட்சியைச் சேர்ந்த பத்து நாடாளு மன்ற உறுப்பினர்களும் அடங்குவர்.[151]

பொது போக்குவரத்து வண்டிகளின் மீது தாக்குதல்



- *1961 ஏப்ரல் மாதத்தில்* யாழ்ப்பாணத்தில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்த ஒரு கூட்டத்தைக் கலைக்க அரசாங்கப் படைகள் முயன்ற போது சுட்டதில் ஒரு தமிழர் கொல்லப்பட் டார்; பலர் படுகாயமுற்றனர்.[152] இந்நி கழ்ச்சி நடந்தபோது ஸ்ரீலங்கா முழுவதற் கும் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டிருந் தது. தமிழர் சமஷ்டிக் கட்சி தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்தை முறியடிப்ப தற்காக 1961 மார்ச் - ஏப்ரல் மாதங்களில் திருமதி.பண்டாரநாயக ஆட்சி நெருக்கடி நிலையைக் கொண்டு வந்தது. சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்ற அரசாங்கத் தின் கொள்கையை எதிர்த்தே சத்தியாக்கிரக இயக்கம் தொடங்கப்பட்டது. அரசாங்க வேலைகளில் உள்ள தமிழர்கள் உட்பட எல்லாத் தமிழர்களும் சிங்கள மொழியைப் படிக்கக் கூடாது; சிங்கள மொழியை எதற்



படிப்பகம்

www.padippakam.com

காகவும் பயன்படுத்தக்கூடாது; அரசாங்கத்துக்கு தமிழில் மட்டுமே எழுத வேண்டும் என்று சத்தியாக்கிரக இயக்கம் தமிழர்களைக் கேட்டுக் கொண்டது. பிப்ரவரி, மார்ச் மாதங்களில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர்; யாழ்ப்பாணம், வவுனியா, திரிகோணமலை, மட்டக்களப்பு முதலான இடங்களில் இருந்த மாவட்டத் தலைமை அலுவலகங்களை முற்றுகையிட்டனர். அரசாங்கம் கடுமையான பத்திரிகைத் தணிக்கையை நடப்புக்குக் கொண்டு வந்தது. உணவுப்பொருட்கள் கொண்டு வருவதைத் தடுத்தது. யாழ்ப்பாணத்துடனான தகவல் - போக்குவரத்துத் தொடர்பு பிற பகுதிகளிடம் இருந்து துண்டிக்கப்பட்டது. ஏப்ரல் 18 அன்று வடக்கு மாகாணத்தில் 48 மணி நேர ஊரடங்கு அறிவிக்கப்பட்டது. சத்தியாக்கிரக இயக்கத்தை முறியடிப்பதற்காக யாழ்ப்பாணத்திற்குள் இராணுவம் முதன்முதலாக அழைக்கப்பட்டது. "தங்களுடைய உண்மையான நோக்கம் தனிநாடு அமைப்பதுதான் என்பதை சமஷ்டிக் கட்சி தன் செயல்கள் மூலம் தெளிவாக உணர்த்தி விட்டது; தமிழர்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர். இந்நிலையில் அமைதியை நிலைநாட்ட இராணுவத்தைப் பயன்படுத்துவது தவிர அரசுக்கு வேறு வழியில்லாமல் போய்விட்டது" என்று பிரதமர் திருமதி. பண்டாரநாயக கூறினார். இறுதியில் இராணுவம் வன்முறை மூலம் சத்தியாக்கிரகப் போராட்டத்தை முறியடித்தது. சமஷ்டிக் கட்சியைச் சேர்ந்த 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட தமிழ் அரசியல்வாதிகள் 68 பேரைக் கைது செய்தது.[153]



கடைத்தெரு மீது தாக்குதல்



இரயில் நிலையங்களின் மீது தாக்குதல்

- *1974 ஜனவரி 10-ஆம் நாள்* நான்காவது உலகத் தமிழராய்ச்சி மாநாடு யாழ் நகரில் நடந்து கொண்டிருந்த போது காவல்துறையினர் மாநாட்டிற்குள் புகுந்து தாக்கியதில் ஒன்பது தமிழர்கள் கொல்லப்பட்டனர். இதைப்பற்றி அதிகாரபூர்வமான விசாரணை எதையும் அரசாங்கம் நடத்தவில்லை.[154]


- *1977 ஆகஸ்டு 13க்கும் 1977 செப்டம்பர் 15க்கும்* இடைப்பட்ட காலத்தில் - இதிலும் குறிப்பாக முதல் இரண்டு வாரங்களில், ஸ்ரீலங்கா முழுவதும் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர்.[155] அய்க்கிய தேசியக் கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஒரு மாதங்கழித்து இப்படுகொலைகள் நடந்தன. இக்காலக்கட்டத்தில் தமிழர்களின் பிரதிநிதிகள் சுயநிர்ணய கோரிக்கைக்கு புதிய முடுக்கம் கொடுத்தனர் (தமிழர் அய்க்கிய விடுதலை முன்னணியின் 1976-ஆம் ஆண்டு மாநாட்டுத் தீர்மானங்களைக் காண்க). சிங்கள வெறிக் கும்பல்கள் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டன. தமிழர்களின் ஆண், பெண், குழந்தைகள் என்ற பாகுபாடின்றி அவர்களைக் கொன்றனர். வீடுகள் எரிக்கப்பட்டன. சொத்துக்கள் சூறையாடப்பட்டன.[156] தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் மலைய



படிப்பகம்

www.padippakam.com

சினிமா மற்றும் பொழுதுபோக்கு மய்யங்களின் மீது தாக்குதல்



கத் தமிழர்களும் குறி வைத்துத் தாக்கப்பட்டனர்.[157] இக்கொடுஞ் செயல்களையும், இவற்றிற்கான காரணங்களையும், இவை கையாளப்பட்ட முறையையும் விசாரிப்பதற்காக *1977* நவம்பர் 9-ஆம் நாள் சன் சோனி ஆணையம் (Sansoni Commission) அமைக்கப்பட்டது. அவ்வாணையத்தின் அறிக்கையில், பல இடங்களில் காவல்துறையினரே தமிழர்களைத் தாக்கியிருக்கின்றனர்; மேலும், சிங்களர்கள் தமிழர்களைத் தாக்கிய போது அங்கிருந்த காவலர்கள் (போலீஸ்) இதைத் தடுத்திட எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்று கூறப்பட்டுள்ளது.[158] குற்றவாளிகள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், இதற்கு மாறாக *1982*-இல் ஜெயவர்த்தன தலைமையில் இருந்த அய்க்கிய தேசியக் கட்சியின் ஆட்சி குற்றவாளிகளுக்கு ஒரு சட்டப்பாதுகாப்பை,முன்பாதுகாப்பு சட்டம் எண்.20 மூலம் ஏற்படுத்தியது. *"அமைச்சர்கள், துணை அமைச்சர்கள் அல்லது கடற்படை, தரைப்படை, காவல்துறை, சிவில், நிர்வாகம் ஆகிய பதவிகளில் இருக்கும் எந்த அதிகாரிகள் மீதும் 1977 ஆகஸ்டு 1 முதல் 1977 ஆகஸ்டு 31 வரையிலான காலத்தில் நடந்த குற்றங்களின் பேரில் சட்டப்படியான நடவடிக்கை எடுப்பதைத் தடுப்பதே முன்பாதுகாப்புச் சட்டம் எண்.20-இன் நோக்கமாகும்."*

- *1979 ஆகஸ்டு 1 அன்று "கடந்த மாதம் வடக்கு மாகாணத்தில் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட பின் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டவர்களில் பலபேர் இறந்துவிட்டனர் என்று கூறப்படும் குற்றச்சாட்டுகள் பெரும் கவலைக்குரியனவாக இருக்கின்றன"* என்று இலங்கையின் குடிமையுரிமை இயக்கம் (Civil Rights Movement of Srilanka) கூறியது. *1979*-ஆம் ஆண்டு நெருக்கடி நிலைக் காலத்தில் காவல்துறையினராலும் இராணுவத்தினராலும் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் கொடுமையாகத் துன்புறுத்தப்பட்டனர்; கொல்லப்பட்டனர் என்ற குற்றச்சாட்டு பரவலாக எழுந்தது.[159] உண்மையை வரவழைக்க வேண்டும் அல்லது ஒப்புதல் வாக்குமூலம் பெற வேண்டும் என்பதற்காக *1980-82* காலக் கட்டத்தில் பாதுகாப்புப் படையினர் பலவாறான சித்திரவதைகளைச் செய்தனர் என்று அம்னஸ்ட்டி இன்டர்நேஷனல் தன் அறிக்கையில் கூறியுள்ளது.[160]
- *1981 மே 31*க்கும் *1981 ஜூன் 4*க்கும் இடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாணத்தில் மாவட்ட வளர்ச்சி அவைக்காக (District Development Council) நடந்த தீவிரமான தேர்தல் பிரச்சாரத்தின்போது இராணுவமும் காவல்துறையும் நடத்திய தாக்குதல்களில் 7 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.[161] யாழ்ப்பாணத்தின் நாடாளுமன்ற தமிழ் உறுப்பி

> ஜூன் மாதத்திலிருந்து இவ்வாறு அலை அலையாகத் தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டு வந்தனர். தமிழ் சமூகத்தின் மனித உரிமைகளை மீறுகின்ற நடவடிக்கைகளின் பகுதியாகவே அது இருந்தது. ஒரு குறிப்பிட்ட இனக்குழுவில் பிறந்தவர்கள் என்ற ஒரே காரணத்திற்காகவே ஆயிரக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டதாகத் தோன்றுகிறது.
>
> — அம்னஸ்ட்டி இன்டர்நேஷனல், 27.10.1993 AI INDEX : ASA 37/WU04/93.



படிப்பகம்

www.padippakam.com

னரின் வீடு கொளுத்தப்பட்டபோது அவர் உயிர் தப்பினார். இக்கலவரம் நடந்தபோது இரண்டு அமைச்சர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தனர். அவர்களில் ஒரு அமைச்சர் நாடாளுமன்றத்தில், *"அங்கிருந்த சூழ் நிலை பயங்கரமானதாக இருந்தது. காவல் துறையினரை அவர்களுடைய முகாம்க ளுக்குள் இருக்கச் செய்வது பெரும்பாடா யிருந்தது. அங்கிருந்த நாங்கள் அச்சூழ் நிலை எப்படியெல்லாம் வெடிக்குமோ என்று கவலைப்பட்டோம்"*[162] என்று கூறி னார். எனினும் அரசாங்கத்தால் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டு நடந்த நிகழ்ச்சி களை விசாரிக்க விசாரணைக் குழுக்களும் அமைக்கப்பட்டு இருந்தபோதிலும் குற்ற வாளிகளைத் தண்டிக்க அரசாங்கம் எந்த வொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

- *1981 ஆகஸ்டு 10-ஆம் நாள்* கிழக்கு மாகா ணத்தில் சிங்களக் குடியேற்றப் பகுதிகளி லும் அவற்றையொட்டிய பகுதிகளிலும் கலவரங்கள் தொடங்கின. பின்னர் நீர்க் கொழும்பு மற்றும் இரத்தினபுரா ஆகிய பகுதிகளுக்கும், மத்திய ஸ்ரீலங்காவின் மலையகப் பகுதிகளுக்கும் கலவரம் பரவி யது. இவற்றின் விளைவாக 25 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.[163] ஆட்களைத் தாக்கு வது, வீடுகளை எரிப்பது, பாலியல் பலாத் காரம் செய்வது, கொள்ளையடிப்பது

கொல்லப்பட்ட பண்ணை விலங்குகள்



கண்மூடித்தனமான கொலைகள்



போன்ற கொடுஞ்செயல்கள் திட்டமிடப் பட்டு காடையர்களால் (போக்கிரிக் கும்பல் களால்) காவல்துறையின் துணையுடன் நடத்தப்பட்டன.[164] இனங்களுக்கிடையே நியாயத்தையும் சமத்துவத்தையும் ஏற்ப டுத்துவதற்கான இயக்கம் (MIRJE) மற்றும் எதிர்க்கட்சிகள், தொழிற்சங்கங்கள், குடி மையுரிமைக்கான அமைப்புகள் ஆகியன் கையெழுத்திட்டு கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் *"இப்போது நடைபெற்று வரும் வன்முறைகளை அதிகாரம் வாய்ந்த பொறுப்புகளில் இருப்பவர்கள் பின்னணி யில் இருந்து கொண்டு தூண்டுகிறார்கள்; திட்டம் வகுத்துத் தந்து இயக்குகிறார்கள் என்று அய்யுறுவதற்குப் போதிய காரணங் கள் இருக்கின்றன"* கூறப்பட்டுள்ளது.[165] *1981* ஆகஸ்டு *14* அன்று குடியரசுத்தலை வர் ஜெயவர்த்தன, இரத்தினபுரா பகுதியில் நடந்த கலவரங்கள் திட்டமிட்டு நடத்தப் பட்டவை என்பதை ஒத்துக் கொண்டார். பின்னர் இரத்தினபுரா நாடாளுமன்ற உறுப் பினரும் ஒரு துணை அமைச்சரும் பதவியி லிருந்து விலகச் செய்யப்பட்டனர். ஆனால் அதன்பின் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

- *1983 ஜூன் 3* - திரிகோணமலைப் பகுதி யில் இராணுவத்திற்கும், விடுதலைப்புலிக ளுக்கும் மோதல் ஏற்படக்கூடும் என்ற பதற்றமான சூழ்நிலை இருந்தபோது, சிங் கள வெறிக்கும்பல்கள் தமிழர்களைத் தாக்



படிப்பகம்



பயிர்களை எரித்தல்

கியதில் 19 பேர் கொல்லப்பட்டனர். அதே நாளில், 1981-ஆம் ஆண்டு இராணுவம் தமிழ் இளைஞர்களைப் பச்சைப் படு கொலை செய்ததைப் பற்றி யாழ்ப்பாண நீதிபதி தன் தீர்ப்பை வழங்கினார். இதனால் கலவரம் மேலும் வெடிக்காமல் இருப்ப தைத் தடுக்க கண்டவுடன் சுடும் நெருக்கடி நிலை பிறப்பிக்கப்பட்டது.[166]

- *ஜூலை 23 அன்று* யாழ்ப்பாணத்திலும் மானிப்பாயிலும் இராணுவம் கண்மூடித்த னமாகச் சுட்டதில் 30 தமிழர்கள் கொல்லப் பட்டனர்.[167] மூன்று தமிழ்ப்பெண்களை இராணுவம் பாலியல் பலாத்காரம் செய் தது. இதில் ஒரு பெண் தற்கொலை செய்து கொண்டார். இராணுவத்தின் இக்கொடிய செயலுக்காக, இராணுவத்தினர் இராணுவ வண்டியில் வந்து கொண்டிருந்தபோது விடுதலைப் புலிகள் திடீரென்று அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதில் 13 இராணுவத் திர் கொல்லப்பட்டனர். இதற்குப் பழிவாங் கவே 23 அன்று இராணுவத்தினர் தமிழர் கள் மீது கண்டபடி சுட்டனர்.

- *ஜூலை 24 அன்று* இதற்கு முன் நடந்திராத அளவில் தமிழர்களுக்கு எதிரான தாக்குதல் கள் நடத்தப்பட்டன. இதில் ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர்.[168] இதற்கு முன்தினம் இராணுவத்தினர் தாக்கப்பட்டதற்குப் பழி வாங்கும் நடவடிக்கையாகவே இக்கலவ ரங்கள் நடந்தன. பல நாட்கள் நடந்தன. குறிப்பாக, கொழும்பு நகரில் பெருமளவில் நடந்தன. கண்ணெதிரே பட்ட தமிழர்க ளெல்லாம் கடுமையாகத் தாக்கப்பட்டனர். உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டனர். கண்டந்துண்டமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொல்லப்பட் டனர். வீடுகளும், கடைகளும், வணிக நிறுவனங்களும் கொள்ளையடிக்கப்பட் டன;. எரிக்கப்பட்டன.[169] வெளி மாவட் டங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட சிங் கள வெறிக்கும்பல்கள் இக்கொடுஞ் செயல்களைச் செய்தன. இத்தாக்குதல்கள் நடந்தபோது பாதுகாப்புப் படையினர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்; அல்லது அவர்களுடன் தாக்குதலில் ஈடு பட்டனர். இத்தாக்குதல் முன்பே திட்டமி டப்பட்டு தமிழர்களின் உயிரையும் உடை மைகளையும் குறி வைத்து நடத்தப்பட் டன.[170] வாக்காளர் பட்டியலையும் வணிக நிறுவனங்களின் உரிமையாளர்கள் பட்டி யலையும் கையில் வைத்துக் கொண்டு அவற்றைச் சரிபார்த்து தமிழர்களின் வீடு கள், கடைகளை அடையாளம் கண்டு சிங்கள வெறிக்கும்பல் தாக்குதலை நடத்தி யது.[171] இத்தாக்குதல்களை நடத்துவதற் காக சதித்திட்டம் தீட்டியதிலும், இவற்றைச் செயல்படுத்தியதிலும் அரசாங்க அதிகாரிக ளும் பங்கு பெற்றிருந்தனர் என்பது பரவ லாக நம்பப்படுகிறது.[172] அம்னஸ்ட்டி இன்டர்நேஷனல், சர்வதேச சட்ட வல்லு நர் ஆணையம் (International Commission of Jurists), ஸ்ரீலங்காவில் இயங்கிய குடிமையு ரிமை அமைப்புகள் ஆகிய பலமுறை அர



படுகொலை செய்யப்பட்ட குடும்பங்கள்

www.padippakam.com

சாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்தும் இத்தாக்குதல்கள் குறித்து விசாரணை செய்ய சுதந்திரமான எந்தவொரு ஏற்பாட்டையும் அது செய்யவில்லை. குற்றச்சாட்டுகளின் படி குற்றவாளிகள் யாரும் தண்டிக்கப்படவும் இல்லை.[173]

- *ஜூலை 25 அன்று* கடுமையான பாதுகாப்புகள் கொண்டதாகக் கருதப்படும் வெளிக்கடை சிறையில் அரசியல் கைதிகளாக இருந்த 35 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.[174] கைதிகளாக இருந்த சிங்களர்கள் குண்டாந்தடி, இரும்பு தடிகள் போன்றவற்றால் தமிழ்க் கைதிகளைத் தாக்கினார்கள். சிங்களச் சிறைக்காவலர்கள் சிங்களக் கைதிகளின் அறைகளைத் திறந்து விட்டு தமிழ்க் கைதிகள் மீது தாக்குதல் நடத்த ஏவியதாக நேரில் பார்த்தவர்கள் கூறினர்.[175]

- *ஜூலை 27 அன்று,* வெளிக்கடை சிறையில் ஜூலை 25 அன்று நடந்ததுபோலவே அரசியல் கைதிகளாக இருந்த 18 தமிழர்கள் சிங்களக் கைதிகளால் படுகொலை செய்யப்பட்டனர். இப்படுகொலைகள் நடந்தவுடன் குற்றவியல் நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்தப்பட்டது. மனிதப் படுகொலைகள் நடத்தப்பட்டன என்பது உண்மையே என்று இந்த விசாரணையில் கூறப்பட்டது. ஆனால், இப்படுகொலைகளைச் செய்தவர் யார் என்று ஒருவரையும் அடையாளம் காட்டவில்லை. காவல்துறையினரின் அரைகுறையான விசாரணைக்குப்பின் எவர் மீதும் குற்றம் சாட்டப்படாமலேயே இந்த விசாரணை முடிக்கப்பட்டு விட்டது.[176] சர்வதேச மனித உரிமை அமைப்புகள் வெளிக்கடை சிறைப் படுகொலைகள் குறித்து சுதந்திரமான நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று முன் வைத்த கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்கவில்லை.[177] கடுமையான பாதுகாப்பு உடைய வெளிக்கடை சிறையில் அரசாங்க அதிகாரிகளின் தூண்டுதலும் துணையும் இல்லாமல் இப்படுகொலைகள் நடந்திருக்க முடியாது என்பது வெள்ளிடைமலை.



இடம் பெயர்க்கப்பட்ட மக்களுக்கான தற்காலிகக் குடியிருப்புகள்

வழிபாட்டுத் தலங்களின் மீது தாக்குதல்



## 1984 - 1997

இடையிடையே ஏற்பட்ட போர் நிறுத்தங்கள் தவிர இக்காலக்கட்டம் முழுவதும் அரசாங்கப்படைகளுக்கும், விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் கடும்போர் நடந்தது. இப்போரில் இருதரப்பையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான போராளிகளும் படையினரும் பொதுமக்களும் மாண்டனர். இப்போரின்போது நடந்த எல்லா வகையான இனப்படுகொலைச் செயல்களையும் விளக்கமாக இங்கு கூற இயலாது. ஆயினும் பரவலாக அனைவரும் அறிந்த நிகழ்ச்சிகளை இங்கே சுட்டிக் காட்டலாம். திட்டமிடப்பட்டு வேண்டுமென்றே நடத்தப்பட்ட கொலைகள், சித்திரவதைகள், பாலியல் பலாத்காரங்கள், தான்தோன்றித்தன



படிப்பகம்

www.padippakam.com

மாக தமிழ்க்குடிமக்களை நீண்ட காலத்திற்கு எவருடனும் தொடர்பு கொள்ள அனுமதிக்கப் படாமல் அரசாங்கப் பாதுகாப்பு படைகள் காவலில் வைத்திருந்த கொடுமைகள் முதலான செயல்கள், அரசாங்கம் பின்பற்றிய பாரபட்சக் கொள்கைகளின் விளைவாக நிகழ்ந்தவை என் பதை உணர்த்துவதே இந்நிகழ்ச்சிகளைப் பற்றி இங்கு குறிப்பிடுவதன் நோக்கமாகும்.

பாதுகாப்புப் படைகள் என்று இங்கு குறிப்பிடப்படுவது உள்நாட்டு பாதுகாப் பிற்கான போலீஸ் படை; தரைப்படை, கப்பற்படை, விமானப் படை ஆகியன அடங்கிய இராணுவம்; தனிப்பயிற்சி பெற்ற காவல் துறையின் சிறப்பு அதிரடிப் படை என்னும் பிற இராணுவப் படை முதலானவை யாகும். இவற்றில் கடைசியில் குறிப்பிடப் பட்டுள்ள இரண்டு படைகள்தாம் விடுதலைப் புலிகளுடன் முதன்மையாக போரில் ஈடுபட் டுள்ளன. தமிழர் அமைப்புகள் பல விடுத லைப்புலிகள் இயக்கத்தை எதிர்க்கின்றன. அவற்றுள் தமிழ் ஈழ மக்கள் விடுதலை அமைப்பு (PLOTE), தமிழ் ஈழ விடுதலை அமைப்பு (TELO) ஆகியன குறிப்பிடத்தக் கவை. இவ்வமைப்புகள் அரசாங்கத்திடமி ருந்து ஆயுதங்களைப் பெற்று அரசாங்கத்தின் ஆணையின்படி விடுதலைப்புலிகளை எதிர்க் கின்றன.[178] சிங்கள மற்றும் முஸ்லிம் ஊர்க்கா வல் படையினருக்கு அரசு ஆயுதங்களை அளித்துள்ளது. இவர்கள் வடக்கிலும் கிழக்கி லும் குடியேற்றப் பகுதிகளில் செயல்படுகின் றனர்.

- *1984-1987* : ஆயிரக்கணக்கான தமிழ்க் குடிமக்கள் - குறிப்பாக இளைஞர்கள் - மற்றும் பெண்கள், குழந்தைகள் அரசாங் கப் படையினரால் இக்காலக் கட்டத்தில் கொல்லப்பட்டனர். நீதிமன்ற முறைக்குப் புறம்பான முறைகளில் பலர் கொல்லப்பட் டனர். கண்மூடித்தனமாக ஒரே நேரத்தில் பெரும் எண்ணிக்கையில் கொல்வது, 'கா ணாமற் போனவர்கள்' என்ற பெயரிலான கொலைகள் என்று பல வகைகளில் இப்ப டுகொலைகள் நடந்தன. *1984*க்கும் *1987*க்கும் இடைப்பட்ட காலத்தில் காணா மல் போனவர்கள் என்று கூறப்பட்டவர்க ளில் 700 பேர்கள் என்னவானார்கள் என் பது புதிராகவே இருக்கிறது என்று அம் னஸ்ட்டி இன்டர்நேஷனல் மதிப்பிட்டுள் ளது.[179] பயங்கரவாதத் தடுப்புச்சட்டம், நெருக்கடிநிலை விதிகள் என்ற சட்டங்க ளைப் பயன்படுத்தி தமிழர்களைக் காரண மின்றி கைது செய்வது, நீண்டகாலத்திற்கு காவலில் வைத்திருப்பது, கொடுமையாகச் சித்திரவதை செய்வது போன்றவற்றை இராணுவத்தினர் திட்டமிட்டுப் பரவலாகச் செய்து வந்தனர். சித்திரவதை செய்வதில் பாலியல் பலாத்காரம் முதன்மையானதாக இருந்தது. கிராமங்களில் சோதனையிடும் போதும், பெரும் எண்ணிக்கையில் கொல் லப்பட்ட போதும் தமிழ்ப்பெண்கள் பாலி யல் பலாத்காரம் செய்யப்பட்டனர். அடிப் படை உரிமைகளை மீறுகின்ற இக்கொ டுஞ் செயல்களால் தமிழர்கள் தம் வாழி டத்தை விட்டு வெளியேறி இலங்கையி லேயே வேறு இடங்களுக்குச் சென்றனர்.

நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் ஏற்பட்ட நாசம்



இக்காலக்கட்டம் முழுவதும் அரசாங்கப் படைகள் நடத்திய அட்டூழியங்களை அர சாங்கம் ஆதரித்து நின்றது. கொடுஞ்செ யல் புரிந்தோரைக் குற்றவாளிகளாக்கி தண் டித்திட எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

- *1984* : பாதுகாப்புப் படையினரால் 400க்கு மேற்பட்ட தமிழ்க் குடிமக்கள் கண் மூடித்தனமாகவும், நீதிமன்ற முறைக்கு புறம்பான தன்மையிலும் கொல்லப்பட்ட னர்.[180] ஆகஸ்டு மாதம் முழுவதும் யாழ்



படிப்பகம்

www.padippakam.com

வளைகுடாவில் கடலோர நகரங்களான வல்வட்டித்துறை, பொலிகண்டி, பருத்தித் துறை ஆகியவற்றின் மீது இலங்கையின் கடற்படை தாக்குதல் நடத்தியதில் பலர் கொல்லப்பட்டனர்; எண்ணற்றவர் காயம டைந்தனர். இத்தாக்குதலினால் அந்நகரங்க ளில் இருந்த வீடுகள் தரைமட்டமாக்கப்பட் டன. ஆயிரக்கணக்கான தமிழர்கள் அகதி ளாயினர்.[181] ஆகஸ்டு 11 அன்று கொழும் புவிலிருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் காக்கி உடையணிந்து இயந்திரத் துப்பாக்கி கள் ஏந்திய ஆறு பேர் தனியார் வண்டி ஒன்றை வழிமறித்து நிறுத்தி, அதில் பய ணம் செய்த தமிழ் இளைஞர்களை வண் டியை விட்டு இறக்கி வரிசையாக நிற்க வைத்துச் சுட்டனர். இதில் 16 இளைஞர் கள் இறந்தனர்.[182] டிசம்பர் 2 அன்று வன் னிப் பகுதியில் செட்டிக்குளம், செம்மடு முதலான இடங்களில் பாதுகாப்புப் படை யினர் 27 தமிழர்களைக் கண்மூடித்தனமா கச் சுட்டுக் கொன்றனர். கெண்ட் மற்றும் டாலர் பண்ணைகளில் (Kent and Dollar Farms) விடுதலைப்புலிகள் நடத்திய படு



அழிக்கப்பட்ட பாலங்களும் சாலைகளும்


கொலைக்குப் பதிலடி தருவதற்காக இரா ணுவத்தினர் இக்கொலைகளைச் செய்த னர். இத்துடன் நிற்காமல் சுற்றுப்புற கிரா மங்களில் இருந்து கிட்டத்தட்ட நூறு தமிழர் களைக் கைது செய்தனர். வன்னிக்கு அரு கிலுள்ள ஈரட்பெரியகுளம் இராணுவ முகா மில் இவர்கள் கொல்லப்பட்டதாகக் கூறப் படுகிறது. இக்கொடுஞ்செயல்கள் குறித்து அரசாங்கம் எவ்விதமான விசாரணையும் நடத்தவில்லை. மாறாக, இந்நிகழ்ச்சிகள் நடைபெறவேயில்லை என்று மறுத்தது.[183] டிசம்பர் 4-ஆம் நாள் வட மேற்கு கடற்கரையில் மன்னார் பகுதியில் இராணுவம் பொதுமக்கள் மீது கடும் தாக்கு தல் நடத்தியதில் 90 தமிழர்கள் கொல்லப் பட்டனர்.[184] 1984-ஆம் ஆண்டில் மட்டும் 10,600 தமிழர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். இராணுவ மும், சிறப்பு அதிரடிப்படையும் (Special Task Force) இவர்களைக் கொடுமையாகச் சித்திரவதை செய்ததில் பலர் காவலிலேயே மாண்டனர்.[185]

- 1985 : அம்னஸ்ட்டி இன்டர்நேஷனலிடம் தனிப்பட்டவர்கள் அளித்த வாக்குமூலத் தின்படி, பாதுகாப்புப் படையினரால் 412 தமிழர்கள் கொல்லப்பட்டனர் என்பது தெரியவந்தது.[186] நீதிமன்ற நெறிமுறைக்கு முரணான வழிகளிலும் காணாமல் போன வர்கள் என்கிற தன்மையிலும் 3000க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது.[187] மே மாதம் 9-ஆம் நாள் யாழ்ப்பாணத்தில் கடற் கரை நகரமான வல்வட்டித்துறையைச் சுற் றியுள்ள பகுதிகளில் கைது செய்யப்பட்ட 75 தமிழர்களை ஒரு கட்டிடத்திற்குள் அடைத்து சுட்டுக் கொன்றதுடன் அக்கட் டிடத்தையே குண்டு போட்டு தகர்த்து விட்டனர். இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் ஒருவரைத் தமிழ்த் தீவிரவாதிகள் கொன்ற னர் என்பதற்குப் பழிவாங்குவதற்காக 75 தமிழர்கள் கொல்லப்பட்டனர். மே 15-ஆம் நாள் யாழ் தீபகற்பத்தின் மேற்குக் கரைக்கு அப்பால் படகில் பயணம் செய்து கொண்டிருந்த 48 தமிழர்களைக் கடற்ப டையினர் ஒவ்வொருவராகக் குத்திக் கொலை செய்தனர்.[188] மே 17-ஆம் நாள் தம்பிலுவில் என்ற இடத்தில் அதிரடிப்ப டையினர் 60 தமிழ் இளைஞர்களைக் கொன்றனர். இங்கு இதற்கு முன் தமிழ் கெரில்லாக்கள், சிங்களர் மீது தாக்குதல் நடத்தியதற்கு பதிலடியாக இக்கொலைகள் செய்யப்பட்டன.[189] ஆனால், இப்படுகொ லைகள் நடக்கவில்லை என்று அரசாங்கம்



படிப்பகம்

பல சடலங்களைச் சேர்த்து எரித்தல்



மறுத்தது. 60 தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டது பற்றி கல்முனை மக்கள் குழுவின் (Kalmunai Citizens Committee) தலைவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். பொய்யான குற்றச்சாட்டைப் பரப்புகிறார் என்று இவர் மீது அரசாங்கம் குற்ற நடவடிக்கை மேற்கொண்டது. கொழும்பு உயர் நீதிமன்றம். 1986 ஜூலை மாதம் இவர் மீதான குற்றச்சாட்டுகளை தள்ளுபடி செய்தது. ஆனால் அரசாங்க அதிகாரிகள் இப்படுகொலைகள் நடக்கவே இல்லை என்று மனதறிந்தே பொய்யுரைத்தனர்.[190] மே 31-ஆம் நாள் திரிகோணமலையில் தங்கநகர், கிளிவெட்டி பகுதிகளில் பாதுகாப்புப் படையினர் நடத்திய கடும் தாக்குதல்களின் போது 37 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். தமிழர்களின் உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டன; எரிக்கப்பட்டன.[191] ஆகஸ்டு 16-ஆம் நாள் வவுனியா பகுதியில் இராணுவம் 200 தமிழர்களைக் கண்மூடித்தனமாகச் சுட்டுக் கொன்றது. தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன; எரித்து சாம்பலாக்கப்பட்டன.[192] செப்டம்பர் 18 அன்று பாதுகாப்புப் படையினர் ஆயதம் தாங்கிய 12 வாகனங்கள், 6 கவச வண்டிகள், 2 ஹெலிகாப்டர்கள், ஆயுதம் தாங்கிய படகுகளுடன் தமிழ்த் தீவிரவாதிகளைக் குறிவைத்து நடத்திய தாக்குதலில் 46 தமிழ் அகதிகள் கொல்லப்பட்டனர்.[193]

- *1985*-ஆம் ஆண்டு 1200 தமிழர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். காவலில் படுவகையான கடும் துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டனர்.[194] பாலியல் பலாத்காரம் தொடர் நிகழ்ச்சியாகி விட்டது. டிசம்பர் 5-ஆம் நாள் இராணுவத்தினர் அய்ந்து பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்தனர். டிசம்பர் 25 அன்று ஊர்க்காவல் படையினரால் இரண்டு பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொல்லப்பட்டனர்.[195]

*1986* : ஊர்க்காவல் படையினர் உட்பட பாதுகாப்புப் படையின் பல பிரிவுகளாலும் நடத்தப்பட்ட பல தாக்குதல்களில் 500க்கு மேற்பட்ட தமிழ்க்குடிமக்கள் கொல்லப்பட்டனர்.[196] இந்த நிகழ்ச்சிகளில் தமிழ் அகதிகள் மீதும், பயணம் செய்த தமிழர்கள் மீதும் நடத்திய தாக்குதல்கள், பிற படுகொலைகள் ஆகியனவும் அடங்கும்.

*ஜனவரி 19* அன்று இருதயபுரத்தில் சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையின்போது 24 தமிழர்கள் கொல்லப்பட்டனர். வட ஸ்ரீலங்காவில் கிளிநொச்சி தொடர்வண்டி நிலையத்தில் பயணம் செய்வதற்காக காத்திருந்த சுமார் 75 தமிழர்கள் மீது சிப்பாய்கள் கண்மூடித்தனமாக சுட்டதில் 12 பேர் இறந்தனர். பிப்ரவரி 19 அன்று காவல்துறையினரும் இராணுவத்தினரும் ஊர்க்காவல் படையினரும் தாக்கியதில் 60 விவசாயத் தொழிலாளர்கள் இறந்தனர். அதன்பின் அம்பாறை மாவட்டத்தின் கிழக்குப் பகுதிகளில் இருந்த கிராமங்களைச் சூறையாடினார்கள். கொல்லப்பட்டவர்கள் எல்லோரும் தமிழ்த் தீவிரவாதிகள் என்று அரசாங்கம் அறிவித்தது. பெயரளவில் ஒரு விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. இதன் அறிக்கை வெளியிடப்படவே இல்லை.

*மார்ச் 20* அன்று அரசாங்கப் படைகள் நெடுங்கேணி என்ற கிராமத்தைச் சுற்றி வளைத்து தேடுதல் வேட்டை நடத்தியது. அப்போது கண்மூடித்தனமாகச் சுட்டதில் 16 தமிழர்கள் மாண்டனர். வீடுகள்

www.padippakam.com

கொளுத்தப்பட்டன. கடைகள் சூறையாடப்பட்டன.[197] மே மாதம் 17-ஆம் நாள் சிறப்பு அதிரடிப்படையினர் 28 இளைஞர்களைப் பிடித்துச் சென்று காவலில் வைத்துக் கொன்றனர். இதற்குத் தெளிவான ஆதாரங்கள் உள்ளன. ஆனால் இந்நிகழ்ச்சி நடக்கவேயில்லை என்று அரசாங்கம் ஒரேயடியாக மறுத்தது.[198] ஜூலை 13 அன்று நடத்திய தாக்குதலில் இராணுவம் 50 தமிழ்க் குடிமக்களைக் கொன்றது. ஜூலை 16 அன்று பாதுகாப்புப் படையினர் 44 தமிழ் அகதிகளைக் கொன்றனர்.[199] அக்டோபர், நவம்பர் மாதங்களில் தமிழ்ப் பொதுமக்கள் மீது இராணுவத் தாக்குதல்கள் பல நடத்தப்பட்டன. நவம்பர் 11 அன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் கிழக்குப் பகுதியில் ஒரு கிராமத்தில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் 20 தமிழர்கள் கொல்லப்பட்டனர். 21 பேர் காணாமற் போயினர். மூன்று பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொல்லப்பட்டனர்.[200] 2500க்கு மேற்பட்ட தமிழர்கள் காவலில் வைக்கப்பட்டனர். பலவகையான சித்திரவதைகளுக்கு ஆளாயினர்.[201]

- *1987 ஜனவரி 28* அன்று சிறப்பு அதிரடிப்படையினர் துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிகாப்டர், கவச வண்டிகளுடன் கொக்கடிச்சோலையில் நடத்திய இராணுவத் தாக்குதலில் 150க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர்.[202] யாழ் வளைகுடாவில் வடமராட்சியில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின் போது தமிழ் இளைஞர்கள் திட்டமிட்டுக் கொல்லப்பட்டனர் என்று குற்றம் சாட்டப்பட்டது. தமிழ்ப் பொதுமக்கள் சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாயினர்; பலர் அகதிகளாயினர்.[203]

- *1987-1990 :* இந்திய-ஸ்ரீலங்கா ஒப்பந்தப்படி இந்திய அமைதிப்படை 1987 ஆகஸ்டு முதல் 1990 மார்ச் வரை வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. இக்காலக்கட்டத்தில் நடந்த மனித உரிமைகள் மீறல் கொடுஞ்செயல்களுக்கு இந்திய அமைதிப் படையும், விடுதலைப்புலிகளும் காரணமாவர். இக்காலக்கட்டத்திலும் வடகிழக்கு பகுதிகளில் இராணுவ முகாம்களில் காவலில் இருந்தவர் 'காணாமல்' போன நிகழ்ச்சிகளும் நடந்தன.[204] இவ்வாண்டுகளில் இலங்கையில் தென்பகுதிகளில் ஜனதா விமுக்தி பெரெமுன என்கிற சிங்களர் அமைப்பான 'மக்கள் விடுதலை முன்னணி' அரசாங்கத்துக்கு எதிராக நடத்திய கிளர்ச்சிகளை ஒடுக்கும் பணியில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டிருந்தனர். இக்கிளர்ச்சியை ஒடுக்க மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையில் 20 ஆயிரம் முதல் 60 ஆயிரம் சிங்களர்கள் கொல்லப்பட்டதாகக் கணிக்கப்பட்டுள்ளது.[205]

- *1990-1994 :* 1990 ஜூன் மாதம் வடக்கிலும் கிழக்கிலும் மீண்டும் சண்டை தொடங்கிய பின் பல ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் பொதுமக்களே பெரும்பான்மையினர். காணாமல் போனவர்கள் எண்ணிக்கை நம்பமுடியாத அளவிற்கு அதிகரித்தது. பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காணாமல் போனதாகக் கூறப்பட்டது. ஆனால் இவர்களின் எரிக்கப்பட்ட, சிதைக்கப்பட்ட உடைகள் ஆறுகளிலும் குளங்களிலும் வீசியெறியப்பட்டுக் கிடந்தன. வேறு வழிமுறைகளிலும் இவர்களின் உடல்கள் அழிக்கப்பட்டன. நீதிமன்ற முறைகளுக்கு புறம்பான



எண்ணற்ற படுகொலைகள்





படிப்பகம்

www.padippakam.com

வழிகளில் கொல்லுதல், கண்மூடித்தனமாகச் சுட்டுக் கொல்லுதல், பலவாறு சித்திரவதைகள் செய்து கொல்லுதல் போன்றவை கிளர்ச்சியை ஒடுக்குவதற்காகப் பாதுகாப்புப் படையினர் பின்பற்றும் நடைமுறைகளாயின. பெரும் எண்ணிக்கையில் தமிழர்களை - குறிப்பாக தமிழ் இளைஞர்களை - காரணமின்றி கைது செய்து, எவருடனும் தொடர்பு கொள்ளாதபடி நீண்டகாலம் காவலில் வைத்து பலவாறு சித்திரவதைகள் செய்தனர். இதனால் தமிழர்களின் உயிருக்கான பாதுகாப்பு மிகவும் மோசமடைந்தது. மேலும் 1991-இல் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளால் தமிழர்களின் வாழ்வு எண்ணற்ற இன்னல்களுக்கு இலக்காயிற்று. உயிருக்கும் வாழ்வுக்கும் உத்திரவாதமற்ற நிலையால் தமிழர்கள் தம் வாழிடத்தை விட்டு வெளியேறி ஸ்ரீலங்காவில் வேறு இடங்களுக்குச் சென்றனர் அல்லது வெளிநாடுகளுக்குச் சென்றனர். 1991 ஜூன் மாதம் நடைபெற்ற படுகொலைகளை விசாரிப்பதற்கென சுதந்திரமான ஒரு விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. இனிமேல் காணாமல் போகக் கூடியவர்களைப் பற்றி விசாரிக்க மற்றொரு விசாரணை ஆணையமும் அமைக்கப்பட்டன. ஆனால், இக்குற்றங்கள் பற்றியோ அல்லது மற்ற குற்றங்கள் பற்றியோ யார் மீதும் குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படவில்லை.

படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள்




- *1990 :* இந்த ஆண்டின் பின் ஆறு மாதங்களில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர் அல்லது காணாமல் போயினர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சுடப்பட்டும், துப்பாக்கி முனையில் உள்ள கத்தியால் குத்தப்பட்டும், கண்டந்துண்டமாக வெட்டப்படும், உயிருடன் எரிக்கப்பட்டும் கொல்லப்பட்டனர்.[206] நிலத்திலிருந்து மட்டுமின்றி வானத்திலிருந்து தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. ஜூன் மாதத்தில் மட்டும் காவல்துறையினரும் இராணுவத்தினரும் நடத்திய பல்வேறு தாக்குதல்களில் நூற்றுக்கணக்கில் பொதுமக்கள் சுடப்பட்டனர் அல்லது குத்திக் கொல்லப்பட்டனர். பெரும்பாலான கொலைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்தன. ஜூன் மாதத்தின் பிற்பகுதியில் வானத்திலிருந்து குடியிருப்புகள், மருத்துவமனைகள், அகதி முகாம்கள், பள்ளிகள் முதலானவற்றின் மீது குண்டுகள் வீசித் தாக்கியதில் 165 பொதுமக்கள் மாண்டனர்.[207] அக்டோபர் 9 அன்று யாழ்நகர அங்காடி மீது ஹெலிகாப்டரிலிருந்து சுட்டதில் 12 பேர் இறந்தனர்.[208] காணாமல் போவது என்பது பெரும் எண்ணிக்கையில் நடந்தது. 1990 ஆகஸ்டு 2-ஆம் நாள் பொட்டுவில் அகதிகள் முகாமிலிருந்து 150 ஆண்கள் அரசாங்கப் படையினரால் அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களில் 30 பேர்கள் மட்டுமே விடுதலை செய்யப்பட்டனர். மீதிப் பேர்களை நாங்கள் காவலில் வைத்திருக்கவில்லை என்று காவல்துறையினரும் சிறப்பு அதிரடிப்படையினரும் மறுத்தனர். காவல்நிலைய வளாகத்திலிருந்து புகைமூட்டம் வந்ததைக் கண்டதாக ஒருவர் சொன்னார். இதைக்கொண்டு இவர்கள் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டிருப்பார்கள் என்று நம்பப்படுகிறது. இது போன்று மற்றொரு நிகழ்ச்சியும் நடந்தது. செப்டம்பர் 5-ஆம் நாள் மட்டக்களப்பு மாவட்டத்தில் வந்தாருமூலை அகதிகள் முகாமிலிருந்து 158 தமிழர்களைப் பாதுகாப்புப் படையினர் கைது செய்து சென்றனர். இவர்களில் ஒருவரும் திரும்ப



படிப்பகம்

வில்லை. காணாமல் போயினர். ஆனால், அக்டோபர் 17 அன்று பாதுகாப்புத்துறை அமைச்சகம் இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் 31 பேர்கள் மட்டுமே அகதி முகாமிலிருந்து அழைத்துச் செல்லப் பட்டனர்; 24 மணி நேரத்திற்குள் அவர்கள் விடுவிக்கப்பட்டனர் என்று கூறியது.[209] ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின்கீழும் நெருக்கடிநிலை விதிகளின் கீழும் காவலில் வைக்கப் பட்டிருந்தனர். இவர்கள் பலவகையான சித்திரவதைகளுக்கு ஆளாயினர்.[210]

- *1991* : இந்த ஆண்டில் ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர். 1991 செப்டம்பர் மாதத்திற்குள் பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் காணாமல் போயினர் என்றும், நீதிமன்ற நெறிமுறைக்கு எதிரான வகையில் எண்ணற்றோர் கொல்லப்பட்டனர் என்றும் செய்திகள் வெளிவந்தனர்.[211] பலவந்தமாகவோ அல்லது விருப்பத்திற்கு மாறாகவோ காணாமல் போவோர்கள் பற்றி ஆய்வு செய்யும் அய்.நா. நடவடிக்கைக்குழு (UN Working group on Enforced or Involuntary Disappearances) 1991-இல் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் காணாமல் போயினர் என்று அறிவித்தது. மேலும், தொடர்ந்து நடைபெற்றுள்ள படுகொலைகளை ஆராயும் போது, இக்கொலைகள் அரசாங்கப் படைகளின் ஒத்துழைப்புடன் சில கொலைவெறிக் கும்பல்களால் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது என்றும் அக்குழுவின் அறிக்கை கூறியது.[212] ஜனவரி 13-க்கும் ஏப்ரல் 4-க்கும் இடையில் ஸ்ரீலங்காவின் விமானப்படை யாழ்ப்பாண மாவட்டத்தின் மீது திடீரென்று குண்டுகள் வீசித் தாக்கியதில் 30 பொதுமக்கள் இறந்தனர்.[213] மார்ச் 30 அன்று காவல்துறை அதிகாரிகள் கண்மூடித்தனமாகத் தாக்கியதில் இருதயபுரத்தில் கடைகள் கொளுத்தப்பட்டன; 11 விவசாயிகள் கொல்லப்பட்டனர்[214] ஜூன் 12 இரவில் கொக்கடிச்சோலையில் பழிக்குப் பழி நடவடிக்கையாக இராணுவத்தினர் கொடுந்தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலில் கிராமங்களில் 185 தமிழர்கள் கொல்லப்பட்டனர். எண்ணற்ற வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.[215] தமிழர்கள் தொடர்ந்து பலவகையாகச் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். இதனால் பலர் இறந்தனர். 1991-ஆம் ஆண்டின் இறுதியில் வடகிழக்குப் பகுதிகளில் 1080 தமிழர்கள் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.[217]



பொதுச்சொத்துக்களை அழித்தல்

- *1992* : பாதுகாப்புப் படையினரும், டெலோ அமைப்பைச் சேர்ந்தவர்களும், முஸ்லிம் ஊர்க்காவல் படையினரும் நடத்திய பல்வேறு தாக்குதல்களில் நூற்றுக்கணக்கான தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப் பட்டனர். ஏப்ரல் 14 அன்று மட்டக்களப்பு மாவட்டம் மண்டூரில் 8 பேர் கொண்ட ஒரு தமிழ்க் குடும்பத்தை இராணுவத்தைச் சேர்ந்தவர்களும், டெலோ அமைப்பினரும் சேர்ந்து கொன்றனர்[218] ஏப்ரல் மாதத்தில் மயிலந்தனையில் இராணுவத்தினர் 39 தமிழர்களைப் படுகொலை செய்தனர்.[219] ஏப்ரல் 29 அன்று பொலனருவா மாவட்டத்தில் கரபொலவில் பாதுகாப்புப் படையினரும் முஸ்லிம் ஊர்க்காவல் படையினரும் இணைந்து 80 தமிழ்ப் பொதுமக்களை உயிர் பதைக்கப் பதைக்க வெட்டியும் சுட்டும் கொன்றனர்.[220] மே 31 அன்று யாழ்ப்பாணத்தில் தெல்லிப்பளையில் துர்காதேவி கோயில் மீது இலங்கை விமானப் படையினர் ஹெலிகாப்டரிலிருந்து எறிக் குண்டுகளையும், விமானத்திலிருந்து குண்டுகளையும் வீசியெறிந்து நடத்திய தாக்குதலில் 6 தமிழ் அகதிகள் மாண்டனர். 125

www.padippakam.com

பேர் காயமடைந்தனர்.[221] அக்டோபர் மாதத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளாவளியில் இராணுவத்தினர் 10 தமிழர்கள்ளைக் கொடுமையான முறையில் கொன்றனர். இராணுவக் காவலில் இருந்தவர்களில் எண்ணற்றவர் காணாமல் போனதாகச் செய்திகள் வெளியாயின. மட்டக்களப்பு மாவட்டத்தில்தான் காணாமல் போவோர் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. நெருக்கடி நிலை விதிகளின் கீழும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழும் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவர்களால் ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். இவர்கள் பலவகையாகத் துன்புறுத்தப்பட்டனர்.[222] மேலும் அவ்வப்போது நூற்றுக்கணக்கான தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். விடுதலைப்புலிகளுடன் இவர்களுக்கு தொடர்பு இருக்கிறதா? என்று விசாரிக்கப்பட்டனர். இவ்வாறு கொழும்பு நகரில் மட்டும் 13414 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர்.[223]

- *1993 :* இந்த ஆண்டில் நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்கள் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டனர்.[224] யாழ் வளைகுடாவிலிருந்து இலங்கையின் மற்ற பகுதிக்குள் செல்ல கிளாளி ஏரியைக் கடந்தபோது எண்ணற்ற தமிழ்ப் பொதுமக்கள் கொடூரமான முறையில் கொல்லப்பட்டனர்.[225] இத்தகைய கொலைச் சம்பவங்கள் சிலவற்றில் ஸ்ரீலங்காக் கப்பற்படையினரும் பங்கேற்றனர். அதாவது பயணிகளின் படகுகளில் ஏறி, எதிர்த்து நிற்காத பயணிகளை வேண்டுமென்றே கொன்றழித்தனர். மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வண்ணாத்தி ஆறு என்னுமிடத்தில் பிப்ரவரியில் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட 16 தமிழர்கள் காணாமல் போயினர். நவம்பர் 13-ஆம் தேதி யாழ்ப்பாணம் நகரின் மையப் பகுதியிலுள்ள புனித ஜேம்ஸ் தேவாலயத்தின் மீது ஸ்ரீலங்கா வான்படையைச் சேர்ந்த இரண்டு ஜெட் விமானங்கள் குண்டு வீசியதில் 10 குடிமக்கள் கொல்லப்பட்டனர்; ஏறத்தாழ 30 பேர் காயமடைந்தனர்.[226] இந்த ஆண்டில் கொழும்பு நகரில், 22900 தமிழர்கள் நெருக்கடி நிலை விதிகள், பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் ஆகியவற்றின் கீழ் கைது செய்யப்பட்டனர்.[227] மேற்சொன்ன சட்டங்களின் கீழ் 2000த்திறகும் மேற்பட்ட தமிழர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். அவர்களில் 464 பேர் விசாரணையின்றி 36 மாத காலம் காவலில் வைக்கப்பட்டிருந்தனர். சித்திரவதைகள் - குறிப்பாக வடகிழக்கில் - தொடர்ந்து நடத்தப்பட்டதாக செய்திகள் வந்து கொண்டிருந்தன.[228]

- *1994 :* குறைந்தபட்சம் 10 குடிமக்களாவது யாழ்ப்பாணம் வளைகுடாப் பகுதியில் பாதுகாப்புப் படையினரால் கொல்லப்பட்டனர். குறைந்தபட்சம் பத்து பேர் கிழக்கு மாகாணத்தில் காணாமல் போயினர். அந்த ஆண்டின் பின் ஆறு மாதங்களில் பல்லாயிரக்கணக்கானோர் விடுதலை செய்யப்பட்டு வந்தபோதிலும் ஆண்டு முடிவில் கிட்டத்தட்ட 700 பேர் நெருக்கடி நிலை விதிகள், பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் ஆகியவற்றின் கீழ் காவலில் வைக்கப்பட்டனர். முந்திய ஆண்டுகளில் நடந்த சித்திரவதை நிகழ்ச்சிகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த எண்ணிக்கையில் இருந்தபோதிலும் தமிழர்கள் சித்திரவதை செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் ஏராளமாக இருந்தன.[229] 'ஸ்ரீ லங்கா மானிடர்' என்ற சஞ்சிகை துப்பாக்

எரிக்கப்பட்ட பள்ளிக் கட்டிடங்கள்





படிப்பகம்

கிச்சூடு, குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதல் ஆகியவற்றின் விளைவாக 60 பேர் கொல்லப்பட்டதாகவும், 125 பேர் காயமடைந்ததாகவும் 136 வீடுகளும் கடைகளும் அழிக்கப்பட்டதாகவும் ஒரு பாலியல் பலாத்காரம் நடந்ததாகவும் செய்திகள் வெளியிட்டுள்ளது.

- *1995-1997 :* 1995 மே மாதம் மீண்டும் போர் தொடங்கியதிலிருந்து பல்லாயிரக்கணக்கான தமிழ்க் குடிமக்கள் கொல்லப்பட்டனர். குடியரசுத் தலைவர் சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்கவின் புதிய அரசாங்கம், மனித உரிமைகள் காப்பாற்றப்படும் என்று உறுதி அளித்திருந்த போதிலும், நீதிமன்ற முறைக்குப் புறம்பாக கொல்லுதல், படுகொலைகள், காணாமல் போதல்கள் என்ற முறைகளின் மூலம் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் வழக்கமான போர் முறை மீண்டும் தலைதூக்கியது. அரசாங்கப் படைகளாலும் அவர்களது சம்மதத்துடன் இயங்கிவரும் குழுக்களாலும் தமிழர்கள் திட்டமிட்டுக் கொல்லப்பட்டனர். 1996-ஆம் ஆண்டில் மட்டும் ஏறத்தாழ 650 தமிழர்கள் காணாமல் போயினர். பாதுகாப்புப் படையினர் நம்பமுடியாத அளவிற்கு சித்திரவதை முறையைப் பயன்படுத்தியதையும் அவர்கள் செய்த பாலியல் பலாத்காரச் செயல்களையும் அம்னெஸ்ட்டி இன்டர்நேஷனல் பதிவு செய்துள்ளது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், நெருக்கடி நிலை விதி ஆகியவற்றின் கீழ் ஏராளமான தமிழர்கள் - சில குறிப்பிட்ட சம்பவங்களில் குறைந்தது 1000 பேர் - தன்னிச்சையாகக் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றியதாலும், உக்கிரமான யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டதாலும், பொருளாதாரத்தடை மீண்டும் திணிக்கப்பட்டதாலும் பட்டினியும் பிணியும் அதிகரித்தன. மிகப்பெரும் எண்ணிக்கையில் மக்கள் இடம் பெயர்ந்தனர். இடம் பெயர்ந்த தமிழர்களின் எண்ணிக்கை 8,25,000 ஆகும். பாதுகாப்புப் படையினரின் மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு அரசாங்கம் சில நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் கீழ்க்காணும் விஷயங்கள் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் கடுமையாக மீறப்படுவதற்கு உகந்த சூழலைத் தொடர்ந்து உருவாக்கி வருகின்றன: 1)வடகிழக்கு மாகாணங்களில் நடைபெறும் சம்பவங்களை வெளிப்படுத்தாமல் தடுப்பதற்காகப் பலவந்தமாகத் திணிக்கப்பட்டுள்ள தணிக்கை முறை; 2)பயங்கரவாதத் தடுப்புச்சட்டம், நெருக்கடி நிலை விதிகள் ஆகியவற்றில் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்கள், மாற்றங்களுக்குப் பிறகும் அவற்றில் இன்னும் எஞ்சியுள்ள அதிகாரங்கள்; 3)தேசிய, சர்வதேச மனித உரிமை அளவுகோல்களைப் பாதுகாப்புப் படையினர் பின்பற்றாமை; 4)இராணுவத்தின் சில பிரிவுகள் மீது அரசாங்கத்திற்குக் கட்டுப்பாடு இல்லாமை.

- *1995 :* டிசம்பரில் இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது. ஜூலை மாதத்தில் தொடங்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் காரணமாக எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்ற விவரம் பத்திரிகைத் தணிக்கையின் காரணமாகத் தெரியவில்லை. ஸ்ரீலங்கா விமானப்படை நடத்திய விமானக் குண்டுவீச்சு, கப்பற்படையினரின் தாக்குதல்கள், இராணுவத்தின் எறிகணைத் தாக்குதல்கள், ஆயுதப்படையினரின் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம் ஆகியவற்றின் காரணமாக ஏராளமான குடிமக்கள் கொல்லப்பட்டதாகக் கூறும் குற்றச்சாட்டுகள் பெருகி வந்தன. மேற்சொன்ன இராணுவ நடவடிக்கைகளில் நவாலியிலுள்ள கிறிஸ்துவ தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுவீச்சும் அடங்கும். அதில் 65 குடிமக்கள் கொல்லப்பட்டனர். 150க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.[230] கிழக்கு மாகாணத்தில் கிட்டத்தட்ட 40 பேர் சட்டத்திற்குப் புறம்பான முறையில் கொல்லப்பட்டனர். பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட 55 தமிழர்கள் காணாமல் போயினர்.[231] கொழும்பில் கடத்திச் செல்லப்பட்ட குறைந்தது 31 பேர்களின் உடல்கள் ஏரிகளிலும் ஆறுகளிலும் காணப்பட்டன. அந்தக் கொலை தொடர்பாக அரசாங்கம் மேற்



படிப்பகம்

www.padippakam.com

கொண்ட புலனாய்வு, கொல்லப்பட்டவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டவர்கள் என்பதையும் அவர்கள் கழுத்து நெறிக்கப்பட்டோ அல்லது நீரில் மூழ்கடிக்கப்பட்டோ கொல்லப்பட்டனர் என்பதையும் வெளிப்படுத்தியது. அது தொடர்பாக கைது செய்யப்பட்ட 22 போலீஸ்காரர்கள் பின்னர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டு மீண்டும் தீவிர அரசாங்கப் பணிக்கே திரும்பி வந்தனர்.[232] போலீஸ்காரர்களுக்கு நீதி விசாரணைகளிலிருந்து விதிவிலக்குத் தருவதை ஊக்குவிக்கும் வகையில், அவர்கள் மீதான வழக்கு 1997 மார்ச் மாதம் நீதிமன்றத்தின் வழக்குகள் பட்டியலிலிருந்து அகற்றப்பட்டது. 1995-ஆம் ஆண்டின் இறுதியில் 600 தமிழர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். அவர்களில் பலர் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர்.[233] அந்த ஆண்டு முழுவதும் பல்வேறு பாலியல் பலாத்காரச் சம்பவங்கள் குறித்த செய்திகள் வெளிவந்தன. அவற்றில் கீழ்க்கண்டவையும் அடங்கும்: 1)ஜனவரி மாதத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று பெண்களை இராணுவ வீரர்கள் ஒன்று சேர்ந்து கூட்டாகப் பாலியல் பலாத்காரம் செய்தனர்; 2)திரிகோணமலையில் லட்சுமிபிள்ளை என்ற பெண்மணி, அவரது இரண்டு மகன்களின் கண்களுக்கு எதிரிலேயே இரண்டு இராணுவ உளவாளிகளால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார்.[234] இவை தவிர கொழும்பிலும், மலையகப் பகுதியிலும் போலீஸ் அதிகாரிகள் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகள், சோதனை போடுதல்கள், அவர்கள் திரும்பத் திரும்பக் கொடுத்து வந்த தொல்லைகள், அவர்கள் நடத்திய கொள்ளையடிப்புகள் ஆகியவை குறித்துத் தமிழர்கள் புகார்கள் கூறியுள்ளனர்.[235]

- *1996* : இராணுவ, போலீஸ் நடவடிக்கைகள் குறித்த செய்திகள் தணிக்கை செய்யப்படுவதாலும், வடகிழக்கு மாகாணங்களுக்குச் சென்றுவர முடியாததாலும், இந்த ஆண்டு முழுவதிலும் கொல்லப்பட்ட நபர்களின் எண்ணிக்கையைச் சரியாகக் கணக்கிடுவது சாத்தியமற்றதாக உள்ளது. பிப்ரவரி 11-ஆம் தேதி குமாரபுரத்தில் குடிமக்கள் மீது இராணுவம் நடத்திய மிகப்பெரிய திட்டமிட்ட தாக்குதலில் 13 பெண்கள், 7 குழந்தைகள் உட்பட 24 தமிழர்கள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட பெண்களில் ஒருவர் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார். இராணுவ நீதிமன்றமொன்று அந்தக் கொலைக் குற்றங்களுக்குப் பொறுப்பாக இருந்தவர்கள் 14 இராணுவ வீரர்கள் என்று கண்டறிந்தது. பின்னர் அரசாங்கத் தலைமை வழக்கறிஞரால் (Attorney General) அந்த 14 இராணுவ வீரர்கள் மீது கொலை, கொலை செய்ய முயற்சி ஆகிய குற்றச்சாட்டுகள் தொடுக்கப்பட்டன. ஆனால் ஆண்டு முடியும் வரை உயர் நீதிமன்றத்தின் விசாரணைக்கு அவர்கள் வரவில்லை.[236] 11.04.1997 அன்று அம்னஸ்ட்டி இன்டர்நேஷனல் விடுத்த அறிக்கை, ஸ்ரீலங்காவின் வடபகுதியில் 648 பேர் காணாமல் போனதாகச் சொல்லப்படுவதாகவும், மக்கள் காணாமல் போவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகக் கூறிவந்தபோதிலும் ஒரே ஆண்டில் பெருமளவில் மக்கள் காணாமல் போவது பயங்கரமான நிகழ்வு ஆகும் என்றும் கூறியது. டிசம்பர் மாதத்தில் மட்டும், இராணுவத்தால் முன்னர் கைது செய்யப்பட்டவர்களில் 15 பேர்களின் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவர்களில் மூவர் பள்ளிச் சிறுமிகள். அணிந்திருந்த பள்ளிச் சீருடையுடன் அவர்கள் உடல்கள் கடல் நீரில் மிதந்து கொண்டிருந்தன.[237] ஆண்டு முடிவில் நெருக்கடி நிலை விதிகள், பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் ஆகியவற்றின் கீழ் 1500 தமிழர்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர். நவம்பரில் சித்திரவதைக்கு எதிராக பல நீதிமன்றத் தீர்ப்புகள் வெளியிடப்பட்டுள்ள போதிலும், போலீஸ் சித்திரவதைகள் கொஞ்சம் கூடக் குறையாமல் நடந்து வருவதாக ஒரு உயர் நீதிமன்ற நீதிபதி பகிரங்கமாகவே குற்றம்சாட்டினார். பாதுகாப்புப் படையினர் அனைவராலும் பயன்படுத்தப்படும் சித்திரவதை முறைகள் கீழ்வருமாறு: 1)மின்சாரம் பாய்ச்சுதல் (Ele-



படிப்பகம்

www.padippakam.com

ctric shocks); உடலின் எல்லாப் பகுதிகளையும் - குறிப்பாக உள்ளங்கால்களையும், பிறப்புறுப்புகளையும் - பிளாஸ்டிக் குழாய்கள், இரும்புக்கம்பிகள் மற்றும் குண்டாந்தடிகள் ஆகியவற்றைக் கொண்டு அடித்தல்; மணிக்கட்டுகளையோ பாதங்களையோ கயிற்றால் கட்டி உடல் திருகப்பட்ட நிலையில் தொங்கவிடுதல்; உடல் பாகங்களைச் சுட்டெரித்தல், மாசடைந்த நீரில் மூழ்கடித்து மூச்சுத் திணறச் செய்தல்; பூச்சிமருந்து, மிளகாய்த்தூள், பெட்ரோலில் தோய்த்தெடுத்த பைகள் ஆகியவற்றைத் தலைமீது வைத்தல்; பலவந்தப்படுத்தப்பட்ட நிலைகளில் உடல்களைத் திருகி எலும்புகளை உடைத்தல்; கடுமையான காயங்களை ஏற்படுத்துதல்.[238] செப்டம்பர் 7-ஆம் தேதி கிருஷ்ணாந்தி குமாரசாமி என்ற பெண் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனார். பின்னர் அவரது உடலும், அவரது தாயார், சகோதரர், அவரைத் தேடிக் கொண்டிருந்த அண்டை வீட்டுக்காரர் ஒருவர் ஆகியோரின் உடல்களும் ஒரு தாழ்வான இடுகாட்டில் காணப்பட்டன. ஒரு சோதனைச்சாவடியில் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்ட அவர், ஒன்பது இராணுவ வீரர்களால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு பின்னர் கொலை செய்யப்பட்டார். குற்றம் சாட்டப்பட்ட இராணுவ வீரர்கள் கொழும்பிலுள்ள குற்றவியல் நீதிமன்றத்திற்குக் (Magistrate's Court) கொண்டு வரப்பட்டனர். பாலியல் பலாத்காரம், கொலை ஆகிய குற்றச்சாட்டுகள் அவர்கள் மீது தொடுக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் ரஜினி வேலாயுதம்பிள்ளை என்ற பெண்மணியைப் பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்ததற்காக நவம்பர் மாதத்தில் போலீஸ், இராணுவம் ஆகியவற்றைச் சேர்ந்த அய்வர் கைது செய்யப்பட்டனர்.[239] இராணுவ சோதனைச் சாவடிகளில் - குறிப்பாக யாழ்ப்பாணத்தில் - பெண்களைக் கடத்திச் செல்லுதல், பாலியல் பலாத்காரம் செய்தல் போன்ற பெண்களுக்கெதிரான தொடர்ச்சியான குற்றங்கள் நடந்து வந்ததாகத் தொடர்ந்து செய்திகள் வந்த வண்ணமிருந்தன.[240] *1996*-ஆம் ஆண்டில் மட்டும் இராணுவ வீரர்களால் *150* பாலியல் பலாத்காரக் குற்றங்கள் செய்யப்பட்டிருப்பது பதிவு செய்யப்பட்டுள்ளது.[241]

- *1997* : இந்த ஆண்டின் முன் ஆறு மாதங்களில் நீதிமன்ற முறைக்குப் புறம்பாகக் கொல்லுதல், தன்னிச்சையாகக் கொல்லுதல், காணாமல் போதல்கள் ஆகியன பெருமளவில் தொடர்ந்து நிகழ்ந்தன. ஜனவரி - மே மாதங்களில் யாழ்ப்பாணப் பகுதியில் நடந்த பல்வேறு நிகழ்வுகளில் குறைந்தது *16* தமிழ்க் குடிமக்களாவது இராணுவத்தாலோ அல்லது கப்பற் படையினராலோ கொல்லப்பட்டனர்.[242] மார்ச் மாதத்தில் மட்டும், இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வவுனியா, மட்டக்களப்பு ஆகிய நகரங்களில் பத்துத் தமிழர்கள் மரணப் படையினரால் (Death Squads) கொல்லப்பட்டனர்.[243] அய்.நா. மனித உரிமை ஆணையத்தின் முன் சாட்சியமளித்த தமிழர் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் கூறியதாவது: *1)* கைது செய்தல், காவலில் வைத்தல் ஆகியன தொடர்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் ஸ்ரீலங்காவில் ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கப்படுகின்றன; *2)*தமிழர்கள் சித்திரவதை செய்யப்பட்டு, ஒப்புதல் வாக்குமூலங்கள் பலவந்த முறைகளின் மூலம் செயற்கையாகத் தயாரிக்கப்படுகின்றன; *3.)*கூட்டாகப் சேர்ந்து பெண்களைப் பாலியல் பலாத்காரம் செய்வதும், வடகிழக்கிலும் கொழும்பிலும் மனிதர்கள் காணாமல் போவதும், நீதிமன்ற முறைக்குப் புறம்பாக கொல்லப்படுவதும் அதிர்ச்சி தரும் அளவில் அதிகரித்து வருகின்றன. மேலும், மார்ச் மாதத்தில் *1700* தமிழ் இளைஞர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.[244] பல்வேறு இடங்களில் கூட்டுப் பாலியல் பலாத்காரங்கள் நடந்தன. இதில் மிகவும் மோசமான நிகழ்ச்சி அம்பாறை நகரவாசியான முருகேசப்பிள்ளை கோணேஸ்வரிக்கு நடந்த கொடுமைதான். பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட பிறகு அவரது பிறப்புறுப்பில் எறிகுண்டு செருகப்பட்டு கொல்லப்பட்டார்.[245]

❑



படிப்பகம்

www.padippakam.com

146. 1983-ஆம் ஆண்டு முதல் போரின் காரணமாக 50000 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா அரசாங்கம் மதிப்பிட்டுள்ளது. அவர்களில் 26000 பேர் தமிழ்க் குடிமக்கள். Sri Lankan Daily News என்ற நாளேட்டில் வெளிவந்துள்ள இச்செய்தியை மேற்கோள் காட்டியுள்ள சஞ்சிகை: Hot Spring, April 1997, p.13; 1983 - 1993-ஆம் ஆண்டுகளில் 45000 தமிழ்க் குடிமக்கள் கொல்லப்பட்டனர் அல்லது காணாமல் போயினர் என்று Victims of War in Sri Lanka என்ற நூல் கூறுகிறது.

147 see T.Vittachi: Emergency'58, p.20
148 ibid.,p.104
149 International Alert: Emergency, 1986, p.23
150 S.Ponnambalam: Tamil Liberation Struggle,p113
151 see T.Vittachi: Emergency'58, pp.55,75,76,90
152 S.Sivanayagam: Sri Lanka: 40-Year Chronology, p.27
153 see ibid.,pp.22-28 and S.Ponnambalam: Tamil Liberation Struggle, pp.121,122
154 E.M.Thornton and R.Niththyananthan: Island of Terror, p.29
155 see ibid., p.32
156 see S.Ponnambalam: Tamil Liberation Struggle, pp194,195, see also crime figures in the Annual Report of the Inspector General of Police for the year 1977 in: International Alert: Sri Lanka, p.24
157 see H.P.Chattopadjyaya: Ethnic Unrest, p.60
158 see E.M.Thornton and R.Nithyananthan: Island of Terror.,p.33
159 see V.A.Leary: Ethnic Conflict, p.31,
160 see Amnesty International: Report of an AI Mission to Sri Lanka, 1982,p.28
161 ibid.p.11 and M.Vije: Oppression of Tamils, p.78.
162 Minister Gamini Dissanayake, quoted in: S. Ponnambalam: Tamil Liberation Struggle, p.207
163 Brian Eads in: The Observer, 20 September 1981 quoted in S.Ponnambalam: Tamil Liberation Struggle, p.210 , see also V.A. Leary: Ethnic Conflict, p.21
164 see S.Ponnambalam: Tamil Liberation Struggle, p.210
165 ibid.p.209, see also international, in particular Indian's, response to events in: V.A. Leary: Ethnic Conflict pp.1-25
166 ibid., p.224
167 Amnesty International: Annual Report 1984, p.258
168 see S.J.Tambiah: Ethnic Fratricide, p.22,
169 see E.M.Thornton and R.Niththyananthan : Island of Terror, pp.63-77
170 P.Hyndman: Human Rights in Sri Lanka, p.338
171 S.J.Tambiah: Ethnic Fratricide, p.21
172 see L.Piyadasa: The Holocaust,p.84, and W.A.Warnapala: Ethnic Strife, p.166
173 see P.Hyndman: Human Rights in Sri Lanka, pp.339,340
174 see M.Vije: Oppression of Tamils,p.79
175 see E.M.Thornton and R.Niththyananthan: Island of Terror pp 65,66
176 see P.Hyndman: Human Rights in Sri Lanka, p.339
177 see Amnesty International: Annual Report 1984, p.259
178 US State Department: Country Report 1996, introduction
179 see Amnesty International: Annual Report 1995,p.268
180 see P.Rajanayagam: Human Rights Violations, pp.8-18
181 see ibid. pp.10,11
182 ibid. pp.13
183 Asia Watch: Cycles of Violence, p.112-115
184 Amnesty International: Annual Report 1985,p.243
185 see ibid.
186 see Amnesty International: Sri Lanka: Some Recent Reports of Extrajudicial Killings, 1986, p.3
187 see P. Rajanayagam: Human Rights Violations, p.31
188 see Amnesty International: Annual Report 1985, p.258
189 Asia Watch: Cycles of Violence, p.116
190 ibid.pp.117-119
191 see P.Rajanayagam: Human Rights Violations, p.24
192 ibid., pp.24,25
193 ibid., p.25
194 see Amnesty International: Annual Report 1986, pp.257,259
195 see P.Rajanayayam: Human Rights Violations pp.24-27
196 see ibid. pp.31,46
197 ibid. pp.32-36
198 see Amnesty International: Annual Report 1987, p.266
199 see P.Rajanayagam: Human Rights Violations, pp.41,42
200 ibid.,pp.43,44
201 see Amnesty International: Annual Report 1987, p.268
202 Amnesty International: Annual Report 1988, p.182
203 see P. Rajanayagam: Human Rights Violations, p.34
204 see Amnesty International: Sri Lanka: Extrajudicial Executions, Disappearances and Torture,1987-1990, September 1990



படிப்பகம்

www.padippakam.com

[205] see E.Nissan: A Bitter Harvest, p.29
[206] see Amnesty International:The Northeast, p.17
[207] see Report by Mr.S.Amos Wako, Special Rapporteur on Summary or Arbitrary Executions, E/CN.4/1991/36, para.471,472
[208] ibid.p.9
[209] see ibid., pp.23,24
[210] see Amnesty International: Annual Report 1991, p.211
[211] see Amnesty International: The Northeast, p.17
[212] see Report on the Visit to Sri Lanka by three members of the Working Group on Enforced or Involuntary Disappearances, E/CN.4/1993/25/Add.1, pp.38,39
[213] see Report by Mr.S.Amos Wako, Special Rapporteur on Summary or Arbitrary Executions, E/CN.4/1992/30, para. 500
[214] Tim McGirk: Civil strife makes Sri Lanka a tropical hell in: The Independent, Monday 8 April 1991
[215] see supra 213, para.498
[216] see ibid., para 497 and Amnesty International: Annual Report 1992, pp.239,240
[217] see ibid.
[218] Report by Mr.Bacre Waly Ndiaye, Special Rapporteur on Extrajudicial, Summary or Arbitrary Executions, E/CN.4/1993/46, para.538
[219] Amnesty International: Annual Report 1993, p.266
[220] see Amnesty International: Deliberate killings of Muslim and Tamil villagers in Polonnaruwa, June 1992, pp.3-6
[221] see Report by Mr.Angelo Vidal d'Almeida Ribeiro, Special Rapporteur on the Elimination of Religious Intolerance, E/CN.4/1993/62, para.54
[222] see Amnesty International: Annual Report 1993, pp.266,267
[223] see Amnesty International: Balancing human rights & security: abuse of arrest & detention powers in Colombo, February 1994, p.6
[224] see Amnesty International: Summary of concerns, p.4
[225] see Report by Mr.Bacre Waly Ndiaye, Special Rapporteur on Extrajudicial, Summary or Arbitrary Executions, E/CN.4/1994/7, para.552
[226] Amnesty International: Summary of concerns, p.4
[227] Amnesty International: Balancing human rights & security, p.6
[228] see ibid., pp.3,4
[229] see Amnesty International: Annual Report 1995, pp.268,269
[230] see Report by Mr.Bacre Waly Ndiaye, Special Rapporteur on Extrajudicial, Summary or Arbitrary Executions, E/CN.4/1996/4, para.436,437
[231] see Amnesty International: Annual Report 1996, p.281
[232] see ibid.and TIC News Bulletin; June-September 1996,p.
[233] see Amnesty International: Annual Report 1996, p.280
[234] see Amnesty International: Wavering Commitment, p.20
[235] see Sri Lanka Monitor: No.95, December 1995, p.4
[236] see U.S. State Department: Country Report 1996, Section 1 a
[237] see W. Keller: Zur Lage der Menschenrechte in: Suedasien Buero Nr.2/1997, p.13
[238] U.S. State Department: Country Report 1996, 1 c, see also: Widespread Torture by Security Forces in: TIC News Bulletin June-September 1996, pp.2,3, The Refugee Council: Protection Denied, p.18
[239] see U.S. State Department: Country Report 1996, Section 1 a, U.S.Committee for Refugees: Conflict and Displacement in Sri Lanka, p.12
[240] see ibid., p.13
[241] see Letter, dated May 6, 1997, by Dr.Sri M. Sri-Jayantha, General Secretary of Ilankai Tamil Sangam USA Inc. to the Editor of the New York Times reprinted in: Hot Spring, April 1997, p.38
[242] see University Teachers for Human Rights: Jaffna: A Vision Skewed, Special Report, No.9, 7 June 1997, pp.12-21
[243] Sri Lanka Monitor, No.110, March 1997, p.3
[244] see ibid., p.4
[245] Sri Lanka Monitor, No.112, May 1997, p.3



படிப்பகம்

## இருதயபுரம் படுகொலைகள் - 19.01.1986

19.01.86 இரவு மட்டக்களப்பிலுள்ள இருதயபுரத்தில் மக்கள் அமைதியான உறக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். பொழுது புலர்கையில் கூடவே ஒரு பயங்கர நிகழ்ச்சி தங்கள் கிராமத்தில் நிகழப் போகிறது என்பது அப்போது அவர்களுக்குத் தெரியாது. காலை சுமார் 5 மணிக்கு ஸ்ரீலங்காவின் பாதுகாப்புப் படைகள் துப்பாக்கிச் சூடு நடத்திக் கொண்டே கிராமத்திற்குள் வந்தன. இளம் வயதினர் படுக்கைகளிலிருந்து இழுத்துச் செல்லப்பட்டு, தேவாலயத்தின் முற்றத்தில் ஓலமிட்டு அழுது கொண்டிருந்த பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் இடையே ஒன்றாக நிற்க வைக்கப்பட்டனர். அந்த கிராமவாசிகளுக்கு மிகப் புனித ஏசுநாதர் இதயத் தேவாலயம் (The Church of Most Sacred Heart of Jesus) விலைமதிப்பற்றது. 1978-ஆம் ஆண்டில் வீசிய புயல் காற்றில் பழைய தேவாலயம் இடிந்து விழுந்ததால், கடுமையான உழைப்பின் மூலம் அவர்கள் இந்தப் புதிய தேவாலயத்தைக் கட்டி முடித்தனர். பத்து மாதங்களுக்கு முன்னர்தான் அத்தேவாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அந்தப் புனிதத்தலம் ஒரு சித்திரவதைக்கூடமாக, மரணமுகாமாக மாறும் என்பதை அவர்கள் கனவிலும் கூட கற்பனை செய்து பார்த்திருக்க மாட்டார்கள். ஆண்கள் அனைவரும் ஜோடி ஜோடியாக ஒருவரோடு ஒருவர் கட்டப்பட்டு முகம் தரையில் படும்படி படுக்க வைக்கப்பட்டனர். பங்குப் பாதிரியார் (Parish Priest) அருட்தந்தை டிகோனிங், பர்கர் சமூகத்தைச் சேர்ந்தவர். தேவாலய வளாகத்தில் இருந்த அவரது வீட்டில் அவரை வைத்துப் பூட்டிவிட்டு, அவர் வெளியே வராதபடி பார்த்துக் கொள்ள பாதுகாப்புப் படையைச் சேர்ந்த ஒருவன் காவலாளியாக நிறுத்தப்பட்டான். தரையில் படுக்க வைக்கப்பட்டவர்களைச் சூழ்ந்து கொண்ட இராணுவ வீரர்கள், மிருகத்தனமாக அவர்களை அடிக்கவும், உதைக்கவும் தொடங்கினர். அவர்களில் சிலரின் கால்களைப் பிடித்துத் தூக்கியெடுத்து மற்றவர்கள் மீது அடித்தனர். அந்தச் சித்திரவதையைப் பார்த்துக் கொண்டிருந்த பெண்களும், குழந்தைகளும் கருணை காட்டும்படி நெஞ்சை உருக்கும் வகையில் கதறியழுதது. அந்தக் கொலைகாரர்களின் உள்ளத்தைத் தொடவில்லை. தேவாலயத்தில் இந்தக் காட்டுமிராண்டித்தனம் நிகழ்ந்து கொண்டிருக்கையில், அருகாமையில் வேறு கொடூரமான சம்பவங்கள் நிகழ்ந்தன. அப்பாவி மக்கள் இழுத்துச் செல்லப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டனர். தேவாலயத்தின் கதவு பலவந்தமாகத் திறக்கப்பட்டு சித்திரவதைக்கு உள்ளானவர்கள் உள்ளே தள்ளப்பட்டனர். உடைந்த கால்களுடனும், ஆறாக ஒழுகும் இரத்தத்துடனும் அவர்கள் தள்ளாடித் தள்ளாடி தேவாலயத்திற்குள் வந்தனர். தேவாலயத்திற்குள்ளே தேவாலய ஊழியர்களான சகாயநாதன், ஜார்ஜ் ஆண்டன், ஞானதாஸ் ஆகியோரை இராணுவ வீரர்கள் கண்டனர். அந்த ஊழியர்களோ ஞாயிற்றுக்கிழமை புனித பூசைக்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர். அவர்களை அங்கிருந்து ஓடும்படி உத்திரவிட்டனர் இராணுவவீரர்கள். அப்படி அவர்கள் ஓடிக் கொண்டிருக்கும்போது அவர்களைச் சுட்டு வீழ்த்தினர். பிற்பகல் 2 மணிக்கு தேவாலய வளாகத்திற்குள் இரண்டு டிரக் வண்டிகள் கொண்டு வரப்பட்டன. கைது செய்யப்பட்டவர்களும் சித்திரவதை செய்யப்பட்டவர்களும் அந்த வண்டிகளில் ஏறுமாறு உத்திரவிடப்பட்டனர். கால்கள் உடைந்த ஒரு ஆளை இழுத்தெறிந்து சுட்டுக் கொன்றனர். அதன்பிறகு டிரக் வண்டிகள் புறப்பட்டன. அடுத்த நாள் உள்ளூர்க் குடிமக்கள் குழு, பாதுகாப்புப் படை ஒருங்கிணைப்பு அதிகாரியைச் சந்தித்து கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யும்படியும், இறந்தவர்களின் உடல்களை ஒப்படைக்கும்படியும் கேட்டது. இறந்தவர்களின் உடல்கள் திறந்த வண்டிகளில் கல்லடி (Kallady) என்னுமிடத்திலுள்ள சிறப்பு அதிரடிப்படை முகாமில் வைக்கப்பட்டிருந்தன. அந்த ஒருங்கிணைப்பு அதிகாரிக்கு இருந்த ஒரே கவலை, இறந்தவர்களின் உடல்களை அடையாளம் காட்டுவதற்கு யாரும் வராததுதான். ஸ்ரீலங்காவின் தேசிய நாளேடான 'டெய்லி நியூஸ்', மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இருதயபுரத்தில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 2 போலீஸ்காரர்களும், 13 பயங்கரவாதிகளும் கொல்லப்பட்டனர் என்று 20.01.86 அன்று செய்தி வெளியிட்டது.



— ஆதாரம் : Eye Witness, Vol.I No.1, *பிப்ரவரி 1986 தமிழர் தகவல் நடுவம்.*

www.padippakam.com

## குற்றச்சாட்டுகள்

- **செயல்கள்**

இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தின் விதி II-இல் காணப்படும் 'இனப்படுகொலை' என்று வரையறைக்குள் அடங்கக்கூடிய பல்வேறு செயல்கள், ஸ்ரீலங்காவில் புரியப்பட்டுள்ளதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட சான்றுகள் வெளிப்படுத்தியுள்ளன. தன்னிச்சையாகவும், கண்மூடித்தனமாகவும் நீதிமன்ற முறைக்குப் புறம்பாகவும் கொல்வதும், காணாமல் போதல் என்ற வடிவத்தில் மக்கள் கொல்லப்படுவதும் சித்திரவதை, பாலியல் பலாத்காரம் ஆகியவற்றின் விளைவாக மரணத்தை ஏற்படுத்துவதும் விதி II(a)வின் கீழ் வருகின்றன. அதாவது அவை *"ஒரு குறிப்பிட்ட குழுவின் உறுப்பினர்களைக் கொல்லுதல்"* ஆகும்.

காயங்களை ஏற்படுத்தும் தாக்குதல்கள், சித்திரவதை, பாலியல் பலாத்காரம், கடுமையான உபத்திரவம் தருதல், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழும், நெருக்கடி நிலை விதிகளின் கீழும் கைது செய்தல், தடுப்புக்காவலில் வைத்தல், குறிப்பாக மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாத நிலையில் காவலில் வைத்தல் ஆகியன விதி II(b)யின் கீழ் வருகின்றன. அதாவது அவை, *"ஒரு குறிப்பிட்ட குழுவின் உறுப்பினர்களுக்கு உடல்ரீதியான அல்லது மனரீதியான ஊறுவிளைவித்தல்"* ஆகும்.

தீவிரப்படுத்தப்பட்ட போர் நடவடிக்கை, பொருளாதாரத்தடை ஆகியனவற்றின் காரணமாக சத்தூட்டக் குறைவாலும் தொற்று நோய்களாலும் ஏராளமான தமிழ்மக்கள் மடிந்துள்ளனர். இத்தகைய சாவுகளும், தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் இடம் பெயர்தலும் விதி II(a)-வின் கீழ் கொண்டு வரப்படக்கூடியவை என்று வாதாட முடியும். எப்படியாயினும், அவை திட்டவட்டமாக விதி II(b)-இன் கீழ் வரக்கூடியவைதான். அது மட்டுமல்ல, அவை விதி II(c)-இல் கூறப்பட்டுள்ள வரையறையுடனும் பொருந்துகின்றன. அதாவது அவை, *"ஒரு குழுவை ஒட்டுமொத்தமாகவோ அல்லது அதன் பகுதியையோ உடல் ரீதியாக அழிப்பதற்கு இட்டுச் செல்லக்கூடிய வகையில் திட்டமிட்டு சில குறிப்பிட்ட வாழ்க்கை நிலைமைகளை அவர்கள் மீது திணிப்பது"* என்ற வரையறையின் கீழ் வருகின்றன.

இத்தகைய செயல்களுக்குப் பொறுப்பானவர்கள் என அடையாளங் காணப்பட்டுள்ளவர்கள் சிங்களக் குடிமக்கள், இராணுவம், சிறப்பு அதிரடிப்படை, போலீஸ், உள்ளூர்க் காவல்படை (Home Guards), அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் தமிழ்க்குழுக்கள் ஆகியோராவர். ஸ்ரீலங்காவில் அடுத்தடுத்து ஆட்சிபுரிந்த அரசாங்கங்கள் வகித்த பாத்திரத்தை ஆராய்வதற்கு முன்பு, இனப்படுகொலை ஒப்பந்தத்தின் விதி II-இல் கூறப்பட்டுள்ள குற்றம் இழைக்கப்பட்டுள்ளது என்பது நிறுவப்பட வேண்டும். *"ஒரு தேசிய இனத்தையோ, இனக்குழுவையோ, மரபினக்குழுவையோ, மதக்குழுவினையோ முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் உள்நோக்கம்"* உள்ளதா என்பதைக் காண வேண்டும்.

- **உள்நோக்கம்**

ஒரு குறிப்பிட்ட உள்நோக்கம் இருக்கிறதா என்பதை நிரூபிப்பது மிக மிகக் கடினமானதாகும். தனித்தனிச் சம்பவங்களைப் பொறுத்தவரை உள்நோக்கத்தை நிரூபிப்பதற்கு ஒரு முழுமையான நீதி விசாரணை தேவைப்படும். ஆயினும், திட்டமிடப்பட்டு, முறைப்படுத்தப்பட்ட வகையில் இனப்படுகொலை செய்யப்படுகையில், உள்நோக்கம் இருக்கிறதா? இல்லையா என்ற முடிவை போதுமான அளவு திரட்டப்பட்டுள்ள சான்றுகளிலிருந்தே வகுத்துக் கொள்ள முடியும்.

*1936* முதல் *1983* வரை தமிழருக்கு எதிராக நடந்த கலவரங்களின் போது அது சிங்களம் மட்டுமே ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்பதற்கு எதிராகத் தமிழர்கள் நடத்திய போராட்டம் ஆகட்டும் அல்லது அவர்களது பிரிவினைவாதப்




படிப்பகம்

www.padippakam.com

போராட்டமாக இருக்கட்டும், அந்தப் போராட்டங்களுக்கு எதிராக நடந்த கலவரங்களில் அவர்கள் மீது இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான ஒரே காரணம் அவர்கள் தமிழர்கள் என்பதுதான். தாக்குதலுக்குத் தமிழர்கள் இலக்காக்கப்பட்டது அவர்கள் ஒரு தேசிய இனத்தின் அல்லது இனக்குழுவின் உறுப்பினர்கள் என்ற அடிப்படையில்தானேயன்றி ஒரு அரசியல் குழுவின் உறுப்பினர்கள் என்பதால் அல்ல. இந்தப் பின்னணியில் பார்க்கும்போது, தமிழர்கள் ஒரு குறிப்பிட்ட மக்கள் என்றும் அவர்க்ள் ஒரு அரசியல் குழுவின் உறுப்பினர்கள் என்றும் வெவ்வேறான வகைப்பாடு செய்வது வீண் காரியம். ஏனெனில், அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டதானது, தமிழர்களை ஒரு குழு என்ற வகையில் அரசியல் தன்மை பெற்றவர்களாக்கிவிட்டது. கலவரங்களின் போது தமிழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் திட்டமிட்டுச் செய்யப்பட்டவை; அவர்கள் ஒரு தேசிய இனத்தின் அல்லது இனக்குழுவின் உறுப்பினர்கள் என்ற அடிப்படையிலேயே அவர்களைக் கொல்வதையோ அல்லது காயப்படுத்துவதையோ நோக்கமாகக் கொண்டவை. தமிழர்கள் தமிழர்களாக இருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காகவே கண்மூடித்தனமான முறையில் அவர்கள் கொல்லப்படுகின்றனர். காயப்படுத்தப்படுகின்றனர். அதனால்தான், தமிழர்கள் என்ற குழுவில் குறைந்தது ஒரு பகுதியையாவது அழித்து விட வேண்டும் என்ற ஒரு உள்நோக்கம் இருக்கிறது என்ற முடிவுக்கு நம்மால் வர முடியும். தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தோன்றியதிலிருந்து - குறிப்பாக 1979-இல் பயங்கரவாதத் தடைச்சட்டம் நிறைவேற்றப்பட்டு, பின்னர் 1983-இல் போர் தொடங்கியதிலிருந்து - தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட செயல்களின் தன்மை மாறிவிட்டது. அவை விடுதலைப்புலிகளின் ஆயுதமேந்திய கிளர்ச்சிக்கு எதிராகப் பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகள் (anti-insurgency measures) மற்றும் போர் நடவடிக்கைகள் ஆகியவற்றின் பகுதியாக மாறியுள்ளன. இக்காரணங்களைக் கொண்டு, ஸ்ரீலங்காவில் அடுத்தடுத்து ஆட்சி புரிந்து வந்துள்ள அரசாங்கங்கள், தமிழர்களைக் கொல்வதும், காயப்படுத்துவதும் ஒரு அரசியல் குழுவினர் என்ற வகையில் விடுதலைப்புலிகளை அழிப்பது என்ற உள்நோக்கம் கொண்டவைதானேயன்றி தமிழர்கள் என்ற வகையில் ஒரு குறிப்பிட்ட மக்களை அழிக்கும் உள்நோக்கம் கொண்டவையல்ல என்று ஒருவர் வாதாடலாம். மேலும், ஒரு ஆயுதப் போராட்டத்தின் போது, தமிழ்க் குடிமக்கள் கொல்லப்படுவதும் காயப்படுத்தப்படுவதும் மனிதாபிமானச் சட்டப் பிரச்சினையே தவிர வேறல்ல; அதாவது குடிமக்கள் பாதுகாப்பு குறித்து ஜெனீவா ஒப்பந்தத்தில் உள்ளடங்கியுள்ள விதிகளைக் கடைப்பிடித்தல் என்ற பிரச்சினையே தவிர, இனப்படுகொலை என்ற பிரச்சினையே அல்ல என்றும் கூட வாதாடலாம். ஆயினும்,

கொலையுண்ட குடிமக்கள்





படிப்பகம்

ஒரு உள்நாட்டுப் போர்ச்சூழலில் நிகழக் கூடிய சில சம்பவங்கள் தன் கவனத்தைத் தூண்டுமானால், அவற்றுக்கும்கூட இனப் படுகொலை ஒப்பந்தத்தின் விதிகளைப் பிரயோகிக்கலாம் என்று சர்வதேச நீதிமன் றம் (International Court of Justice) தனது அண்மைக்காலத் தீர்ப்பொன்றில் கூறியுள் ளது.[246]

எனவே, தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்கள் என்பன, விடுதலைப்புலிகளை மட்டுமே குறி வைக்கப்படுபவையல்ல என்றாகுமா னால், அவை இனப்படுகொலைச் செயல் களேயாகும். அச்செயல்கள் உள்நோக்கத் துடன் செய்யப்படுமேயானால், அவை இனப்படுகொலை மட்டுமல்ல, சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தை அரசாங்கம் மீறுவதாகவும் பொருள்படும்.

கடந்த 14 ஆண்டுகளாக மிகப் பெரும் எண்ணிக்கையில் நிராயுதபாணிக ளான பெண்களும், ஆண்களும், குழந் தைகளும் கொல்லப்பட்டுள்ளனர். விடுத லைப்புலிகள் நடத்திய படுகொலைகளுக் குப் பதிலடியாக பாதுகாப்புப் படைகள் நடத்தியுள்ள படுகொலைகளும், தமிழ்ப் பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப் பட்டதும் விடுதலைப்புலிகளை மட்டுமே குறி வைத்துச் செய்யப்பட்டவையல்ல. தமிழ் இளைஞர்களை, பயங்கரவாதிகள் எனக் குற்றஞ்சாட்டிக் குறிவைத்துத் தாக்கு வது தன்னிச்சையானதும், கண்மூடித்தன மானதும் பரவலாகச் செய்யப்பட்டது மான செயலாகும் என்பது பதிவாகியுள் ளது. யதார்த்தமான நடைமுறையில் பார்க் கும்போது, ஒருவர் விடுதலைப்புலிகள் அமைப்பில் உறுப்பினரா அல்லது ஒரு தமிழரா என்று பாகுபடுத்திப் பார்ப்பதை, பெரும்பாலான சமயங்களில் பாதுகாப் புப் படையினர் செய்யாததாகவே தெரிகி றது. தமிழ்க் குடிமக்கள் சட்டப்படி எப்ப டியாயினும் நடப்பில் விடுதலைப்புலிக ளின் ஆதரவாளர்களே எனக் கருதுவதன் பொருள், அவர்கள் தமிழர்கள் என்ற அடிப்படையில்தான் முதலாவதாகவும், முதன்மையாகவும் குறிவைத்துத் தாக்கப் படுகிறார்கள் என்பதுதான்.

மேலும், கறாராகச் செல்வதென்றால் விடுதலைப்புலிகளும் கூட ஒரு அரசியல் கட்சியல்ல; அவர்கள் ஒரு தேசிய விடு தலை இயக்கமாகும். இத்தகையதொரு இனமோதலில் நடக்கும் வகுப்பு வன் முறை (communal violence) என்று கூறப்ப டும் நிகழ்வுகள், ஒரு இனக்குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் என்ற அடிப்படை யில்தான் அவர்கள் மீது நடத்தப்படுகின்ற னவே தவிர, ஒரு அரசியல் கட்சி உறுப்பி னர்கள் என்ற அடிப்படையில் அல்ல. இந்தச் செயல்களில் சில கூடிப்பேசி திட்ட மிடப்பட்டு செய்யப்பட்டவையாகத் தோன்றவில்லை என்றபோதிலும், பெரும் எண்ணிக்கையில் நிகழும் படுகொ லைகளும், காவலில் வைக்கப்பட்டவர் கள் சாவதும், சித்திரவதை செய்யப்படுவ தும், குடிமக்கள் மீது குண்டுவீச்சு நடத்தப் படுவதும் அடிக்கடி நிகழ்கின்றன. இவை ஒரு போர் நடவடிக்கையின் போது தவிர்க் கவியலாதவை என்ற போதிலும், அவை திட்டமிட்டு முறைப்படுத்தப்பட்ட வடி வத்தில் செய்யப்படுகின்றன என்றே தோன்றுகிறது. அச்செயல்கள், தமிழர் களை ஒரு குழு என்ற வகையில், குறைந் தது அக்குழுவின் ஒரு பகுதியையாவது கடுமையாகப் பலவீனப்படுத்தியும் அழித் தும் சுயநிர்ணய உரிமை என்ற அடிப்ப டையில் தமிழ் மக்கள் வெளிப்படுத்து கின்ற அரசியல் அபிலாஷைகளை நசுக்கு கின்றன.

இந்த இனமோதலின் தன்மையைக் கருத்தில் கொள்வோமேயானால், பாது காப்புப் படைகள் திட்டமிட்டு தமிழ்க் குடிமக்களைக் குறிவைத்துத் தாக்குவதிலி ருந்து அத்தாக்குதலுக்குள்ள உள்நோக்கம் தெளிவாகத் தெரிகிறது.

இப்படிப்பட்ட முடிவுக்கு வருவதை மறுத்துக் கீழ்க்கண்ட வாதம் முன் வைக் கப்படலாம்; 1)இனப்படுகொலை உள் நோக்கம் கற்பிப்பது, பயங்கரவாதத்தை

www.padippakam.com

காடுகளை அழித்து, மன்னார் உள்ளிட்ட நான்கு மாவட்டங்களைச் சிங்களக் குடியேற்றப் பகுதிகளாக மாற்ற முடிவு செய்துள்ளோம். சிங்களர்களின் பெரும்பான்மையினர் அங்கு குடியேற வைக்கப்படுவர்.

— காமினி திஸ்ஸநாயக, நில மற்றும் மகாவேலி வளர்ச்சி அமைச்சர், 05.09.1983.

எதிர்த்து அரசாங்கம் போரிடுவதைச் சாத்தியமற்றதாக்கிவிடும். அதிலும் குறிப்பாக, விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த போராளிகள் பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் தொடுப்பதற்காக, பல சமயங்களில் சாதாரணக் குடிமக்களைப் போலவே வேடமணிந்து வருவதால், அரசாங்கம் பயங்கரவாதத்தை எதிர்த்து போராடுவதைச் சாத்தியமற்றதாக்கிவிடும்; 2)மேலும், விடுதலைப்புலிகளுமே சிங்களக் குடியேற்றக்காரர்களைப் படுகொலை செய்துள்ளனர்.

இந்த வாதத்தை விடுதலைப்புலிகளின் நடத்தையிலிருந்து தனியாகப் பிரித்தெடுப்பது மிகவும் கடினமானதுதான். பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவதற்கு ஒரு அரசாங்கத்துக்கு உரிமையுள்ளது. ஆனால் மிதமிஞ்சிய, விகிதப்பொருத்தமற்ற (Disproportionate) அளவில் அல்ல. இனப்படுகொலைச் செயல்களில் பெரும்பாலானவை கண்மூடித்தனமானவை. அதாவது அவை விடுதலைப்புலிகளை மட்டுமே குறிவைப்பவையல்ல. மாறாக, தமிழ்க் குடிமக்களை குறிவைப்பவையாகும். மேலும், ஒரு குறிப்பிட்ட குழுவைச் சேர்ந்தவர் என்ற ஒரே ஒரு காரணமே அவரைப் பகைவராகக் கருதுவதற்குப் போதுமானது என்ற அளவுக்குத் தீவிரத்தன்மையாக்கப்பட்டுள்ள ஒரு இனமோதலில், பயங்கரவாதம் என்ற கருத்தாக்கம் அர்த்தமற்றது. தவிரவும், தமிழ்க் குடிமக்களுக்கு எதிராக இராணுவப் படையை அரசாங்கம் பயன்படுத்துவதை நியாயப்படுத்துவதற்காக, தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைப் பலாத்கார வழிமுறைகளின் மூலம் உறுதி செய்து கொண்டிருப்பதாக உரிமை கொண்டாடும் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று முத்திரையிடுவதும் கூட கேள்விக்குரியது. சமாதான வழிமுறைகள் மூலம் தமிழ் மக்கள் தங்கள் அரசியல் சுயநிர்ணயத்தை உறுதி செய்து கொள்வதற்குக் கடந்த காலத்தில் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் தோல்வியடைந்துவிட்ட நிலையில், 'பயங்கரவாத'த்தை எதிர்த்துப் போராடுவதற்குத் தேவையான அளவைவிட மிதமிஞ்சிய வகையிலேயே பாதுகாப்புப் படைகளின் நடவடிக்கைகள் உள்ளன என்பதும் புலனாகும். மேற்சொன்ன செயல்களை இனப்படுகொலைச் செயல்கள் என்று விளக்கம் கொடுப்பதை மறுக்கின்ற வாதம் - அதற்கு முரணான சான்றுகளைக் கொண்டு பார்க்கையில் - ஏற்றுக் கொள்ளத்தகாததாகவே தோன்றுகிறது.

தமிழ்க் குடிமக்களுக்கு எதிராக இழைக்கப்பட்டுள்ள இனப்படுகொலைச் செயல்களுக்குப் பொறுப்பான நபர்கள், அவர்களே அவற்றைச் செய்திருந்தாலும் சரி அல்லது அவற்றுக்கு அவர்கள் உடந்தையாக இருந்திருந்தாலும் சரி, தனிநபர் அளவில் குற்றச்செயல்கள் புரிந்ததற்கான பொறுப்பை அவர் மேற்கொள்ள வேண்டியவராவார்; இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தின் விதி IV-இன் படி தண்டிக்கப்படக் கூடியவருமாவார். இது, இத்தகைய செயல்களைப் புரிந்துள்ள குற்றத்துக்குள்ளான பாதுகாப்புப் படை உறுப்பினர்கள் எல்லாருக்குமே - அவர்களுக்கு அந்தப் படையில் எத்தகைய அந்தஸ்து இருந்தபோதிலும் - பொருந்தும்.

## • அரசாங்கத்தின் பொறுப்பு

ஸ்ரீலங்காவில் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் இனப்படுகொலைச் செயல்களைத் தூண்டிவிட்டன அல்லது அவற்றுக்கு ஒப்புதல் வழங்கிவிட்டன என்று தமிழ்க்குழுக்கள் மீண்டும் மீண்டும் குற்



படிப்பகம்

றம்சாட்டி வந்துள்ளன. அரசாங்க உறுப்பினர்கள் மீது குற்றங்களுக்கான பொறுப்பைச் சுமத்த வேண்டுமானால், அக்குறிப்பிட்ட உறுப்பினர்கள் இனப்படுகொலை ஒப்பந்தத்திலுள்ள விதி III(e)-இல் கண்டுள்ளவாறு *இனப்படுகொலைக்கு உடந்தையாக இருந்தனர்* என்பதோ அல்லது விதி III(c)-இல் கண்டுள்ளபடி *இனப்படுகொலையைச் செய்யும்படி நேரடியாகவோ அல்லது பகிரங்கமாகவோ தூண்டிவிட்டனர்* என்பதோ நிறுவப்பட வேண்டும்.

அதிகாரபூர்வமான ஆவணங்கள் கிடைக்காததாலும் அரசாங்கத்தின் உறுப்பினர்கள் பொதுவாகத் தாமாகவே இனப்படுகொலைச் செயல்களைச் செய்வதில்லை என்பதாலும் இனப்படுகொலைக்கு அவர்கள் உடந்தையாக இருந்தார்கள் என்பதை நிரூபிப்பது மிகவும் கடினமானதாகும். இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தின் விதி II-இன் இறுதியில் கீழ்க் காணும் வாசகத்தைச் சேர்க்கும்படி அய்.நா. சிறப்புப் பொறுப்பாளர் (Special Rapporteur) ஆலோசனை கூறினார். *"மேற்சொன்ன நடவடிக்கை ஏதேனுமொன்றில், வேண்டுமென்றே செய்யத் தவறிய செயல் அல்லது செயல்கள், ஒரு குற்றச் செயலை இழைத்ததற்கு ஒப்பாகும்"*[247] இனப்படுகொலைச் செயல்களைத் தடுத்து நிறுத்தக்கூடிய நிலையில் இருந்து கொண்டு அவற்றைத் தடுத்து நிறுத்தத் தவறும் அரசாங்கங்கள் உள்ள சூழலில் இந்த வாசகங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. ஆயினும் மேற்சொன்ன ஒப்பந்தத்தின் விதிகள் II, III ஆகியவற்றின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள நடத்தைகள், குறிப்பிட்ட செயல்களைச் செய்வதை மட்டும் உள்ளடக்கியுள்ளன.[248] எனவே, இனப்படுகொலையில் அரசாங்கத்தின் உறுப்பினர்கள் செயலளவில் உடந்தையாக இருப்பதை, சந்தர்ப்ப சூழ்நிலைச் சாட்சியங்களிலிருந்துதான் ஊகித்துணர முடியும்.

*1956*-ஆம் ஆண்டில் ஸ்ரீலங்காவில் நடந்த கலவரங்களின்போது, தாங்கள் அவற்றில் தலையிடக்கூடாது என்று உத்தரவிடப்பட்டதாக போலீஸ் படை உறுப்பினர்கள் கூறியதாகச் செய்திகள் வெளியிடப்பட்டன. *1958*-ஆம் ஆண்டுக் கலவரத்தின்போது, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இந்தியத் தூதரிடமிருந்து பல வேண்டுகோள்கள் வந்தபோதிலும், கலவரங்களை நிறுத்துவதற்கு நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்த அன்றைய பிரதம அமைச்சர் திரு.பண்டாரநாயக நான்கு நாட்கள் எடுத்துக் கொண்டார். *1956*-ஆம் ஆண்டில் அரசாங்கம் போலீசாருக்குத் தந்த உத்திரவும், *1958*-இல் உடனடி நடவடிக்கை எடுக்கத் தவறியதும் வேண்டுமென்றே கடமைகளைச் செய்யாமை என்றுதான் கூற முடியுமேயன்றி, அக்கலவரத்திற்கு அரசாங்கம் செயலூக்கமுள்ள வகையில் உடந்தையாக இருந்தது என்பதை வெளிப்படுத்துவதற்குப் போதுமான ஆதாரங்களில்லை.

*1961*-ஆம் ஆண்டில் தமிழ்ப் பிரதேசங்களில் இராணுவம் ஆக்கிரமிப்புச் செய்ததன் அடிப்படை நோக்கம் தமிழர்களின் எதிர்ப்புகளை நசுக்குவதுதான். அந்த நடவடிக்கையின் பகுதியாக அரசாங்க உறுப்பினர்கள் ஒருங்குசேர்ந்த வகையில் தமிழர்கள் மீது தாக்குதல் தொடுத்தனர் என்பதற்கான வலுவான சாட்சியம் ஏதும் இல்லை. ஆனால் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுகையில் அப்பாவி மக்கள் துன்பப்படமாட்டார்கள் என்று சொல்வது சாத்தியமில்லை என்று அன்றைய பிரதம அமைச்சர் திருமதி.பண்டாரநாயக கூறினார்.[249] ஆயினும், தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமையைக் கோரியதால் அவர்களது எதிர்ப்புகளை முறியடிப்பதற்காகத் துருப்புகள் அனுப்பப்பட்டதால், அந்த இராணுவ நடவடிக்கைகளின்போது இழைக்கப்பட்டதும், அரசாங்கத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டதுமான வன்முறைச் செயல்கள் இனப்படுகொலைச் செயல்கள்தாம். அவற்றுக்கான பொறுப்பு அரசாங்கத்தையே சேரும்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத்தமிழ் மாநாட்டிற்கு அன்

றைய பிரதமர் திருமதி.பண்டாரநாயக தெரிவித்த கடும் எதிர்ப்பு, அம்மாநாட்டினை அடுத்து நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு அரசாங்கம் உடந்தையாக இருந்தது என்று நிரூபிப்பதற்குப் போதுமான காரணமாக இல்லை.


1977-ஆம் ஆண்டில் நடந்த கலவரங்களில் சிங்களப் போலீசும் இராணுவமும் பங்கேற்றன. எனினும், அரசாங்கமும் உடந்தையாக இருந்தது என்பதை நிரூபிப்பதற்கு இதுவும் கூட போதுமான காரணம் அல்ல. அய்க்கிய தேசியக் கட்சியின் (UNP) சார்பில் 1977 முதல் 1985-ஆம் ஆண்டு வரை சிறீலங்காவின் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த ஜெயவர்த்தன ஸ்ரீலங்கா இராணுவத்திற்குக் கீழ்க்காணும் ஆணையைப் பிறப்பித்தார். *"இந்த மண்ணின் சட்டத்திற்கு உகந்த வகையில், இத்தீவில் உள்ள எல்லா வகையான பயங்கரவாத அச்சுறுத்தலையும் - குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வரும் பயங்கரவாத அச்சுறுத்தலை - ஒழித்துக் கட்டுவது உங்களது கடமையாகும். அதன் பொருட்டு அரசாங்கத்திடம் உள்ள எல்லா வாய்ப்பு வசதிகளையும் உங்களுக்குத் தருகிறேன். உங்களுக்கு ஒத்துழைப்புத் தரும்படி சட்டத்திற்குப் பணிந்து நடக்கும் எல்லாக் குடிமக்களுக்கும் இதயபூர்வமான வேண்டுகோள் விடுக்கிறேன். இந்தக் கடமையை நீங்கள்தான் செய்ய வேண்டும். அதை 31.12.979-ஆம் நாளிற்குள் செய்து முடிக்க வேண்டும்."*[250] இத்தகைய ஒப்புதலும் பயங்கரவாதத் தடைச் சட்டம், நெருக்கடிநிலை விதிகள் ஆகியனவும் ஒன்றிணைந்து எல்லா வழிமுறைகளையும் பயன்படுத்தி 'தமிழ்ப்புலிகள்' என்று சந்தேகப்படுகிற எல்லாரையும் ஒழித்துக்கட்டும் செயலில் போலீசையும் இராணுவத்தையும் ஈடுபடுத்தின. அச்சமயத்தில் தமிழ்ப்புலிகள் சிறு எண்ணிக்கையிலான போராளிகள்தாம். தமிழ்ப்புலிகளின் தாக்குதலுக்குப் பதிலடித் தாக்குதல் நடத்துவதற்கான இந்த ஆணை, விகிதப் பொருத்தமற்றதும் (disproportionate) மிதமிஞ்சியதுமாகும். அதுமட்டுமின்றி, நீதிமன்ற முறைக்குப் புறம்பாக மக்களைக் கொல்வதற்கும் சித்திரவதை செய்வதற்குமான தூண்டுதலாக அது அமைந்தது. இந்த ஆணையின் காரணமாக தமிழ்ப்புலிகளுக்கு எதிரான அச்சண்டை கண்மூடித்தனமானத் தன்மையைப் பெற்றது. அதாவது, அது தமிழ் இளைஞர்கள் அனைவர் மீதும் தொடுக்கப்பட்ட தாக்குலாகியது. பாதுகாப்புப் படையினர் செய்த இனப்படுகொலைச் செயல்களுக்கு அந்த ஆணை உடந்தையாக இருந்தது என்றே கொள்ள வேண்டும்.

1981-ஆம் ஆண்டு மே-ஜுன் மாதங்களில் போலீசும் இராணுவமும் நடத்திய வெறியாட்டத்தின் போது, சிரில் மாத்யூ, காமினி திஸ்ஸநாயக ஆகிய இரு அரசாங்க அமைச்சர்களும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு போலீஸ், இராணுவ நடவடிக்கைகளுக்கு நேரடியாக வழிகாட்டிக் கொண்டிருந்தனர். தான் அங்கு கண்ட காட்சி தனக்கு அதிர்ச்சி தந்ததாகவும் போலீசார் கட்டுக்கடங்காது போய்விட்டனர் என்றும் அங்கு நடந்ததற்குத் தான் பொறுப்பேற்றுக் கொள்வதாகவும் திஸ்ஸநாயக கூறினார்.[251] போலீசும் இராணுவமும் தாமாகவே அவ்வாறு செயல்பட்டனர் என்பதுதான் இதன் பொருள். ஆயினும் பொதுநூலகம், தமிழ் நாளேடான 'ஈழநாடு' அலுவலகம், தமிழர் அய்க்கிய விடுதலை முன்னணியின் அலுவலகம் ஆகியவை குறி வைத்துத் தாக்கப்பட்டு அழிக்கப்பட்ட விதம் இதற்கு நேர்மாறான உண்மையையே சுட்டிக் காட்டுகிறது. காமினி திஸ்ஸநாயக, சிரில் மாத்யூ ஆகிய இருவரும் தீவிரமான தமிழர் விரோத சிங்கள அரசியல்வாதிகள் என்பதால், மேற்சொன்ன நாசவேலைக்கு அவர்கள்தான் பொறுப்பு என்பது பல அவதானிகளின் கருத்தாகும்.[252] எனினும், சந்தர்ப்ப சூழ்நிலைச் சாட்சியங்கள் நிறைய இருந்த போதிலும், மேற்சொன்ன அமைச்சர்கள்தான் அந்த நாசவேலைக்குப் பொறுப்பாக இருந்தார்கள் என்று முடிவு செய்வதற்குத் திட்டவட்டமான சாட்சியம் இல்லை.

www.padippakam.com

*1981* ஆகஸ்ட் மாதத்தில் ஒழுங்க மைக்கப்பட்ட குழுக்கள் (Organised Gangs) பெரும்பாலான இனப்படுகொலைச் செயல்களைச் செய்தன. இரத்னபுராவில், அத்தொகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் (இவர் பின்னர் ஜெய வர்த்தனவால் பதவி நீக்கம் செய்யப்பட்டார்) வன்முறைச் செயல்களைத் தூண்டி விட்டார். ஆளும்கட்சியாக இருந்த அய்க்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் (அவர்களில் சிலர் ஜெயவர்த்தனவிற்கு நெருக்கமானவர்கள்) வன்முறையை ஊக்குவித்து அதனை ஒழுங்கமைத்து நிகழ்த்தினர் என்று அவதானிகள் முடிவு செய்தனர்.[253] இரத்னபுராவில் தமிழ்ச் சமுதாயத்தினரைச் சேர்ந்த குறிப்பிட்ட குழுக்கள் மீது திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் தாக்குதல் நடத்தப்பட்டன. இங்கு அரசாங்கத்தின் உறுப்பினர்கள் இனப்படுகொலைக்கு உடந்தையாக இருந்தார்கள் என்பதற்கு நேரடிச் சாட்சியமும் சந்தர்ப்ப சூழ்நிலைச் சாட்சியமும் உள்ளன.

*1983*-ஆம் ஆண்டு நடந்த கலவரத்தை நடத்துவதில் தலையாயப் பங்கு வகித்தவர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குழுவினராவர். தமிழர்கள் யார் யார், தமிழர்களின் உடைமைகள் எவை எவை என்று அடையாளம் கண்டுபிடிப்பதற்கு அதிகார பூர்வமான பட்டியல் அவர்களிடம் இருந்தது. அந்தக் குழுவினர் 'காடையர் கூட்டம்' என்று அழைக்கப்பட்டனர். அய்க்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கப் பிரிவிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்டவர்களே அவர்கள். சில இடங்களில், அக்காடையர் கூட்டங்களை வழிநடத்திச் சென்றவர்கள் மேற்சொன்ன கட்சியின் உறுப்பினர்கள் என்பதையும், அவர்களில் ஒருவர் ஒரு துணை அமைச்சர் என்பதையும், கலவரத்தை நடத்திய வேறு சில காடையர் கூட்டங்கள் பிரதமர் பிரேமதாச, போக்குவரத்து அமைச்சர் எம்.எச்.மொகமது, தொழில் அமைச்சர் சிரில் மாத்யூ ஆகியோருக்கு விசுவாசமானவர்கள் என்பதையும் நேரில் கண்ட சாட்சிகள் அடையாளம் கண்டுபிடித்தனர்.[254] பாதுகாப்புப் படைகளின் தீவிர பங்கேற்புடன் அக்கலவரம் பல நாட்கள் நீடித்தது. அந்தக் கலவரம் தொடங்கி மூன்று நாட்களுக்குப் பிறகு தான் குடியரசுத்தலைவர் ஜெயவர்த்தனா தனது முதல் பகிரங்கமான அறிக்கையை வெளியிட்டார். அந்த வன்முறைக்கான பழி முழுவதையும் தமிழர்களின் தனிநாட்டுக் கோரிக்கையின் மீது சுமத்தினார். அந்தக் கோரிக்கைதான் சிங்களர்களுக்கு ஆத்திரமூட்டி விட்டது என்றார். அதேசமயம், அரசியல் சட்டத்திற்கான ஆறாவது திருத்தத்தையும் வெளியிட்டார். அத்திருத்தம் தமிழர்களின் உண்மையான எதிர்க்கட்சி ஏதும் நாடாளுமன்றத்தில் இருக்காதபடி



யாழ்ப்பாண நகராட்சி அலுவலகக் கட்டிடத்தின் மீதான தாக்குதல்





படிப்பகம்

www.padippakam.com

திறமையாகத் தடை செய்து விட்டது. இந்த அரசியல் சட்டத்திருத்த நடவடிக் கைக்கு நியாயம் கற்பிப்பதற்காகத்தான் கலவரங்கள் தூண்டிவிடப்பட்டன என்று பல்வேறு அரசியல் விமர்சகர்கள் கருதினர்.[255] அந்தக் கலவரங்களை அரசாங் கமே தூண்டிவிட்டது, அவற்றுக்கு உடந் தையாக இருந்தது என்பதற்கு ஏராளமான சான்றுகளும் சாட்சியங்களும் உள்ளன. எனினும் அரசாங்கத்தின் குறிப்பிட்ட உறுப்பினர்கள் இன்னின்னாருக்கு இவற் றில் எந்த அளவுக்குப் பொறுப்பு என்ப தைக் கண்டறிவதற்கு ஒரு முழுமையான நீதி விசாரணை தேவைப்படுகிறது.

1983-ஆம் ஆண்டு முதல் அடுத்த டுத்து வந்த அரசாங்கங்கள் தமிழீழ விடுத லைப்புலிகளுக்கு எதிராகப் போர் நடத்து வது என்ற கொள்கையைப் பின்பற்றி வந்துள்ளன. போரின் தன்மையைக் கருத் தில் கொள்கையில், சர்வதேசச் சட்டங்க ளின்படி சட்டபூர்வமான செயல்கள் (அதாவது பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும் செயல்கள்) என்பனவற்றை இனப்படுகொலை என்று கருதப்படக்கூ டிய செயல்களிலிருந்து வேறுபடுத்திப் பார்ப்பது கடினமானது. அதேபோல அப் படி வேறுபடுத்திப் பார்ப்பதுதான் அர சாங்கக் கொள்கையின் அடிப்படையாக உள்ளதா என்பதைத் தீர்மானிப்பதும் கடி னமான விஷயமாக உள்ளது. பயங்கரவா தத் தடைச்சட்டம், நெருக்கடி நிலை விதி கள் ஆகியன நிறைவேற்றப்பட்டமை; தன்னிச்சையாகக் கொல்லுதல்கள், காணா மல் போகச் செய்தல்கள், சித்திரவதை, பாலியல் பலாத்காரம் ஆகியன குற்றங்கள் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட பாது காப்புப் படையினருக்கு நீதி விசாரணையி லிருந்து விதிவிலக்குத் தந்தமை; 1991-ஆம் ஆண்டில் பொருளாதாரத் தடை விதித்தமை ஆகியன 1988-ஆம் ஆண்டிலிருந்து 1994-ஆம் ஆண்டு வரை ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாச ஆகியோ ரின் அரசாங்கங்கள் இனப்படுகொலைச் செயல்களை ஊக்குவித்து வந்துள்ளன என்பதையே குறிக்கின்றன. எடுத்துக்காட் டாக, 18.06.1990 அன்று பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் விஜெரத்ன, *"இப்போதிருந்து இனி முழு யுத்தம்தான்" என்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.*[256]

மேலே குறிப்பிட்ட திட்டமிட்ட செயல்கள், அவை அரசாங்கத்தின் கொள் கையாகவே பின்பற்றப்பட்டன என்ற எண்ணத்தை ஏற்படுத்துகின்றன. அந்தக் கொள்கையின் இறுதிக் குறியிலக்கு தமிழ் மக்கள்தான் - அதற்கான உடனடித் தூண் டுதல் என்னவோ விடுதலைப்புலிகளை ஒழித்துக்கட்டுவது என்பதாக இருந்தபோ திலும். ஆனால் ஜெனீவா ஒப்பந்தத்தின் படி இனப்படுகொலைச் செயல்களைப் பொறுத்தவரை தூண்டு சக்தி யாது என்ற பிரச்சினையையே எழுப்ப வேண்டிய தில்லை. தமிழர்களை ஒரு மக்கள் என்ற வகையில் கண்மூடித்தனமானக் குறிவைத் துத் தாக்குவது என்பது, தமிழர்களை ஒரு குழு என்ற வகையில் ஒழித்துக் கட்டுவது என்பது மேற்சொன்ன கொள்கையின் விளைவு என்பது ஒப்புக் கொள்ளப்பட் டுள்ளது. எனவே, அரசாங்கத்தின் உறுப் பினர்களை விசாரணைக்குக் கொண்டு வருவதற்குப் போதுமான அளவில் உள் நோக்கம் சம்பந்தமான சான்றுகள் உள் ளன.பொருளாதாரத் தடை, பாதுகாப்பு வலையங்களை (Security Zones) உருவாக் குதல் ஆகியன, விடுதலைப்புலிகள் மீது நிர்ப்பந்தம் கொண்டு வருவதற்கும், அவர் களுக்கு வேண்டிய பொருட்கள் போய்ச் சேராமல் தடுப்பதற்கும் அரசாங்கத்தா லேயே ஒரு இராணுவ உத்தியாகப் பயன் படுத்தப்பட்டது. உணவும் மருந்துப் பொருட்களும் கிடைக்காமல் போனதன் விளைவாக சத்துாட்டக் குறைவாலும் நோய்களாலும் தமிழ் மக்கள் மடிந்தனர். இவை தமிழர்களை உடல்ரீதியாக அழிப் பதாகும். எனினும், இனப்படுகொலை ஒப்பந்தத்தின் விதி 2(c)-இல் கண்டுள்ள வரையறையின்படி, தமிழர்களை உடல்ரீ தியாக ஒழித்துக் கட்டுவதற்காகச் சிந்தித் துத் திட்டமிடப்பட்ட செயல்கள் மேற் கொள்ளப்பட்டன என்பதை நிரூபிப்பது கடினமானது.



படிப்பகம்

www.padippakam.com

திட்டவட்டமான இனப்படுகொலைச் செயல்களை எடுத்துக் கொண்டால், குற்றம் செய்ததற்கான பொறுப்பை தனிநபர்கள் மீது சுமத்துவது என்பதைப் பொறுத்தவரை, அரசாங்க அதிகாரிகள் எந்த அளவிற்கு உடந்தையாக இருந்தார்கள் - குறிப்பாக எத்தகைய திட்டவட்டமான ஆணைகள் பிறப்பிப்பதன் மூலம் உடந்தையாக இருந்தார்கள் - என்பதற்கு மேலும் நுட்பமான விரிவான புலனாய்வு தேவைப்படும்.

மேலே கூறிய கருத்துகள் யாவும் சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்கவின் அரசாங்கத்திற்கும் பொருந்தும். மனித உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று அவர் பகிரங்கமாக அறிவித்து, இனப்படுகொலைச் செயல்களுக்கு ஊக்கம் தராமலிருந்த போதிலும், அவரும் அவரது அரசாங்க உறுப்பினர்களும், பொருளாதாரத் தடையின் காரணமாகத் தமிழ்க் குடிமக்கள் இறந்ததற்கும் பாதுகாப்புப் படையினர் செய்த இனப்படுகொலைச் செயல்களுக்கும் - குறிப்பாக அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட போர் நடவடிக்கையின்போது அவர்கள் இழைத்த செயல்களுக்கும் - குற்றப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இனப்படுகொலை விதி III(c)-இன் வரையறையின் எல்லை மிகவும் குறுகலானது. இனப்படுகொலை செய்யும்படி நேரடியாகவே தூண்டிவிடும் பிரச்சாரங்கள் ஒருசில உள்ளன. ஆனால், பெரும்பாலான பிரச்சாரங்கள் இனப்படுகொலையை மறைமுகமாகத் தூண்டிவிடும் வகையில் அமைந்துள்ளன. சிங்களர்கள் தமிழர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவர்கள் அல்லது மேலானவர்கள் என்ற கருத்தைப் பரப்புவது; தமிழர்களை ஒரு மரபினம் என்ற வகையில் இழித்துரைப்பது; ஸ்ரீலங்காவில் அவர்கள் வாழ்வதற்கான உரிமை கிடையாது என்று கூறுவது - இவை போன்ற பிரச்சாரங்கள் இனப்படுகொலைக்கான சூழலை உருவாக்கின. சிங்களர்களுக்கு ஆத்திரமூட்டக் கூடியதும், தமிழர்களை அவமதிப்பு செய்கின்றதுமான ஏராளமான எழுத்துக்களும் பேச்சுக்களும் வெளிவந்திருக்கின்றன. வரலாற்று உண்மைகள் திரிக்கப்பட்டிருக்கின்றன. இவை சிங்கள மக்களாலும், சிங்கள அரசியல்வாதிகளாலும் எழுதப்பட்டவையும் பேசப்பட்டவையுமாகும். இதற்கு ஒரு அபகீர்த்தி வாய்ந்த எடுத்துக்காட்டாக இருப்பது 1981-இல் சிரில் மாத்யூ எழுதிய நூலாகும். அச்சமயம் தொழில் அமைச்சராக இருந்த அவர் எழுதிய ‘சிங்கள மக்களே விழிப்படையுங்கள், ஆர்த்தெழுங்கள், பௌத்தத்தைப் பாதுகாத்திடுங்கள்’ என்ற அந்த நூல் 1950களிலிருந்து ஜெயவர்த்தனவும் பிறரும் பேசிவந்த தமிழர் விரோதப் பேச்சுக்களை உள்ளடக்கியதாகும். அந்த நூலில் சிரில் மாத்யூ, “பௌத்தத்தைக் காப்பதற்காக ஒரு புனிதப் போரை நடத்தும்படி” சிங்கள மக்களுக்க அறைகூவல் விடுத்திருந்தார்.[257] 1983 ஜூலையில் இனமோதல்கள் நடந்து கொண்டிருந்த நாட்களில் ஒரு பிரிட்டிஷ் பத்திரிகையாளரிடம் ஜெயவர்த்தன கூறினார்: *“யாழ்ப்பாண மக்களின் அபிப்பிராயத்தைப் பற்றி எனக்குக் கவலையில்லை... இப்போது எங்களால் அவர்களைப் பற்றிச் சிந்திக்க முடியாது. அவர்க*

> தமிழ்ச் சிறுபான்மையினருக்கு எதிராகக் கண்மூடித்தனமான வன்முறை செலுத்தப்படுகிறது என்பதற்கும் சண்டையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் அப்பாவிக் குடிமக்களுக்கும் இடையில் பாகுபாடு ஏற்படுத்தப்படுவதில்லை என்பதற்கும் தெளிவான சான்றுகள் இப்போது கிடைத்து வருகின்றன.
>
> — டி.எஸ்.தில்லான் : இந்தியப்பிரதிநிதி, அய்.நா, மனித உரிமை ஆணையத்தின் 42ஆவது கூட்டத் தொடர், 1986.



படிப்பகம்

www.padippakam.com

ளது உயிர்களைப் பற்றியோ அல்லது எங்களைப் பற்றிய அவர்களது அபிப்பிராயம் பற்றியோ இப்போது எங்களால் சிந்திக்க இயலாது. வடக்கில் (தமிழ்ப்பிரதேசங்களில்) எந்த அளவுக்கு நிர்ப்பந்தத்தை அதிகரிக்கின்றோமோ அந்த அளவுக்கு இங்குள்ள சிங்கள மக்கள் மகிழ்ச்சியடைவர். நான் தமிழ் மக்களைப் பட்டினி போட்டால், சிங்கள மக்கள் மகிழ்ச்சியடைவர்.'[258] இரண்டு மாதங்களுக்குப் பிறகு, அதாவது 1983-இல் தமிழருக்கு எதிராக நடந்த கலவரங்கள், அது குறித்த இந்தியாவின் கண்டனங்கள் ஆகியவற்றினை யொட்டி, கொழும்பிலுள்ள அய்க்கிய தேசியக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் அமைச்சர் காமினி திஸ்ஸநாயக கூறியதாவது: "அவர்கள் (தமிழர்கள்) இந்தியாவிலிருந்து ஒரு இராணுவத்தைக் கொண்டு வருகிறார்கள். இந்தியாவிலிருந்து அது வந்து சேர பதினான்கு மணி நேரம் பிடிக்கும். பதினான்கு நிமிடங்களில் நம்மால் நம் மண்ணிற்காக ஒவ்வொரு தமிழனின் இரத்தத்தையும் பலிகொடுக்க முடியும்."[259]

நாடாளுமன்றத்தில் யாழ்ப்பாண நிகழ்வுகள் குறித்த விவாதத்தின்போது குண்டசாலைத் தொகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் D.M.ஜெயரத்ன, 24.07.1981 அன்று பேசுகையில், அன்றைய நாடாளுமன்ற எதிர்க்கட்சியினரையும் தமிழர் அய்க்கிய விடுதலை முன்னணித் தலைவர் அ.அமிர்தலிங்கத்தையும் குறிப்பிட்டுச் சொன்னார்: "தமிழர்களின் தலைவர் என்று சொல்லிக் கொள்ளும் இவருக்கு நாம் செய்ய வேண்டியது என்ன? எனக்கு அதிகாரம் கொடுக்கப்படுமேயானால், இந்தக் கட்டிடத்தில் மிக அருகிலுள்ள கான்கிரீட் தூணில் அவரைக் கட்டிவைத்து அவருக்குப் பித்தம் தெளியும் வரை சவுக்கால் அடி அடியென்று அடிப்பேன். அதன் பிறகு அவர் விரும்புகிற எதை வேண்டுமானாலும் பிறர் செய்து கொள்ளட்டும். அவரை பெய்ரா ஏரியிலோ அல்லது கடலிலோ தூக்கியெறியட்டும். ஏனென்றால், அவரது உடல் உருச்சிதைந்து போயிருக்கும். அதில் உயிர் ஒட்டிக் கொண்டிருக்காது என்று நான் நினைக்கிறேன்." இரத்னபுராவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான ஜி.வி.புஞ்சினிலமெ (G.V.Punchinilame). என்பவரும் இதே போன்ற கருத்தைக் கூறினார். தமிழர் அய்க்கிய விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த உறுப்பினர்களின் உடல்களைத் தண்டு துண்டாக்கி அவர்களைத் தண்டிக்க வேண்டும் என்று அவர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குப் பரிந்துரை செய்தார்.[260] அதே ஆண்டில், ஆகஸ்ட் மாதக் கலவரங்களையொட்டி, 04.09.83 அன்று ஜெயவர்த்தன கூறினார்: "நாட்டில் நடந்துள்ள வன்முறை, கொலைகள், பாலியல் பலாத்காரங்கள் ஆகியனவற்றை எனது கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பேசிய பேச்சுகள் ஊக்குவித்துள்ளன. அதற்காக நான் வருந்துகிறேன்.'[261]

1996-ஆம் ஆண்டு மார்ச் மாதம் குடியரசுத் தலைவர் சந்திரிகா குமாரதுங்க கூறினார்: "சிங்கள மக்கள் பொறுமையிழந்து வருகின்றனர். விடுதலைப்புலிகளுக்கு எதிரான முழுமையான யுத்தம் தவிர்க்க முடியாதது. அது தெற்குப் பகுதியில் (சிங்களப்பகுதியில்) உள்ள தமிழர்களுக்கு ஆபத்தை விளைவிக்கலாம்." 1997 ஆகஸ்ட் மாதம் அவர், சட்டவிரோதமான கைதுகள், பிணைத்தொகையைக் கேட்டுப் பெறுவதற்காக செய்யப்படும் கைதுகள் ஆகியன பற்றித் தனக்குத் தெரியும் என்பதை ஒப்புக் கொண்ட பிறகு கூறினார்: "சமாதானத்தை அடைந்தபிறகு தான் தெற்குப் பகுதியிலுள்ள தமிழர்களுக்குத் தரப்படும் தொல்லைகள் முடிவுக்கு வரும்". இப்படி அவர் கூறியது சட்டரீதியான நடவடிக்கைகளிலிருந்தும் நீதி விசாரணையிலிருந்தும் பாதுகாப்புப் படைகளுக்கு விலக்கு அளிப்பதை ஊக்குவிப்பதாகும்.

இத்தகைய பேச்சுகள் இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்திலுள்ள விதி III(c)-இல் கூறப்படும் குற்றங்களின் கீழ்



படிப்பகம்

www.padippakam.com

வருகின்றன. இந்தப் பேச்சுகளைப் பேசியவர்கள் மேற்சொன்ன விதிப்படி குற்றங்களுக்கான பொறுப்பேற்க வேண்டியவர்களாவர். **1981**-ஆம் ஆண்டுக் கலவரத்தையொட்டி சிங்கள அரசியல்வாதிகளும் அரசாங்க உறுப்பினர்களும் பேசிய பேச்சுக்கள் சிலவற்றை எடுத்துக்காட்டுகளாக மேலே குறிப்பிட்டோம். அத்தகைய பேச்சுக்கள் இன்னும் ஏராளமான உள்ளன, அவை, ஸ்ரீலங்காவில் நடத்தப்பட்ட இனப்படுகொலையை பகிரங்கமாகவும் நேரடியாகவும் தூண்டிவிடும் தன்மை கொண்டவையாக இருந்தன என்பதைக் குறிக்கின்றன.

ஸ்ரீலங்காவில் நடந்துள்ள ஏராளமான இனப்படுகொலைச் செயல்களுக்கான தண்டனை வழங்கப்படவே இல்லை. சிங்களக் குடிமக்கள், பாதுகாப்புப் படைகளின் உறுப்பினர்கள், அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களின் உறுப்பினர்கள் ஆகியோரால் இழைக்கப்பட்ட குற்றங்களே அவை. அதேபோல இனப்படுகொலையைப் பகிரங்கமாகவும் நேரடியாகவும் தூண்டுகின்ற வகையில் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிறரும் தண்டிக்கப்படவே இல்லை. இந்த நூலை எழுதும் சமயத்திலும் கூட வடகிழக்கில் நடந்து வரும் போரின் காரணமாக இனப்படுகொலைச் செயல்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. ❑

[246] see Application of the Convention on the Prevention and Punishment of the Crime of Genocide (Bosnia-Herzegovina v.Yugoslavia ). Preliminary Objections, Judgment, International Court of Justice, July 11, 1996, para.43
[247] UN Special Rapporteur 1985, p.20
[248] ibid.
[249] see S.Sivanayagam: Sri Lanka: 40-Year Chronology, p.27
[250] quoted in: S.Sivanayagam: Sri Lanka: 10 Years of Jayewardene Rule, TIRU, Madras, 1987 and N.Jayawickrama: Right of Self-Determination, p.10
[251] see E.M.Thornton and R.Niththyananthan: Island of Terror, p.35
[252] see ibid. and: Tamil Refugees say Gamini's misdeeds caught up with him in: TIC, News Bulletin, Nos.38&39, September/October 1994, p.10
[253] see Brian Eads in: Observer, 20 September 1981 quoted in S.Ponnambalam: Tamil Liberation Struggle, p.210
[254] see E.M.Thornton and R.Niththyananthan: Island of Terror, pp.79,82
[255] see ibid., p.80
[256] quoted in: Amnesty International: The Northeast, p.7
[257] see S.Ponnambalam: Tamil Liberation Struggle, p.211
[258] Interview with Ian Ward of Daily Telegraph, July 11, 1983 quoted in: Hot Spring, April 1997, p.37
[259] quoted in:Tamil Refugees say Gamini's misdeeds caught up with him in:TIC,News Bulletin, Nos.38&39, September/October 1994, p.11
[260] see E.M.Thornton and R.Niththyananthan: Island of Terror, p.38
[261] quoted in: S.Ponnambalam: Tamil Liberation Struggle, p.211



படிப்பகம்

www.padippakam.com

# இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துதல்

## இப்போதுள்ள வழிமுறைகள்

இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட வழிமுறைகள் (mechanisms), முதன்மையாக இனப்படுகொலைச் செயல்களுக்கான தண்டனை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டுள்ளனவேயன்றி அவற்றைத் தடுப்பதற்காக அல்ல. இப்போதுள்ள நான்கு வழிமுறைகளில் இனப்படுகொலைத் தடுப்பு, அதற்கான தண்டனை ஆகிய இரண்டையும் உள்ளடக்கும் இரண்டு வழிமுறைகளை முதலில் பரிசீலிப்போம்.

*I. விதி **VIII** இனப்படுகொலைச் செயல்களையோ அல்லது விதி III-இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள வேறு செயல்களையோ தடுப்பதற்கும் ஒடுக்குவதற்கும் அய்க்கிய நாடுகளின் சாசனத்தின் (UN Charter) கீழ் உரிய நடவடிக்கை என்று தான் கருதும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ள எந்தவொரு தரப்பும் அய்க்கிய நாடுகள் அவையில் அத்தகைய நடவடிக்கையை எடுக்கும் அதிகாரமுடைய அமைப்புகளைக் கேட்டுக் கொள்ளலாம்.*

இந்த விதியானது, அய்க்கிய நாடுகளின் சாசனத்திலேயே சொல்லப்பட்டுள்ள ஒரு விஷயத்தை அவசியமில்லாமல் மீண்டும் திருப்பிச் சொல்கின்றதாகவே அமைகிறது என்று கருதப்படுகிறது.[262] மேலும், அய்.நா.வால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அமைப்புகளின் தலையீடும் கூட அந்த அதிகார வரம்புகளுக்கு உட்பட்டுத்தான் இருக்கும். எனினும் மேற்சொன்ன விதி, இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் அய்க்கிய நாடுகள் வகிக்கக்கூடிய சாத்தியமான பாத்திரத்தைக் கோடிட்டுக் காட்டத்தான் செய்கிறது. இதன்படி, அய்.நா. சாசனத்தின் 39-ஆம் விதியின்படி, இனப்படுகொலைச் செயல்கள் சமாதானத்திற்கு அச்சுறுத்தலாகவோ, சமாதானத்தைக் குலைப்பதாகவோ அமைகின்றன என்று அய்.நா. பாதுகாப்பு அவையால் முடிவு செய்ய முடியும்.[263] அப்படி முடிவு செய்து, அய்.நா.சாசனத்தின் விதி 40 அல்லது விதி 41-இன்படி எத்தகைய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று தீர்மானிக்கவும் முடியும்.[264] மேலும், ஒரு சண்டையில் ஈடுபட்டுள்ள தரப்பினர் ஒப்புக் கொள்ளும் பட்சத்தில், இனப்படுகொலைச் செயல்கள் தொடர்ந்து நடப்பதைத் தடுக்கும் பொருட்டு அய்.நா. பொதுச் செயலாளர் சம்பந்தப்பட்ட நாட்டிற்கு அமைதி காக்கும் படையை அனுப்ப முடியும்.

மனித உரிமைகள் தொடர்பாகச் செயல்படும் பல்வேறு அமைப்புகள் அய்.நா.விடம் உள்ளன. 1994-இல் அய்.நா. மனித உரிமை உயர் ஆணையர் (UN High Commissioner for Human Rights) என்ற அமைப்பு நிறுவப்பட்டது. இந்த ஆணையர் அய்.நா. அவையின் துணைப் பொதுச் செயலாளரின் அந்தஸ்து பெற்றவராவார். அய்.நா. அவையின் மனித உரிமைச் செயல்பாடுகளுக்கான முதன்மையான பொறுப்பு இந்த ஆணையரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகளைப் பாதுகாத்தல், அவற்றை மேம்படுத்துதல், மனித உரிமைகள் மதிக்கப்படுவதை உத்திரவாதம் செய்யும் நோக்கத்துடன் அரசாங்கங்களுடன் விவாதித்தல் ஆகியன இந்த ஆணையருக்குத் தரப்பட்டுள்ள பொறுப்புகளாகும். இப்பொறுப்புகள் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்குகின்றன: கடுமையான மனித உரிமை மீறல்கள் ஏற்படுகையில் உரிய நடவடிக்கைகள் எடுத்து மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்துதல்; இனப்பாகுபாட்டுச் செயல்களுக்கு எதிராகப் போராடுதல்; சித்திரவதைகள், பலவந்தமான முறைகளின் மூலம் காணாமல் போகச் செய்தல் போன்ற குறிப்பிடத்தக்க கொடூரமான மனித உரிமை மீறல்களுக்கு எதிராகப் போராடுதல்.[265]



படிப்பகம்

www.padippakam.com

1997-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், முதல் ஆணையராக இருந்த யோசே அயலா-லாஸ்ஸோ (Jose Ayala Lasso) இப்பதவியிலிருந்து விலகினார். அவர், இப்பதவியை வகித்த காலத்தில் பல நாடுகளுடன் ஏராளமான ராஜதந்திர முயற்சிகளில் ஈடுபட்டார். மனித உரிமை மீறல்கள் நடக்கும் இடங்களுக்குச் சென்று கள ஆய்வு நடத்த முன் முயற்சி மேற்கொண்டார்.[266] அவரது பணி விமர்சனத்துக்குள்ளாகி இருந்தது. அதாவது, அவர் ராஜதந்திர வழிமுறைகளை மிக அதிகமாகக் கடைப்பிடித்து, அவர் சந்தித்து விவாதித்த அரசாங்கங்களின் மனித உரிமை மீறல்கள் குறித்த தெளிவான அறிக்கைகளை வெளியிடாததன் மூலம் கடுமையான மனித உரிமை மீறல்களை தடுக்கத் தவறினார் என்பதுதான் அவர்மீதான விமர்சனமாகும்.[267] அவருக்கு அடுத்தபடியாக ஆணையராக நியமிக்கப்பட்டுள்ள மேரி ராபின்சன், தனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பை எவ்வாறு நிறைவேற்றுவார் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். அதை நிறைவேற்றுவது என்பது, தற்சமயம் நடந்து வரும் அய்.நா.அவையின் மறுகட்டமைப்பின் 'விளைவு', அய்.நா.வுக்கு உட்பட்ட பிற அமைப்புகளுக்கு - குறிப்பாக, பாதுகாப்பு அவைக்கு - அய்.நா. தரும் ஸ்தாபன, நிதி ஆதரவு ஆகியவற்றைச் சார்ந்துள்ளது.

அய்.நா.வில் உறுப்பினர் பதவி வகிக்கும் அரசுகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய மனித உரிமை ஆணையமும் கூட மனித உரிமை மீறல்கள் சம்பவங்களைப் பதிவு செய்து ஆவணங்களாக்கியும் அச்சம்பவங்கள் நடந்துள்ள நாடுகளின் அரசாங்கங்களுடன் விவாதங்கள் நடத்தியும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றவா? இல்லையா? என்பது குறித்து அவ்வப்போது கண்காணிப்பதிலும் சாத்தியப்பட்டால் இனப்படுகொலையைத் தடுப்பதிலும் ஒரு முக்கியப் பாத்திரம் வகிக்கிறது.

இதைச் செய்வதற்கானதொரு முக்கியமான வழிமுறையாக விளங்குவது நடைமுறை எண்.1503 (1503 Procedure) என்பதாகும்.[268] அய்.நா. மனித உரிமை ஆணையம், சிறுபான்மையினருக்கு எதிராகப் பாரபட்சம் காட்டப்படுவதைத் தடுப்பதற்கும் அவர்களைப் பாதுகாப்பதற்குமான ஒரு துணை ஆணையத்தை (Sub-Commission on the Prevention of Discrimination and Protection of Minorities) அமைத்தது. தனிநபர் அளவில் செயல்படும் வல்லுநர்கள் அடங்கிய இந்த அமைப்பு, *"சில குறிப்பிட்ட அரசாங்கங்களுடன் அய்.நா. மேற்கொள்ளும் கடிதப் போக்குவரத்து, அவற்றுக்கு, அந்த அரசாங்கங்கள் அனுப்பும் பதில்கள் ஆகியன கடுமையான மனித உரிமை மீறல்கள் தொடர்ச்சியாக நடைபெறுவதை வெளிப்படுத்துவதாகத் தோன்றுமானால் மேற்சொன்ன கடிதங்களையும் அவற்றுக்கான பதில்களையும் பரிசீலிக்கும்."* இரகசியமாகவே மேற்கொள்ளப்படும் இச்செயல்பாட்டின் நோக்கம் சம்பந்தப்பட்ட அரசாங்கத்தின் மீது சாதுர்யமான அரசியல் நிர்ப்பந்தத்தைச் செலுத்தி மனித உரிமைகள் தொடர்ந்து மீறப்படுவதைத் தடுத்து நிறுத்துவதாகும். மேற்சொன்ன துணை ஆணையம் ஒரு குறிப்பிட்ட கடிதப் போக்குவரத்தைப் பரிசீலனை செய்ய முடிவு செய்து, அதனை மனித உரிமை ஆணையத்திற்கு அனுப்புமேயானால், ஆணையம் அதனை நிராகரிக்கவோ, அய்.நா.வின் பொருளாதார, சமூக அவைக்கு (Ecosoc) அனுப்பவோ அல்லது அதனைப் பரிசீலனைக்கு உட்படுத்தவோ செய்யலாம். ஒரு கடிதப் போக்குவரத்து மிக அரிதாகவே பொருளாதார, சமூக அவைக்கு (Ecosoc) அனுப்பப்படுகிறது. அப்படி அது அந்த அவைக்குப் போய்ச் சேரும் பட்சத்தில், ஆணையத்தின் நடவடிக்கைகள் பகிரங்கமானதாகின்றன. இல்லாவிடில், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எந்தெந்த நாடுகள் பரிசீலனைக்கு உள்ளாக்கப்படுகின்றன என்பதை ஆணையம் அறிவித்த போதிலும், ஆணையத்தின் நடவடிக்கைகள் இரகசியமானவையாகவே வைக்கப்பட்டு இருக்கும்.[269]

தீர்மானம் எண்.1235-இன்படி[270] மேற்கொள்ளப்படும் நடவடிக்கை பகிரங்கமானது. அய்.நா.வில் உறுப்பினர் பதவி வகிக்கும் நாடுகளோ அல்லது சிறுபான்மையினர் மீது பாரபட்சம் காட்டப்படுவதைத் தடுத்தல், அவர்களின் மனித உரிமையைப் பாதுகாத்தல் ஆகியவற்றுக்கான துணை ஆணையமோ, *"மனித*



படிப்பகம்

*உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள் ஆகியன கடுமையாக மீறப்படுதல் தொடர்பான தகவல்களைப் பரிசீலனை செய்ய''* மேற்சொன்ன தீர்மானத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட முன்முயற்சி எடுக்கலாம். *''இனப்பாகுபாடு கொள்கைகள், இனஒதுக்கல் கொள்கைகள் உள்ளிட்ட மனித உரிமை மீறல்கள், அடிப்படைச் சுதந்திர மீறல்கள் தொடர்பான பிரச்சினைகளை''* கருத்தில் கொண்டு ஒரு குறிப்பிட்ட நிலைமையை முழுமையாக ஆய்வு செய்ய வேண்டுமென்று மனித உரிமை ஆணையம் முடிவு செய்யுமேயானால், அந்த நிலைமையை ஆய்ந்தறிந்து ஆணையத்திடம் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஒரு நடவடிக்கை குழுவையோ (Working Group) அல்லது ஒரு சிறப்புப் பொறுப்பாளரையோ (Special Rapporteur) நியமனம் செய்யலாம். அத்தகையதொரு மனித உரிமை மீறல் நிலைமையைக் கண்டனம் செய்து சம்பந்தப்பட்ட அரசாங்கத்திற்கு அக்கண்டனத்தைத் தெரிவிக்கும் தீர்மானமொன்றையும் நிறைவேற்றலாம். இவையனைத்தையும் பாதுகாப்பு அவையின் மூலம் அய்.நா. பொது அவைக்கு மனித உரிமை ஆணையம் அறிவிக்கும்.[271]

மனித உரிமை ஆணையத்தால் பல்வேறு நடவடிக்கைக் குழுக்களும் சிறப்புப் பொறுப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட விஷயம் குறித்து எல்லாத் தரப்புகளிலிருந்தும் எல்லா மூலங்களிலிருந்தும் தகவல்களைத் திரட்டி மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து நடப்பதைத் தடுத்து நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட அரசாங்கங்களிடம் வேண்டுகொள் விடுப்பது இந்த நடவடிக்கைக் குழுக்களினதும் சிறப்புப் பொறுப்பாளர்களினதும் பணியாகும். இனப்படுகொலைத் தடுப்பு என்ற விஷயத்தைப் பொறுத்தவரை, கீழ்க்காணும் அமைப்புகள் மிகவும் குறிப்பிடத்தக்கவையாகும்.

*1.* மனிதர்கள் பலவந்தமாகவும் விருப்பத்திற்கு மாறாகவும் காணாமல் போகச் செய்யப்படுவது குறித்த நடவடிக்கைக்குழு (Working Group on Enforced and Involuntary Disappearances); *2)*சட்டத்திற்குப் புறம்பாகவும் தன்னிச்சையாகவும் உடனுக்குடனும் நிறைவேற்றப்படும் மரணதண்டனைகள் குறித்த சிறப்புப் பொறுப்பாளர் (Special Rapporteur on Extrajudicial, Summary and Arbitrary Executions); *3)*சித்திரவதை தொடர்பான சிறப்புப் பொறுப்பாளர் (Special Rapporteur on Torture)[272]

*2. விதி **IX** : இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்திற்கு விளக்கமளித்தல், அதைப் பிரயோகப்படுத்துதல், அதனை நிறைவேற்றுதல் ஆகியன தொடர்பாகவும் இனப்படுகொலைக்கு ஒரு அரசுக்குள்ள பொறுப்பு, விதி III-இல் பட்டியலிடப்பட்டுள்ள இதர செயல்களுக்கு அந்த அரசுக்குள்ள பொறுப்பு ஆகியன குறித்து அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள தரப்பினர்களுக்கு இடையில் எழும் தகராறுகளை, அத்தகராறுகளில் சம்பந்தப்பட்டுள்ள எந்தவொரு தரப்பினரின் வேண்டுகோளின் பேரிலும் சர்வதேச நீதிமன்றத்தின் (International Court of Justice) விசாரணைக்குக் கொண்டு செல்ல வேண்டும்.*

சர்வதேச நீதிமன்றத்தின் அமைப்பு விதி *36*-இன்படி, மேற்சொன்ன தகராறுகளில் சம்பந்தப்பட்ட ஒரு அரசுத்தரப்பு, சர்வதேச நீதிமன்றத்தின் சட்ட அதிகாரத்தை அங்கீகரித்திருக்குமேயானால் மட்டுமே, அந்த நீதிமன்றம் அத்தரப்பின்மீது தன் சட்ட அதிகாரத்தைச் செலுத்த முடியும். இனப்படுகொலை ஒப்பந்தத்தின் IX-ஆம் விதியே இவ்வாறுதான் கூறுகிறது. இதனைப் பயன்படுத்திக் கொண்டு, ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ள பல நாடுகள், தாங்கள் சம்பந்தப்பட்ட தகராறுகளில், மேற்சொன்ன விதி பிரயோகிக்கப்படுவதற்கு சம்மதம் கொடுக்காமலிருப்பதற்கு வழியிருக்கிறது.



கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதலினால் ஏற்பட்ட அழிவு

www.padippakam.com

அதாவது நடைமுறையில் பார்க்கப் போனால், மேற்சொன்ன விதியின்படி பல நாடுகளின் மீது நடவடிக்கை எடுக்கவே முடியாது என்பதுதான் உண்மை. அதுமட்டுமின்றி, இந்த விதியில் இதைவிடப் பெரும் குறைபாடொன்றும் உள்ளது. சர்வதேச நீதிமன்றத்தின் அமைப்பு விதி 34-இன்படி, அரசுகள் மட்டுமே அந்த நீதிமன்றத்தின் விசாரணைக்கு தகராறுகளை எடுத்துச் செல்லும் தரப்புகளாக இருக்க முடியும். எனவே தனிநபர்களோ, அரசு அல்லாத அமைப்புகளோ (எடுத்துக் காட்டாக, இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்படும் குழுக்களின் பிரதிநிதிகளோ) அந்த நீதி மன்றத்திற்குச் செல்ல முடியாது. இதன் விளைவு என்னவெனில், அந்த நீதிமன்றம் அரசுகளுக்கு இடையிலுள்ள தகராறுகளை மட்டுமே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும் என்பதுதான். தமக்கிடையே உள்ள தகராறுகளை சர்வதேச நீதிமன்றத்திடம் எடுத்துச் செல்வதற்கு சம்பந்தப்பட்ட அரசுகளும் கூட பொதுவாகத் தயக்கம் காட்டுகின்றன. அதற்குக் காரணம், அவ்வாறு எடுத்துச் செல்வது ராஜதந்திர ரீதியான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என அவை கருதுவதுதான். மேலும், சர்வதேச நீதிமன்ற விசாரணைக்கான முன்முயற்சி எடுப்பதற்கு முன்பு முதலில் அய்.நா. அவையை அணுகுவதைத்தான் அரசுகள் பொதுவாக விரும்புகின்றன.

சர்வதேச நீதிமன்றத்தின் செயல்பாடுகளுக்கு இத்தகைய வரம்புகள் இருப்பினும் மிகவும் விதிவிலக்கான ஒரு வழக்கில் அந்த நீதிமன்றம் இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தைப் பிரயோகிக்க ஆணை பிறக்கும்படி நேர்ந்தது. அத்தகைய சாத்தியப்பாடு உருவாகக் காரணம் ஒரு குறிப்பிட்ட அரசு உடைந்து போனதுதான். யுகோஸ்லாவியா ஒன்றுபட்ட அரசாக இருந்தபோது மேற்சொன்ன ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டிருந்தது. அது உடைந்து பல தேசங்களாகப் பிரிந்து சென்ற பிறகு செர்பியாவும், மோன்டெநெக்ரோவும் சேர்ந்த புதிய யுகோஸ்லாவியா அரசு இழைத்ததாகச் சொல்லப்பட்ட இனப்படுகொலையைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளைக் குறிப்பிடுமாறு சர்வதேச நீதிமன்றத்தை போஸ்னியாவும், ஹெர்ஸெகோவினாவும் கேட்டுக் கொண்டன. அதற்கிணங்க சர்வதேச நீதிமன்றம் 08.04.1993, 13.09.1993 ஆகிய நாட்களில் இரண்டு ஆணைகளைப் பிறப்பித்தது. யுகோஸ்லாவியா இனப்படுகொலைக் குற்றத்தைத் தடுப்பதற்குத் தனது அதிகாரத்திற்கு உட்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்; குறிப்பாக, தனது ஆயுதப்படைகள் இனப்படுகொலைக் குற்றங்களைச் செய்யா என்பதை உத்திரவாதம் செய்ய வேண்டும் என்பனவே அந்த ஆணைகள்.[273] இனப்படுகொலை ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளது என்பதை நிரூபிப்பதற்காகத் தான் அழைக்கப்படவில்லை என்றும், ஆனால் இனப்படுகொலைச் செயல்கள் நிகழ்த்தப்படும் பெரும் அபாயம் நிலவுவதால், தகராறில் சம்பந்தப்பட்ட இருதரப்பினருக்கும் இனப்படுகொலையைத் தடுப்பதற்குத் தத்தம் அதிகாரத்தின் கீழுள்ள அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டிய தெளிவான கடமை உள்ளது என்றும் சர்வதேச நீதிமன்றம் கூறியது.[274]

யுகோஸ்லாவியாவின் கூட்டாட்சிக் குடியரசு அரசாங்கம் இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்த மீறல்களைச் செய்கிறது என்று குற்றம் சாட்டும் மனுவொன்றை போஸ்னியா 20.03.93 அன்று சர்வதேச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. அந்த நீதிமன்றம் கீழ்க்கண்டவற்றைச் செய்ய வேண்டும் என்று அம்மனு கோரியது: 1) யுகோஸ்லாவியா இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தை மீறியுள்ளது என்று அறிவிக்க வேண்டும்; 2)அத்தகைய மீறல்களாகக் கருதப்படக் கூடிய செயல்களை யுகோஸ்லாவியா நிறுத்த வேண்டும் என உத்திரவிட வேண்டும்; 3)அந்நாடு சர்வதேசப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், அது ஏற்படுத்திய அழிவுகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் அறிவிக்க வேண்டும். 11.07.1996 அன்று சர்வதேச நீதிமன்றம் யுகோஸ்லாவியா எழுப்பிய அடிப்படையான ஆட்சேபணைகளை நிராகரித்து, அந்த மனுவை ஏற்றுக் கொண்டது. யுகோஸ்லாவியா எழுப்பிய ஆட்சேபணைகள் கீழ்வருமாறு: 1)நாடுகளுக்கு இடையிலான தகராறு என்பது இங்கு ஏதுமில்லை; 2)மேற்சொன்ன விண்ணப்பத்தைத் தாக்கல்

www.padippakam.com

செய்யும்போது போஸ்னிய குடியரசுத் தலைவருக்கு அரசு அதிகாரம் இருக்கவில்லை; 3)சர்வதேச நீதிமன்றத்திற்கு சட்ட அதிகாரம் இல்லை.

அந்த வழக்கு, மேற்சொன்ன மனு ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதா, இல்லையா என்பது சம்பந்தப்பட்டதுதானேயன்றி, அந்த மனுவின் தராதரம் பற்றியது அல்ல. எனினும், நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் சில முக்கியமான விஷயங்கள் அடங்கியுள்ளன. அவை கீழ்வருமாறு: 1)இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தின் விதி-IX-இன் படி ''தேசங்களுக்கு இடையிலான தகராறு'' ஒன்றுள்ளதா என்பதைப் பொறுத்தவரை, அந்த ஒப்பந்தத்தின் விதி I-இன் படி பார்க்கப் போனால், விதிகள் II, III ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள குற்றச்செயல்கள் புரியப்பட்டிருக்குமேயானால், தகராறின் உள்நாட்டுத் தன்மை அல்லது சர்வதேசத் தன்மையுடன் பிணைக்கப்பட்டுள்ள சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமலேயே இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தைப் பிரயோகிக்க முடியும்; 2)ஒரு உள்நாட்டுப் போர்ச்சூழலில் நடந்திருக்கக்கூடிய நிகழ்ச்சிகளைக் கருத்தில் கொண்டே தகராறு உள்ளதா, இல்லையா என்று முடிவு செய்ய வேண்டும் என்ற ஒரே காரணத்தின் அடிப்படையில் மேற்சொன்ன மனு ஏற்றுக் கொள்ளத்தகாதது என்று கூற முடியாது; 3)ஒப்பந்தத்தின் விதி IX, எவ்வகையான பொறுப்பிலிருந்தும் எந்தவொரு அரசுக்கும் விதிவிலக்களிப்பதில்லை. அதேபோல விதி IV-இல் குறிப்பிடப்பட்டுள்ள அரசு அமைப்புகளால் செய்யப்படும் செயல்களுக்கும் அரசு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.[275]

சர்வதேச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்புகள் மிகவும் குறிப்பிடத்தக்கவை என்றபோதிலும் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் ஏதும் அதனிடம் இல்லை என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். எனவே, சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பை ஒரு தரப்பினர் ஏற்றுக் கொள்ளவில்லையென்றால், அய்.நா. சாசனத்தின் விதி 94.2-இன்படி பாதுகாப்பு அவைதான் அத்தீர்ப்பை நடைமுறைப் படுத்த முடியும். இருப்பினும், சர்வதேச நீதி



விமான குண்டுவீச்சில் பலியானவர்கள்

மன்றத்தின் தீர்ப்பு, அய்.நா.பாதுகாப்பு அவையை, அதனை நடைமுறைப்படுத்த இசையும்படி செய்யக்கூடிய வல்லமை வாய்ந்ததாகும். ஏனெனில், சர்வதேச நீதிமன்றம், அய்.நா.வின் முதன்மையான சட்ட அதிகார அமைப்பு ஆகும். எனவே, இனப்படுகொலைச் செயல்கள் மேலும் தொடர்ந்து நடப்பதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இதர அரசுகளையும் அய்.நா.வின் இதர அமைப்புகளையும் அது தூண்டவல்லது.

3. விதி VI முதல் பகுதி : இனப்படுகொலைச் செயல்புரிந்ததாகவோ அல்லது விதி III-இல் பட்டியலிடப்பட்டுள்ள இதர செயல்களைப் புரிந்ததாகவோ குற்றம் சாட்டப்பட்ட நபர்கள், எந்த அரசின் பிரதேசத்தில் அந்தச் செயல்கள் புரியப்பட்டனவோ, அந்த அரசின் தீர்ப்பாயத்தால் (Tribunal) விசாரணை செய்யப்பட வேண்டும்.

இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தின் முதல் வரைவு, அதை உலகு தழுவிய வகையில் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற நெறியை உள்ளடக்கியிருந்தது. அதாவது, எந்த அரசின் அதிகாரிகள், குற்றம் சாட்டப்பெற்றவர்களைக் கைது செய்தார்களோ, அந்த அரசு, கைது செய்யப்பட்டவர் எந்த தேசிய இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்தவொரு இடத்தில் அக்குற்றத்தை அவர்கள் செய்திருந்தாலும் அவர்கள் மீது தனது சட்ட அதிகாரத்தைச் செலுத்துவதற்கு மேற்சொன்ன நெறி அனுமதி அளித்திருந்தது.[276] ஆனால், இனப்படுகொலைத்



படிப்பகம்

www.padippakam.com

தடுப்பு ஒப்பந்தத்தின் இறுதி வடிவம் அந்த நெறியை நீக்கிவிட்டது. அதனை நீக்கியதானது, கொடூரமான குற்றங்களைச் செய்பவர்களைத் தண்டிக்க வேண்டிய தேவை என்பதைக் காட்டிலும் ஒரு அரசின் இறையாண்மைக்கே முன்னுரிமை கொடுக்கும் நடவடிக்கையாகும் என்று அவதானிகள் கருதினர்.[277] இனப்படுகொலைக் குற்றங்களைப் புரிபவர்களைத் தண்டிப்பதற்கான வாய்ப்பெல்லை - அக்குற்றங்கள் நிகழும் நாடுகளின் சட்ட அதிகாரங்களுக்கு குறுக்கப்படுமேயானால் - குறுகிவிடும் என்பது தெளிவு. முதலாவதாக, இனப்படுகொலை செய்யும் ஆட்சியாளர்கள் அதிகாரத்தில் இருக்கும் வரை, விசாரணைகள் என்பன ஏதும் இரா. இரண்டாவதாக, இனப்படுகொலையைச் செய்தவர்கள் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டு ஒரு புதிய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டாலும் குற்றம் புரிந்தவர்களிடம் எஞ்சியுள்ள அதிகாரமும், தேசிய சமரசத்திற்கான தேவையும் சேர்ந்து விசாரணைக்கு முட்டுக்கட்டை இடத்தான் செய்யும். இதற்கு ஓரளவு எடுத்துக்காட்டாக இருப்பது கம்போடியா தேசம் ஆகும். எனினும், உள்நாட்டு நீதிமன்றங்களில் நிவாரணம் தேடுதல் என்ற மரபு கருத்தில் கொள்ளப்பட்டால், அரசு இறையாண்மையைச் செலுத்துவது என்பது தன்னகத்தே வேறொரு கடமையையும் கொண்டிருக்கிறது என்பது புலப்படும். அதாவது இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள ஒரு அரசு, இனப்படுகொலைச் செயல்களைத் தடுக்கவும் அக்குற்றங்களைச் செய்தவர்களைத் தண்டிக்கவும் கடமைப்பட்டுள்ளது. இந்தக் கடமையை அது நிறைவேற்ற வேண்டும் என்பதைக் கட்டாயப்படுத்த முடியாது என்றபோதிலும், அக்கடமையைச் செய்யத் தவறுவது என்பது இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அந்த அரசாங்கத்திற்கு விருப்பமில்லை அல்லது அதனால் இயலவில்லை என்ற வலுவான கருத்து உருவாகி, இனப்படுகொலைச் செயல்கள் தொடர்ச்சியாக நடைபெறுகையில், வெளியார் தலையீட்டை நியாயப்படுத்துகிற நிலைமைகளையும் தோற்றுவிக்கக்கூடும்.

*விதி VI இரண்டாம் பகுதி : இனப்படுகொலைக் குற்றமோ அல்லது விதி III-இல் பட்டியலிடப்பட்டுள்ள செயல்களில் ஏதேனும் ஒன்றையோ செய்ததாகக் குற்றம் சாட்டப்படும் நபர்கள் இனப்படுகொலை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள தரப்பினர் மீது சட்ட அதிகாரம் உள்ள சர்வதேச தண்டனைத் தீர்ப்பாயத்தால் - அத்தீர்ப்பாயத்தின் சட்ட அதிகாரத்தை மேற்சொன்ன தரப்பினர் ஒப்புக் கொண்டிருக்கும் பட்சத்தில் - விசாரணை செய்யப்பட வேண்டும்.*

இந்தச் சட்ட விதியை வரைவதற்குக் காரணம் இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு நியூயார்க்கிலும், டோக்கியோவிலும் அமைக்கப்பட்ட போர்க் குற்றத் தீர்ப்பாயங்கள் (War Criminal Tribunal) சர்வதேச அமைப்பில் பங்கேற்றவர்களிடம், ஒரு நிரந்தரமான சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் (International Criminal Court) உடனடியாக வந்தே தீரும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்ததுதான். எனினும், அமெரிக்காவின் தலைமையிலிருந்த நாடுகளுக்கும் சோவியத் யூனியனின் தலைமையிலிருந்த சோசலிச நாடுகளுக்கும் இடையே நடந்து வந்த கெடுபிடிப் போர்க்கால கட்டத்தில் (Cold War Era) உலகம் எதிரெதிர் துருவங்களாகப் பிரிந்து நின்ற சூழலில் நிலவிய அரசு இறையாண்மைக் காரணங்களால் திட்டமிடப்பட்ட சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் உருவாகவில்லை. சோவியத் யூனியன் உடைந்து சிதறியதற்குப் பிறகும், யுகோஸ்லாவியா, ருவாண்டா ஆகிய நாடுகளில் பின்னர் ஏற்பட்ட நிகழ்வுகளுக்குப் பிறகும் ஒரு சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்து வலுப்படத் தொடங்கியது.[278] இந்த இரண்டு நாடுகளில் நிகழ்ந்த இனக்குழு மோதல்கள், இனப்படுகொலைத் தன்மையைக் கொண்டிருந்ததால், சர்வதேசக் குற்றவியல் தீர்ப்பாயங்கள் உருவாவதற்குக் காரணமாக இருந்தன. யுகோஸ்லாவியாவிற்கான தீர்ப்பாயம் (Tribunal of Yugoslavia) 1993 மே மாதம் நிறுவப்பட்டது. போஸ்னியாவில் உள்ள ஓமார்ஸ்கா (Omarska) என்னுமிடத்திலிருந்த மரணமுகாமின் முதன்மைத் தளபதியான Z.மீகிச் (Z.Meakic) என்பவர் இனப்படு



படிப்பகம்

www.padippakam.com

கொலைக் குற்றம் செய்தார் என்று அத்தீர்ப்பாயம் தீர்ப்பு வழங்கியது. 07.05.1997 அன்று அத்தீர்ப்பாயம் டி.டாடிச் (D.Tadic) என்பவருக்கு, இனப்பாகுபாடு காட்டும் நோக்கத்துடன் கொலை செய்ததற்காகவும் சிறை முகாம்களில் இருந்த கைதிகளை அடித்துத் துன்புறுத்தியதற்காகவும் தண்டனை வழங்கியது. இனப்படுகொலைக் குற்றம் என்பதற்காக அத்தண்டனை வழங்கப்படவில்லை.[279] ருவாண்டாவுக்கான தீர்ப்பாயம் (Tribunal of Rwanda) 08.11.1994-இல் நிறுவப்பட்டது. ஆனால், இதுவரை அது எந்தவொரு இறுதித் தீர்ப்பையும் வழங்கவில்லை. இந்தத் தீர்ப்பாயங்கள் ஒரு தற்காலிக அடிப்படையிலேயே நிறுவப்பட்டன. மேற்சொன்ன இருநாடுகளுக்கு மட்டும் அவற்றின் செயல்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் இருப்பு, அவற்றுக்கு ஆதரவு தருவதிலும், அவற்றை நிறுவுவதிலும் அய்.நா. பாதுகாப்பு அவைக்குள்ள அரசியல் உறுதிப்பாட்டையே சார்ந்துள்ளது. இந்தத் தீர்ப்பாயங்களை நிறுவியதைப் பல்வேறு சர்வதேச வழக்கறிஞர்கள் வரவேற்றுள்ளனர். எனினும், அவற்றின் தற்காலிகத் தன்மை குறித்து அவர்கள் கவலை கொள்கின்றனர். இக்காரணத்தாலேயே, ஒரு நிரந்தரமான சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தை நிறுவ வேண்டும் என்ற கோரிக்கை புதிய வலுவைப் பெற்றுள்ளது. அய்.நா. பொது அவையின் ஆறாவது குழு (Sixth Committee of the UN General Assembly) *நிரந்தர சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தை அமைப்பதற்காக* 1945-இல் முதலில் உருவாக்கப்பட்ட தயாரிப்புக் குழுவின் (Preparatory Committee) கட்டளையைப் புதுப்பிக்கும் வகையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. ஒரு நிரந்தர சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் உருவாக்கப்படும் என்றும் முழு அதிகாரம் கொண்டவர்களின் (Plenipotentiaries) மாநாடு 1998-இல் நடைபெறும் என்றும் கூறும் தீர்மானம் எண்.A/C6/51/L10 29.11.96 அன்று நிறைவேற்றப்பட்டது. அத்தகைய நீதிமன்றத்திற்கான அமைப்பு விதிகளின் முன்வரைவு (Draft Statues) இனப்படுகொலை, ஆக்கிரமிப்பு, ஆயுதப் போராட்டங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சட்டங்கள், மரபுகள் ஆகியவற்றைக் கடுமையாக மீறுதல்கள், மனித குலத்திற்கெதிரான குற்றங்கள், பல்வேறு (சர்வதேச) ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் ஆகியன தொடர்பான சட்ட அதிகாரத்தை உள்ளடக்கியுள்ளது.[280]


பொருளாதாரத் தடையை எதிர்த்து ஆர்ப்பாட்டப் பேரணி

சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தை நிறுவுவதற்கு அரசுகளிடமிருந்து பரவலான ஆதரவு கிடைத்து வருவதால் விரைவில் அது நிறுவப்படக்கூடும். இனப்படுகொலை செய்வோரைத் தண்டிப்பதற்கு அது அனுமதி வழங்கும். இத்தகைய அதிகாரங்கள் அதற்குக் கிட்டினாலும் அரசுகளிடமிருந்து ஒத்துழைப்பைப் பெறுதல், இனப்படுகொலை புரிவோரைக் கண்டறிந்து கைது செய்தல் என்பன போன்ற நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டே தீரும். ஆனால், இவை சர்வதேச அமைப்பிலேயே உள்ளார்ந்த இடர்ப்பாடுகளாகும். போதுமான அளவுக்கு அதிகாரமும் சர்வதேசக் கைது ஆணைகளை (International arrest Warrants) நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அரசியல் ஆதரவும் வழங்கப்பெற்ற ஒரு சர்வ்தேசப் போலீஸ் படையை நிறுவுவதன் மூலமே இந்த இடர்ப்பாடுகளைக் கடக்க முடியும். அதுவரை இந்த இடர்ப்பாடுகள் தவிர்க்க முடியாதவையாக இருக்கும்.

எப்படியிருப்பினும், சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் நிறுவப்படுவது சர்வதேசக் குற்றங்களைச் செய்பவர்களின் செயல்களைச் சர்வதேச சமூகம் சகித்துக் கொள்ளாது என்ற வலுவான எச்சரிக்கையாக அமையும் என்று



படிப்பகம்

www.padippakam.com

பரவலாகக் கருதப்படுகிறது. மேலும், சர்வ தேச நீதிமன்றத்தால் ஒரு அரசாங்கம் குற்றம் சாட்டப்படுமானால், அது சர்வதேச சமூகத் தின் மீது - குறிப்பாக அய்.நா. மீது - மென்மே லும் நிர்ப்பந்தங்களைக் கொண்டு வந்து, குற் றம் சாட்டப்பட்ட அரசாங்கமோ அல்லது தனி நபர்களோ மேலும் சர்வதேசக் குற்றங்களைச் செய்யாமல் தடுத்து நிறுத்தும்.

இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத் தில் அதனை நடைமுறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள வழிமுறைகள் செயல்தி றனற்றவை. ஏனெனில், இனப்படுகொலை யைத் தடுக்கவும் அதற்குத் தண்டனை வழங்க வும் கூடிய திட்டவட்டமான வழிமுறை ஏதும் அவற்றில் இல்லை. மேலும், மேற்சொன்ன ஒப்பந்தத்தின் மூலக் குறிக்கோளை நிறைவேற் றுவதற்கும் போதுமானவையாக அந்த வழிமு றைகள் இல்லை. குறிப்பாக, உலகு தழுவிய அதிகாரம் ஏதும் இல்லை. இதுவரை ஏற்படுத் தப்படாததும் இனிவரும் நாட்களில் ஏற்படுத் தப்படப் போவதாகவும் உள்ள சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம், இனப்படுகொலை ஒப்பந்தத்தில் அதனை நடைமுறைப்படுத்துவ தற்கான வழிமுறைகளில் ஓர் அடிப்படை யான மாற்றம் ஏற்படும் என்பதற்கான அறிகு றிபோல் தோன்றுகிறது. யுகோஸ்லாவியாவி லும் ருவாண்டாவிலும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் பின்னணியில் இனப்படுகொலை மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் என்பன வற்றுக்கான வரையறை விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று கருத்து வலுப்பெற்று வருகி றது. அந்த நிகழ்ச்சிகள் பல்லாண்டுகளாகச் செல்லரித்துப் போயிருந்த இனப்படுகொ லைத் தடுப்பு ஒப்பந்தத்திற்குப் புத்துயிரூட் டும்படி தூண்டுதல் தந்தன. தற்சமயம் அந்த ஒப்பந்தத்திலுள்ள உட்பிரிவுகள் அதை வரை வதிலிருந்த கடந்த காலக் குறைபாடுகளின் எச்சங்களாக இருந்தபோதிலும், அவையே சட் டமாக நிலைநாட்டப்படக் கூடியனவாக உள் ளன.

எனவே, அதனைக் குறித்த முந்தைய விமர்ச னம் இன்னும் பொருத்தப்பாடு உடையதா கவே உள்ளது. அதாவது, அந்த ஒப்பந்தம் அரசு இறையாண்மைக்கு மிதமிஞ்சிய முன்னு ரிமை தருகிறது; தனிநபர்களின் அல்லது குழுக் களின் காட்டுமிராண்டித்தனமான கடந்தகாலத் தீயச் செயல்களுக்கான எதிர்ப்பைப் பதிவு செய்வதல்லாமல், அவற்றைத் தடுப்பதற்கோ அல்லது ஒடுக்குவதற்கோ வழிவகை செய் யாத ஒப்பந்தமே அது என்பதுதான் அந்த விமர்சனம். சர்வதேச சமுதாயம் இனப்படு கொலைக் குற்றங்களுக்கு எதிராகக் காத்திர மான முறையில் போராட வேண்டுமானால், அது மேற்சொன்ன விமர்சனத்திற்கு முகங் கொடுத்தாக வேண்டும். ❑

---

[262] see A.Cassese: Human Rights, p.77
[263] see L.Kuper: Prevention of Genocide, p.104, who argues that gross violations of human rights should be considered as constituting a threat to peace according to Article 39 of UN-Charter.
[264] Such measures may include complete or partial interruption of economic relations and of rail, sea, air, postal, telegraphic, radio, and other means of communication, and the severance of diplomatic relations as well as demonstrations, blockade, and other operations by air, sea, or land forces of Members of the United Nations.
[265] see UN: The UN and Human Rights, 1945-1995, 1995
[266] see Amnesty International: Agenda for a new United Nations High Commissioner for Human Rights, April 1997. pp.2-7
[267] see ibid., p.3
[268] Resolution 1503 of the Economic and Social Council, 29/5/1970
[269] see A.H.Robertson and J.G.Merrils: Human Rights, pp.74-78, and UN: UN Action, pp.23,24,312-314
[270] Resolution 1235 of the Economic and Social Council, 6/6/1967
[271] see A.H.Robertson and J.G.Merrils: Human Rights. pp.78,79
[272] see ibid. pp 84-87, and UN: UN Action, pp.21,22,72,73,94,95
[273] see ICJ Rep. 1993, order of 8/4/1993 at para 52 A and B and reaffirmed in second order of 13/9/1993, at para 61
[274] see ICJ Rep. 1993, order of 8/4/1993 at para 45
[275] see J.H.Bello: International Decisions: Application of the Convention on the Prevention and Punishment of the Crime of Genocide ( Bosnia-Herzegovina v. Yugoslavia), Preliminary Objections, Judgement, International Court of Justice, July 11, 1996 in: The American Journal of International Law, Vol.91, 1997, pp.121-126
[276] UN Special Rapporteur 1985,: pp.27, 56
[277] see A.Cassese: Human Rights, p.77
[278] see S.Grant: Dispensing International Justice: The Yugoslav and Rwandan Criminal Tribunal in: Interights Bulletin,Volume 9, No.2, 1995, pp.61-65
[279] see Christopher Bellamy: Bosnian Serb found guilty of war crimes in: Independent, May 8 1997
[280] see UN Doc. A/49/335, 1 September 1994



படிப்பகம்

www.padippakam.com

# இனப்படுகொலையைத் தடுப்பதிலும் அதற்குரிய தண்டனையை வழங்குவதிலும் அய்.நா. மேற்கொண்ட நடவடிக்கைகள்

அய்.நா. அவை நிறுவப்பட்டதிலிருந்து இன்றுவரை இனப்படுகொலைகள் எனக் கூறத்தக்க எண்ணற்ற கொடூரச் செயல்கள் நடந்துள்ளன. அவை அனைத்துமே இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தில் இனப்படுகொலை பற்றிக் கூறப்பட்டுள்ள வரையறைக்குள் வரவில்லை. அந்தக் கொடூரச் செயல்களில் கீழ்க்கண்டவையும் அடங்கும். 1)1960-ஆம் ஆண்டில் காங்கோ தேசிய இராணுவத்தால் நூற்றுக்கணக்கான பலுபா இனமக்கள் படுகொலை செய்யப்பட்டமை;[281] 2)புருண்டியில் 1965, 1972-ஆம் ஆண்டுகளில் டுட்ஸி இனத்தவரால் ஹுட்டு இனத்தவர் ஒழித்துக்கட்டப்பட்டமை;[282] 3)பங்களாதேஷ் என்று இப்போது அழைக்கப்படும் தேசத்தினரை 1971-இல் பாகிஸ்தான் இராணுவம் கொன்றமை;[283] 4)பராகுவே அரசாங்க அதிகாரிகளின் உடந்தையுடன் 1970-1974-ஆம் ஆண்டுகளில் அபாச்செ இந்தியர்கள் கொல்லப்பட்டமை;[284] 5)1971-1978-ஆம் ஆண்டு காலத்தில் உகாண்டாவில் இடி அமீனின் ஆட்சி, அரசியல் எதிர்ப்பாளர்கள் மீதும் வேறு இனக்குழுக்களைச் சேர்ந்த எதிர்ப்பாளர்கள் மீதும் புரிந்த வன்கொடுமைகள்;[285] 6)1975-1978-ஆம் ஆண்டுகளில் கம்போடியாவில் கெமர் ரூஜ் அரசாங்கம் கருத்தியல் காரணங்களுக்காக ஏறத்தாழ 20 இலட்சம் மக்களை ஒழித்துக் கட்டியமை;[286] 7)லெபனானில் பாலஸ்தீனியர்கள் படுகொலை செய்யப்பட்டமை; இதனைத் தடுப்பதற்கு இஸ்ரேலிய ஆயுதப்படைகள் ஏதும் செய்யாமலிருந்ததன் மூலம் மறைமுகமாக உடந்தையாக இருந்தன.[287] 8)சதாம் ஹுசேனின் படைகள் விமானக் குண்டுவீச்சின் மூலம் இரசாயன ஆயுதங்களைக் கொண்டு ஆயிரக்கணக்கான இராக் குர்து மக்களைக் கொன்றமை;[288] 9)மிக அண்மைக் காலத்தில் போஸ்னிய முஸ்லிம்களை யுகோஸ்லாவியா - குறிப்பாக செர்பியப் படைகள் - கொன்று குவித்தமை;[289] 10)ருவாண்டாவில் டுட்ஸி மக்கள் மீது ஹுட்டுகள் இழைத்த வன்கொடுமைகள்;[290] 11)கிழக்கு திமோரில் தொடர்ந்து நடைபெற்று வரும் ஒடுக்குமுறை;[291] 12)திபெத்,[292] தெற்கு சூடான்,[293] துருக்கியிலுள்ள குர்திஸ்தான்[294] ஆகியவற்றில் முறையே இந்தோனேசிய, சீன, சூடான், துருக்கி அரசாங்கங்கள் நடத்தி வரும் ஒடுக்குமுறைகள்.

இன்னும் அடுக்கிக் கொண்டே போகக்கூடிய இனப்படுகொலைப் பட்டியலை முழுமைப்படுத்துவதற்கு ஸ்ரீலங்காவில் தமிழர்களுக்கு எதிராகச் செய்யப்படும் இனப்படுகொலைச் செயல்களையும்[295] இங்கு சேர்த்தாக வேண்டும். நினைத்தே பார்க்க முடியாத துன்பங்களுக்கும் பல லட்சக்கணக்கானோரின் சாவுகளுக்கும் காரணமான இந்தக் கொடுங்குற்றங்களைக் காண்கையில், இனப்படுகொலைக் குற்றங்களைத் தடுப்பதும் அவற்றுக்குரிய தண்டனைகளை வழங்குவதும் அய்.நா.வின் செயல்பாடுகளில் முன்னுரிமை தரப்பட வேண்டியது ஒன்றாகும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே.

இந்த எதிர்பார்ப்புக்கு நேர்மாறானதாகவே இதுவரை அய்.நா. நடந்து கொண்டிருக்கிறது. இனப்படுகொலை மீதான அய்.நா.வின் நடவடிக்கைகள் தோல்வியடைந்துள்ளன என்ற விமர்சனம் பலமுறை எழுந்துள்ளது.[296] இனப்படுகொலை தொடர்பாக அய்.நா. மேற்கொண்ட நடவடிக்கைகள் இந்த விமர்சனத்தை உறுதிப்படுத்துகின்றன.

1960-இல் அன்றைய அய்.நா. பொதுச் செயலாளரான டாக் ஹாம்மெர்ஸ்க்யோல்ட் (Dag Hammerskjold) அவசர வேண்டுகோள்கள் விடுத்தும்கூட, அய்.நா. பாதுகாப்பு அவை காங்கோவில் துருப்புகள் தலையிடக்கூடாது என்று முடிவு செய்தது.[297] 1971-இல் பாகிஸ்தான் துருப்புகள் பங்களாதேஷ் மக்களை இனப்படுகொலை செய்தபோது அய்.நா. பொது அவையோ, பாதுகாப்பு அவையோ எந்தத் தீர்மானகரமான நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. சர்வதேச மனித அமைப்புகள் வேண்டுகோள்கள் விடுத்தும் கூட, சிறுபான்மையினருக்கு எதிராகப் பாரபட்



படிப்பகம்

சம் காட்டப்படுவதைத் தடுப்பதற்கும் அவர்களைப் பாதுகாப்பதற்குமான துணை ஆணையம் நடவடிக்கை எடுக்கத் தவறியது.[298] புருண்டியில் நடந்த இனப்படுகொலை, பராகுவேயில் அபாச்செ இந்தியர்கள் கொல்லப்பட்டமை, உகாண்டா, கம்போடியா ஆகியவற்றில் நடந்த வன்கொடுமைகள் ஆகியவற்றிலும் கூட தீர்மானகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.[299]

கெடுபிடிப்போர் (Cold war) முடிவடைந்த பிறகு உடனடியாக உருவான உலகச்சூழல், இரண்டு கொடூரமான இனமோதல்களை எதிர் கொண்டது. அவை அய்.நா.வை, முன்னை விட வலுவான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி செய்தன. மேலும், இராக்கில் குர்து மக்களுக்கு எதிராகச் செய்யப்பட்ட இனப்படு கொலைச் செயல்கள், இனப்படுகொலையைத் தடுப்பதற்கான புதிய வழிமுறைகளைக் கண்டறியும்படி செய்தன.

யுகோஸ்லாவியாவில், சமாதானபூர்வமான தீர்வைக் கொண்டு வருவதில் அய்.நா. பாதுகாப்பு அவை தீவிரமாக ஈடுபட்டது. அது மேற்கொண்ட முயற்சிகள், அது அனுப்பி வைத்த அமைதி காக்கும் படைகள் ஆகியன ஓரளவுக்கேனும் மேலதிக யுத்தக் கொடுமைகள் நிகழாவண்ணம் தடுத்தனவென்ற போதிலும், இறுதியில் அய்.நா. போரைத் தடுப்பதிலும் இனப்படுகொலையைத் தடுப்பதிலும் தோல்வியே கண்டது. அய்.நா.வின் நடவடிக்கைகள் குறைபாடானவை என்பது சரியான விமர்சனமேயாகும். ஏனெனில், அய்.நா. கடைப்பிடித்த மூலஉத்தி, சண்டையின் வீச்சையும் விரிவையும் வரம்புக்குட்படுத்துவதாக இருந்ததேயன்றி, தொடக்கத்திலேயே போரைத் தீவிரமாகத் தடுத்து நிறுத்துவதாகவோ அல்லது ஒரு நீண்டகாலத் தீர்வை வழங்குவதாகவோ இருக்கவில்லை. ருவாண்டாவில் அய்.நா. மேற்கொண்ட நடவடிக்கைக்கும் இது பொருந்தும். இரண்டு நாடுகளிலுமே அய்.நா., ஏற்கனவே சேதம் விளைந்திருந்த இடங்களில் மனிதாபிமான அடிப்படையில் நிவாரணம் வழங்குவதற்குத்தான் முன்னுரிமை கொடுத்தது. கொந்தளித்துக் கொண்டிருந்த இனமோதல் இனப்படுகொலையாக வளர்ச்சி பெறுவதைத் தடுப்பதற்கான வழிமுறைகளை வகுப்பதற்கான விரைவான அரசியல் நடவடிக்கைக்கு அது முன்னுரிமை தரவில்லை.[300] இருப்பினும், இரண்டு நாடுகளிலும் நடந்த நிகழ்வுகள் சர்வதேசக் குற்றவியல் தீர்ப்பாயங்கள் (International Criminal Tribunal) நிறுவப்படுவதற்குத் தூண்டுகோலாய் இருந்தன. தண்டனை வழங்குதல் என்பது நீதி வழங்குவதற்கான வழிமுறை, எதிர்காலத்தில் இத்தகைய குற்றங்கள் நடக்காமல் தடுப்பதற்கான வழிமுறை என்று கருதப்படுமானால், நிச்சயமாக இந்த சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றங்களை நிறுவியதானது ஒரு ஆக்கப்பூர்வமான நடவடிக்கை என்றே கருதப்பட வேண்டும்.

வளைகுடாப் போருக்குப் பிறகு இராக்கிலுள்ள குர்து மக்கள் மீது இராக் துருப்புகள் நடத்திய தாக்குதல், நேசநாட்டுப் படைகள் 1991-இல் குர்து மக்களுக்கான ஒரு பாதுகாப்பான பிரதேசத்தை எல்லை வகுத்துக் கொடுக்கும்படி செய்தது. மேலும், இராக்கின் வடபகுதியிலுள்ள குர்து பிரதேசத்திற்கு இராக்கின் விமானங்கள் செல்வதைத் தடுக்கும் பொருட்டு இராக் விமானங்கள் பறக்கக்கூடாத பகுதி ஒன்றும் வரையறுக்கப்பட்டது. இந்தப் பிரதேசத்தில் துருக்கிக்கும் ஈரானுக்கும் இடையில் ஒன்றுக்கொன்று முரண்பட்ட அரசியல் நலன்கள் இருப்பதாலும், பல்வேறு ஆயுத மேந்திய குர்து குழுக்களிடையே நடக்கும் சண்டைகளில் இராக் துருப்புகள் மீண்டும் மீண்டும் தலையிடுவதாலும், இராக்கிலுள்ள குர்திஸ்தான் பகுதியில் நிலைமை பதட்டமானதாகவே உள்ளது. இருப்பினும், அங்கு மேற்

> எந்தச் சூழ்நிலைமையிலும், ஒரு நாட்டின் வாழ்வையே அச்சுறுத்துகிற பொது நெருக்கடிக் காலத்திலும் கூட, உயிர் வாழ்வதற்கான உரிமையை உயர்த்திப் பிடிக்கும் கடமையை மீறுதல் என்பது ஏதும் இருக்கக்கூடாது.
>
> — சர்வதேசக் குடிமை, அரசியல் உரிமைகள் ஒப்பந்தம் (ICCRP) விதி 4. (இந்த ஒப்பந்தத்தில் 1980-இல் ஸ்ரீலங்கா கையெழுத்திட்டுள்ளது).

www.padippakam.com

கொள்ளப்பட்ட புதிய வகையான நடவடிக்கைகள் குறைந்தபட்சம் அங்குள்ள மக்களுக்கு தற்காலிகப் பாதுகாப்பையேனும் வழங்கியுள்ளதுடன் அப்பகுதியில் குர்து மக்கள் ஏதோ ஓரளவிற்கு சுயாட்சி செலுத்துவதையும் சாத்தியமாக்கியுள்ளது.[301]

மேற்சொன்ன வழிமுறைகளைப் பயன்படுத்தியும் அவற்றை மேலும் செழுமைப்படுத்தியும் மேலும் பயன்மிக்க நடவடிக்கைகளை எதிர்கால இனப்படுகொலை விவகாரங்களில் அய்.நா. மேற்கொள்வதற்கான வாய்ப்பு இருப்பதாகத் தெரிகிறது. எனினும், கெடுபிடிப் போர் முடிவடைந்து விட்டபோதிலும் அய்.நா.விற்குள் ஒரு புறநிலையான அளவுகோல்களின் அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்படுவதில்லை. அரசியல் நலன்களும் அரசியல் காரணங்களுமே இன்றும்கூட அய்.நா. விற்குள் உள்ள மிகச் செல்வாக்குமிக்க சக்திகள், குறிப்பாக பாதுகாப்பு அவை மேற்கொள்ளும் முடிவுகளுக்கான அடிப்படையை வழங்கும் முதன்மையான அம்சங்களாக விளங்குகின்றன. அதனால்தான், தெளிவாகத் தெரிகின்ற வகையில் எந்த நேரத்திலும் வெடிக்கவிருக்கின்ற இனப்படுகொலையாகட்டும் அல்லது ஏற்கனவே நடந்து கொண்டிருக்கிற இனப்படுகொலையாகட்டும், அது குறித்து எத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பது சர்வதேசக் களத்தில் முதன்மைப் பாத்திரம் வகிப்போருடன் ஒரு குறிப்பிட்ட நாடு கொண்டிருக்கும் அரசியல் உறவையே சார்ந்துள்ளது. பொதுவாகச் சொல்லப்போனால், இப்போதும்கூட அய்.நா. எதிர்வினையாற்றுவதற்கே முன்னுரிமை கொடுப்பதாகத் தோன்றுகிறது. அதாவது, ஒரு சண்டை தொடக்க நிலையில் இருக்கும்போது, தானாகவே முன்வந்து, அதில் தலையிடுவதைவிட - சாத்தியமானால் பலவந்தமாகத் தலையிடுவதைவிட - சண்டை நடக்கும்போதோ அல்லது சண்டைக்குப் பிறகோ மனிதாபிமான அடிப்படையில் நிவாரணம் வழங்குவதற்கே முன்னுரிமை தந்து வருவதாகத் தோன்றுகிறது.

❑

---

281 see A.Cassese: Human Rights, p.79

282 see L.Kuper: International Action against Genocide, p.10 and R.Lemarchand: Rwanda and Burundi, Praeger, New York, 1970

283 see ibid.,p.6 and K.Chaudhuri: Genocide in Bangladesh, Orient Longman, Bombay,1972

284 see ibid.p.9 and R.Arens, ed.: Genocide in Paraguay, Temple University Press, Philadelphia, 1976

285 see ibid., p.10 and International Commission of Jurists: Uganda and Human Rights, Geneva, 1977

286 see B.Kierman: The Cambodian Genocide in:G.J.Andrepoulos: Genocide, pp.191-228

287 see A.Cassese: Human Rights, p.84

288 see M.V.Bruinessen: Genocide in Kurdistan? in:G.J.Andrepoulos: Genocide, pp.141-170

289 see Ian Traynor: Judgement day for Hague court in: Guardian, 7 May 1997, p.11

290 see T.Sellstroem: The International Response to Conflict and Genocide: Lessons from the Rwanda Experience, Copenhagen, 1996

291 see F.Chalk&K.Jonassohn:History and Sociology of genocide, p.12 and J.Dunn: East Timor: A case of cultural genocide in: G.J.Andreopolous: Genocide, pp.171-190

292 see H.Josephin, K.J.Harvey, J.Denise and M.E.Landorgan: Independence for Tibet: an international law analysis in: China Law Reporter 1994, pp.21-72

293 see Human Rights Watch/Africa: Behind the red line: political repression in Sudan. New York, 1996

294 see recent case law of the European Court on Human Rights, finding Turkey in breach of several Convention articles, in particular concerning its policy of destroying Kurdish villages, killing Kurdish civilians, and its torture practices

295 see L.Kuper: International Action against Genocide, p.15 , A.Cassese: Human Rights, p.80 and I.W.Charny: Towards a Generic Definition of Genocide in: G.J.Andreopoulos: Genocide, p.64

296 see L.Kuper: International Action against Genocide, p.11

297 A.Cassese: Human Rights, pp.81-83

298 see L.Kuper:International Action against Genocide, p.10

299 see ibid. pp.10,11

300 see T.Findley: Armed conflict prevention, management and resolution in: SIPRI Yearbook 1995, pp.37-82, see also: J.Karhilo: Case study on peacekeeping: Rwanda in: SIPRI 1995, pp.100-116 and M.Zucconi: The former Yugoslavia: Lessons of war and diplomacy in: SIPRI 1995, pp.211-229

301 see H.Cook: The Safe Haven in Northern Iraq, Human Rights Centre, Essex, KHRP, London, 1995



படிப்பகம்

www.padippakam.com

# ஸ்ரீலங்காவில் அய்.நா.வின் தலையீடு

அய்.நா.வின் அமைப்புகள் யாதொன்றும் இனப்படுகொலைச் செயல்களைத் தடுப்பதற்காக ஸ்ரீலங்காவில் தலையிடவில்லை. அங்கு நடக்கும் இனப்படுகொலைச் செயல்களுக்குப் பொறுப்பானவர்களை விசாரணைக்கு உட்படுத்துவதற்கு எந்தவொரு சர்வதேசக் குற்றவியல் தீர்ப்பாயமும் நிறுவப்படவில்லை. ஸ்ரீலங்காவில் நடக்கும் நிகழ்வுகள் சர்வதேசப் பரிமாணங்கள் கொண்ட உள்நாட்டுச் சண்டைகள் என்ற வகையினத்தின் கீழ் வந்தபோதிலும், ஸ்ரீலங்காவிற்கு அமைதி காக்கும் துருப்புகளை அனுப்புவதற்கு அய்.நா. பாதுகாப்பு அவையோ அல்லது அய்.நா. பொதுச்செயலாளரோ எந்த முன்முயற்சியும் மேற்கொள்ளவில்லை. சண்டையில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரும் சமாதானத்தை நாடினாலொழிய தங்களால் தலையிட முடியாது என்று அய்.நா. அதிகாரிகளும் அய்.நா.வில் உறுப்பியம் வகிக்கும் அரசுகளும் திரும்பத் திரும்பக் கூறியுள்ளன.[302] சமாதானப் பேச்சு வார்த்தைகளில் ஏற்பட்டுள்ள தேக்கம், உள்நாட்டுத் தகராறில் எவ்வகையான மூன்றாவது தரப்பும் தலையிடுவதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் காட்டிவரும் எதிர்ப்பு ஆகியன எந்தவொரு அய்.நா. சமாதானக் குழுவும் ஸ்ரீலங்காவுக்குச் செல்ல முடியாதபடி செய்கின்றன. அய்.நா.வில் உறுப்பியம் வகிக்கும் அரசுகள் குறிப்பிட்ட அரசியல் நோக்கங்களுக்காக ஸ்ரீலங்காவில் தலையிடாமல் இருப்பதும் இதற்கு ஒரு காரணமாகும்.

போருக்கு முன்பும், போர் நடக்கும்போதும் மனித உரிமைகள் எவ்வாறு மீறப்பட்டுள்ளன என்ற அடிப்படையில் ஸ்ரீலங்காவில் நடக்கும் நிகழ்வுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. தமிழ் பேசும் மக்கள் மீது நடத்தப்பட்டும் வகுப்புவாத வன்முறை குறித்த ஒரு தீர்மானத்தை அய்.நா.வின் துணை ஆணையம் (சிறுபான்மையினருக்கு எதிராகப் பாரபட்சம் காட்டப்படுவதைத் தடுப்பதற்கும் அவர்களைப் பாதுகாப்பதற்குமான துணை ஆணையர்) இயற்றியது. அத்தீர்மானம் மேற்சொன்ன வன்முறை குறித்த தகவல்களைத் தனக்கு அனுப்ப வேண்டும் என்று ஸ்ரீலங்காவையும், ஸ்ரீலங்கா நிலைமைகளை ஆய்வு செய்ய வேண்டும் என்று அய்.நா. மனித உரிமை ஆணையத்தையும் கேட்டுக் கொண்டது.[303] உலகு தழுவிய அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மனிதாபிமானச் சட்ட விதிகளை மதிக்கும்படியும் பலவந்தத்தையும் வன்முறையையும் கைவிட்டு விட்டு பேச்சு வார்த்தை மூலம் அரசியல் தீர்வை நாடுமாறும் 1987-இல் அய்.நா. மனித உரிமை ஆணையம் சண்டையில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரையும் கேட்டுக் கொண்டது.

1980கள் நெடுக, அய்.நா.வைச் சேர்ந்த கீழ்க்கண்ட அமைப்புகள், ஸ்ரீலங்காவில் காணாமல் போனவர்கள் (1989-ஆம் ஆண்டில் இறுதி வரை காணாமல் போனவர்களின் எண்ணிக்கை 936 ஆகும்), சித்திரவதை, காவல்நிலைய மரணங்கள், நீதிமன்ற முறைக்குப் புறம்பாகக் கொல்லப்படுதல்கள் ஆகியன குறித்த பிரச்சினைகளை எழுப்பின: 1)பலவந்தமாகவும் விருப்பத்திற்கு மாறாகவும் காணாமல் போகும்படி செய்யப்படுவது குறித்த அய்.நா. நடவடிக்கைக்குழு (UN Working Group on Forced and Involuntary Disappearances); 2)சித்திரவதை குறித்து ஆராயும் சிறப்புப் பொறுப்பாளர் (Special Rapporteur on Torture); 3)நீதிமன்ற முறைக்குப் புறம்பாகவும் உடனுக்குடனும், தன்னிச்சையாகவும், மரணதண்டனை வழங்குவது குறித்து ஆராயும் அய்.நா. சிறப்புப் பொறுப்பாளர் (UN Special Rapporteur on Extra-judicial, Summary and Arbitrary Executions)[304]. மேற்சொன்ன இரண்டு சிறப்புப் பொறுப்பாளர்களும்[305] 1990களில் ஸ்ரீலங்கா நிகழ்வுகளைத் தொடர்ந்து பதிவு செய்து வந்ததுடன், ஸ்ரீலங்கா அரசாங்கத்திடமும் அப்பிரச்சினைகளை எழுப்பி வந்தனர்.[306] தன்னிச்சையாகக் கைது செய்தல் குறித்து ஆராயும் நடவடிக்கைக்குழு[307], மதச் சகிப்பின்மையை ஒழித்தல் குறித்த சிறப்புப் பொறுப்பாளர்[308], உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் குறித்த சிறப்





படிப்பகம்

www.padippakam.com

புப் பொறுப்பாளர்[309] ஆகிய அய்.நா. அமைப்புகளும்கூட அறிக்கைகள் வெளியிட்டன. அதேபோல உள்நாட்டிலேயே தமது வாழிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இடம் பெயர்ந்தவர்கள் பற்றிய அறிக்கையொன்றும் வெளி வந்தது.

பலவந்தமாகவும் விருப்பத்திற்கு மாறாகவும் காணாமல் போகும்படி செய்யப்பட்டவர்கள் குறித்த அய்.நா. நடவடிக்கைக்குழு 1991, 1992-ஆம் ஆண்டுகளில் ஸ்ரீலங்காவுக்குச் சென்றது.[310] அதனுடைய அறிக்கைகள், காணாமல் போனவர்களின் எண்ணிக்கை பெரும் அளவில் இருப்பது குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்தன. நெருக்கடி நிலை விதிகளிலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்திலும் உலகெங்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள சர்வதேச அளவுகோல்களுக்கு உகந்த வகையில் திருத்தங்கள் செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டவர்களும் குற்றம் சாட்டப்பட்டவர்களும் நீதிமன்ற விசாரணைக்குக் கொண்டு வரப்பட வேண்டும், சர்வதேச அளவுகோல்களின்படி கைதிகள் நடத்தப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்தன. 1996-ஆம் ஆண்டில், மேற்சொன்ன நடவடிக்கைக்குழு, அது நிறுவப்பட்ட 1980-ஆம் ஆண்டிலிருந்து 1998 வரை ஸ்ரீலங்காவில் 11513 பேர் காணாமல் போனதாகத் தன்க்குத் தகவல்கள் வந்துள்ளதாகவும் காணாமல் போதல்கள் மிக அதிக எண்ணிக்கையில் நிகழும் நாடுகளை எடுத்துக் கொண்டால் ஸ்ரீலங்கா இரண்டாவது இடத்தை வகிக்கிறது என்றும் கூறியது.[311] ஸ்ரீலங்காவில் தொடர்ந்து மிகப்பெரும் எண்ணிக்கையில் காணாமல் போதல்கள் நிகழ்ந்து வருவது குறித்தும் கடந்த காலத்தில் காணாமல் போதல் நிகழ்வுகள் குறித்த புகார்களுக்கு தீர்வு காணப்படாமலிருப்பது குறித்தும் தன் கவலையைத் தெரிவித்தது.[312] அக்குழு, காணாமல் போதல்கள் புதிதாகப் பெரும் எண்ணிக்கையில் நிகழ்வது குறித்த தனது கருத்தைக் கீழ்கண்டவாறு கூறியது: *இந்தக் குழுவிற்கு அரசாங்கத்தின் ஒத்துழைப்பு கிடைத்த போதிலும், கடந்த காலத்தில் திட்டமிட்ட முறையில் மனிதர்கள் காணாமல் போகும்படி செய்யும் முறை, மீண்டும் தலைதூக்கியுள்ளது என்று கூறும் செய்திகள் இக்குழுவிற்கு அதிர்ச்சி தருகின்றன.'*[313]

சர்வதேசக் குடிமை, அரசியல் உரிமைகள் ஒப்பந்தத்தின் விதி 40-இல் கூறப்பட்டிருப்பதற்கு ஏற்ப ஸ்ரீலங்கா சமர்ப்பித்த மூன்று அறிக்கைகளை மனித உரிமைக்குழு (Human Rights Committee) இதுவரை ஆய்வு செய்துள்ளது. மூன்றாவது அறிக்கை 24, 25.07.1995ஆம் நாட்களில் ஆய்வு செய்யப்பட்டது.[314] மனித உரிமைக்குழு, தனது பொதுவான கருத்தைத் தெரிவிக்கையில், அந்த அறிக்கை திருப்திகரமானதாக இல்லை என்றும், விரிவான தகவல்கள் அதில் இல்லை என்றும், அது மிகவும் காலந்தாழ்த்தி சமர்ப்பிக்கப்பட்டது என்றும் கூறியது. அக்குழு பின்னர் நெருக்கடி நிலை விதிகள், பயங்கரவாதத் தடைச் சட்டங்கள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்தது. அச்சட்டங்களின் பல அம்சங்களை விமர்சித்து அக்குழுவின் உறுப்பினர்கள் கூறியதாவது: *''ஸ்ரீலங்காவின் உள்நாட்டுச் சட்ட அமைப்பு, மேற்சொன்ன சர்வதேச ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா உரிமைகளையும் உள்ளடக்கவில்லை. அந்த உரிமைகளை வரம்புக்குட்படுத்தும் பிரச்சினையைப் பொறுத்தவரை சர்வதேச ஒப்பந்தம் வகுத்துள்ள வரம்புகளை மீறுவதற்கு எதிரான பாதுகாப்புகளையும் அது உள்ளடக்கவில்லை.''*

மனித உரிமைக் குழுவின் இந்த விமர்சனம் குறிப்பாக மேற்சொன்ன சர்வதேச ஒப்பந்தத்தின் விதி 9-இல் கூறப்பட்டுள்ள உரிமைகளைக் கருத்தில் கொண்டிருந்தது. அந்த விதி, தனிநபர் சுதந்திரம், தனிநபர் பாதுகாப்பு ஆகியவற்றுக்கான உரிமை பற்றிக் கூறுகிறது. தன்னிச்சையாகக் கைது செய்து காவலில் வைப்பதைத் தடுக்கிறது; நீதிமன்றப் பாதுகாப்புகளை வழங்குகிறது. ஒப்பந்த விதி 10, தனிநபர் சுதந்திரம் மறுக்கப்பட்ட அனைவரும் மனிதத் தன்மையுடனும் மனிதர்களின் உள்ளார்ந்த மானுட கௌரவத்தை மதிக்கும் வகையிலும் நடத்தப்பட வேண்டும் என்று கூறுகிறது. மனித உரிமைக் குழுவின் ஆய்வறிக்கையின் மூன்றாவது பகுதி மேற்சொன்ன சர்வதேச ஒப்பந்தத்தில் கண்டுள்ள உரிமைகளை நடைமுறைப்படுத்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைக் குறிப்பிட்டது. அக்குழு கீழ்க்கண்டவற்றைப் பரிந்துரைத்தது: 1)சர்வதே மனித உரிமை ஒப்பந்தங்களில்



படிப்பகம்

www.padippakam.com

குறிப்பிடப்பட்டுள்ள மனித உரிமைகள் மீறப்படும் பட்சத்தில் அவ்வுரிமைகளை நிலைநாட்ட அய்.நா. மனித உரிமை ஆணையம் சர்வதேச நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் வகையில் ஸ்ரீலங்கா அரசு சிறப்பு விருப்ப ஒப்பந்தத்தில் (Optional Protocol)★ கையெழுத்திட வேண்டும்; 2)அரசியல் சட்டத்தை மாற்றி அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்தச் சமயத்தில் மேற்சொன்ன சர்வதேச ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள உரிமைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். குறிப்பாக, மனித உரிமை மீறல்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்; 3)மிக மிகக் கடுமையான குற்றங்களுக்கு மட்டுமே மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதுடன் படிப்படியாக மரணதண்டனை முறையையே ஒழித்துக் கட்டப்பட வேண்டும்; 4)சித்திரவதைக்கு எதிரான ஒப்பந்தம் குறித்த சட்டம், மேற்சொன்ன சர்வதேச ஒப்பந்தத்தின் விதி 7-இல் (சித்திரவதைகள் தடை செய்யப்பட வேண்டும் என்று கூறும் விதி) குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களுக்கு ஏற்ற முறையில் திருத்தப்பட வேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கு ஹேபியஸ் கார்பஸ் நிவாரணம் சரியானபடி கிடைக்காதது குறித்தும், மனித உரிமைகளை மேம்படுத்தவும் பாதுகாப்பதற்குமான அமைப்புகளின் எண்ணிக்கைப் பல்கிப் பெருகி வருவது குறித்தும், கடந்த கால மனித உரிமை மீறல்களைப் புலனாய்வு செய்யும் ஆணையங்களுக்குத் தரப்பட்டுள்ள குறுகலான அதிகாரங்கள் குறித்தும், அந்த ஆணையங்கள் அடிப்படையான நியாயமான நெறிகளின்படி நியமனம் செய்யப்படாதது குறித்தும் மனித உரிமைக் குழு கவலை தெரிவித்தது. மேலும், அக்குழு உறுப்பினர்கள் பலர், அடிப்படை உரிமைகள் மீறப்படுவது குறித்து நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் மனுக்களுக்கு செயல் விளைவுகள் ஏதும் இல்லாமலிருப்பது குறித்தும் பாதுகாப்புப் படையினருக்கு நீதி விசாரணையிலிருந்து தொடர்ந்து விலக்குத் தரப்படுவது குறித்தும் கவலை தெரிவித்தனர்.

09.04.97 அன்று நடந்த அய்.நா. மனித உரிமை ஆணையத்தின் 53ஆவது கூட்டத்தொடரின்போது முன்னெப்போதும் இருந்திராத வகையில் 53 அரசு சாரா அமைப்புகள் (NGOs) ஒன்று சேர்ந்து ஸ்ரீலங்கா - தமிழீழப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்றும், தமிழர்களின் தாயகத்திலிருந்து ஸ்ரீலங்காவின் ஆக்கிரமிப்புப் படைகள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்தன. அய்.நா.வின் பொருளாதார, சமூக அவையில் (Ecosoc) அரசு சாரா அமைப்புகளுக்கு ஆலோசகர் தகுதி உள்ளது. அந்த அரசு சாரா அமைப்புகளில் கீழ்க்கண்டவையும் அடங்கும். 1. ICJ (International Commission of Jurists); 2. WCC (World Council of Churches); 3. IHRLG (International Human Rights Law Group); 4. ILRLP (International League for the Rights and Liberation of Peoples).

அந்த அமைப்புகள் விடுத்த கூட்டறிக்கை, ஸ்ரீலங்காவில் நிலவும் இனப்படுகொலைச்சூழல் குறித்தும் ஸ்ரீலங்காவில் மனிதாபி

★ Optional Protocol : சர்வதேச குடிமை, அரசியல் உரிமை ஒப்பந்தத்திற்கு (International Covenant On Civil And Political Rights - ICCPR) ஒரு துணை ஒப்பந்தமொன்றுள்ளது. மேற்சொன்ன சர்வதேச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகள் தமக்கு விருப்பமிருந்தால், இந்தத் துணை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு அதைத் தங்கள் நாடாளுமன்ற விவாதங்களின் மூலம் தமது நாட்டு அரசாங்கங்கள் ஏற்கும்படி (ratify) செய்யலாம். இத்துணை ஒப்பந்தத்தை ஏற்பது என்பது அந்தந்த நாடுகளின் விருப்பத்தைப் பொறுத்ததாகையால் இதனை விருப்பத் துணை ஒப்பந்தம் (Optional Protocol) என்கிறோம். இத்துணை ஒப்பந்தத்தை ஒரு நாட்டு அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்குமேயானால், எந்தவொரு தனிநபரோ அல்லது தனிநபர்களோ தங்கள் மனித உரிமைகள் மீறப்படுகையில், உள்நாட்டு நீதிமன்றங்களில் நீதி கிடைக்காமற் போனாலோ அல்லது நீதி கிடைக்க வாய்ப்பு இல்லாமற் போனாலோ அய்.நா. மனித உரிமைக் குழுவிடம் (Human Rights Committee) புகார் செய்யலாம். அப்புகார் மீது மனித உரிமைக் குழுவிடம் சம்பந்தப்பட்ட அரசாங்கம் தன் நிலைப்பாட்டை விளக்கக் கடமைப்பட்டுள்ளது. அதன்பிறகு மனித உரிமைக்குழு அப்புகார்கள் பற்றிய தனது கருத்தைப் புகார் கொடுத்தவருக்கும் சம்பந்தப்பட்ட அரசாங்கத்திற்கும் தெரிவிக்கும். இந்தத் துணை ஒப்பந்தத்தை இதுவரை ஏற்காத நாடுகளில் ஸ்ரீலங்காவும் ஒன்றாகும். எனவே இந்நாட்டு அரசாங்கங்களின் மீது தற்போது தனிநபர்கள் மனித உரிமைக்குழுவிடம் புகார் செய்ய வழியில்லை. — மொழிபெயர்ப்பாளர்.



படிப்பகம்

www.padippakam.com

> மிகப்பெரும் மனிதாபிமான நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக, யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் இடம் பெயர்ந்த 250000-த்திற்கும் மேற்பட்ட குடிமக்களுக்கு உடனடியான உதவி வழங்கும்படி ஸ்ரீலங்காவில் சண்டையில் ஈடுபட்டுள்ள இருதரப்பினருக்கும் மற்றும் சர்வதேச சமூகத்திற்கும் அய்.நா. பொதுச் செயலாளர் பூட்ரோஸ் பூட்ரோஸ் காலி வேண்டுகோள் விடுத்துள்ளார்.
>
> — **Srilankan Monitor**, October 1995.

மானச் சட்டமும் மனித உரிமைகளும் மீறப்படுவது குறித்தும் ஆழ்ந்த கவலை தெரிவித்தது. அது கூறியதாவது: *"தமிழ்க் குடிமக்கள் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளுக்கான குறியிலக்காக இருந்து வருகின்றனர்; கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறை, உணவுப் பற்றாக்குறை, மருந்துப் பற்றாக்குறை ஆகியன நிலவும் அதிர்ச்சியூட்டும் நிலைமைகளின், 825000த்திற்கும் மேற்பட்ட இடம் பெயர்ந்த தமிழர்கள் வாழ்கின்றனர்; மக்கள் காணாமல் போதல்கள், நீதிமன்ற முறைக்குப் புறம்பாக கொல்லப்படும் நிகழ்ச்சிகள்; பாலியல் பலாத்காரம், சித்திரவதை, தன்னிச்சையாகக் கைது செய்தல், காலவரையில்லாமல் காவலில் வைத்தல் ஆகியன இந்தப் போர்ச்சூழலில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன."* மேலும், "தமிழ் மக்கள் தங்களது சொந்த அரசியல், தேசிய அந்தஸ்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது கட்டாயமானது" என்று கூறிய அந்தக் கூட்டறிக்கை, "தமிழ் மக்கள் தங்களது அரசியல் அந்தஸ்த்தைத் தீர்மானித்துக் கொள்ளும் உரிமையை அங்கீகரிக்கின்ற" ஒரு அரசியல் தீர்வு ஏற்பட்டாக வேண்டும் என்று கூறியது.[315]

அகதிகளுக்கான அய்.நா. உயர் ஆணையரும் கூட (United National High Commissioner for Refugees), அகதிகளுக்கான மனிதாபிமான உதவி வழங்குதல் என்பதன் மூலம் ஸ்ரீலங்கா விவகாரங்களில் சம்பந்தப்பட்டுள்ளார். ஆயினும் ***1995, 1996***-ஆம் ஆண்டுகளில் அந்த அமைப்பு வெளியிட்ட அகதிகள் மறுவாழ்வுத் திட்டங்களும் அதனுடைய நிலைப்பாடு பற்றிய அறிக்கையும், தமிழ் அகதிகளுக்கு ஸ்ரீலங்கா ஒரு பாதுகாப்பான நாடு என்று அறிவித்தன. எனவே, அவை கடுமையான விமர்சனத்துக்குள்ளாயின.[316]

யாழ்ப்பாண நகரத்தை ஸ்ரீலங்கா இராணுவம் கைப்பற்றியதையடுத்து பல்லாயிரக்கணக்கானோர் அகதிகளாக இடம் பெயர்ந்தால் ஏற்பட்ட நெருக்கடியின் உச்சக்கட்டத்தில் அய்.நா. பொதுச்செயலாளரும் கூட தலையிடவே செய்தார். ஆனால், தமிழ் அகதிகளுக்கு உதவி செய்ய அய்.நா.வின் உதவியை நாடும்படி அவர் விடுத்த வேண்டுகோளுக்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து விட்டது.[317]

❑

---

302 see H.J.Whall: Right to Self-Determination, p.311
303 see L.Kuper: Prevention of Genocide, p.222
304 see UN: UN Actions, p.343 concerning UN actions regarding Sri Lanka in the 1980s
305 see E/CN.4/1996/35 & Add.1
306 see E/CN.4/1996/4
307 see E/CN.4/1997/Add.1 Dec No.1/1996
308 see E/CN.4/1993/62 & Corr.1 and E/CN.4/1995/91 & Add.1
309 see E/CN.4/1994/44/Add.1 and E/CN.4/1995/50
310 see E/CN.4/1992/18/Add.1 of 8/1/1992 and E/CN.4/1993/25/Add.1
311 E/CN.4/1997/34, para.318
312 ibid. para. 323 and 327
313 E/CN.4/1996/38,para 397
314 see UN CCPR/C/79/Add.56, see also discussion of report in: Amnesty International: Sri Lanka Under scrutiny by the Human Rights Committee, December 1995
315 see Geneva: " Withdraw occupying forces from Tamil homeland" Geneva: Call by record number of 53 NGOs in: Hot Spring. April 1997. p.6
316 see Refugee Council: Protection Denied. pp.8,9
317 see Vasantha-Rajah: Tamil Exodus and Beyond. L.Samarasinghe, London. 1996,p.21



படிப்பகம்

www.padippakam.com

# இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த ஸ்ரீலங்கா மேற்கொண்ட நடவடிக்கைகள்

ஸ்ரீலங்காவில் இனப்படுகொலைச் செயல்களுக்காக எவரேனும் குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக இதுவரை ஏதும் தெரியவில்லை.

அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களில் ஒன்றுகூட சுதந்திரமான விசாரணைகள் நடத்தி இனக்கலவரங்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை.[318] 1956, 1958-ஆம் ஆண்டுகளில் நடந்த கலவரங்கள், 1961-இல் தமிழ்ப் பிரதேசங்களில் நடந்த இராணுவ ஆக்கிரமிப்பு, 1974-இல் உலகத்தமிழ் மாநாட்டின் மீது நடைபெற்ற தாக்குதல் ஆகியன ஏதோ ஒரு வகையான இயற்கைப் பேரழிவு போலக் கருதப்பட்டன. இந்தக் கலவரங்களின் போது நடந்த வன்முறைச் செயல்களில் போலீசார் ஒன்று தலையிடாமல் இருந்தனர் அல்லது அவர்களே தீவிரமாகப் பங்கேற்றனர். ஆனால், குற்றங்களைக் கண்டறிந்து தண்டிப்பதற்கான அரசாங்க இயந்திரங்கள் ஏதும் செயல்படவில்லை. 1977-இல் வெளியிடப்பட்ட சான்சோனி ஆணையம் (Sansoni Commission) வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில் குற்றவாளிகள், குற்றம் சாட்டப்பட்டு நீதிவிசாரணைக்குக் கொண்டு வரப்படவில்லை; மாறாக விதிவிலக்கு தரப்பட்டனர். 1981-ஆம் ஆண்டில் கொலைகள், வன்முறைத் தாக்குதல்கள், பாலியல் பலாத்காரம் ஆகியவற்றைச் செய்தவர்களும், கொள்ளையடித்தவர்களும் தண்டிக்கப்படவேயில்லை. 1983-இல் நடந்த கலவரங்களையும் வெளிக்கடை சிறையில் நடத்தப்பட்ட கலவரங்களையும் பற்றிய புலனாய்வு முழுமை பெறவில்லை; குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை. 1988-இல் முன்பாதுகாப்புச் சட்டத் திருத்தம் (Indemnity Amendment Act) நிறைவேற்றப்பட்டது. அது பாதுகாப்புப் படையின் உறுப்பினர்கள் அனைவருக்கும் நீதி விசாரணையிலிருந்து பாதுகாப்புத் தரும் சட்டமேயாகும். 01.08.1977 முதல் 16.12.1988 வரையிலான கால கட்டத்தில் அவர்கள் 'நல்லெண்ணத்தோடும்' 'பொதுநலன்' கருதியும் தங்களுக்குத் தரப்பட்ட உத்திரவுகளை நிறைவேற்றி இருப்பார்களேயானால் அவர்களுக்கு நீதி விசாரணையிலிருந்து பாதுகாப்புத் தரப்படும் என அச்சட்டம் கூறியது.

11.01.1991ஆம் தேதிக்குப் பிறகு சட்டவிரோதமாகக் கடத்தப்பட்ட நபர்கள் குறித்து விசாரணை செய்ய குடியரசுத் தலைவரால் ஓர் விசாரணை ஆணையம் நியமிக்கப்பட்டது. 1990-1995-ஆம் ஆண்டுகளில் செயல்பட்ட அந்த ஆணையம் காணாமல் போன 100 பேர் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளுக்குப் பொறுப்பானவர்கள் குற்றம் சாட்டப்பட்டு நீதிவிசாரணைக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்று 1995-ஆம் ஆண்டு இறுதியில் பரிந்துரைத்தது. அந்த 100 பேர் சம்பந்தப்பட்ட வழக்குகள் தற்போது புலன் விசாரணையில் உள்ளன.[319]

1991 ஜூன் மாதம் கொக்கடிச்சோலையில் தமிழ்க் குடிமக்கள் இராணுவத்தால் கொல்லப்பட்டது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணை, இராணுவம் திட்டமிட்டு நடத்திய பதிலடித் தாக்குதல்தான் அந்த சாவுகளுக்குக் காரணம் என்று கண்டறிந்தது. ஒரு இராணுவத் தீர்ப்பாயத்தால் (Military Tribunal) விசாரணை செய்யப்பட்ட 20 இராணுவ வீரர்களில் ஒருவர் மீது கூட கொலைக்குற்றம் நிரூபிக்கப்படவில்லை. அது தொடர்பாக எடுக்கப்பட்ட ஒரே ஒரு நடவடிக்கை என்னவென்றால் கொக்கடிச்சோலையில் இருந்த இராணுவ வீரர்களுக்குப் பொறுப்பேற்றிருந்த ஒரு லெப்டினன்ட் பதவி நீக்கம் செய்யப்பட்டதுதான். அவர் தனது துருப்புகளைக் கட்டுப்படுத்தத் தவறியதற்காகவும் படுகொலை நடந்த இடத்தில் சட்டத்திற்கு விரோதமாக உடல்களைப் புதைக்கவோ, எரிக்கவோ, தூக்கியெறியவோ செய்தார் என்பதும்தான் அவர்மீது சாட்டப்பட்ட குற்றமாகும்.[320] நீதிமன்ற முறைக்குப் புறம்பாக நடத்தப்பட்ட மரணதண்டனை, காணாமல் போகச் செய்தல்கள், கொலை, பாலியல் பலாத்காரம் ஆகிய குற்றங்கள் ஒன்று விசாரணைக்கே கொண்டு வரப்படவில்லை அல்லது விசாரணைகள் எந்தவொரு



படிப்பகம்

www.padippakam.com

முடிவுக்கும் வரவில்லை.[321]

1994 ஜூலையில் அம்னஸ்ட்டி இன்டர் நேஷல், 'ஸ்ரீலங்கா: எப்போது நீதி கிடைக் கும்?' என்ற ஆவணத்தை வெளியிட்டது. அந்த ஆவணம், ஸ்ரீலங்காவில் 1983 முதல் நீதிமன்ற முறைக்குப் புறம்பாக 18 பேர் கொல் லப்பட்டதையும் காணாமல் போதல் சம்பவங் களையும் சுட்டிக் காட்டியது. அந்த நிகழ்வுக ளில் பெரும்பாலானவை புலனாய்வுக்கு எடுத் துக் கொள்ளப்படவோ அல்லது அவை குறித்து நீதிமன்றத்தில் குற்ற வழக்குகள் தொடுக்கப்படவோ செய்யப்பட்ட போதி லும், அந்த நடவடிக்கைகள் சிறிதும் திருப்திகர மானதாக இருக்கவில்லை என்று அந்த ஆவ ணம் கூறியது. மேலும், அச்சமயத்தில் பொது மக்கள் எழுப்பிய கண்டனக் குரல்களை அடக் குவதற்காக சில புலனாய்வுகள் மேற்கொள் ளப்பட்டனவேயன்றி, குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களை நீதி விசாரணைக்குக் கொண்டு வர வேண்டுமென்ற உறுதிப்பாட்டு டன் அல்ல என்பது தெரியவந்தது.[322]

1994-இல் புதிய அரசாங்கத்தால் மூன்று ஆணையங்கள் நியமனம் செய்யப்பட்டன. 01.01.1988-ஆம் தேதிக்குப் பிறகு நடந்த காணாமல் போதல் சம்பவங்களை புலன் விசா ரணை செய்ய வேண்டும் என்பது அந்த ஆணையங்களுக்கு வழங்கப்பட்ட கட்டளை யாகும். அந்த ஆணையங்கள் ஏராளமான புகார்களில் சாட்சியங்களை விசாரணை செய் யவில்லை என்ற போதிலும் 1996 டிசம்பரில் அந்த ஆணையங்கள் தம் பணியை முடித்துக் கொள்ளுமாறு உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. ஆணையங்கள் தமது அறிக்கைகளை அரசாங் கத்திற்குச் சமர்ப்பித்துவிட்டன. ஆனால், குற்ற வாளிகள் எனக் கண்டறியப்பட்ட ஏராளமான பாதுகாப்புப் படையினரைத் தண்டிப்பதற் கான நடவடிக்கைகளை அரசாங்கம் இதுவரை அறிவிக்கவில்லை. அந்த புலன் விசாரணைக ளும் கூட 01.01.1988-ஆம் தேதிக்கு முன்பு காணாமல் போன 680 பேர்களை கருத்தில் கொள்ளவில்லை என்ற விமர்சனமும் எழுந் துள்ளது.[323]

1995, 1996-ஆம் ஆண்டுகளில் கொலை, பாலியல் பலாத்காரம் ஆகியன தொடர்பாகப் பல்வேறு குற்ற வழக்குகள் தொடுக்கப்பட் டன. ஆயினும் 1995-ஆம் ஆண்டில் கொழும் பிலும் 1996-இல் குமாரபுரம், கின்னியா ஆகி யவற்றிலும் நீதிமன்ற முறைக்குப் புறம்பாக மக்கள் கொல்லப்பட்டது தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஜாமீனில் விடுவிக்கப்பட் டனர். வடகிழக்கில் அவர்கள் மீண்டும் இராணு வப்பணிக்கே திரும்பிச் சென்று விட்டதாக ஓர் அறிக்கை கூறியது.[324] 1997 மார்ச் மாதத்தில் கொழும்பு பொல்கொடவில் மரணப்படை (Death Squad) நடத்திய தாக்குதல் சம்பந்தமாக 22 சிறப்பு அதிரடிப் படையினர் மீது தொடுக் கப்பட்ட வழக்கு நீதிமன்ற வழக்குப் பட்டியலி லிருந்து அகற்றப்பட்டது. அதற்குக் காரணம், குற்றம் சாட்டப்பட்டவர்களும் அரசாங்கத் தலைமை வழக்கறிஞரும் (Attorney General) இரண்டு வாய்தாக்களுக்கு (hearing) வராமல் போனதுதான்.[325] அது நீதி வழங்குவதற்கு ஏற்படுத்தப்படும் தடையாகும் என்று நீதிபதி கூறினார். அரசாங்கத் தலைமை வழக்கறிஞர் வராமலிருந்தது, தண்டனையிலிருந்து விதிவி லக்குத் தருவதை ஊக்குவிக்கும் செயலாகும் என மனித உரிமை அமைப்புகளும் குற்றம் சாட்டின.[326]


குமாரபுரத்தில் நடந்த படுகொலை தொடர் பான வழக்கு இப்போது தீர்ப்புக்காகக் காத்தி ருக்கிறது. ஆயினும், அந்த வழக்கில் முக்கிய சாட்சிகளாக இருப்பவர்கள் தங்களது உயி ருக்கு ஆபத்து வந்துவிடும் என்று அஞ்சுகிறார் கள். ஏனெனில், அந்தப் படுகொலையில் சம் பந்தப்பட்ட இராணுவ உயர் அதிகாரியொரு வர் இன்னும் கைது செய்யப்படவில்லை. அந்தப் பகுதியில் இராணுவ முகாமின் பொறுப்பை வகிக்கும் அதிகாரியாக அவர் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக் கிறார்.[327]

குற்றங்களை இழைத்தவர்கள் தண்டிக்கப் படுவர் என்று புதிய அரசாங்கம் வாக்குறுதி தந்துள்ளது. ஒரு சில புலன் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. ஆயினும், பாதுகாப்புப் படைகளின் உறுப்பினர்களுக்கு நீதி விசார ணையிலிருந்து விதிவிலக்குத் தருதல் என்பது இன்னும் ஒரு பெரும் பிரச்சினையாகவே இருந்து வருகிறது.[328]



படிப்பகம்

www.padippakam.com



நீரில் மிதக்கும் சடலங்கள்

தொடர்ந்து நடந்து வரும் சித்திரவதைகள் குறித்தும், 1996 டிசம்பரில் பாதுகாப்புத்துறைச் செயலாளர் செய்ததைப் போல, பல அதிகாரிகள் நெருக்கடி நிலைமை விதிகளை மீறிய நிகழ்ச்சிகள் குறித்தும் உச்ச நீதிமன்றம் பலமுறை கண்டனம் தெரிவித்திருந்த போதிலும் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.[329]

கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பாகக் குற்ற வழக்குகள் தொடுக்காததன் மூலம் இனப்படுகொலைச் செயல்களுக்கு தண்டனையிலிருந்து தொடர்ந்து விதிவிலக்குத் தருதல்; பாதுகாப்புப் படைகளின் உறுப்பினர்களுக்கு முன்பாதுகாப்பு தரும் சட்டங்களை நடைமுறைப்படுத்துதல்; 1988-ஆம் ஆண்டு முதல் புரியப்பட்டு வந்துள்ள குற்றங்கள் தொடர்பாக பாதுகாப்புப் படைகளின் உறுப்பினர்கள் மீது குற்ற வழக்குகளைத் தொடுப்பதில் குறைபாடுகள் இருத்தல் - இவை யாவும் இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தை ஸ்ரீலங்கா நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டது என்பதைக் குறிக்கின்றன; அதேபோல குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களைத் தண்டிக்காததன் மூலம் ஸ்ரீலங்கா எதிர்காலத்தில் இத்தகைய செயல்கள் நிகழாமலிருப்பதைத் தடுக்கத் தவறிக் கொண்டிருக்கிறது என்பதையும் குறிக்கின்றன.

❑

[318] see above: Acts of genocide: The evidence
[319] see Amnesty International: Wavering Commitment, p.30
[320] see Amnesty International: Annual Report 1993, p.266
[321] see Amnesty International: Summary of concerns, p.6
[322] see Amnesty International: Time for truth and justice, April 1995, pp.20-23
[323] see Amnesty International: Wavering Commitment, p.30, see also on lack of progress in prosecuting army officers implicated in cases of disappearances: Report of the Working Group on Enforced or Involuntary Disappearances, E/CN.4/1997/34, para. 323
[324] see Amnesty International: Wavering Commitment.,p29
[325] see Sri Lanka Monitor, No.111, April 1997, p.3
[326] see Sri Lanka Monitor, No.110, March 1997, p.4
[327] Amnesty International: Wavering Commitment, p.29
[328] see US State Department: Country Report 1996, introduction
[329] see Sri Lanka Monitor, No.111, April 1997, p.3



படிப்பகம்

www.padippakam.com

# இறந்தவர்களின் உடல்களை இரகசியமாக அப்புறப்படுத்துதல் பற்றிய ஒரு குறிப்பு

1983 ஜுன் மாதம் கொண்டு வரப்பட்ட நெருக்கடி நிலை விதி 15A, ஐயத்திற்கிடமான சாவு பற்றிய ஆய்வோ (inquest Proceedings) அல்லது பிரேதப் பரிசோதனையோ (Post-mortem) நடத்தாமல் இறந்தவர்களின் உடல்களை அப்புறப்படுத்துவதற்கு பாதுகாப்புப் படையினருக்கு ஒப்புதல் தந்தது. சர்வதேச அளவில் அதற்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டதால் விதி 15Aவிற்குப் பதிலாக விதிகள் 55B - 55G ஆகியன 1985 ஜுன் மாதம் கொண்டு வரப்பட்டன. இந்தச் விதிகளின்படி காவலில் ஒருவர் மரணடைந்து விட்டால், துணைப்போலீஸ் கமிஷனர் (ASP) சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று விசாரணை நடத்திய பிறகு குற்றவியல் நீதிபதியிடம் (Magistrate) அது குறித்த அறிக்கையைத் தர வேண்டும். ஆனால், அந்த விதிகள் அத்தகைய விசாரணைக்கான காலக்கெடு எதனையும் நிர்ணயிக்கவில்லை. அன்று நடப்பிலிருந்த சாதாரணக் குற்றவியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பின்படியோ (Criminal Procedure Code) விசாரணை செய்யும் அதிகாரி சம்பவம் நடந்த இடத்திற்கு உடனடியாகச் சென்று நீதிபதியிடம் அறிக்கை தர வேண்டும்.

மேலும், நெருக்கடி நிலை விதிகளின் கீழ் விசாரணையைத் தொடங்குவதற்கு நீதிபதிக்கு எந்த அதிகாரமும் இருக்கவில்லை. காவலில் வைக்கப்பட்டிருக்கும்போது ஏற்பட்ட சாவைப் பற்றி போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலோ (IGP) அல்லது துணை இன்ஸ்பெக்டர் ஜெனரலோ நீதிபதியிடம் குறிப்பிட்டு விசாரணை செய்யச் சொன்னால்தான் நீதிபதி அவ்வாறு செய்யலாம். தவிரவும், IGP விண்ணப்பித்தால் மட்டுமே உயர் நீதிமன்றம் தனது சட்ட அதிகாரத்தைப் பிரயோகிக்கலாம். அய்யத்துக்குரிய சாவுகள் பற்றிய சாதாரணமான ஆய்வு நடைமுறைகள் இந்த நெருக்கடி நிலை விதிகளால் மிகவும் பலகீனப்படுத்தப்பட்டன என்றும், "தேசியப் பாதுகாப்பு நலன்களின் பொருட்டு" இறந்தவர்களின் உடல்களை அப்புறப்படுத்தும் அதிகாரம் போலீசாருக்கு தொடர்ந்து இருந்து வருவதாகவும் அம்னஸ்ட்டி இன்டர்நேஷனல் கூறியது.

1988 நவம்பரில் நெருக்கடி நிலை விதி 55F நடைமுறைக்கு வந்தது. அது அய்யத்திற்கிடமான சாவு பற்றிய ஆய்வு இல்லாமலேயே இறந்தவர்களின் உடல்களை எரிக்கவும், புதைக்கவும் போலீசாருக்கு மீண்டும் அனுமதி வழங்கியது. அந்தச் சட்டம் தன்னிச்சையாகக் கொல்வதற்கும் அப்படிக் கொல்வதை மூடி மறைப்பதற்கும் வசதியேற்படுத்திக் கொடுக்கிறது என்றும் அரசாங்கமே அத்தகைய கொலைச் செயல்களுக்கு ஒப்புதல் தந்து விடுகிறது என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது என்றும் அம்னஸ்டி இன்டர்நேஷனல் அறிவித்தது. 1990-இல் நெருக்கடி நிலை விதிகளுக்குத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. விதி 55FF திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்ட போதிலும், பிரேதப் பரிசோதனைகள், சாவு பற்றிய ஆய்வுகள் ஆகியன தொடர்பான விதிகள் திருப்திகரமானவையாக இல்லை என்று அச்சமயம் அம்னஸ்ட்டி இன்டர்நேஷனல் கூறியது. விதி 55F போலன்றி பிற விதிகளான 55B-F பிரேதப் பரிசோதனையின்றி உடல்களை உடனடியாக அப்புறப்படுத்துவதை அனுமதிக்கவில்லை என்றபோதிலும், நீதிமன்ற முறைக்குப் புறம்பாகக் கொல்லப்படும் சம்பவங்களில் முழுமையானதும் திறமையானதுமான புலனாய்வை உத்திரவாதம் செய்வதற்கு இயலாத குறைபாடுள்ள விதிகளாகவே இருந்தன.

1994 ஜுலையில் அம்னஸ்ட்டி இன்டர்நேஷனல் வெளியிட்ட அறிக்கை, இறந்த உடல்களை இரகசியமாக அப்புறப்படுத்துதல் குறித்த சட்டங்கள் நடைமுறையில் இல்லாமலிருந்த போதிலும், காவலில் வைக்கப்பட்டிருப்போர் நீதிமன்ற முறைக்குப் புறம்பாகக் கொல்லப்பட்டால், அந்தச் சாவு குறித்து இரகசியமான ஆய்வு நடத்தப்பட வேண்டும் என்று கூறும் விதிகள் இருந்து வருவதைச் சுட்டிக் காட்டியது. நீதிமன்ற விசாரணையிலிருந்து பாதுகாப்புப் படையினருக்கு அந்த விதிகள் கொடுத்த விதிவிலக்கை எளிதாக அகற்ற முடியாது. அத்தகைய சாவுகள் பற்றிய சாட்சியங்களையும், சான்றுகளையும் (உடலில் உள்ள காயங்கள், சித்திரவதை செய்யப்பட்டதற்கான அடையாளங்கள் போன்றவை) அழித்து விடுவதற்கு அந்த விதிகளின் கட்டுக்கோப்பிலேயே வழிவகை செய்யப்பட்டுள்ளது. அத்தகைய சட்டங்கள் இருப்பதே, சட்டத்திற்கும் நீதிமன்றத்துக்கும் அஞ்சாமல் மனித உரிமை மீறல்களைச் செய்யலாம், அப்படிச் செய்பவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்படும் என்ற அரசியல் உறுதிப்பாட்டின் வெளிப்பாடாகும். 1994 ஜுலையில் அம்னஸ்ட்டி இன்டர்நேஷனல் வெளியிட்ட மற்றொரு அறிக்கை, அப்போது இன்னும் நடைமுறையில் இருந்த நெருக்கடி நிலை விதிகள், பாதுகாப்புப் படையினரால் ஏற்படுத்தப்பட்ட சாவுகளைப் பற்றிய முழுமையான, விருப்பு வெறுப்பற்ற புலனாய்வைச் செய்வதற்குப் போதுமானவையாக இருக்கவில்லை என்றும் தொடர்ந்து அவற்றை அத்தகைய சட்டவிரோதக் கொலைகளை மூடிமறைப்பதற்காகப் பயன்படுத்தி வரமுடியும் என்றும் கூறியது.

தற்போதுள்ள மக்கள் கூட்டணி அரசாங்கம் 1994 ஆகஸ்டில் பதவியேற்ற பின் நடைமுறைக்குக் கொண்டு வந்த புதிய நெருக்கடி நிலை விதிகள் அய்யத்திற்குரிய சாவு குறித்த ஆய்வு இல்லாமலேயே இறந்த உடல்களை அப்புறப்படுத்த அனுமதிக்கும் விதிகள் 44, 45 ஆகியவற்றைத் தக்க வைத்துக் கொண்டுள்ளன. 18.08.1997 அன்று திரிகோணமலை மாவட்டம் திருக்கடலூரில் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட லெட்சுமிகாந்தன் தமயந்தன் என்பவரின் உடலை இந்தச் சட்டங்களைக் காட்டித்தான் சாவு பற்றிய ஆய்வு நடத்தாமல், போலீசார் அவரது உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

❑



படிப்பகம்

## மனிதாபிமானத் தலையீடு (Humanitarian Intervention)

அய்.நா.வுக்கு வெளியே எடுக்கப்படும் நடவடிக்கைகளில், இனப்படுகொலையைத் தடுப்பதற்கான மிகத் திறமை வாய்ந்த சாத்தியமான வழிமுறை மனிதாபிமானத் தலையீடுதான் என்பது பலராலும் வெவ்வேறு சமயங்களில் சொல்லப்பட்டு வந்துள்ளது.[330] மனிதாபிமானத் தலையீடு என்பது கீழ்க்கண்டவாறு வரையறை செய்யப்பட்டுள்ளது: *"இறையாண்மையுள்ள ஒரு அரசு விவேகத்திற்கும் நீதிக்கும் உட்பட்டு செயல்படத் தேவைப்படுகிற அதிகார வரம்புகளை மீறுகிற வகையில் அந்த அரசின் கீழ் வாழும் மக்கள் தன்னிச்சையான முறையிலும் இடைவிடாமலும் இழிவான முறையில் நடத்தப்படுவதிலிருந்து அவர்களைப் பாதுகாத்தல் என்ற நியாயமான நோக்கத்திற்காக பலவந்தத்தைப் பிரயோகிப்பது ஆகும்."*[331]

இந்த வரையறையின்படி இனப்படுகொலைச் சம்பவங்களில் மனிதாபிமானத் தலையீடு நியாயப்படுத்தப்படக் கூடியதாகும். எனினும், மனிதாபிமானத் தலையீடு என்பது பலவந்தத்தைப் பயன்படுத்துவதாக இருப்பதால் மற்ற அரசின் விவகாரங்களில் தலையிடக் கூடாது என்ற பொதுவான நெறியுடன் முரண்படுகிறது. அய்.நா. சாசனத்தின் விதி 2(4)-இல் கூறப்பட்டுள்ள விஷயங்களுடனும்கூட இது முரண்படுகிறது எனலாம். எனவே, சர்வதேசச் சட்டத்தின்படி மனிதாபிமானத் தலையீடு சட்டபூர்வமானதா என்பது சர்ச்சைக்குரியது. சட்டப்பூர்வமானதுதான் என்றால், அது எந்த நிலைமைகளில் சட்டப்பூர்வமானது என்பதும் சர்ச்சைக்குரியது.[332] மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது குறித்து அய்.நா. சாசனத்தின் முகப்புரையிலும் அதன் விதி 1(3), 55(c), 56 ஆகியவற்றிலும் கூறப்பட்டுள்ளவற்றைக் கருத்தில் கொண்டால், இனப்படுகொலை விஷயங்களில் மனிதாபிமானத் தலையீட்டைப் பயன்படுத்துவதற்கான வலுவான முகாந்திரம் உள்ளது என்பது தெளிவு. அப்படி ஒரு நாடு மனிதாபிமான அடிப்படையில் மற்றொரு நாட்டில் பலவந்தமாகத் தலையிடுகிறது என்று வைத்துக் கொள்வோம். அதாவது தனது படைகளை அங்கு அனுப்புகிறது என்று வைத்துக் கொள்வோம். அந்தப் படைகள் பலவந்த முறையைத் தவறாகப் பயன்படுத்தக்கூடிய சாத்தியப்பாடு உள்ளது. எனவே, அதனைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் பொருட்டு, அத்தகைய தலையீடு சட்டபூர்வமானதா என்பதைத் தீர்மானிக்கின்ற ஐந்து அளவுகோல்கள் உருவாக்கப்பட்டுள்ளன: 1)தலையீடு நடக்கும் நாட்டில் மிகப் பெரிய அளவுக்கு வன்கொடுமைகள் நடக்கின்றன என்பது உறுதி செய்யப்பட வேண்டும்; 2)அந்த நாட்டில் மற்றொரு நாடு தலையிடுவதற்கு மனிதாபிமான நோக்கம்தான் தீர்மானகரமான காரணமாக இருக்க வேண்டும்; 3)ஒன்றுக்கும் மேற்பட்ட நாடுகள் கூட்டாக நடவடிக்கை எடுப்பதற்கு முன்னுரிமை தரப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டே அத்தலையீடு நடக்க வேண்டும்; 4)அத்தலையீடு, அடைய வேண்டிய குறிக்கோளைச் சாதிப்பதற்குத் தேவையான அளவைத் தாண்டக்கூடாது; 5)வன்கொடுமைகளைத் தடுப்பதற்கு தலையீடு நடக்கும் நாட்டில் எல்லா வழிமுறைகளும் ஏற்கனவே பயன்படுத்தப் பட்டு இனி வெளியார் தலையீட்டைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை உருவாகியிருக்க வேண்டும்.[333]

இனப்படுகொலை நிலைமைகளில் மனிதாபிமானத் தலையீடு என்பதற்கான எடுத்துக் காட்டுகளாக இருப்பவை 1971-இல் கிழக்குப் பாகிஸ்தானிற்குள் இந்தியத் துருப்புகளும், 1978-இல் கம்போடியாவிற்குள் வியட்நாமியத் துருப்புகளும் அனுப்பப்பட்ட சம்பவங்களாகும். அப்படைகள் அங்கு 'மனிதாபிமான நோக்கத்'திற்காக அனுப்பப்பட்டது என்னவோ உண்மைதானென்றாலும், அன்றிருந்த உலக அரசியல் சூழலும் குறிப்பிட்ட அரசியல் நோக்கங்களும்தான் அந்த விஷயத்தில் மேலோங்கி நின்றன. எனவே, அந்த இரு சம்பவங்களையும் எதிர்கால மனிதாபிமானத் தலையீட்டுக்கான முன்னுதாரணமாகக் கொள்ள முடியாது. எனினும் அந்த இரண்டு தலையீடுகளுமே இனப்படுகொலைச் செயல்களைத் தடுத்து நிறுத்துதல் என்ற குறிக்கோளை நிறைவேற்றின. இந்த ஒரு காரணம்,

www.padippakam.com

எதிர்காலத்தில் சாத்தியமான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான மதிப்புமிக்க பாடங்களை வழங்கக்கூடும். எனினும், அய்.நா. மட்டுமே ஒரு குறிப்பிட்ட நாட்டில் மனிதாபிமானத் தலையீடு செய்வதற்காகப் பலவந்தத்தைப் பயன்படுத்தக்கூடிய, படைகளை அனுப்பக்கூடிய ஒரே ஒரு சர்வதேச அமைப்பாக இருந்து வருகிறது. சர்ச்சைக்குரிய 'மனிதாபிமானத் தலையீடு' என்பதன் மூலமாக அன்றி அமைதி காக்கும் படைகளை அனுப்புதல் போன்ற சாத்தியமான கூட்டு நடவடிக்கைகளை அய்.நா. மேற்கொள்வது அவசியம்.

❑

"இனப்படுகொலை, மனித குலத்திற்குப் பேரழிவை உண்டாக்குகிற ஒரு வெறுக்கத்தக்க விஷயமாகத் தொடர்ந்து நீடித்து வருகிறது... தற்சமயம் விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய, இனப்படுகொலை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பல இருக்கின்றன... ஸ்ரீலங்காவில் நடக்கும் இனப்படுகொலைகளும் இவற்றிலொன்றாகும்... இத்தகைய இனப்படுகொலை நிகழ்ச்சிகளில் சில, மேலதிகச் சுயாட்சி கோரும் போராட்டங்களின் விளைவாகவே உருவாகின்றன. சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலம் இவற்றைக் கட்டுப்படுத்த முடியும்... அய்.நா.வில் அங்கம் வகிக்கும் அரசுகளில் மனித உரிமைகளை மிகவும் மதிக்கும் அரசுகளின் பிரதிநிதிகள், அய்.நா. மனித உரிமை அமைப்புகளில் ஆலோசகர் தகுதி பெற்றுள்ள அரசு சாரா அமைப்புகள் ஆகியன இனப்படுகொலை, மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து மீறப்படுதல் ஆகியவற்றுக்கு எதிரான சர்வதேசப் பாதுகாப்பை உருவாக்கித் தர வேண்டிய சர்வதேசப் பொறுப்பு அய்.நா.விற்கு இருப்பதை வற்புறுத்த வேண்டிய கூடுதலான பொறுப்பை மேற்கொள்ள வேண்டும். சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்துவதற்காக மனிதாபிமானத் தலையீடுக்கான நெறிமுறைகளை வளர்ப்பது இந்த முயற்சிகளில் அடங்கும்..."

— Pro.Leo Kuper, **Minority Rights Group Report: International Action Against Genocide**, 1982.

---

[330] see B.Harff: Genocide and Human Rights, pp.24,25 and N.Rodley (ed): To Loose The Bands Of Wickedness: International Intervention in Defence of Human Rights, Brassey's, London, 1992

[331] Stowell in, 1921 quoted in B.Harff: Intervention in Genocidal Situations, p.147

[332] see ibid. and J.A.R.Nafziger: Self-Determination and Humanitarian Intervention in a Community of Power in: Denver Journal of International Law and Policy, Vol.20:1, Fall 1991, pp.21-26

[333] see M.J.Bayzler: Reexamining the Doctrine of Humanitarian Intervention in the Light of the Atrocities in Kampuchea and Ethiopia in: Stanford Journal of International Law, Summer 1987, pp.598-607



படிப்பகம்

www.padippakam.com

# ஸ்ரீலங்காவில் இந்தியாவின் தலையீடு

யாழ்ப்பாணம் தீபகற்பப் பகுதியில் முற்று கையிடப்பட்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த தமிழர்களுக்கு நிவாரண உதவி களை வழங்குவதற்காக 1987 ஜூன் மாதம் இந்தியக் கப்பல்களும், விமானப்படையும் ஸ்ரீலங்காப் பிரதேசத்திற்குள் நுழைந்தன. தமிழ் பேசும் 6 கோடி மக்கள் வாழும் தமிழ் நாட்டையும் தன்னகத்தே கொண்டுள்ள இந் தியா, தென்னாசியாவின் முதன்மையான சக்தி யாகும். 1987 பிப்ரவரியில் மத்தியஸ்தப் பேச்சு வார்த்தைகளிலிருந்து விலகிக் கொண்ட பிறகே இந்தியா நிவாரண உதவிகளை அனுப்பி வைத்தது. இந்தியாவின் தலைமை யின்கீழ் 1985-இல் பூடான் தலைநகர் திம்பு வில் நடைபெற்றதைப் போன்ற பேச்சு வார்த் தைகளெல்லாம் தோல்வியடைந்து, ஸ்ரீலங்கா இராணுவம் மிகப்பெரும் இராணுவத் தாக்கு தலை 1987-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் வடகிழக்கு மாகாணங்களில் தொடுத்ததன் கார ணமாக மனிதாபிமான நிலைமை சீரழிந்ததன் விளைவாகவே இந்தியா நிவாரண உதவிகளை அனுப்ப முடிவு செய்தது.[334]

ஸ்ரீலங்காவிலிருந்து மிகப்பெருமளவில் அகதிகள் தமிழ்நாட்டிற்கு வந்ததாலும், இந்திய அரசாங்கத்திற்குத் தமிழ்நாட்டிலிருந்தும், இந்தி யாவின் பிறபகுதியிலிருந்தும் வந்த வலுவான நிர்ப்பந்தங்களின் காரணமாகவும் வடகிழக்கு மாகாணங்களில் இராணுவ நடவடிக்கைக ளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக ஸ்ரீலங்கா வில் தலையிட இந்தியா முடிவு செய்தது. தனது பிரதேசத்திற்குள் இந்தியா அத்துமீறி வந்ததற்காக ஸ்ரீலங்கா கடுமையான ஆட்சே பணை தெரிவித்தது. ஆனால், இந்தியாவின் தலையீடு மனிதாபிமான அடிப்படையில் இருந்ததால் உலகில் சக்தி வாய்ந்த அமெரிக்கா போன்ற நாடுகள் எந்த எதிர்ப்பையும் காட்ட வில்லை. எனவே சமாதானப் பேச்சு வார்த் தைக்கு ஸ்ரீலங்கா தயக்கத்துடன் இணக்கம் தெரிவித்தது.[335]

1987 ஜூலையில் இந்திய - ஸ்ரீலங்கா ஒப்பந்தம் விடுதலைப்புலிகளின் பங்கேற்பில் லாமலேயே கையெழுத்தாயிற்று. அந்த ஒப் பந்தத்தை விடுதலைப்புலிகள் எதிர்த்தனர். அந்த ஒப்பந்தம், பாதுகாப்பு நடவடிக்கைக ளுக்காகவும் தமிழ்ப் போராளிக் குழுக்களிடமி ருந்து ஆயுதங்களைப் பறித்தெடுப்பதற்காக வும், புதிதாக உருவாக்கப்பட்ட மாகாண அவைகளுக்கான தேர்தல்களைக் கண்காணிப் பதற்காகவும் வடகிழக்கில் இந்திய அமைதி காக்கும் படைகளை வைத்திருக்க அனுமதிய ளித்தது.[336] எந்தக் குறிக்கோள்களை நிறை வேற்றுவதற்காக அப்படைகள் அனுப்பப்படு வதாகச் சொல்லப்பட்டதோ அவற்றை நிறை வேற்றத் தவறிய அப்படைகள் 1990 மார்ச் மாதம் திரும்ப அழைத்துக் கொள்ளப்பட்டன. ஸ்ரீலங்காவிலிருந்த மூன்று ஆண்டுகளில் அவற்றுக்கு எதிராகத் திரும்பிய விடுதலைப்பு லிகளுடன் சண்டையில் ஈடுபட்டிருந்தன. மேலும், கடுமையான மனித உரிமை மீறல்க ளையும் செய்தன. அந்த ஒப்பந்தம் ஸ்ரீலங்கா வின் தென்பகுதியில் ஒரு தேசியவாத மார்க் சிய இயக்கமான 'மக்கள் விடுதலை முன்னணி யின்' (ஜனதா விமுக்தி பெரமுன - ஜேவிபி) ஆயுதக் கிளர்ச்சியையும் தூண்டிவிட்டது. அக் கிளர்ச்சியின் காரணமாக மாண்டவர் எண் ணிக்கை 20 ஆயிரத்திற்கும் அதிகமாகும்.[337]

பின்னோக்கிப் பார்க்கையில் ஒரு விஷ யம் தெளிவாகிறது: இந்தியாவின் தலையீடு, இனப்படுகொலைச் செயல்கள் நடப்பதைத் தடுப்பதற்கான நீண்டகால ஏற்பாடுகளைச் செய்யத் தவறியது. ஸ்ரீலங்காவின் இராணுவ நடவடிக்கைகளின் காரணமாகப் பெரும் எண் ணிக்கையில் தமிழ்க் குடிமக்கள் கொல்லப்படு வதைத் தடுப்பதற்கு அத்தலையீடு உதவிய போதிலும் நீண்டகால நோக்கில் பார்க்கையில், நிலைமையைக் கணிசமான அளவுக்குச் சீர் செய்யத் தவறியது. அதற்குப் பல காரணங் கள் இருந்தன. அவை கீழ்வருமாறு: 1)இந் தியா தலையிட்ட முறை ஸ்ரீலங்கா அரசின் மனத்தைப் புண்படுத்தியது; 2)இந்திய - ஸ்ரீலங்கா ஒப்பந்தம் தமிழர்களின் கோரிக்கைக ளுக்குச் செவிமடுக்கத் தவறியது; 3)ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்குச் சார்பான அந்த ஒப்பந்தம் விடுதலைப் படைகளிடம் பகைமையைத் தூண்டிவிட்டது; 4)ஸ்ரீலங்கா விவகாரங்களில்



படிப்பகம்

www.padippakam.com

இந்தியா மேலாதிக்கம் செலுத்தும் என்ற அச்சத்தை சிங்களர்களுக்கு உருவாக்கியது.

இந்தியாவின் தலையீடு மனிதாபிமானத் தன்மை வாய்ந்தது என்றாலும் ஸ்ரீலங்காவின் அரசியலில் பங்கேற்பவர்களின் இன்றியமையாத ஆதரவைப் பெறத் தவறியது. அந்தத் தலையீட்டின் சட்டரீதியான தன்மை எத்தகையதாக இருந்தாலும், அதற்கு ஸ்ரீலங்காவில் உருவான எதிர்ப்பு என்பதைப் பின்புலமாக வைத்துக் காண்கையில், அத்தகைய தலையீட்டுக்கு இருந்த வரம்புகள் வெளிப்பட்டன. அந்த எதிர்ப்புக்கு வரலாற்றுக் காரணங்கள் இருந்தன. இருநாடுகளுக்கும் முன்பிருந்த அரசியல் உறவுகளும் அதற்குக் காரணங்களாக இருந்தன. இந்தப் பின்னணியில் பார்க்கையில், இந்தியாவின் தலையீட்டை ஒரு மனிதாபிமானத் தலையீடாக மட்டுமே குறுக்கிவிட முடியாது. ஒரு அரசியல் தீர்வின் மூலமே தமிழர்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பை வழங்க முடியும் என்பதை மனதில் கொண்ட இந்தியா, தனது இராணுவ வலிமையைப் பயன்படுத்தி, தனக்கொரு அரசியல் பாத்திரத்தை உருவாக்கிக் கொள்வதில் ஈடுபட்டது. ஒரு நாட்டில் நடக்கும் சண்டைக்கான மூல காரணங்களைத் தீர்ப்பதற்கான ஒரு மனிதாபிமானத் தலையீட்டின் தேவையே அத்தலையீட்டிற்கு ஒரு இக்கட்டான நிலையையும் ஏற்படுத்தி விடுகிறது. ஏனெனில் தலையிடும் அரசு தவிர்க்க முடியாதபடி சண்டைக்குள் இழுத்துக் கொள்ளப்படும் நிலையோ அல்லது தனது குறிக்கோளை நிறைவேற்றமாலேயே திரும்பிச் செல்ல வேண்டிய நிலையோ ஏற்பட்டு விடுகிறது.

ஒரு பிராந்தியத்தில் சக்தி வாய்ந்ததாக உள்ள ஒரு அரசு மேற்கொள்ளும் ஒருதலைப் பட்சமான மனிதாபிமானத் தலையீட்டுக்குள்ள வரம்புகள் யாவை என்பதை இந்தியாவின் தலையீடு எடுத்துக்காட்டுகிறது. இருப்பினும், ஸ்ரீலங்கா விவகாரத்தைப் பொறுத்தவரை இந்தியா தொடர்ந்து ஒரு முக்கியப் பாத்திரம் வகித்து வருகிறது. 1993 முதல் பெருமளவில் அகதிகள் வரத் தொடங்கியதால் தமிழ்நாடு நேரடியாகப் பாதிக்கப்பட்டது. இன்றும் பாதிக்கப்பட்டு வருகிறது. எனவே, இந்தியா மீது ஒரு உடனடியான தாக்கம் ஏற்பட்டுள்ளது. அத்தாக்கம் ஸ்ரீலங்காவில் நடந்து வரும் போரினால் ஏற்பட்டுள்ள மானுடத் துயரங்களை இந்தியா உணர்ந்து கொள்ளும்படி செய்துள்ளது. இந்தியாவில் விடுதலைப்புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டுள்ளது. ஸ்ரீலங்காவில் நேரடியாகத் தலையிட இந்தியா தயக்கம் காட்டி வருவதாகத் தோன்றுகிறது. இருப்பினும், இந்துமாக்கடல் பிரதேசத்தில் இந்தியாவிற்குள்ள செல்வாக்கின் காரணமாக, ஸ்ரீலங்காவில் சண்டையில் ஈடுபட்டுள்ள குழுவினரிடையே மத்தியஸ்தம் செய்வதற்கான எந்தவொரு முயற்சியிலும் இந்தியா இப்போதும் ஒரு முக்கியமான மூன்றாவது நபராக உள்ளது என்றே கருதப்படுகிறது.[338]

❑

[334] see S.D.Muni: Pangs of Proximity, p.90
[335] see ibid. p.97
[336] see S.D.Muni: Pangs of Proximity, pp.104,105
[337] see E.Nissan: A Bitter Harvest, pp.17,18
[338] see Sri Lanka Monitor, No.111, April 1977, p.1



படிப்பகம்

www.padippakam.com

# சர்வதேசச் சட்டத்தின் கீழ் ஒப்பந்தங்களை - குறிப்பாக இனப்படுகொலை ஒப்பந்தத்தை - நடைமுறைப்படுத்துவதற்குச் சாத்தியமான மாற்று வழிமுறைகள்

ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள வழிமுறைகள், குற்றத்திற்கான தண்டனை வழங்குவதை மட்டுமல்ல, எல்லாவற்றுக்கும் மேலாக அக்குற்றத்தைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டவையாகும். இனப்படுகொலை குறித்த அய்.நா. சிறப்புப் பொறுப்பாளர், இனப்படுகொலையைத் தடுப்பதற்காக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய பல்வேறு வழிமுறைகள் குறித்த ஆலோசனைகள் கூறியுள்ளார்.[339] மிகப் பெருமளவில் உயிர்ச்சேதம் ஏற்படுவதைத் தடுப்பது என்ற பிரச்சினைக்குத்தான் முன்னுரிமை தரப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். ஒரு இனப்படுகொலை நிகழ்வுப் போக்கின் பல்வேறு கட்டங்களுக்கு ஈடுகொடுக்கின்ற சர்வதேசக் குறுகிய கால நடவடிக்கை, நீண்டகால நடவடிக்கை ஆகிய இரண்டின் மூலமும் அதைச் செய்ய வேண்டும் என்று ஆலோசனை கூறியுள்ளார்.

*இனப்படுகொலை நடப்பதை முன்கூட்டியே எதிர்பார்த்தல் :* ஏற்கனவே திரட்டி வைக்கப்பட்டுள்ள தகவல்களை அன்றன்று வந்து சேரும் விவரங்களின் அடிப்படையில் புதுப்பித்து வைத்துக் கொள்வதன் மூலமும், இனப்படுகொலைக்கான காரணங்களைப் பற்றிய - குறிப்பாக, மக்கள் மனங்களில் வெறியேற்றி அவர்களை மனிதத் தன்மையற்றவர்களாக்கி இனப்படுகொலை புரிபவர்களாக்குதல் பற்றிய - ஆராய்ச்சிகள் மூலமும் மனித உரிமை மீறல்கள் பற்றிப் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மூலமும் இனப்படுகொலை நடக்கப்போவது பற்றி முன்கூட்டியே அறிந்து கொள்ளலாம்.

*முன்கூட்டியே எச்சரிக்கை செய்தல் :* இனப்படுகொலையொன்று நடக்கப் போகிறது என்பதற்கான அறிகுறிகளையும் சான்றுகளையும் அடிப்படையாகக் கொண்டு இதைச் செய்ய முடியும். அதிகரித்து வரும் ஒடுக்குமுறை, ஒரு நாட்டில் இன, மத, மொழி முதலியவற்றின் அடிப்படையில் மக்கள் எதிரெதிர் துருவங்களாக அதிகரித்த அளவில் பிளவுபடுதல். மிகப் பெருமளவில் பஞ்சமும் பட்டினியும் நிலவுதல், அகதிகள் கூட்டம் கூட்டமாக வெளியேறுதல் - இவை போன்றவை இனப்படுகொலை நடக்கப்போவதற்கான அறிகுறிகளாகும். அத்தகைய அறிகுறிகள் தெரிய வந்தவுடனேயே கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். 1)குற்றச்சாட்டுகளைப் புலன் விசாரணை செய்ய வேண்டும்; 2)அய்.நா.வின் பல்வேறு அமைப்புகளைச் செயல்பட வைக்க வேண்டும்; 3)பிரச்சினைகளில் செயலூக்கமுள்ள வகையில் ஈடுபடுமாறு சம்பந்தப்பட்ட தேசிய அரசாங்கங்களுக்கும் பிராந்திய அமைப்புகளுக்கும் வேண்டுகோள் விடுக்க வேண்டும்; 4)தகவல்களைப் பெறுவதில் சர்வதேசப் பத்திரிகைகளின் ஆதரவை நாட வேண்டும்; 5)இன, சமூக, சமயத் தலைவர்களைப் பிரச்சினையில் தலையிடுமாறு கேட்டுக் கொள்ள வேண்டும்; 6)பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தகுதி வாய்ந்த மத்தியஸ்தர்களை ஏற்பாடு செய்ய வேண்டும்; 7)பொருளாதாரத்தடை விதித்தல், சர்வதேச நடவடிக்கைகள் நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் ஒரு சிலவற்றைத் தெரிந்தெடுத்து அவற்றில் கலந்து கொள்வதிலிருந்து சம்பந்தப்பட்ட நாட்டை விலக்கி வைத்தல் - இவை போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சாத்தியப்பாடுகளைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

*இனப்படுகொலைப் பிரச்சினையைக் கையாள்வதற்கான ஒரு சர்வதேச அமைப்பு:* இனப்படுகொலை ஒப்பந்தத்தின் கீழ் ஒரு புதிய, விருப்பு வெறுப்பற்ற, தகுதியும் திறமையும் மிக்க அமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அதனுடைய கடமைகள் கீழ்வருமாறு: இனப்படுகொலை குறித்த குற்றச்சாட்டுகளில் உண்மை இருக்கிறதா? இல்லையா? என்பதை ஆராய்ந்தறிதல்; இனப்படுகொலை நடந்து கொண்டிருந்தது என்பதற்கான வலுவான, நம்பகமான சான்றுகளும் அறிகுறிக



படிப்பகம்

www.padippakam.com

ளும் தென்பட்டால், சம்பந்தப்பட்ட அரசுத் தரப்பை அழைத்து, இனப்படுகொலை சம்பந் தமான குற்றச்சாட்டுகள் பற்றிய தனது அவதா னிப்பை அதனிடம் தருதல்; குற்றச்சாட்டுகள் குறித்து இரகசியமாக ஆராய்ந்தறிய அந்த அமைப்பைச் சேர்ந்த ஒரு உறுப்பினரையோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்க ளையோ தனது பிரதிநிதியாக அனுப்பி வைத்து, அறிக்கையை உடனடியாகத் தனக் குச் சமர்ப்பிக்கும்படி கூறுதல்.

*ஒரு சர்வதேச மனித உரிமைத் தீர்ப்பாயம் அல்லது நீதிமன்றம் :* இந்தத் தீர்ப்பாயம் அல் லது நீதிமன்றம் நிறுவப்படுவதுடன் இனப்படு கொலை பற்றிய முந்திய ஆய்வுகளில் பரிந்து ரைக்கப்பட்டபடி சர்வதேச சட்ட அதிகாரமும் உருவாக்கப்பட வேண்டும்.[340] இனப்படுகொ லையை ஒரு சர்வதேசக் குற்றம் என்று ஒரு தனிப்பட்ட நாடு கருதுவதற்கும் அந்தக் குற்றத் தைத் தண்டிப்பதற்கு சர்வதேசச் சட்ட அதிகா ரத்தை ஏற்றுக் கொள்வதற்கும் ஏற்கனவே சர்வதேச நடைமுறை உள்ளது. இந்த சர்வ தேச நடைமுறையே சட்டமாக இருந்தபோதி லும், அது இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந் தத்தின் கீழ் தனிப்பட்ட நாடுகள் மேற்கொள்ள வேண்டிய ஒப்பந்தக் கடமையாக ஆக்கப்பட வேண்டும்.[341]

இனப்படுகொலை குறித்த அய்.நா. சிறப் புப் பொறுப்பாளரின் ஆலோசனைகள், இனப்படுகொலை மேலும் நடப்பதைத் தடுப் பதில் நிச்சயமாக உதவும். ஆனால், எதிர்காலத் தில் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றமொன்று நிறுவப்படும் என்பதைத் தவிர மற்ற ஆலோச னைகள் ஏதும் இதுவரை நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை. இனப்படுகொ லையைத் தடுத்து நிறுத்துவதிலோ அல்லது இனப்படுகொலைக் குற்றங்களுக்குத் தண் டனை வழங்குவதிலோ, சர்வதேச சமூகம் தக்க நடவடிக்கை எடுத்து, போதுமான அளவிற்கு செயல்படுவதில் இதுவரை தவறியுள்ளது. எனவே சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மற்ற கோரிக்கைகள் அனைத்தையும் பார்க்க தலையாயதாக உள்ளது.

❑

339 see UN Special Rapporteur 1985, pp.41-45

340 see UN Special Rapporteur 1978

341 see M.C.Bassiouni: Crimes against humanity in international criminal law. M.Nijhoff Publishers. Dordrecht. Boston. London. 1992. p.274 and L.R.Beres: Reason and Realpolitik in: I.W.Charny: Toward the understanding and prevention of genocide, p.314



படிப்பகம்

www.padippakam.com

# எதிர்காலத்தில் இனப்படுகொலை நடக்காமல் தடுப்பதற்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள வழிமுறைகள்

ஒரு இனப்படுகொலை நடக்கப் போகிறது என்பதையோ அல்லது அது ஏற்கனவே நடந்து கொண்டிருக்கிறது என்பதையோ சுட்டிக் காட்டுகின்ற ஆரம்ப அறிகுறிகள், சான்றுகள் என லியோ கூப்பராலும்[342] இனப்படுகொலை குறித்த அய்.நா. சிறப்புப் பொறுப்பாளராலும் அடையாளம் காணப்பட்டவை அனைத்துமே ஸ்ரீலங்காவில் ஓரளவிற்கு காணப்படுகின்றன: ஒரு இனக்குழுவிற்கு எதிராக அதிகரித்த அளவில் ஒடுக்குமுறை நிலவுதல்; நாட்டு மக்கள் எதிரெதிர் அணிகளாகப் பிளவுபடும் போக்கு அதிகரித்தல்; உடனுக்குடன் மரண தண்டனைகளை நிறைவேற்றுதல்; பெரும் எண்ணிக்கையில் மக்கள் படுகொலை செய்யப்படுதல்; அகதிகளின் வெளியேற்றம்; மனித உரிமை மீறல்கள் ஆகியன தான் மேற்சொன்ன அறிகுறிகளும் சான்றுகளும் ஆகும். இத்தகைய சூழ்நிலையில், மேற்சொன்ன நிகழ்வுகள் குறித்த தகவல்கள் திரட்டப்பட்டு அன்றன்று கிடைக்கும் விவரங்களை அவற்றுடன் சேர்த்துக் கொண்டு, இனப்படுகொலைச் செயல்களைத் தடுப்பதற்கான எச்சரிக்கைகளை விடுப்பதற்குத் தேவையான வழிமுறைகளை முடுக்கிவிட வேண்டும் என்று சிறப்புப் பொறுப்பாளர் கூறியுள்ளார். சிறப்புப் பொறுப்பாளரால் வரையப்பட்டுள்ள வழிமுறைகளை முன்மாதிரியாகக் கொண்டு கீழ்க்காணும் வழிமுறைகள் பரிந்துரைக்கப்படுகின்றன. இந்த வழிமுறைகள் இனப்படுகொலைச் செயல்களைத் தடுப்பதற்கு இப்போதுள்ள சட்டரீதியான வழிமுறைகள் மீது குறிப்பான கவனம் செலுத்தும். எங்கெல்லாம் தேவைப்படுமோ அங்கு கூடுதலான அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்படும். அந்தக் கூடுதலான அரசியல் நடவடிக்கைகள் என்பன, தொடர்ந்து நடந்து வரும் யுத்தத்தையும் கருத்தில் கொண்டிருக்கும்.

இனப்படுகொலைச் செயல்களைத் தடுப்பதற்கான இவ்வழிமுறைகள், ஏற்கனவே இருக்கக்கூடிய சர்வதேச வழிமுறைகள், இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் சர்வதேச அரசியல் களத்தில் பங்கேற்போரால் பயன்படுத்தப்படக்கூடிய அரசியல் மார்க்கங்கள் ஆகியனவற்றைக் கருத்தில் கொண்டிருக்கும். ஸ்ரீலங்கா நிலைமைகளைப் பொறுத்தவரை அரசியல் மார்க்கங்களைப் பயன்படுத்துதல் என்பது சமாதானப் பேச்சு வார்த்தைகள் மீது (சமாதானத்தை உருவாக்கும் பொருட்டு) கவனம் குவிப்பதாக இருக்க வேண்டும். இன்று பல்வேறு அரசுகளும், அரசு சாரா அமைப்புகளும், மத்தியஸ்தம் செய்து வைப்பதற்கும் அல்லது சமாதான உடன்பாட்டை ஏற்படுத்துவதற்கான உதவி செய்வதற்கும் முயற்சி செய்து வருகின்றன. ஆயினும், உடனடியான எதிர்காலத்தில் போர் நிறுத்தம் ஏற்படுவதற்கோ அல்லது நிலையான சமாதானம் நிலவுவதற்கோ வாய்ப்பு மிகவும் குறைவாக இருப்பதால் (போரின் இப்போதைய கட்டம் அத்தகைய எண்ணத்தைத்தான் ஏற்படுத்துகிறது) சண்டைக்குத் தீர்வு காணுதல் என்பதை நேரடியான குறிக்கோளாகக் கொள்ளாத இதர வழிமுறைகளும் பயன்படுத்தப்பட வேண்டும். இவற்றை மேற்கொள்வதில் முதன்மைப் பாத்திரம் வகிக்கக் கூடியவர்கள் அரசு சாரா அமைப்புகளும் தனிநபர்களுமாவர். இனப்படுகொலையைத் தடுப்பதற்கான சர்வதேச வழிமுறைகளை அவர்கள் செயல்பட வைக்க வேண்டும் அல்லது அரசியல் நிர்பந்தங்களைக் கொண்டு வரவேண்டும். ஆனால் இறுதியில் சர்வதேச அமைப்புகளும், தனிப்பட்ட அரசுகளும் - குறிப்பாக ஸ்ரீலங்காவும் தான் - ஸ்ரீலங்காவில் எதிர்காலத்தில் இனப்படுகொலை நிகழாதவாறு தடுத்து நிறுத்துவதற்குப் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொண்டாக வேண்டும். அவர்கள் வகிக்கும் பாத்திரம், அந்த சர்வதேச அமைப்புகளும் தனிப்பட்ட அரசுகளும் சர்வதேச சட்டத்தின்படி ஆற்ற




படிப்பகம்

www.padippakam.com

வேண்டிய கடமைகளின் அடிப்படையில் ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்.

ஸ்ரீலங்காவில் எதிர்காலத்தில் இனப்படு கொலைகளைத் தடுப்பதற்கு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் பரிசீலிக்கப்பட வேண்டும்:



தமிழ் அகதிகள்

[342] see L.Kuper: Prevention of Genocide, p.20



படிப்பகம்

www.padippakam.com

## அய்.நா. மனித உரிமை உயர் ஆணையர் (UN High Commissioner for Human Rights)

மனித உரிமைச் செயல்பாடுகளுக்கான புதிய குவிமையமாகச் செயல்படுபவர் அய்.நா. மனித உரிமை உயர் ஆணையரா வார். கடுமையான மனித உரிமை மீறல் சம்ப வங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுப்ப தும், மனித உரிமை மீறல்களைத் தடுப்பதும் அவரது முதன்மையான கடமைகளில் ஒன்றா கும். ஸ்ரீலங்காவைப் பொறுத்தவரை, கடுமை யான மனித உரிமை மீறல்கள் குறித்த குற்றச் சாட்டுகளை ஆய்ந்தறிந்து வருவதற்கு ஒரு உண்மையறியும் குழுவை ஸ்ரீலங்காவிற்கு அவர் அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட வேண்டும். அங்கு தொடர்ந்து மனித உரிமை மீறல்கள் நடக்காமல் தடுக்கும் நோக்கத்துடன் ஸ்ரீலங்காவில் நடந்து வரும் சண்டைக்கான காரணங்கள் பற்றிய ஆழமான ஆய்வு நடத்தும்படியும் அவர் கேட்டுக் கொள் ளப்பட வேண்டும். இன ரீதியாகப் பாரபட்சம் காட்டப்படுதல் (இது குறித்த புலனாய்வு மேற் கொள்வது உயர் ஆணையருக்கு அய்.நா. வால் வழங்கப்பட்டுள்ள கட்டளைக்கு உட் பட்டதாகும்), தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை மறுத்தல் (இனப்படுகொலைச் சண் டைக்கான முதன்மையான மூலகாரணம் இது தான்) ஆகியனவற்றை இந்த ஆய்வு கருத்தில் கொள்ள வேண்டும். இனப்படுகொலைச் செயல்கள் உள்ளிட்ட கடுமையான மனித உரிமை மீறல்கள் குறித்து அவர் கண்டறிந்த வற்றின் அடிப்படையில், மனித உரிமைகள் மதிக்கப்படும் என்ற உத்திரவாதத்தைப் பெறும் பொருட்டு ஸ்ரீலங்கா அரசாங்கத்துடன் உயர் ஆணையர் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். அப்பேச்சு வார்த்தைக்குப் பிறகும் மனித உரிமை நிலைமை சீரடையவில்லை என்றால், ஸ்ரீலங்கா மீது அரசியல் நிர்ப்பந்தம் கொண்டு வர பொருளாதாரத் தடைகள் போன் றவற்றை விதிக்க, அய்.நா. அமைப்புகளை முடுக்கி விடும்படியும் அவர் கேட்டுக் கொள் ளப்பட வேண்டும். ❑

## அய்.நா. மனித உரிமை ஆணையம் (UN Commission on Human Rights)

அய்.நா. மனித உரிமை ஆணையத் தின் கூட்டத் தொடர்கள், ஸ்ரீலங்கா நிலைமைக ளைச் சர்வதேச சமூகத்திடம் எடுத்துச் சொல்வ தற்கான ஒரு முக்கியமான அரங்கமாகும். அந்த கூட்டத் தொடர்களில் *"உலகின் எந்த வொரு பகுதியிலும் நிகழும் மனித உரிமை மீறல்களும் அடிப்படைச் சுதந்திர மீறல்களும்"* விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய விஷயங்களில் ஒன்றாக மனித உரிமை ஆணையம் ஏற்றுக் கொண்டிருக்கி றது. அவ்வாறு ஏற்றுக் கொண்டிருப்பதானது அய்.நா.வின் பொருளாதார, சமூக அவையில் (Ecosoc) ஆலோசகர் தகுதி பெற்றுள்ள அரசு சாரா அமைப்புகள், ஒரு குறிப்பிட்ட நாட்டில் உருவாகியுள்ள நிலைமை குறித்த அறிக்கை களை வெளியிடுவதைச் சாத்தியமாக்கியுள் ளது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, 09.04.1997 அன்று 53 அரசு சாரா அமைப்புகள், ஸ்ரீலங்காப் படைகளால் தமிழர் தாயகம் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்டு வருவ தைப் பற்றிய ஒரு கூட்டறிக்கையை வெளி யிட்டன. அந்தக் கூட்டறிக்கை, ஸ்ரீலங்காவில் இப்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இரா ணுவ நடவடிக்கைகளிலுள்ள பல்வேறு அம் சங்களைத் தெளிவாகக் குறிப்பிட்டது.

இனப்படுகொலைச் செயல்கள் என்று அடையாளம் காணப்படக் கூடியவை என்று இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளவைதான் அந்த அம்சங்கள். இத்தகைய கூட்டறிக்கை, மனித உரிமை ஆணையம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வழிவகுக்கக்கூடும். ஸ்ரீலங்கா நிலைமை பற்றி அய்.நா. மனித உரிமை ஆணையம் கருதுவது என்ன என்பதை அத் தீர்மானம் வெளிப்படுத்தும். கீழ்க்காணும் தீர் மானத்தை நிறைவேற்றும்படி அய்.நா. மனித உரிமை ஆணையத்தை அந்த 53 அரசு சாரா அமைப்புகள் வற்புறுத்தியுள்ளன: *"தமிழ்க் குடிமக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்த வேண்டும்; தமிழர் தாயகத்திலிருந்து ஆக்கிரமிப்புப் படைகளைத் திரும்பப் பெற*



படிப்பகம்

www.padippakam.com

*வேண்டும்; வட-கிழக்கில் விதிக்கப்பட்டுள்ள பொருளாதார முற்றுகையை அகற்ற வேண்டும்; மனிதாபிமான உதவியை அனுமதிக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா அரசாங்கம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.''*

தீர்மானம் எண்.1235-இல் வகுக்கப்பட்டுள்ள நடைமுறையின் கீழ் ஸ்ரீலங்கா நிலைமையை அய்.நா. மனித உரிமை ஆணையம் ஆய்வு செய்ய முடியும். இந்த நடைமுறைக்கு ஒரு அனுகூலம் உள்ளது. அதாவது அது பகிரங்கமானதாகவும் திட்டவட்டமான குறிப்பிட்ட நாட்டின் விவகாரங்கள் சம்பந்தப்பட்டதாகவும் உள்ளது. மனித உரிமை ஆணையம் முடிவு செய்யுமானால், ஒரு நடவடிக்கைக் குழுவையோ அல்லது சிறப்புப் பொறுப்பாளரையோ நியமனம் செய்து, அவர்களின் மூலம் ஸ்ரீலங்காவில் நடக்கும் மனித உரிமை மீறல்கள், அடிப்படைச் சுதந்திர மீறல்கள் ஆகியனவற்றைப் பற்றிய ஒரு முழுமையான ஆய்வை செய்ய முடியும். இந்த ஆய்வின் அடிப்படையில், ஸ்ரீலங்கா நிலைமையைக் கண்டனம் செய்யும் ஒரு தீர்மானத்தை இயற்றவும் அய்.நா. பொது அவைக்கு ஒரு அறிக்கை அனுப்பவும் முடியும். தீர்மானம் எண்.1235-இல் கண்டுள்ள நடைமுறையை தனிநபர்களாலும் அரசு சாரா அமைப்புகளாலும் செயல்படுத்த முடியாது. எனவே, அய்.நா. பொருளாதார, சமூக அவையில் (Ecosoc) ஆலோசகர் தகுதி பெற்றுள்ள அரசு சாரா அமைப்புகள் தலையிட்டு, தீர்மானம் 1235-இல் கண்டுள்ள நடைமுறையைச் செயல்படுத்தும்படி துணை ஆணையத்தையோ அல்லது அய்.நா.வில் உறுப்பியம் வகிக்கும் ஏதேனும் ஒரு நாட்டையோ வற்புறுத்த வேண்டும்.

❑



படிப்பகம்

www.padippakam.com

## தீர்மானம் எண்.1503-இன்படி வகுக்கப்பட்டுள்ள நடைமுறை

மனித உரிமை ஆணையத்திடம் வந்து சேரும் தகவல்கள் - அவை இரகசியமானவையாக இருந்த போதிலும் - ஸ்ரீலங்காவில் திட்டமிட்ட முறையில் மனித உரிமை மீறல்கள் நடத்தப்படுகின்றன என்பதை வெளிப்படுத்துமானால் - சிறுபான்மையினருக்கு எதிராக பாரபட்சம் காட்டப்படுவதைத் தடுப்பதற்கும் அவர்களைப் பாதுகாப்பதற்குமான துணை ஆணையமோ அல்லது மனித உரிமை ஆணையமோ, ஸ்ரீலங்கா மீது அரசியல் நிர்ப்பந்தத்தைக் கொண்டு வர முடியும். ஸ்ரீலங்கா நிலைமையைத் துணை ஆணையம், மனித உரிமை ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு வருமானால், மனித உரிமை ஆணையம் தீர்மானம் எண்.1503-இன் 6ஆவது விதியின் கீழ் கீழ்க்கண்டவற்றைத் தீர்மானிக்கலாம்:

அ) மனித உரிமை ஆணையத்தால் ஒரு முழுமையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் ஒரு அறிக்கையையும் பரிந்துரையையும் அய்.நா. பாதுகாப்பு அவைக்கு அனுப்புதல்.

ஆ) ஸ்ரீலங்கா நிலைமை, மனித உரிமை ஆணையத்தால் நியமிக்கப்படும் ஒரு தற்காலிகக் குழுவினால் (adhoc Committee) சம்பந்தப்பட்ட அரசின் திட்டவட்டமான சம்மதத்துடனும் அந்த அரசின் ஒத்துழைப்புடனும் அந்த அரசுடன் ஏற்படுத்தப்படும் ஒப்பந்தத்திலுள்ள நிபந்தனைகளின் கீழும் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படக்கூடிய விஷயமா என்பதைத் தீர்மானித்தல்.

இனப்படுகொலை உள்ளிட்ட பெருமளவிலான மனித உரிமை மீறல்கள் குறித்து மேற்கொள்ளப்படக்கூடிய புலனாய்வு, பொருளாதார, சமூக அவை (Economic and Social Council), பொது அவை (General Assembly) போன்ற பிற அய்.நா. அமைப்புகளையும் முடுக்கி விடுவதில் போய் முடியக்கூடும். அய்.நா. நிகழ்ச்சி நிரலில் ஸ்ரீலங்கா விவகாரத்தை மீண்டும் சேர்ப்பதற்கான ஆற்றலையும் அந்தப் புலனாய்வு கொண்டுள்ளது. மனித உரிமை மீறல்கள் குறித்து அனுப்பப்படும் தகவல்களும் அறிக்கைகளும் புகார்களும் பயன்மிக்கவையாக இருக்க வேண்டுமானால், ஜெனீவாவில் உள்ள மனித உரிமை மையத்தின் முகவரிக்கு அய்.நா. பொதுச்செயலாளருக்கு அவை அனுப்பப்பட வேண்டும். அவற்றில் இனப்படுகொலை குறித்த குற்றச்சாட்டைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அய்.நா. மனித உரிமை ஆணையத்திற்கு எண்ணற்ற கடிதங்களும் அறிக்கைகளும் வந்து கொண்டிருக்கின்றன; அய்.நா. மனித உரிமை ஆணையமே சில அரசியல் நிர்ப்பந்தங்களின் படியே தான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது; அய்.நா. மனித உரிமை ஆணையம் தீர்மானம் எண்.1503-இன் கீழ் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் இரகசியமாகவும் நத்தை வேகத்திலும் தான் நடைபெற்று வருகின்றவை; தீவிரமாகச் செயல்படுவதற்கு அய்.நா. மனித உரிமை ஆணையத்திற்கு விருப்பம் இல்லாமலும் போகலாம். இக்காரணங்களினால், அய்.நா. மனித உரிமை ஆணையத்திற்கு அனுப்பப்படும் புகார்களின் பேரில் துரிதமான, திருப்திகரமான அய்.நா. நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்கான வாய்ப்பு வரம்புக்குட்பட்டதாகவே இருக்கக் கூடும்.[343]

இனப்படுகொலைச் செயல்கள் குறித்த குற்றச்சாட்டு அடங்கிய அறிக்கையோ, புகாரோ, அதை அனுப்புபவர் யார் என்பதைத் தெளிவாக அடையாளம் காட்ட வேண்டும். அதன் உள்ளடக்கம் புறநிலையானதாக இருக்க வேண்டும். அடிப்படை உரிமை மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். மேலும், அந்த அறிக்கையை அனுப்புவதற்கு முன்பு அதில் கூறப்பட்டுள்ள குற்றங்களுக்கான நிவாரணத்தை உள்நாட்டு நீதிமன்றங்களிலேயே பெறுவதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்துத் தீர்த்திருக்க வேண்டும். அத்தகைய முயற்சிகள் மேற்கொள்வது வீண்வேலை என்றால் மட்டுமே அவற்றைத் தவிர்க்கலாம். எடுத்துக்காட்டாக, பாதுகாப்புப் படைகளின் உறுப்பினர்களுக்குத் நீதி விசாரணையிலிருந்து விதிவிலக்குத் தரப்பட்டுள்ள, குற்றம் செய்தோருக்கு எதிராக வழக்குகள்



படிப்பகம்

www.padippakam.com

தொடரப்பட்டுத் தண்டனை வழங்கப்பட்ட தற்கான சான்றுகள் இல்லாத ஒரு நாட்டில் உள்நாட்டு நீதிமன்றங்களில் நிவாரணம் தேடும் முயற்சிகள் வீணானவையாக இருக்க லாம்.

எனவே, ஸ்ரீலங்காவில் இனப்படுகொலையைத் தடுப்பதற்காக தீர்மானம் எண்.**1503**-இல் கண்டுள்ள நடைமுறையைப் பயன்படுத்த வேண்டுமானால், நீதிமன்றத்தில் ஒரு மனுவைத் தாக்கல் செய்வதற்கு எத்தகைய நடைமுறைகள் உள்ளனவோ அதே போன்ற நடைமுறைகளுக்கு உட்பட்டுத் தயாரிக்கப்படும் ஒரு புகார் மனுவாகவே அய்.நா.வுக்கு அனுப்பப்படும் மனுவும் இருக்க வேண்டும்.

❑

[141] see on the strategic use of the 1503 procedure: Amnesty International: Summary of Selected International Procedures and Bodies Dealing With Human Rights Matters, August 1989, pp.13-15



படிப்பகம்

www.padippakam.com

## சர்வதேச சமூகம் (INTERNATIONAL COMMUNITY)

சர்வதேச அமைப்புகள், பிராந்திய அமைப்புகள், தனிப்பட்ட அரசுகள் ஆகியவற்றின் மூலம் சர்வதேச சமூகம் செயல்படுகிறது. இனப்படுகொலைத் தடுப்பிலும் அது நிகழ்விலும் சர்வதேச சமூகம் ஓர் முக்கியப் பாத்திரம் வகிக்கிறது. பொது அபிப்பிராயத்தை உருவாக்குவதன் மூலம் இனப்படுகொலைச் செயல்களைக் கண்டனம் செய்யவோ அல்லது அவற்றை நியாயப்படுத்தவோ அல்லது அய்.நா. மூலமோ, பிராந்திய அமைப்புகள் மூலமோ நடவடிக்கை மேற்கொள்ளவோ அதனால் இயலும். அதுமட்டுமல்ல. இனப்படுகொலைச் செயல்களுக்கு உதவி செய்வதன் மூலமோ அல்லது சரிவர அவற்றைத் தடுத்து நிறுத்தாமலிருப்பதன் மூலமோ அச்செயல்கள் இழைக்கப்படுவதில் பங்களிப்புச் செய்யவும் முடியும். இந்த இரண்டாவது விஷயத்துடன் சம்பந்தப்பட்டவைதான் ஸ்ரீலங்காவிற்கு ஆயுதங்கள் விற்பனை செய்யப்படுவதும் வெளிப்படையான வெளிநாட்டு உதவிகள் வழங்கப்படுவதும் ஆகும்.

ஒரு நாட்டிலுள்ள ஆயுத உற்பத்தியாளருக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதற்கு உரிமம் (Licence) வழங்கப்பட வேண்டுமானால், ஆயுதங்களை வாங்கும் நாடு சர்வதேச மனித உரிமை அளவுகோல்களைக் கடைப்பிக்கின்றதா என்ற நிபந்தனை பூர்த்தி செய்யப்பட வேண்டும். ஆயுத ஏற்றுமதிக்கு மட்டுமின்றி வெளிநாட்டு உதவி, சர்வதேச நிதியம் (IMF), உலக வங்கி (World Bank) போன்ற பலதரப்பு கடன் வழங்கு நிறுவனங்களின் (Multilateral lending Institutional) ஆதரவு ஆகியனவற்றுக்கும் கூட இந்த நிபந்தனையை விதிப்பது 1980களிலிருந்தே மனித உரிமை மீறல்களைத் தடுக்கக்கூடிய வழிமுறையாக இருந்து வருகின்றது. அதாவது மனித உரிமை மீறல்களைச் செய்யும் நாட்டிற்கு ஆயுதங்கள் விற்பனை செய்யப்படக்கூடாது, வெளிநாட்டு உதவியோ கடன்களோ வழங்கப்படக்கூடாது என்ற மரபு உருவாக்கப்பட்டுள்ளது.

சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்ததிலிருந்து ஸ்ரீலங்கா மீதான தமது அணுகுமுறையைப் பல்வேறு அரசுகளும் சர்வதேச செய்தி ஊடகங்களும் மாற்றிக் கொண்டன. இந்த மாற்றத்தின் விளைவாக, பிரிட்டன் உள்ளிட்ட பல நாடுகள், ஸ்ரீலங்காவிற்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதற்கு விதித்திருந்த தடைகளை அகற்றியதுடன் அந்நாட்டிற்கு வெளிப்படையான வெளிநாட்டு உதவியை அதிகரிக்கப் போவதாகவும் வாக்குறுதி தந்தன. 1995-இல் மீண்டும் போர் தொடங்கப்பட்டதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் தரும் விளக்கம் தான் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதாவது, போர் தொடங்கப்பட்டதற்கு விடுதலைப்புலிகள்தான் காரணம், ஸ்ரீலங்காவில் பயங்கரவாதத்திற்கு எதிராக பாதுகாப்புப் படைகள் சட்டத்திற்குட்பட்ட நியாயமான சண்டையில்தான் ஈடுபட்டுள்ளன என்பது தான் அந்த விளக்கம். மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்கு இந்த அரசாங்கம் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள், மனித உரிமைகளைக் காப்பாற்றும் கடமையைக் கோடிட்டுக் காட்டுவதாகத் தோன்றலாம். ஆனால், அந்த நடவடிக்கைகளை மட்டுமே சுட்டிக் காட்டிக் கொண்டிருப்பது போர் நடவடிக்கைகளின் மூர்க்கத்தன்மையைப் புறக்கணிப்பதாகும்.

போரானது மிகப் பெருமளவில் தமிழ்க் குடிமக்களுக்கு எதிராகவே நடத்தப்படுகிறது. அந்த உண்மை வெளியுலகிற்குத் தெரியா வண்ணம் செய்தித் தணிக்கை முறை மூடி மறைத்து வருகிறது. மனித உரிமை நிலைமைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் செயல்திறன் இல்லாமல் இருப்பதையும் ஒரு சட்டரீதியான அரசாங்கத்திற்கும் 'பயங்கரவாத' குழுவிற்கும் இடையில் நடக்கும் சண்டை என்ற விளக்கத்திற்கு அப்பால்தான் அச்சண்டைக்கான மூலகாரணங்களைக் கண்டறிய முடியும் என்பதையும் சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் மேற்கொண்டுள்ள மனித உரிமைப் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பற்றிய சித்திரம் புறக்கணிக்கிறது. ஸ்ரீலங்காவில் சண்டையில் ஈடுபட்டுள்ள இரண்டு தரப்பினராலும் வன்கொடுமைகள் இழைக்கப்பட்டு வருவதைக் கருத்தில் கொண்டால், ஸ்ரீலங்காவுக்கு ஆயுத விற்பனையை மீண்டும் தொடங்குவது அல்லது அதைத் தொடர்ந்து செய்வது, வெளி



படிப்பகம்

www.padippakam.com

நாட்டு உதவிகளை நிபந்தனையில்லாமல் வழங்குவது என்பன இனப்படுகொலைச் செயல்கள் நடக்கின்ற ஒரு சூழ்நிலைமையைப் பேணிப்பாதுகாக்கவே செய்யும் என்பது தெளிவு.

ஸ்ரீலங்கா இராணுவத்திடம் உலகிலுள்ள பலநாடுகளில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் உள்ளன. ஸ்ரீலங்காவுக்கு ஆயுதங்கள் வழங்குவதில் முதன்மையான நாடாக இருப்பது சீனா தான். எனினும் அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா, உக்ரெய்ன், பாகிஸ்தான், செக் குடியரசு, அர்ஜென்டினா, இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளும் கூட ஆயுதங்கள் வழங்கியுள்ளன.[344] பலநாடுகளிலிருந்து - குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன் ஆகியவற்றிலிருந்து - ஸ்ரீலங்கா இராணுவப் பயிற்சியும் பெற்றுள்ளது. சித்திரவதைக்குப் பயன்படுத்தப்படும் ஆயுதங்களும்கூட ஸ்ரீலங்காவிற்கு வழங்கப்பட்டுள்ளன.[345]

ஸ்ரீலங்காவிற்கு ஆயுதங்கள் விற்பனை செய்தல், இராணுவப் பயிற்சிகள் தருதல், சித்திரவதை ஆயுதங்கள் வழங்குதல் ஆகியன (சுருக்கமாக இதனை ஆயுத வர்த்தகம் என்று அழைக்கலாம்) தொடர்ந்து நடைபெறுகின்றன, புதுப்பிக்கப்படுகின்றன. இந்த ஆயுத வர்த்தகம், நடந்து வரும் போரின் போக்கில் எதிர்காலத்தில் இனப்படுகொலைச் செயல்கள் இழைக்கப்படுவதற்கான சாதனங்களை வழங்குகிறது; தொடர்ந்து நீடித்து வரும் சண்டைக்கு ஒரு சரியான தீர்வை வழங்கத் தவறுகிறது. ஏனெனில், ஸ்ரீலங்காவிற்கு எந்த நாடுகளிலிருந்து ஆயுதங்கள் விற்பனை செய்யப்படுகின்றனவோ அந்த நாடுகளின் அரசாங்கங்கள், ஸ்ரீலங்கா சர்வதேச மனித உரிமை அளவுகோல்களின்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையை விதிக்க தவறுகின்றன. ஸ்ரீலங்காவிற்கு ஆயுத விற்பனையை அனுமதித்தல் என்பது இனப்படுகொலை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகள் அந்த ஒப்பந்தத்தின் விதி I - அய் மீறுகின்ற செயலாகும்.

பகிரங்கமான வெளிநாட்டு உதவிகள் - குறிப்பாக ஜப்பான், சர்வதேசக் கடன் வழங்கு நிறுவனங்கள், மேற்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியன தரும் உதவிகள் - ஸ்ரீலங்காவில் இராணுவ நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் படுவதாகச் செய்திகள் கூறுகின்றன.[346] ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது போர் முயற்சியைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு இந்த உதவியைப் பயன்படுத்தியுள்ளது. போர் சட்டரீதியானதா? இல்லையா? என்ற பிரச்சினை ஒருபுறமிருக்க, தமிழ் மக்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும், மனித உரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்கான நிபந்தனைகள் ஏதும் இல்லாமல் வெளிநாட்டு உதவிகளை வழங்குவது என்பது இனப்படுகொலையைத் தடுப்பதற்கு உதவுவதில்லை. எனவே அது இனப்படுகொலைத் தடுப்பு ஒப்பந்தத்தின் விதி1 - அய் மீறும் செயல் என்று கூறலாம்.

இந்தப் பின்னணியைக் கருத்தில் கொண்டு, பல்வேறு நாடுகளையும் உள்ளடக்குகிற வகையில் அரசு சாரா அமைப்புகள் ஓர் ஒருங்கிணைந்த கொள்கையை உருவாக்க வேண்டும். ஸ்ரீலங்காவுடன் ஆயுத வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள, அதற்கு வெளிநாட்டு உதவி வழங்குகிற ஒவ்வொரு நாட்டினது கொள்கையும் அடையாளம் கண்டறியப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டும். ஸ்ரீலங்காவிற்கு ஆயுத வர்த்தகத்தை அனுமதிக்கிற அல்லது வெளிநாட்டு உதவியை வழங்குகிற ஒவ்வொரு அரசாங்கத்திற்கும் ஸ்ரீலங்காவில் நடக்கின்ற இனப்படுகொலைச் செயல்கள் பற்றிய தகவல்களை வழங்க வேண்டும். அத்தகவல்களை வழங்கி, இனப்படுகொலை ஒப்பந்தத்தின் கீழும் வழமையான சர்வதேச சட்டத்தின் கீழும் அந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய கடமைகளுடன் அதனுடைய ஆயுத விற்பனைக் கொள்கையும் வெளிநாட்டு உதவி வழங்கும் கொள்கையும் எவ்வாறு ஒத்துப் போகின்றன என்ற கேள்வியை எழுப்ப வேண்டும். இத்தகையதொரு அணுகுமுறையின் அடிப்படையில் அந்த அரசாங்கம், ஸ்ரீலங்காவிற்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதை நிறுத்துகின்ற வகையிலும், கடுமையான மனித உரிமை மீறல்கள் உடனடியாக நிறுத்தப்பட்டால்தான் வெளிநாட்டு உதவி வழங்கப்படும் என்ற நிபந்தனையை விதிக்கும் வகையிலும் அது தன் கொள்கை



படிப்பகம்

யைப் பரிசீலனைக்குட்படுத்தும்படி வற்புறுத்த வேண்டும்.

சர்வதேச நிதியம், உலக வங்கி, பிராந்திய வர்த்தக அமைப்புகள் ஆகியன தொடர்பாகவும் மேற்சொன்ன உத்தியையே கடைப்பிடிக்க வேண்டும். ஐரோப்பிய சமூகத்தை (European Community - EC) ஒரு உதாரணமாகக் கொள்ளலாம். EC, மனித உரிமை மீறல்களைத் தடுப்பதற்குத் தான் கடமைப்பட்டிருப்பதாகத் திரும்பத் திரும்பக் கூறிவந்துள்ளது.[347] ***16.05.1995*** அன்று EC - ஸ்ரீலங்கா ஒத்துழைப்பு ஒப்பந்தம் கையெழுத்தாகியது. மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்பதை அந்த ஒப்பந்தத்தின் இன்றியமையாத அம்சமாக்கியது EC. ஆயினும் அந்த ஒப்பந்தத்திலும் கூட பால்ட்டிக் ஷரத்து என்று சொல்லப்படுகின்ற ஒரு விஷயம் சேர்க்கப்படவில்லை. ஐரோப்பிய சமூகம் ஒரு நாட்டுடன் செய்து கொண்டுள்ள ஒரு ஒப்பந்தத்தில் காணப்படும் இன்றியமையாத அம்சம் மீறப்படுமேயானால் அந்த ஒப்பந்தம் முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியையோ நடைமுறைப் படுத்துவதை உடனடியாக நிறுத்திவிடும் உரிமையை இந்த பால்ட்டிக் ஷரத்து வழங்குகிறது. மனித உரிமைகளைக் காக்கும்படியும் அப்படிக் காக்கத் தவறினால் நஷ்டங்களை எதிர்கொள்ளும்படியும் ஸ்ரீலங்கா மீது நிர்ப்பந்தம் கொண்டு வருவதற்குத் தேவையான வழிமுறைகள் அரசுகளிடமும் பிராந்திய அமைப்புகளிடமும் உள்ளன என்பதற்கு ஐரோப்பிய சமூகத்தின் (EC) ஷரத்துகள் உதாரணமாக உள்ளன. மனித உரிமைகளைக் காக்கத் தவறும் அரசுகளுக்கு எத்தகைய நஷ்டங்கள் ஏற்படும் என்பதற்கு ஐரோப்பிய சமூகமே (EC) ஒரு நல்ல உதாரணத்தை வழங்குகின்றது. அதாவது ஒரு நாட்டில் கடுமையான மனித உரிமை மீறல்கள் ஏற்பட்டாலோ அல்லது ஜனநாயக நிறுவனங்களுக்கு ஊறு ஏற்பட்டாலோ கீழ்க் கண்ட நடவடிக்கைகளை ஐரோப்பிய சமூகம் (EC) அந்நாட்டின் மீது மேற்கொள்ளும் என அந்த ஷரத்துகள் கூறுகின்றன: ஒத்துழைப்புச் செயல்திட்டங்களின் உள்ளடக்கத்தில் மாற்றம் செய்தல்; அல்லது ஒத்துழைப்பு வடிவங்களில் மாற்றம் செய்தல்; பண்பாட்டு, விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டங்களைக் குறைத்தல்; உயர்மட்ட இருதரப்புத்

தமிழ்ச் சிறுபான்மையினருக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு இழைத்து வரும் குற்றங்கள் - தமிழ்ச் சிறுபான்மையினரின் உயிர்ப் பாதுகாப்பு, குடிமை உரிமை, அரசியல் பிரதிநிதித்துவம் ஆகியவற்றுக்கு எதிராக அவ்வரசு இழைத்து வரும் குற்றங்கள் - சர்வதேச சமூகத்திற்குப் பெரும் கவலை தருவனவாகும். இலங்கைத் தீவிலிருந்து ஓடி வந்துள்ள, இன்னும் ஓடிவந்து கொண்டிருக்கிற ஆயிரக்கணக்கான தமிழ் அகதிகளுக்குப் புகலிடம் கொடுக்க வேண்டியுள்ள உலக நாடுகள், ஸ்ரீலங்காவில் தமிழர்களின் அடிப்படை அரசியல் உரிமைகள் மறுக்கப்படுவதற்கான விலையை மென்மேலும் அதிகரித்த அளவில் ஏற்றுக் கொள்ள வேண்டும். ...அம்னஸ்டி இன்டர்நேஷனல், சர்வதேச சட்டவல்லுநர் ஆணையம் (International Commission of Jurists) போன்ற நடுநிலை அமைப்புகள், மேற்கு நாடுகளிலிருந்து சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களிடங்கிய தூதுக்குழுக்கள், பத்திரிகையாளர்கள், அறிவாளிகள் ஆகியோர் தொடர்ந்து வெளியிட்டு வரும் அறிக்கைகள் ஸ்ரீலங்காவில் தமிழ் மக்களின் அரசியல் வாழ்வும் உயிர் வாழ்வும் எந்த அளவிற்குத் தொடர்ந்து சீரழிந்து கொண்டிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டுகின்றன. குறைந்தளவேனும் நீதியுணர்வு உடைய ஒவ்வொருவரும் தமிழ் மக்கள் எந்த இலட்சியத்திற்காகப் போராடுகிறார்களோ அதை முழுமையாக அறிந்துகொள்வது என்பதைத் தவிர அவருக்கு வேறு தார்மீகத் தேர்வு இருக்க முடியாது. அது தொடர்ந்து வளர்ந்து வரும் முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேசப் பிரச்சினையாகும். தமிழ் மக்கள் எந்த இலட்சியத்திற்காகப் போராடுகிறார்களோ அந்த இலட்சியம், மனித உரிமைகள், நீதி ஆகியவற்றின் சாரத்தைப் பிரதிபலிக்கிறது. அதனை மறுப்பது, நம் அனைவரையும் இழிவானவர்களாகவும், அற்பமனிதர்களாகவும் ஆக்குகிறது.

— டேவிட் செல்போர்ன்
ரஸ்கின் கல்லூரி, ஆக்ஸ்போர்ட்

www.padippakam.com

தொடர்புகளை நிறுத்துதல்; புதிய திட்டங் களை ஒத்தி வைத்தல்; தன்னுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட நாடு எடுக்கும் முன்முயற்சிக ளுக்கு ஒத்துழைப்புத் தராமல் இருத்தல்; வர்த் தகத் தடைகள் விதித்தல்; ஆயுத விற்ப னையை நிறுத்தி வைத்தல்; இராணுவ ஒத்து ழைப்பை நிறுத்தி வைத்தல்.

கீழ்க்கண்டவற்றைச் செய்யும்படி தனிப் பட்ட அரசாங்கங்களும் ஐரோப்பிய சமூகம் போன்ற பிராந்திய அமைப்புகளும் வற்புறுத் தப்பட வேண்டும்: ஸ்ரீலங்காவிலுள்ள மனித உரிமை நிலைமையை - குறிப்பாக இனப்படு கொலைச் செயல்கள் தொடர்பான நிலைமை யைக் - கண்டறிந்து உறுதி செய்து கொள்ள வேண்டும்; பின்னர், ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் மீது ராஜதந்திரரீதியான நிர்ப்பந்தம் கொண்டு வருவதற்காக மேற்சொன்ன நடவடிக்கைக ளையோ அல்லது இதர நடவடிக்கைக ளையோ மேற்கொள்ள வேண்டிய அளவிற்கு ஸ்ரீலங்காவில் மனித உரிமை மீறல்கள் உள்ள னவா என்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

தனிப்பட்ட அரசாங்கங்கள், சர்வதேசக் கடன் வழங்கு நிறுவனங்கள், ஐரோப்பிய சமூகம் போன்ற பிராந்திய அமைப்புகள் ஆகி யவற்றிடம் இன்னொரு ஆலோசனையும் கூறப்பட வேண்டும்: சர்வதேசக் குடிமை, அரசியல் உரிமைகள் ஒப்பந்தத்தின் விருப்பத் துணை ஒப்பந்தத்தை (Optional Protocol) ஸ்ரீலங்கா அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் தான், அதற்கு ஆயுதங்கள் விற்பனை செய் யப்படும், வெளிநாட்டு உதவி வழங்கப்படும் என்ற நிபந்தனையை அவை விதிக்க வேண் டும். இப்படி ஒரு நிபந்தனை விதிப்பதன் மூலம் ஒரு சர்வதேச அமைப்பை ஸ்ரீலங்கா வில் மனித உரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப் படுகின்றன என்பதைக் கண்காணிக்கும்படி செய்யலாம்.

மேலும், ஸ்ரீலங்காவிற்கு உதவி வழங்கு தல் அல்லது ஆயுதங்கள் விற்பனை செய்தல் என்பதை அங்கு நடக்கும் மனித உரிமை மீறல்கள் பற்றி மனித உரிமைக்குழு (Human Rights Committee) கண்டறிந்தவற்றின் அடிப்ப டையில் முடிவு செய்யலாம். இத்தகைய முடி வுக்கு வருவதற்கு, மனித உரிமைக்குழுவின் கருத்துகள், காணாமல் போதல்கள் குறித்த நடவடிக்கைக்குழு, சித்திரவதை குறித்த சிறப் புப் பொறுப்பாளர், தன்னிச்சையாகவும் உட னுக்குடனும் மரண தண்டனை விதித்தல் தொடர்பான சிறப்புப் பொறுப்பாளர் ஆகிய அமைப்புகளின் அறிக்கைகளும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

மேலும், சண்டையில் தலையிட்டு மத்தி யஸ்தம் செய்து வைப்பதற்கு முன்வர வேண் டும் என அதற்குத் தகுதியான சர்வதேச அமைப்புகளிடமும் தனிப்பட்ட நாடுகளிட மும் வற்புறுத்த வேண்டும்.[348]

❑

[344] see SIPRI: Yearbook 1993, p.481, 514 and Yearbook 1995, p.428

[345] see for the UK: Amnesty International: Made in Britain: How the UK makes Torture and Death its Business, February 1997, pp.172,73

[346] see H.J.Whall: Self-Determination,pp.330,331

[347] see European Parliament: Annual report on human rights throughout the world in 1995-1996 and the Union's human rights policy. Committee on Foreign Affairs, Security and Defence Policy, Rapporteur: Mrs. Catherine Lalumiere. 28 November 1996, DOC/EN/RR/314/314706

[348] see on the ongoing subject of peace talks: Sri Lanka Monitor, No.111, April 1997



படிப்பகம்

www.padippakam.com

# பரிந்துரைகள்

## ஸ்ரீலங்கா :

இந்த ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ள உண்மைகளின் அடிப்படையில் தமிழ் தகவல் நடுவம், இனப்படுகொலை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளை - குறிப்பாக விதிகள் I, V, VI ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளை - நிறைவேற்றுமாறு ஸ்ரீலங்கா அரசாங்கத்தை வற்புறுத்துகிறது. இந்தக் கடமைகள், இனப்படுகொலையைத் தடுக்கவும் அக்குற்றத்தை இழைத்தவர்களைத் தண்டிக்கவும் ஸ்ரீலங்கா மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டவையாகும். ஸ்ரீலங்கா அரசாங்கம் கீழ்க்காணுபவற்றைச் செய்ய வேண்டுமென்று தமிழ் தகவல் நடுவம் கேட்டுக் கொள்கிறது:

— சுயநிர்ணய உரிமை - குறிப்பாக பெருமளவிலான அதிகாரப் பரவல் பெறும் உரிமை - என்ற நியாய அடிப்படையில் தமிழர்கள் எழுப்பும் கோரிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு இனப்படுகொலைக்கான மூலகாரணங்களை அகற்ற முன்வர வேண்டும். சுயநிர்ணய உரிமை மறுப்பு, தமிழர்கள் மீது காட்டப்படும் சமூக, பண்பாட்டுப் பாரபட்சங்கள், அவர்களது மானுடச் சிறப்பியல்புகளை நீக்குதல் ஆகியனதான் அந்த மூலகாரணங்களாகும்; 2)சிங்களர் குடியேற்றத்துக்கு முடிவு கட்ட வேண்டும்; 3)மொழி, மதம், பண்பாடு, கல்வி, பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றில் பாரபட்சம் காட்டும் சட்டங்களும் நடைமுறைகளும் நீக்கப்பட வேண்டும்; 4)பொருளாதாரத் தடையும் நெருக்கடி நிலை விதிகளும் தமிழ் மக்களின் உடல் நலத்தையும் தொடர்புச் சுதந்திரத்தையும் கடுமையாகப் பாதிப்பதால் அவை அகற்றப்பட வேண்டும்; 5)அடிப்படை உரிமைகளை மீறுகின்ற சட்டங்கள் அனைத்தும் இரத்து செய்யப்பட வேண்டும்; 6)ஸ்ரீலங்காவில் இனவாதத்தின் எல்லா வடிவங்களையும் ஒழித்துக்கட்ட வேண்டும்.

— தற்போது நடைபெற்று வரும சண்டைக்கு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படையில் ஒரு சமாதானபூர்வமான தீர்வைக் கண்டறிய வேண்டும். அத்தீர்வுக்கான முன்நிபந்தனை, 1997 ஏப்ரலில் அய்.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் முன்பாக 53 அரசு சாரா அமைப்புகள் கூறியது போல, தமிழ்க் குடிமக்களுக்கு எதிராக நடத்தப்படும் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவதும் தமிழர் தாயகத்திலிருந்து ஆக்கிரமிப்புப் படைகளை விலக்கிக் கொள்வதும் ஆகும்.

— தன்னிச்சையாகக் கொல்லுதல், நீதிமன்ற முறைக்குப் புறம்பான மரண தண்டனைகள், காணாமல் போதல்கள், சித்திரவதை, பாலியல் பலாத்காரம், தன்னிச்சையாகக் கைது செய்தல், தன்னிச்சையாகக் காவலில் வைத்தல் ஆகியவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மனித உரிமைக்குழு (Human Rights Committee), அம்னஸ்ட்டி இன்டர்நேஷனல் ஆகியனவற்றின் பரிந்துரைகளுக்கு ஏற்ற வகையில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாக, பயங்கரவாதத் தடைச்சட்டம், நெருக்கடி நிலை விதிகள் ஆகியன இரத்து செய்யப்படுவதுடன், பாதுகாப்புப் படையி



படிப்பகம்

www.padippakam.com

னரின் குறியிலக்குக்கு ஆளாகியுள்ள தமிழ் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய நீதி நிவாரணங் களை மேம்படுத்த வேண்டும்; தவிரவும், பொருளாதார முற்றுகையும், செய்தி ஊடகங் கள், பத்திரிகைகள் ஆகியன மீதான தணிக்கை முறையும், மனித நடமாட்டத்தின் மீதான கட் டுப்பாடும் ஒழித்துக் கட்டப்பட வேண்டும். ஏனெனில், இத்தகைய நடவடிக்கைகள் இனப் படுகொலைக்கு ஏதுவாக இருக்கின்றன.

— இனப்படுகொலைச் செயல்கள் செய் தோர் மீது குற்றம் சாட்டி அவர்களைத் தக்க அதிகாரமுடைய உள்நாட்டு நீதிமன்றங்களில் விசாரணைக்குக் கொண்டு வரும் பொருட்டு இனப்படுகொலை ஒப்பந்தத்தின் விதிகள் I, VI ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்ற வேண்டும். இதன் பொருட்டு இனப்படுகொலைச் செயல்களைச் செய்ததா கச் சந்தேகிக்கப்படும் எந்த ஒருவர் மீதும் வழக்குத் தொடர வேண்டும். இது அண்மைக் கால நிகழ்வுகளுக்கு மட்டுமல்ல, ஸ்ரீலங்காவில் கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட எந்தவொரு இனப்படுகொலைச் செயல்களுக்கும் பொருந் தும். மேலும், இப்போது பாதுகாப்புப் படைக ளின் உறுப்பினர்களை நீதி விசாரணையிலி ருந்து பாதுகாப்புக்கும் முன்பாதுகாப்புச் சட் டங்கள், வழக்குத் தொடர்வதற்கு எதிரான சட்டரீதியான, அரசியல் அல்லது நடைமுறைத் தடைகள் ஆகியனவும் இரத்து செய்யப்பட வேண்டும்.

❑



படிப்பகம்

www.padippakam.com

## பிழை திருத்தம்

| பக்கம் | பத்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| 50 | 2 | 24-31 | கூறப்பட்டதை... இறுக்கம் பெற்றன. | இந்த எட்டு வரிகளையும் நீக்கி விட்டுப் படிக்கவும். |
| 62 | 2 | 7 | பிற இராணுவப் படை | புற இராணுவப் படை (Para-military force) |
| 100 | 1 | 8 | அதிர்ச்சியூட்டும் நிலைமைகளின் | அதிர்ச்சியூட்டும் நிலைமைகளில் |
| 104 | 3 | 11 | விதி 55 FF | விதி 55 F |
| 122 | 2 | 16 | பாதுகாப்புக்கும் | பாதுகாக்கும் |

படிப்பகம்

www.padippakam.com

தமிழ்ப் பண்பாட்டு மரபு, மொழியுரிமைகள், பாரம்பரியத் தாயகங்கள், கல்வி வாய்ப்புகள், வேலை வாய்ப்புகள் ஆகியவற்றிற்குக் குழிபறிக்க அடுத்தடுத்து வந்த சிங்கள ஆதிக்க அரசாங்கங்கள் சதி செய்து வந்ததை - சிங்கள தேசியம், பெரும்பான்மையினரின் ஆட்சி என்ற பெயரால் சதி செய்து வந்ததை - பல தசாப்தங்களாகவே இளந்தலைமுறையைச் சேர்ந்த தமிழர்கள் கவனித்து வந்தனர். குறைந்தபட்சம் சிங்களர்களுக்கு நிகரான உரிமைகளையோ அல்லது வரம்புக்குட்பட்ட சுயாட்சியையோ பெறுவதற்காக அவர்களது தலைவர்கள் மேற்கொண்ட முயற்சிகளெல்லாம் வீணாகி நாடாளுமன்றத்தில் அத்தலைவர்கள் அடுத்தடுத்து அவமானகரமான தோல்வியைச் சந்தித்துக் கொண்டிருந்ததையும் அவர்கள் கவனித்து வந்தனர்.

சிங்களச் சிங்கம் (சிம்மம்) தங்கள் மீது பாயாமல் தடுத்து நிறுத்துவதற்கான ஒரே வழி தாங்கள் புலிகளாக மாறி, ஸ்ரீலங்காவிலிருந்து ஒரு தனிதேசத்தை - தமிழர்கள் பெரும்பான்மை பலத்தை அனுபவிக்கிற ஈழ தேசத்தை - பலவந்தமாகப் பறித்தெடுப்பது அல்லது செத்து மடிவது என்ற முடிவுக்கு அந்த இளந்தலைமுறையினர் வந்து சேர்ந்தனர்.

— US Committee for Refugees, 1991

Tamil Information Centre
Thamil House
720 Romford Road
London E12 6BT, (UK)
Telephone: + 44 (0) 181 514 6390
Fax: + 44 (0) 181 514 0164
E-Mail: 101560.3704@COMPUSERVE.COM

## தமிழ் தகவல் நடுவம்

தமிழர்களின் வாழ்க்கை, பண்பாடு ஆகியவற்றின் அனைத்து அம்சங்களையும் பற்றிய தகவல்களை வழங்கும் நோக்கத்துடன் தமிழ் தகவல் நடுவம் (The Tamil Information Centre) 1981-இல் நிறுவப்பட்டது. ஸ்ரீலங்காவின் மனித உரிமைப் பிரச்சினைகள், மனிதாபிமானப் பிரச்சினைகள் ஆகியவற்றில் ஈடுபாடு காட்டும் அனைவரது பங்கேற்பையும் தமிழ் தகவல் நடுவம் ஊக்குவிக்கிறது, அதற்கான உதவி செய்கிறது. ஸ்ரீலங்காவில் தமிழர்களைப் பாதிக்கும் நிகழ்ச்சிகள், புதிதாகத் தோன்றும் பிரச்சினைகள் ஆகியவற்றைப் பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்கான வசதிகளையும் இந்நடுவம் செய்து தருகிறது. தகவல்கள் வழங்குவதன் மூலமும் பயிற்சித் திட்டங்களின் மூலமும் மனித உரிமைப் பிரச்சினைகளைப் பற்றி பொதுமக்கள் புரிந்து கொள்வதற்கு ஊக்கம் தருகிறது. இந்நடுவத்தின் ஆவணப்பிரிவு, ஆராய்ச்சியாளர்கள், மனித உரிமைக்காகச் செயல்படுபவர்கள், தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றுக்கு ஒரு முக்கியமான மூலாதாரமாக விளங்குகிறது. மனித உரிமைகள், சமூக மேம்பாடு ஆகியவற்றிற்கும், ஸ்ரீலங்காவிலுள்ள பல்வேறு சமூகங்களுக்கிடையே பரஸ்பரப் புரிந்துணர்வையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்துவதற்கும் தமிழ் தகவல் நடுவம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

படிப்பகம்